பச்சை நிறமானவளும், தாமரை மலர்போன்ற கண்களையுடையவளும் தெளிந்த (அழகான) முகமுடையவளும் தாமரைமலர், செங்கழுநீர் அல்லது நீலம், வரதம், அபயம் இவைகளை வஹிக்கும் 4 கைகளையுடையவளும், கிரீடம், ஹாரம், கேயூரம் (தோள்வளை) குண்டலம் (காதணி) முதலியவைகளாலே அலங்கரிக்கப்பட்டவளும், வெண்மையான ஆடையையணிந்தவளும், பத்மாஸநத்தில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வீற்றிருப்பவளுமான துளஸீ தேவியை த்யானம் செய்ய வேண்டும். (பச்சை நிறம்)

९९. अथ गायत्रीध्यानम्

(मार्कण्डेयवचने)

देवीं (ध्यायेत्) सबालार्कसहस्राभां गायत्रीं
ब्रह्मरूपिणीम् ।
कुमारीं रक्तवस्त्राङ्गीं रक्तस्रग्गन्धलेपनाम् ॥ १ ॥

चतुर्भुजां चतुर्वक्त्रां वरदां चाक्षमालिनाम् ।
पद्माक्षमालावलयं बिभ्रतीं दक्षिणे करे ॥ २ ॥

वामे कमण्डलुं पाणौ स्रुवं सव्येतरे करे ।
सहायं वाग्देवि च वसतीमे प्रतिष्ठिताम् ॥ ३ ॥

ऋग्वेदरूपिणीं प्रातः ब्रह्माणं हंसवाहनाम् ।
सर्वायुधां च बिभ्रतीं गार्हपत्ये प्रतिष्ठिताम् ॥
(रक्तवर्णः)

100. காயத்ரீதேவீ த்யானம்

(மார்க்கண்டேய புராணத்தில்)

முன் பகலின் ஸந்தியாகாலத்தில் (காலைஸந்தி வேளையில்) அக்கினி ரூபமாக இருப்பவளும், குமாரியாக இருப்பவளும், சிவப்பு ஆடையையணிந்தவளும், சிவப்புச் சந்தனம் மாலைகளையணிந்தவளும், 4 கைகளையுடையவளும், 4 முகங்களையுடையவளும் வரன்களைக் கொடுப்பவளும், 8 கண்களையுடையவளும், வலது கையில் தாமரை மணி மாலையை வளையலைப்போல் அணிந்திருப்பவளும், இடது கையில் கமண்டலுவையும் வலது கையில் ஸ்ருவத்தையும், (ஸ்ருவம் – ஹோமம் செய்வதற்காக மரத்தினாலே செய்யப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பட்ட கரண்டிமுட்டை) வலது கையில் அபயம், இடது கையில் வரதத்தையும் தரிப்பவளும், பத்மாஸனத்தில் வீற்றிருப்பவளும், காலை வேள்வியின் தெய்வமானவளும், ருக்வேத உருவமுடையவளும், அன்னபக்ஷியை வாஹநமாகக்கொண்டவளும், ரஸாயநவடிவமாக இருப்பவளும், பிருஹத் ஸாமஸ்வரூபமானவளும், கார்ஹபத்தியாக்கினியில் வஸிப்பவளுமான காயத்திரீ தேவியை (த்யாநம் செய்கின்றேன்) (சிவப்பு நிறம்)

௱௧. 𑌅𑌥 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

(𑌮𑌾𑌰𑍍𑌕𑌣𑍍𑌡𑍇𑌯𑌪𑍁𑌰𑌾𑌣𑍇)

𑌦𑍇𑌵𑍀𑌂 𑌮𑌧𑍍𑌯𑌾𑌹𑍍𑌨𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰
𑌰𑍂𑌪𑌿𑌣𑍀𑌮𑍍 ।
𑌯𑍁𑌵𑌤𑍀𑌂 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌢𑍍𑌯𑌾𑌂 𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲𑌚𑌰𑍍𑌮𑌵𑌾𑌸𑌨𑌾𑌮𑍍 ॥

𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌾𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌂 𑌵𑌰𑌦𑌾𑌂 𑌸𑌾𑌧𑍁𑌪𑍋𑌷𑌣𑌾𑌮𑍍 ।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌵𑌲𑌯𑌂 𑌬𑌿𑌭𑍍𑌰𑌤𑍀𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌕𑌰𑍇 ॥

𑌵𑌾𑌮𑍇 𑌕𑌰𑍇 𑌚 𑌖𑌟𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌰𑌿𑌶𑍂𑌲𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌕𑌰𑍇 ।
𑌵𑌾𑌮𑍇 𑌕𑌰𑍇𑌽𑌭𑌯𑌂 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌤𑌥𑍈𑌵𑌾𑌭𑍀𑌷𑍍𑌟𑌦𑌾𑌯𑌿𑌨𑍀𑌮𑍍 ॥

𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌪𑍀𑌠𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦
𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌿𑌣𑍀𑌮𑍍 ।
𑌆𑌯𑍁𑌰𑍍𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌪𑍍𑌰𑌦𑌾𑌂 𑌸𑌤𑍀𑌂 𑌗𑍌𑌰𑍀𑌂 𑌵𑍃𑌷𑌵𑌾𑌹𑌨𑌾𑌮𑍍 ॥ ௪ ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌗𑍍𑌨𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌂 𑌤𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑌃 ॥

(𑌶𑌾𑌙𑍍𑌖𑌾𑌯𑌨𑌃)

101. ஸாவித்திரீ த்யாநம்

(மார்க்கண்டேய புராணத்தில்)

சுத்தமான மனதையுடையவன், மாத்தியாந்ஹிக ஸந்தியாகாலத்தில் ருத்திரஸ்வரூபிணியாகவும், யுவதி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யாகவும், வெள்ளை ஆடையையணிந்திருப்பவளாகவும், வெண்மையான மாலையும் சந்தனமும் தரித்திருப்பவளாகவும், 4 கைகள், 4 முகங்களுடையவளாகவும், வரங்களைக் கொடுப்பவளாகவும், 12 கண்களையுடையவளாகவும், வலது கையில் ருத்திராக்ஷ மாலையினாலான வலயத்தை தரிப்பவளாகவும், இடதுகையில் கட்வாங்கத்தை தரிப்பவளாகவும், வலது கையில் முச்சூலத்தையும், இடது கையில் அபயத்தையும் தரிப்பவளாகவும், அரைவட்ட சந்திரனை தரிப்பவளாகவும், அழகான ஸுவர்ண பீடத்திலிருப்பவளாகவும், யஜுர்வேத ஸ்வரூபிணியாகவும், சௌம்யமான மாத்தியந்திநஸவநத்திலிருப்பவளாகவும், விருஷபத்தை வாஹநமாக உடையவளாகவும், தக்ஷிணாக்நிஸ்வரூபிணியாகவும், இருக்கின்ற அந்த ஸாவித்ரீதேவியை தினமும் த்யாநம் செய்யவேண்டும்.. (வெளுப்பு நிறம்)

௩௨. 𑌅𑌥 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

(𑌶𑌾𑌕𑌲𑍍𑌯𑌸𑌂𑌵𑌾𑌦𑍇)

𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌂 𑌤𑍁 𑌸𑌾𑌯𑌾𑌹𑍍𑌨𑍇 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍂𑌪𑌿𑌣𑍀𑌮𑍍 ।
𑌸𑍁𑌵𑌿𑌰𑍇𑌨𑍍𑌦𑍀𑌵𑌰𑌶𑍍𑌯𑌾𑌮𑌾𑌂 𑌨𑍀𑌲𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌮𑍂𑌰𑍍𑌧𑌜𑌾𑌮𑍍 ॥ ௧ ॥

𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌾𑌂 𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌾𑌂 𑌪𑌦𑍍𑌮𑌪𑌤𑍍𑌰𑌾𑌯𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌮𑍍 ।
𑌶𑌙𑍍𑌖𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌗𑌦𑌾𑌂 𑌚𑍈𑌵 𑌤𑌥𑍈𑌵𑌾𑌭𑌯𑌦𑌂 𑌕𑌰𑍈𑌃 ॥

𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌾𑌂 𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌂 𑌗𑌰𑍁𑌡𑌵𑌾𑌹𑌨𑌾𑌮𑍍 ।
𑌤𑍃𑌤𑍀𑌯𑌸𑌵𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌂 𑌚 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌚𑍍𑌚 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍂𑌪𑌿𑌣𑍀𑌮𑍍 ॥ ௩ ॥

𑌨𑍀𑌲𑌵𑍇𑌣𑍀𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌂 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑍇(𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍)𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌿𑌣𑍀𑌮𑍍 ।
𑌵𑌾𑌹𑌨𑌾𑌂 𑌗𑌰𑍁𑌡𑌾𑌰𑍂𑌢𑌾𑌹𑌵𑌨𑍀𑌯𑍇 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌮𑍍 ॥ ௪ ॥

(𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌃)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

102. ஸாரஸ்வதீ த்யாநம்
(மார்க்கண்டேய புராணத்தில்)

ஸாயங்காலத்தில் ஸந்தியாகாலத்தில் விஷ்ணு ரூபிணியாக இருப்பவளும், முதிர்ந்த நீலோத்பலத்தைப்போல கருப்பாக இருப்பவளும், கருப்பாகவும் சுருண்டுமிருக்கும் கூந்தலையுடையவளும், 4 கைகளும், 3 கண்களுமுடையவளும், தாமரை இதழைப்போல நீண்டகண்களையுடையவளும், சங்கம், சக்கரம், கதை, அபயம் இவைகளை தரிப்பவளும், சிறந்த மாலையையும் சந்தனத்தையுமணிந்திருப்பவளும், திருதீய (ஸாயந்தந) ஸவநஸ்வரூபிணியாக இருப்பவளும், விஷ்ணு ஸ்வரூபிணியாக இருப்பவளும், அழகான நீலநிறமான (இந்திர நீலக்கல்லினாலே செய்யப்பட்ட) பீடத்தில் வீற்றிருப்பவளும், ஸாமவேத ஸ்வரூபிணியானவளும், வரங்களையளிப்பவளும், கருட வாஹநத்திலிருப்பவளும், ஸௌமியமான ஆஹவநீயத்தில் வஸிப்பவளுமான ஸரஸ்வதீ தேவியை த்யாநம் செய்யவேண்டும் (பச்சை நிறம்)

[illegible]

[illegible]

[illegible]

[illegible] ॥ ௧ ॥

[illegible]

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

103. த்விபுஜ அன்னபூர்ணா த்யானம்

(காரணாகமத்தில்)

மணிமயமான வளையல்களையணிந்திருக்கும் இடது கையில் தேன்சுவையுடன் கூடிய திவ்யமான அன்னம் நிறைந்த மாணிக்க பாத்திரத்தையும், வலது கையில் ரத்ந மயமான தர்வி(கரண்டி)யையும் வஹிப்பவளும், சிவப்பு நிறமானவளும், பருத்து உயர்ந்திருக்கும் ஸ்தநபாரத்தின் மேலேவிளங்கும் பிரகாசமான ஹாரத்தையுடையவளும், 3 கண்களுடையவளும், பூர்ண சந்திரனுக்கு நிகரான முகத்தையுடையவளுமான ஜகதம்பிகையான அன்னபூர்ணா தேவியை நமஸ்கரிக்கின்றேன். (சிவப்பு நிறம்.)

௱௪. 𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌾𑌨𑍍𑌨𑌪𑍂𑌰𑍍𑌣𑌾 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

(𑌕𑌾𑌰𑌣𑌾𑌗𑌮𑍇)

𑌸𑌿𑌨𑍍𑌦𑍂𑌰𑌾𑌭𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌮𑌮𑍃𑌤𑌶𑌶𑌿𑌕𑌲𑌾𑌂 𑌖𑍇𑌚𑌰𑍀𑌂
𑌰𑌕𑍍𑌤𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌂
𑌪𑍀𑌨𑍋𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌸𑍍𑌤𑌨𑌾𑌢𑍍𑌯𑌾𑌮𑌭𑌿𑌨𑌵𑌵𑌿𑌲𑌸𑌦𑍍𑌯𑍌𑌵𑌨𑌾
𑌰𑌮𑍍𑌭𑌰𑌮𑍍𑌯𑌾𑌮𑍍 ।
𑌨𑌾𑌨𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌂 𑌸𑌰𑌸𑌿𑌜𑌨𑌯𑌨𑌾𑌮𑌿𑌨𑍍𑌦𑍁
𑌸𑌙𑍍𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌂
𑌦𑍇𑌵𑍀𑌂 𑌪𑌾𑌶𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌾𑌢𑍍𑌯𑌾𑌮𑌭𑌯𑌵𑌰𑌕𑌰𑌾𑌮𑌨𑍍𑌨𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌂
𑌨𑌮𑌾𑌮𑌿 ॥ ௧ ॥

(𑌸𑌿𑌨𑍍𑌦𑍂𑌰𑌵𑌰𑍍𑌣𑌾𑌃)

104. சதுர்புஜ அந்நபூர்ணா த்யாநம்

(காரணாகமத்தில்)

ஸிந்தூரம் போன்ற நிறமுடையவளும், 3 கண்களையுடையவளும், அமிருதமயமான சந்திரகலையை தரிப்பவளும், ஆகாசத்தில் ஸஞ்சரிப்பவளும், (அல்லது கேசரீ

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முத்திரையினுலே ஆராதிக்கப்படுகின்றவளும்.) சிவப்பு ஆடையையணிந்திருப்பவளும், பருத்து உயர்ந்த ஸ்தநங்களை யுடையவளும், புதிதாகத்திகழ்கின்ற யௌவனப்பருவத்தின் துவக்கத்தினுலே மனோகரமாக இருப்பவளும், நாநாவித மான ஆபரணங்களையணிந்திருப்பவளும், தாமரை மலர் போன்ற கண்களையுடையவளும், சந்திரபிம்பத்தில் ப்ரதி பிம்பிக்கின்ற ஸ்வரூபமுடையவளும், பாசம், அங்குசம், அபயம், வரதம் இவைகளை கைகளில் வஹிப்பவளுமான அந்நபூர்ணு தேவியை வணங்குகின்றேன். (ஸிந்தூர வர்ணம்)

ளுடு. ஶ்ரீ கநகதுர்கா த்யாநம்

(பாரதாதிலகே)

வித்யுத்தாமஸமப்ரபாம் ம்ருகபதிஸ்கந்தஸ்திதாம் பீஷணாம்
கந்யாபி: கரவாலகேடவிலஸத்தஸ்தாபிரா
ஸேவிதாம் ।
ஹஸ்தைஶ் சக்ரவராஸிகேடவிஶிகாம்
சாபாங்குஶாந் தர்ஜநீம்
பிப்ராணாமநலாத்மிகாம் ஶஶிதராம் த்ர்யக்ஷாம்
துர்காம் பஜே ॥ க ॥
(கநகவர்ணா:)

105. அக்கினி துர்கா த்யாநம்
(சாரதா திலகத்தில்)

மின்னல் கொடியைப்போன்ற நிறமுடையவளும், சிங்கத்தின் கழுத்தில் வீற்றிருப்பவளும், பயங்கரமான வளும், கத்தியும் கேடயமும் கைகளில் தரிக்கின்ற கந்நிகைகளாலே ஸேவிக்கப்பட்டவளும், கைகளில் சக்கரம், வரதம், கத்தி, கேடயம், அம்பு, வில், அங்குசம், தர்ஜநீ முத்திரை இவைகளை வஹிப்பவளும், சந்திரனை தரிப்பவளும் மூ கண்களையுடையவளுமான அக்கினி துர்கா தேவியை வணங்குகின்றேன். (தங்க நிறம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௱௬. அத² ஶீதலாதே³வீ த்⁴யாநம்

(ருத்³ரயாமலே ஶீதலாகல்பே)

த்⁴யாயேச்ச ஶீதலாம் தே³வீம் ராஸப⁴ஸ்தா²ம் தி³க³ம்ப³ராம் ।
மார்ஜநீகலஶோபேதாம் ஶூர்பாலங்க்ருதமஸ்தகாம் ॥

(க்ருஷ்ணவர்ண:)

106. சீதலாதேவீ த்யாநம்

(ருத்திரயாமளத்தில் சீதலா கல்பத்தில்)

கழுதை வாஹநத்தின் மேலே வீற்றிருப்பவளும், திகம்பரையானவளும் (ஆடையில்லாதவளும்) கைகளில் துடப்பம், கலசங்களை வைத்திருப்பவளும், தலையில் முரத்தை வைத்துக்கொண்டிருப்பவளுமான சீதலா தேவியை த்யாநம் செய்யவேண்டும். (கறுப்பு நிறம்)

௱௭. அத² லோபாமுத்³ராதே³வதா த்⁴யாநம்

(ஆம்நாயே)

பாஶாங்குஶௌ ஶரம் சாபம் தா⁴ரயந்தீம் த்ரிலோசநாம் ।
ஸூர்யாபா⁴ம் சந்த்³ரசூடா³ம் ச லோபாமுத்³ராம்
ப⁴ஜே ஶிவாம் ॥ ௧ ॥

(ஸிந்தூ³ரவர்ண:)

107. லோபாமுத்திராதேவதா த்யாநம்

(ஆம்நாயத்தில்)

பாசம்; அங்குசம்; அம்பு, வில் இவைகளை தரிப்பவளும் 3 கண்களையுடையவளும், சூரியனைப்போன்ற நிறமுடையவளும், சிரஸ்ஸில் சந்திரனை தரிப்பவளும், மங்களங்களை யளிப்பவளுமான லோபாமுத்திரா தேவியை வணங்குகிறேன். (ஸிந்தூர வர்ணம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அத அஷ்டமஹாலக்ஷ்மீ த்யாநாநி

௱௮. தத்ர த்விபுஜலக்ஷ்மீ த்யாநம்

(ந்ருஸிம்ஹப்ரஸாதே)

ஸமீபே விஷ்ணோர் லக்ஷ்மீஸ்து த்விபுஜா ந்ருப |
திவ்யரூபாம்புஜகரா ஸர்வாபரணபூஷிதா || ௧ ||

(ஹேமவர்ணா:)

அஷ்ட மஹாலக்ஷ்மிகளின் ஸ்வரூபங்கள்

108 துவிபுஜ லக்ஷ்மீ த்யாநம்

(நிருஸிம்ஹ பிரஸாதத்தில்)

ஹே அரசனே! மஹாவிஷ்ணுவின் ஸமீபத்திலிருக்கும் லக்ஷ்மீ தேவியை 2 கைகளுடன் கல்பிக்கவேண்டும். அவள் திவ்யமான ரூபமுடையவளாகவும், தாமரை மலரை· கையில் வைத்திருப்பவளாகவும், ஸகல ஆபரணங்களாலேயும் அலங்கரிக்கப்பட்டவளாகவுமிருக்கவேண்டும். (ஸுவர்ண நிறம்)

௱௯. அத கஜலக்ஷ்மீ த்யாநம்

(பாத்மதந்த்ரே)

லக்ஷ்மீஶ்ஶுக்லாம்பரா தேவீ ரூபேணாப்ரதிமா புவி |
பத்மஸ்தா சதுர்புஜா கார்யா தேவீ ஸிம்ஹாஸநே ஶுபா || ௧ ||

ஸிம்ஹாஸநேऽஸ்யா: கர்தவ்யம் பத்மம் சாருகர்ணிகம் |
அஷ்டபத்ரம் மஹாபாக கர்ணிகாயாம் ஸுஸம்ஸ்திதா ||

விநாயகவதாஸீநா தேவீ கார்யா சதுர்புஜா |
ப்ருஹந்நாலம் கரே கார்யம் தஸ்யா: பத்மம் ஶுபம் ந்ருப ||

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தக்ஷிணே யாதிவஶ்ரேஷ்டே கேயூராங்கஸம்ஸ்திதே ।
வாமோத்ஸங்கக³தா கார்யா: ததா ராஜன்மநோஹரா: ॥ ௪ ॥

தஸ்யா: சதஸ்ர: கர்தவ்யா: கார்யா: விஷ்ணுஸம்பயாரா விஜ ।
ஶ்ரீவத்ஸாங்கிதகரம் கார்யம் தத்பரஸ்தே சதுஷ்டயம் ॥ ௫ ॥

தேவ்யாஸ்து ஶ்லோகே கார்யம் ரூபம் மாஹி மநோஹரம் ।
(லக்ஷணபூஷணம்)

109. கஜலக்ஷ்மீ த்யாநம்

(பாஞ்சராத்ரத்தில்)

கஜலக்ஷ்மீ தேவியானவள் வெளுப்பு ஆடையை அணிந்திருப்பவளாகவும், பூமியில் நிகரற்ற ரூபமுடையவளாகவும், 4 கைகளுடையவளாகவும், திவ்விய ஸிம்ஹாஸனத்திலிருப்பவளாகவும், மங்களகரையாகவும் கல்பிக்கத்தக்கவளாவாள்.

இவளுடைய ஸிம்ஹாஸனத்தில் அழகான கர்ணிகையுடன் கூடிய 8 இதழ்களுடன் கூடிய தாமரை மலரை கல்பிக்கவேண்டும். ஹே கிருஷ்ண, அதன் கர்ணிகையில் பெருமைவாய்ந்தவளும், விநாயகனைப்போல (அத்விதீயமான வஸ்துவாக) வீற்றிருப்பவளும், 4 கைகளையுடையவளுமான லக்ஷ்மீ தேவியைக்கல்பிக்கவேண்டும். அவளுடைய வலது கையின் தோள்வளையின் பக்கத்தில் நீண்ட காம்புடன் கூடிய அழகான தாமரை மலரைக் கல்பிக்கவேண்டும். இடது கையில் மனோஹரமான அமுதகடத்தைக் கல்பிக்க வேண்டும். அவளுடைய மற்ற இரு கைகளும் பில்வத்தையும், (பில்வப்பழத்தையும்) சங்கத்தையும் தரிப்பவைகளாம். அவளுடைய பின்பக்கத்தில் (இரு பக்கங்களிலும்) உயர்த்தித்தூக்கிய துதிக்கைகளுடன் கூடிய இரண்டு யானைகளைக் கல்பிக்கவேண்டும். லக்ஷ்மீ தேவியின் சிரஸ்ஸில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அழகான தாமரை மலரைக்கல்பிக்கவேண்டும். (ஸுவர்ண வர்ணம்)

௱௯ அத2 மஹாலக்ஷ்மீத்4யாநம் ।

(நரஸிம்ஹபுராணே - விச்வகர்மணா)

கொல்லாபுரம் விநாந்யத்ர மஹாலக்ஷ்மீர்யதோச்யதே ।
லக்ஷ்மீவத் ஸா து கர்தவ்யா ஸர்வாப4ரணபூ4ஷிதா ॥

த3க்ஷிணாத4: கரே பாத்ரம் ஊர்த்4வே கௌமோத3கீம் தத: ।
வாமோர்த்4வே கே2டகம் சைவ ஸ்ரீப2லம் தத3த4: கரே ॥ ௨ ॥

பி3ப்4ரதீ மஸ்தகே லிங்கம் பூஜநீயா விபூ4தயே ।

(ஸ்வர்ணவர்ணா:)

110. மஹாலக்ஷ்மீ தியானம்

(நிருஸிம்ஹ பிராணத்தில்-விசுவகர்மாவினுலே)

கோல்லாபுரம் (கோலாப்பூர்) நீங்கலாக மற்றவிடங்களில் மஹாலக்ஷ்மியை, லக்ஷ்மீ தேவியைப்போல் ஸர்வாலங்கார பூஷிதையாகக் கல்பிக்கவேண்டும். வலது பக்கம் கீழ்க்கையில் பாத்திரமும் மேல்கையில் கதையும், இடது பக்கம் மேல்க்கையில் கேடயமும் கீழ்க்கையில் பில்வப் பழமும், சிரஸ்ஸில் லிங்கத்தையும் கல்பித்து பூஜிக்க வேண்டும். அதனுல் ஸகல ஸம்பத்துக்களுமுண்டாகும். (தங்க நிறம்)

ககக. அத2 ஸ்ரீதே3வீ த்4யாநம்

(உபமேவ)

வாமாங்காரோபிதாம்போ4ஜ ஸவ்யபாணிஸ்பு2ரத்ஸரோஜயோ: ।
பத்3மாஸநஸ்தா2ம் த்4யாயீத ஸ்ரீயம் த்ரைலோக்யமாதரம் ॥

(ஹேமவர்ணா:)

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

111. ஸ்ரீ தேவீ த்யாநம்
(மயூகத்தில்)

மூவுலகத்திற்கும் மாதாவான ஸ்ரீ தேவியை வலது கைகளில் பாசம், ஜபமாலையும், இடது கைகளில் தாமரை மலர், அங்குசமும் உடையவளாகவும் பத்மாஸநத்திலிருப்பவளாகவும் கல்பிக்கவேண்டும். (தங்க நிறம்)

கக௨. அத வீரலக்ஷ்மீ த்யாநம்
(பாஞ்சராத்ரே)

வீரலக்ஷ்மீரிதி க்யாதா வரதாபயஹஸ்திநீ |
ஊர்த்வபத்மத்வயகரா ததா பத்மாஸநே ஸ்திதா ॥ க ॥
(ஸுவர்ணவர்ண:)

112. வீரலக்ஷ்மீ த்யாநம்
(பாஞ்சராத்ரத்தில்)

கீழ் கைகளில் வரதம், அபயமும், மேல் கைகளில் தாமரை மலர்களும் தரித்து பத்மாஸநத்தில் வீற்றிருக்கும் லக்ஷ்மீ தேவிக்கு வீரலக்ஷ்மீ என்று பெயர். (தங்க நிறம்)

கக௩. அத த்விபுஜவீரலக்ஷ்மீ த்யாநம்
(பாஞ்சராத்ரே)

தக்ஷிணே சாபயம் பிப்ரத் வாமே து வரதம் ததா |
ஸ்ரீத் பத்மாஸநாஸீநா வீரஸ்ரீர்த்விபுஜேக்ஷணா ॥ க ॥
(ஹேமவர்ண:)

113. துவிபுஜ வீரலக்ஷ்மீ த்யாநம்
(பாஞ்சராத்ரத்தில்)

வலது கையில் அபயமும், இடது கையில் வரதமும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

தரித்து, பத்மதளம்போன்ற துடைகளுடனிருப்பது வீர லக்ஷ்மீ லக்ஷணமாகும். (தங்க நிறம்)

௧௧௪. அஷ்டபுஜவீரலக்ஷ்மீ த்⁴யாநம்
(பாஞ்சராத்ரே)

பாஶாங்குஶாக்ஷமாலாப்³ஜவராப⁴யக³தா³பாத்ர
ஹஸ்தா கார்யா ॥ (ஹேமவர்ணா:)

114. அஷ்டபுஜ வீரலக்ஷ்மீ த்யானம்
(பாஞ்சராத்ரத்தில்)

(இந்த லக்ஷ்மியை) பாசம் 1, அங்குசம் 2, ஜபமாலை 3, வரதம் 4, அபயம் 5, கதை 6, தாமரை மலர் 7, பாத்திரம் 8 இவைகளை கையில் வஹிப்பவளாகக் கல்பிக்க வேண்டும். (தங்க நிறம்)

௧௧௫. அத² ப்ரஸந்நலக்ஷ்மீ த்⁴யாநம்
(அத²ர்வணரஹஸ்யே)

வந்தே³ லக்ஷ்மீம் பரஶிவமயீம் ஶுத்³த⁴ஜாம்பூ³நதா³பா⁴ம்
தேஜோரூபாம் கநகவஸநாம் ஸர்வபூ⁴ஷோஜ்ஜ்வலாங்கீ³ம் ।
பீ³ஜாபூரம் கநககலஶம் ஹேமபத்³மம் த³தா⁴நாம்
ஆத்³யாம் ஶக்திம் ஸகலஜநநீம் விஷ்ணுவாமாங்கஸம்ஸ்தா²ம் ॥ ௧ ॥
(ஸுவர்ணவர்ணா:)

115. பிரஸந்நலக்ஷ்மீ த்யானம்
(அதர்வண ரஹஸ்யத்தில்)

பரசிவ ஸ்வரூபிணியாகவும், சுத்தமான தங்கத்தைப் போன்ற நிறமுடையவளும் தேஜோரூபிணியாகவும்,

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸுவர்ணம்போன்ற முகத்தையுடையவளும், ஸகல விதமான ஆபரணங்களையும் அணிந்திருப்பவளும், மாதளம்பழம் ஸுவர்ண கலசம் தங்கத்தாமரை மலர்களை தரிப்பவளும், ஸகலஜகத்திற்கும் தாயாக இருப்பவளும் விஷ்ணுவின் இடது மடியிலிருப்பவளுமான ஆதி சக்தியை வணங்குகிறேன். (தங்க நிறம்)

௧௧௫. அத விஷ்ணுபரிவாரஶக்தீநாம் த்யாநம்

(பத்மபுராணே)

ஸுவர்ணாபா ஹி ஸா ஶ்ரீ: பூஶ்ச ஸா
ஹிமரஜதஸந்நிபா: |
ஸரஸ்வதீ ஸிதா ரக்தா ப்ரீதி: ஶ்யாமநிபாக்ருதி: ‖ ௧ ‖
கீர்த்தி: ரக்தா பவேச் சாந்தி: ஸ்படிகாபா ஸமீரிதா |
துஷ்டி: பீதா பவேச் புஷ்டி: ஶ்யாமா ஶைவல்யஸ்ம்ரு
தா: ஸ்ம்ருதா: ‖ ௨ ‖
பத்மத்வயகராஶ்சைவ வராபயகராஸ்ததா: |

116. விஷ்ணு பரிவார சக்திகளின் த்யாநம்

(பத்ம புராணத்தில்)

ஸ்ரீ தேவியானவள் தங்க நிறமுடையவளாவாள். பூமி தேவியானவள் வெளுப்பு நிறமுடையவளாவாள். ஸரஸ்வதீ தேவியானவள் வெளுப்பு நிறமுடையவளாவாள். பிரீதி தேவியானவள் பச்சைநிறமானவள். கீர்த்தி தேவியானவள் சிவப்பு நிறமானவள். சாந்தி தேவியானவள் ஸ்படிக வர்ணமானவள். துஷ்டி தேவியானவள் மஞ்சள் நிறமானவள். புஷ்டி தேவியானவள் பச்சை நிறமானவள். இவர்கள் (இரு கைகளில்) இரண்டு பத்மங்களையும் வரதம் அபயங்களையும் வஹிப்பவர்களாவார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௧௧௭. அத² ஸௌபா⁴க்³யபு⁴வநேஶ்வரீ த்⁴யாநம்

(ஶாரதா³திலகே)

ஸிந்தூ³ராருணவிக்³ரஹாம் த்ரிநயநாம் மாணிக்ய
மௌலிஸ்பு²ரத்
தாராநாயகஶேக²ராம் ஸ்மிதமுகீ²மாபீந
வக்ஷோருஹாம் ।
பாணிப்⁴யாம் மணிபூர்ணரத்நசஷகம் ரக்தோத்பலம்
பி³ப்⁴ரதீம்
ஸௌம்யாம் ரத்நக⁴டஸ்த²ரக்தசரணாம் த்⁴யாயேத்
பராமம்பி³காம் ॥ ௧ ॥
(ஸிந்தூ³ரவர்ண:)

117. ஸௌபாக்கிய புவனேசுவரி த்யாநம்
(சாரதா திலகத்தில்)

ஸிந்தூரத்தைப்போல சிவந்த மேனியையுடையவளும், 3 கண்களையுடையவளும், மாணிக்கமயமான கிரீடத்தில் பிரகாசிக்கும் சந்திரனை அணிந்திருப்பவளும், சிரித்த முகமுடையவளும், பருத்த ஸ்தநங்களையுடையவளும், இரு கைகளிலும் ரத்தினங்கள் நிறைந்த ரத்தின பாத்திரத்தையும் நீலோத்பலத்தையும் வஹிப்பவளும், அழகாக இருப்பவளும், ரத்தினநிதியின் மீது வலது காலை வைத்திருப்பவளுமான பராம்பிகையை த்யாநம் செய்யவேண்டும். (ஸிந்தூர வர்ணம்)

௧௧௮. அத² ஶ்யாமாபு⁴வநேஶ்வரீ த்⁴யாநம்

(ஶாரதா³திலகே)

ஶ்யாமாங்கீ³ம் ஶஶிஶேக²ராம் நிஜகரைர்தா³நம் ச
ரக்தோத்பலம்
ரத்நாட்⁴யம் சஷகம் பரம் ப⁴யஹரம் ஸம்பி³ப்⁴ரதீம்
ஶாஶ்வதீம் ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உத்தாஹாரநுஷஸஞ்சயோயாநதாம் நேத்ர
த்ரயோல்லாஸிநீம்
வஸேஹம் ஸ்வர்ணவருஜிதாம் ஹாரவலயாம்
ரக்தாரவிந்தஸ்திதாம் ॥ க ॥
(நீலவர்ண:)

118. மாயா புவனேசுவரீ த்யாநம்

(சாரதா திலகத்தில்)

பச்சை நிறமானவளும், சந்திரனையணிந்தவளும், கைகளில் வரதம், நீலோத்பலம், ரத்தினங்களுடன் கூடிய பாத்திரம், அபயம் இவைகளை வஹிப்பவளும், அழிவற்றவளும், முத்துமாலையுடன் விளங்கும் ஸ்தந பாரத்தினாலே வணங்கியவளும், 3 கண்களையுடையவளும், தேவர்களாலே பூஜிக்கப்பட்டவளும், செந்தாமரை மலரில் வீற்றிருப்பவளுமான (மாயா புவனேசுவரீ தேவியை) வணங்குகிறேன். (நீல நிறம்)

கககூ. அத வஜ்ரப்ரஸ்தாரிணீ த்யாநம்

(ஶாரதாதிலகே)

ரக்தாம்போள ரக்தபோதே விகஸிதகமலாரூஹ்யஶரே
ஸந்நிஷண்ணாம்
ரக்தாம் ஹ்ரீம் ரக்த(க்த்ர)வஸ்த்ராம் ஶ்ருணிதஶாங்குஶாம்
ஸௌம்யவக்த்ராம் த்ரிநேத்ராம் ।
பீஜாபூரேக்ஷுசாபாங்குஶபாஶவரதாந்
ஹஸ்தபத்மைர்ததாநாம்
பிப்ராணாம் த்யாயேத் ஹ்ரீம் ஸ்மரஹரநமிதாம் அம்பிகாம்
நமாமி ॥ க ॥
(ரக்தவர்ண:)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

119. வஜ்ரப்ரஸ்தாரிணீ த்யாநம்

(சாரதா திலகத்தில்)

ரக்த ஸமுத்திரத்தில் ரக்தவர்ணமான ஓடத்தில் மலர்ந்த தாமரை மலரில் வீற்றிருப்பவளும், சிவப்பு நிற மானவளும், சிவப்பான (ரத்தினமயமான) கிரீடத்தில் பிரகாசிக்கும் சந்திரகலையையுடையவளும், சிரித்த முகத்தை யுடையவளும், 3 கண்களையுடையவளும், மாதுளம்பழம், அம்பு, பாசம், அங்குசம், உலக்கை, வில், மாலை, கபாலம், இவைகளை கைகளில் வஹிப்பவளும், சிறிது வணங்கிய அங்கங்களையுடையவளும், ஸ்தநபாரத்தினாலே வணங்கிய வளுமான அம்பிகையை (வஜ்ரப்ரஸ்தாரிணீ தேவியை) நமஸ்கரிக்கின்றேன். (சிவப்பு நிறம்)

௧௨௰. அத த்ரிகண்டகீதேவீ த்யாநம்

(ஶாரதாதிலகே)

[illegible]

[illegible] ॥ ௧ ॥

([illegible])

120. திரிகண்டகீதேவீ த்யாநம்

(சாரதாதிலகத்தில்)

தொப்புளுக்குக்கீழே நீல நிறமானவளும், கண்டம் வரையில் அருண (சிவப்பு) நிறமானவளும், முகத்தில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

வெளுப்பு நிறமானவளும், தெத்திப் பற்களாலே பயங்கரமாகவும் வயிறுவரை நீண்டுமிருக்கின்ற முகங்களையுடையவளும், பயங்கரமான அங்கங்களையுடையவளும், தாமரைமலர்போன்ற 4 கைகளிலும், 2 தீபங்கள், சங்கம், சக்கரம், இவைகளை வஹிப்பவளும், சடையின் நடுவில் பிரகாசிக்கும் சந்திரகலையை தரிப்பவளும், 3 கண்களையுடையவளுமான தேவதையானவள் (திரிகண்டகீ தேவியானவள்) ஸகல விதமான பயங்களையும் போக்குவாளாக. (சித்திரவர்ணம்)

௧௨௧. 𑌅𑌥 𑌮𑍋𑌹𑌿𑌨𑍀𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑍇𑌵𑍀 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

(𑌶𑌾𑌰𑌦𑌾𑌤𑌿𑌲𑌕𑍇)

𑌅𑌰𑍍𑌧𑍇𑌨𑍍𑌦𑍁𑌮𑍌𑌳𑌿𑌮𑌰𑍁𑌣𑌾𑌮𑌮𑌰𑌾𑌭𑌿𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌂
𑌅𑌮𑍍𑌭𑍋𑌜𑌪𑌾𑌶𑌸𑍃𑌣𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌕𑌪𑌾𑌲𑌹𑌸𑍍𑌤𑌾𑌂 ।
𑌰𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑌰𑌾𑌗𑌵𑌸𑌨𑌾𑌭𑌰𑌣𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌂
𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌚𑍍𑌛𑌿𑌵𑌸𑍍𑌯 𑌵𑌨𑌿𑌤𑌾𑌂 𑌮𑌦𑌵𑌿𑌹𑍍𑌵𑌲𑌾𑌙𑍍𑌗𑍀𑌮𑍍 ॥ ௧ ॥

(𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

121. மோஹிநீ நித்தியாதேவீ த்யாநம்

(சாரதாதிலகத்தில்)

அரைவட்ட சந்திரனை தரிப்பவளும், சிவப்பு நிறமானவளும், தேவர்களாலே நமஸ்கரிக்கப்படுபவளும், தாமரை மலர், பாசம், அங்குசம், பூர்ணமான கபாலம், இவைகளை கைகளில் வஹிப்பவளும், சிவப்பான அங்கராகம் (அங்கங்களில் பூசிக்கொள்ளும் சந்தணம் முதலிய வாஸனை திரவியங்கள்) வஸ்திரம், ஆபரணங்கள், இவைகளை தரிப்பவளும், 3 கண்களையுடையவளும், மதுமதத்தினலே சேர்ந்த அங்கங்களையுடையவளும், பரமேசுவரனுடைய மனைவியுமான (மோஹினீ நித்தியாதேவியை) தியானம் செய்யவேண்டும். (சிவப்பு நிறம்)

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

க௨௨. அத ஜயதுர்கா த்யாநம்

(சாரதாதிலகே)

காலாப்ராபாம் கடாக்ஷைரரிகுலபயதாம்
மௌலிபத்தேந்துரேகாம்
ஶங்கம் சக்ரம் க்ருபாணம் த்ரிஶிகமபி கரை-
ருத்வஹந்தீம் த்ரிநேத்ராம் ।
ஸிம்ஹஸ்கந்தாதிரூடாம் த்ரிபுவநமகிலம்
தேஜஸா பூரயந்தீம்
த்யாயேத் துர்காம் ஜயாக்யாம் த்ரிதஶபரிவ்ருதாம்
ஸேவிதாம் ஸித்திகாமை: ॥ க ॥

(க்ருஷ்ணவர்ண:)

122. ஜயதுர்கா த்யாநம்

(சாரதாதிலகத்தில்)

கருப்பு நிறமாக பிரகாசிப்பவளும், பார்வையினாலே சத்ருக்களுக்கு பயத்தைக் கொடுப்பவளும், சிரஸ்ஸில் சந்திரகலையை வஹிப்பவளும். சங்கம், சக்கரம், கத்தி, முச்சூலம், இவைகளை கைகளில் தரிப்பவளும், 3 கண்களுடையவளும், ஸிம்ஹத்தின் தோளில் வீற்றிருப்பவளும், ஸகல புவநங்களையும் ஒளியினாலே நிறப்புகிறவளும், தேவர்களாலே சூழப்பட்டவளும், ஸித்தியை விரும்புகிறவர்களாலே ஸேவிக்கப்பட்டவளுமான ஜயதுர்காதேவியை தியாநம் செய்யவேண்டும். (கருப்பு நிறம்)

க௨௩. அத விந்த்யவாஸிநீதுர்கா த்யாநம்

(சாரதாதிலகே)

ஸௌவர்ணாம்புஜமத்யகாம் த்ரிநயநாம் ஸௌதாமிநீ
ஸந்நிபாம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஶங்க₂ம் சக்ரவராப₄யாநி த₃த₄தீமிந்தோ₃: கலாம்
பி₃ப்₄ரதீம் ।
க்₃ரைவேயாங்க₃த₃ஹாரகுண்ட₃லத₄ராமாக₂ண்ட₃லாத்₃யை:
ஸ்துதாம்
த்₄யாயேத்₃விந்த்₄யநிவாஸிநீம் ஶஶிமுகீ₂ம் பார்ஶ்வஸ்த₂
பஞ்சாநநாம் ॥ ௧ ॥
(கநகவர்ணா:)

123. விந்தியவாஸினீ துர்கா த்யாநம்
(சாரதாதிலகத்தில்)

தங்கத் தாமரைமலரின் நடுவில் வீற்றிருப்பவளும், 3 கண்களையுடையவளும், மின்னல்கொடிபோன்ற திருமேனியுடையவளும், சங்கம், சக்கரம், வரதம், அபயம், இவைகளை தரிப்பவளும், சந்திரகலையை வஹிப்பவளும், கிரைவேயம், (கழுத்தணி) அங்கதம், (தோள்வளை) ஹாரம், குண்டலம், இவைகளையணிந்திருப்பவளும், இந்திரன் முதலியவர்களாலே துதிக்கப்பட்டவளும், பக்கத்தில் பரமேசுவரனுடனிருப்பவளும், சந்திரனைப்போன்ற முகத்தையுடையவளுமான விந்தியவாஸினீ துர்கையை தியாநம் செய்யவேண்டும் (ஸுவர்ண வர்ணம்)

௧௨௪. அத₂ ரிபுமாரிணீது₃ர்கா₃த்₄யாநம்
(ஶாரதா₃திலகே)

தர்ஜநீம் த்ரிஶிக₂ம் கோ₄ராம் தா₄ரயந்தீம் ப₄யங்கரீம் ।
ரக்தாம் த்₄யாயேத் [illegible] ॥
[illegible] ।
(ரக்தவர்ணா:)

124. ரிபுமாரிணீ துர்கா த்யாநம்
(சாரதாதிலகத்தில்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தர்ஜநீ முத்திரையும் முச்சூலமும் இரு கைகளிலும் தரித்து பயங்கரமாகவும் சிவப்பு நிறமாகவுமிருக்கும் துர்கா தேவியை, சூரிய பிம்பத்தில் தியானம்செய்து, மூல மந்திரத்தை பதினாயிரம் உரு ஜபிக்க சத்துருக்கள் பந்துக்களுடன் மரணமடைவார்கள். (சிவப்பு நிறம்)

க௨௫. த்ரிபுரபைரவீ த்⁴யாநம்

(ஶாரதா³திலகே)

உத்³யத்³பா⁴நுஸஹஸ்ரகாந்திமருணக்ஷௌமாம் ஶிரோமாலிகாம்

ரக்தாலிப்தபயோத⁴ராம் ஜபவடீம் வித்³யாமபீ⁴திம் வரம் ।
ஹஸ்தாப்³ஜைர்த³த⁴தீம் த்ரிநேத்ரவிலஸத்³வக்த்ராரவிந்த³ஶ்ரியம்
தே³வீம் ப³த்³த⁴ஹிமாம்ஶுரத்நமகுடாம் வந்தே³ரவிந்த³ஸ்தி²தாம் ॥

(ரக்தவர்ண:)

125. திரிபுரபைரவீ த்யாநம்

(சாரதாதிலகத்தில்)

ஆயிரம் சூரியன்கள் உதித்ததைப்போன்ற காந்தியை யுடையவளும், வெண்சிவப்புப் பட்டாடையை அல்லது சிவப்புப் பட்டாடையையணிந்தவளும், சிரஸ்ஸில் புஷ்ப மாலையை தரிப்பவளும், ரக்தத்தினாலே பூசப்பட்ட ஸ்தநங்களையுடையவளும், ஜபமாலை, வித்தியை, (புஸ்தகம்) அபயம், வரதம், இவைகளைக் கைகளில் வஹிப்பவளும், 3 கண்களுடன் பிரகாசிக்கும் முகாரவிந்த சோபையை யுடையவளும், சந்திரகலையுடன் கூடிய ரத்ந கிரீடத்தை யுடையவளும், தாமரை மலரில் வீற்றிருப்பவளுமான திரிபுரபைரவீ தேவியை வணங்குகிறேன். (சிவப்பு நிறம்)

க௨௬. அத² ஸம்பத்ப்ரத³பை⁴ரவ்யா த்⁴யாநம்

(ஶாரதா³திலகே)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌵𑌤𑌂𑌸𑌕𑌲𑌿𑌤𑌾𑌂 𑌶𑌰𑌦𑌿𑌨𑍍𑌦𑍁𑌶𑍁𑌭𑍍𑌰𑌾𑌂
𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑌯𑍀𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌭𑌾𑌵𑌯𑍇𑌤𑍍 𑌤𑌾𑌂 ।
𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌂 𑌜𑌪𑌵𑌟𑍀𑌮𑌮𑍃𑌤𑌾𑌢𑍍𑌯𑌕𑍁𑌮𑍍𑌭𑌂
𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌹𑌸𑍍𑌤𑌕𑌮𑌲𑍈𑌰𑍍𑌦𑌧𑌤𑍀𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌂 ॥

(𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

126. ஸம்வித்திரிபுரா த்யாநம்

(சாரதா திலகம்)

சந்திரனை சிரோபூஷணமாகக்கொண்டவளும், சரத்கால சந்திரனைப்போல வெண்மையானவளும், கரகமலங்களில் புஸ்தகம், ஜபமாலை, அமிருத கலசம், வியாக்கியான முத்திரை இவைகளை வஹிப்பவளும், 3 கண்களையுடையவளும், அகாரம் முதலான 50 அக்ஷரங்களின் வடிவமாக இருப்பவளுமான ஸம்வித் திரிபுராதேவியை ஹிருதயத்தில் பாவிக்கின்றேன். (வெளுப்பு நிறம்)

௧௨௭. 𑌅𑌥 𑌬𑌾𑌲𑌾𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑍀𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

(𑌶𑌾𑌰𑌦𑌾𑌤𑌿𑌲𑌕𑍇)

𑌸𑌦𑍍𑌯𑌸𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌯𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑌾𑌭𑌾𑌂
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑌸𑍂𑌤𑍍𑌰𑌵𑌰𑌦𑌾𑌭𑌯𑌹𑌸𑍍𑌤𑌚𑌿𑌹𑍍𑌨𑌾𑌂 ।
𑌨𑍇𑌤𑍍𑌰𑍋𑌤𑍍𑌪𑌲𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌪𑌦𑍍𑌮𑌾𑌂
𑌤𑍍𑌵𑌾𑌂 𑌤𑌾𑌰𑌹𑌾𑌰𑌰𑍁𑌚𑌿𑌰𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑍇 𑌭𑌜𑌾𑌮𑌿 ॥ ௧ ॥

(𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

127. பாலாதிரிபுரஸுந்தரீ த்யாநம்

(சாரதா திலகம்)

ஹே திரிபுராதேவி, அப்பொழுது உதித்த ஆயிரம் ஸூரியன்களைப்போன்ற சோபையையுடையவளும், வித்தியை, (புஸ்தகம்) ஜபமாலை, வரதம், அபயம் இவைகளை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கைகளில் வஹிப்பவளும், 3 கண்களாலே அலங்கரிக்கப்பட்ட பத்மம் போன்ற முகத்தையுடையவளும், ஹாரத்தின் பாரத்தினாலே மனோஹரமான ஸ்வரூபமுடையவளுமான உன்னை பஜிக்கின்றார்கள். (சிவப்பு நிறம்)

௧௨௮. 𑌅𑌥 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑍇𑌵𑍀 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍
(𑌶𑌾𑌰𑌦𑌾𑌤𑌿𑌲𑌕𑍇)

𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌂 𑌭𑌜𑍇 𑌬𑌾𑌲𑌶𑌶𑌾𑌙𑍍𑌕𑌚𑍂𑌡𑌾𑌂
𑌪𑌾𑌶𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑍌 𑌕𑌲𑍍𑌪𑌲𑌤𑌾𑌂 𑌕𑌪𑌾𑌲𑌮𑍍 ।
𑌹𑌸𑍍𑌤𑍈𑌰𑍍𑌵𑌹𑌨𑍍𑌤𑍀𑌮𑌰𑍁𑌣𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌂
𑌸𑌲𑍍𑌲𑌾𑌪𑌯𑌨𑍍𑌤𑍀𑌂 𑌕𑌰𑌵𑌲𑍍𑌲𑌕𑍀𑌂 𑌤𑌾𑌂 ॥ ௧ ॥
(𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

128. நித்தியாதேவீ த்யாநம்
(சாரதா திலகம்)

இளம் பிறையை சிரஸ்ஸில் தரித்தவளும், பாசம், அங்குசம், கல்பலதை, கபாலம் இவைகளை கையில் வஹிப்பவளும், செந்நிறமானவளும், 3 கண்களையுடையவளும், கையிலிருக்கும் வீணையை மீட்டிக்கொண்டிருப்பவளுமான நித்தியாதேவியை பஜிக்கின்றேன். (சிவப்புநிறம்)

௧௨௯. 𑌅𑌥 𑌤𑍍𑌵𑌰𑌿𑌤𑌾𑌦𑍇𑌵𑍀 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍
(𑌶𑌾𑌰𑌦𑌾𑌤𑌿𑌲𑌕𑍇)

𑌶𑍍𑌯𑌾𑌮𑌾𑌂 𑌬𑌰𑍍𑌹𑌿𑌕𑌲𑌾𑌪𑌶𑍇𑌖𑌰𑌯𑍁𑌤𑌾𑌮𑌾𑌬𑌦𑍍𑌧𑌪𑌰𑍍𑌣𑌾𑌂
𑌶𑍁𑌕𑌾𑌂
𑌗𑍁𑌞𑍍𑌜𑌾𑌹𑌾𑌰𑌲𑌸𑌤𑍍𑌪𑌯𑍋𑌧𑌰𑌭𑌰𑌾𑌮𑌷𑍍𑌟𑌾𑌹𑌿𑌵𑌾𑌨𑍍
𑌬𑌿𑌭𑍍𑌰𑌤𑍀𑌂 ।
𑌤𑌾𑌟𑌙𑍍𑌕𑌾𑌙𑍍𑌗𑌦𑌮𑍇𑌖𑌲𑌾𑌂 𑌗𑍁𑌣𑌰𑌣𑌨𑍍𑌨𑍂𑌪𑍁𑌰𑍈𑌸𑍍𑌸𑌾𑌭𑍂𑌷𑌿𑌤𑌾𑌂
𑌕𑍈𑌰𑌾𑌤𑍀𑌂 𑌵𑌰𑌦𑌾𑌭𑌯𑍋𑌦𑍍𑌯𑌤𑌕𑌰𑌾𑌂 𑌦𑍇𑌵𑍀𑌂
𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌂 𑌭𑌜𑍇 ॥ ௧ ॥
(𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌃)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

129. துவரிதாதேவீ த்யாநம்
(சாரதா திலகம்)

மயில் தோகையை சிரஸ்ஸில் அணிந்திருப்பவளும், இலைகளாலான ஆடையையணிந்திருப்பவளும், குன்றி மணி மாலைகளாலே பிரகாசிக்கும் ஸ்தநங்களையுடையவளும், அஷ்டநாகங்களையும் அணிந்திருப்பவளும், தோடு, தோள்வளை, அரைநூல்மாலை, இவைகளை அணிந்திருப்பவளும், அழகாக ஒலிக்கும் பாதஸரத்தின் சோபையாலே அலங்கரிக்கப்பட்டவளும், வரத அபய ஹஸ்தங்களையுடையவளும், 3 கண்களையுடையவளும், வேடுவ ஸ்திரீயின் வேஷத்தை தரித்திருப்பவளுமான (துவரிதா) தேவியை பஜிக்கின்றேன். (பச்சை நிறம்)

௧௩௰. 𑌅𑌥 𑌕𑌾𑌲𑌰𑌾𑌤𑍍𑌰𑌿 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍
(𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑍇)

𑌏𑌕𑌵𑍇𑌣𑍀 𑌜𑌪𑌾𑌕𑌰𑍍𑌣𑌪𑍂𑌰𑌾 𑌨𑌗𑍍𑌨𑌾 𑌖𑌰𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌲𑌮𑍍𑌬𑍋𑌷𑍍𑌠𑍀 𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑌾𑌕𑌰𑍍𑌣𑍀 𑌤𑍈𑌲𑌾𑌭𑍍𑌯𑌕𑍍𑌤𑌶𑌰𑍀𑌰𑌿𑌣𑍀 ॥

𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑍋𑌲𑍍𑌲𑌸𑌲𑍍𑌲𑍋𑌹𑌲𑌤𑌾𑌕𑌣𑍍𑌟𑌕𑌭𑍂𑌷𑌣𑌾 ।
𑌵𑌰𑍍𑌧𑌨𑌮𑍂𑌰𑍍𑌧𑌧𑍍𑌵𑌜𑌾 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌕𑌾𑌲𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌰𑍍𑌭𑌯𑌂𑌕𑌰𑍀 ॥ ௨ ॥

(𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌾)

130. காலராத்ரி த்யாநம்
(ந்ருஸிம்ம ப்ராஸாதத்தில்)

காலராத்திரியானவள் ஒரு பின்னலையுடையவளும் சம்பரத்தம்பூவை காதிலணிந்திருப்பவளும், நக்னையும், (வஸ்திரம் அணிந்துகொள்ளாதவளும்) கழுதை வாஹநத்தின்மேலே வீற்றிருப்பவளும், தொங்கும் உதட்டையுடையவளும், ஓலையை அணிந்திருப்பவளும், (பனை ஓலையை கர்ணாபரணமாக அணிந்திருப்பவளும்,) சரீரம் முழுமையும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எண்ணையைத் தேய்த்துக்கொண்டிருப்பவளும், இடது காலில் இரும்பை (இரும்பு வளையத்தை) தரித்திருப்பவளும், மீன் முதலியவைகளின் எலும்புகளை ஆபரணமாக அணிந்திருப்பவளும், வெட்டுண்ட தலையை துவஜமாக (பாவட்டாவாக) தரிப்பவளும், கருப்பு நிறமானவளும் பயத்தை யுண்டுபண்ணுபவளுமாவாள். (கருப்பு நிறம்)

௧௩௧. அத வாகீஶ்வரீ த்யாநம்

(பாஞ்சராத்ரே க்ரியாபாதே)

ஶ்வேதபத்மாஸநாரூடா ஶுக்லவர்ணா சதுர்புஜா ।
ஜடாமகுடஸம்யுக்தா ரத்நகுண்டலமண்டிதா ‖ ௧ ‖

யஜ்ஞோபவீதிநீ முக்தாஹாரவிபூஷிதா ।
துகூலவஸநா தேவீ நேத்ரத்ரயஸமந்விதா ‖ ௨ ‖

ஸௌம்யம் தக்ஷிணே ஹஸ்தே வாமஹஸ்தே து புஸ்தகம் ।
தக்ஷிணே சாக்ஷமாலாம் ச குண்டிகாம் வாமஹஸ்தகே ‖
வாகீஶ்யாக்ருதிராத்யாதா ‖ (ஶ்வேதவர்ணா:)

131. வாகீச்வரீ த்யாநம்

(பாஞ்சராத்ரம்—க்ரியாபாதம்)

வாகீச்வரீ தேவியானவள், வெண்தாமரையில் வீற்றிருப்பவளும், வெண்மையான நிறமுடையவளும், 4 கைகள் உடையவளும், ஜடாமகுடம் தரித்திருப்பவளும், ரத்ன குண்டலம் அணிந்திருப்பவளும், யக்ஞோபவீதம் முக்தாஹாரத்தை அணிந்திருப்பவளும், வெண்பட்டாடையணிந்திருப்பவளும், 3 கண்களுடையவளும், வலது கையில் அழகான தண்டமும் இடது கையில் புஸ்தகமும், வலது கையில் ஜபமாலையும், இடது கையில் கிண்டியும் தரித்திருப்பவளுமாவாள். (வெளுப்பு நிறம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௧௩௨. अथ धेनुवागीश्वरी ध्यानम्
(आश्वलायनकल्पे)

शुद्धस्फटिकसंकाशां शुक्लाम्बरधरां तथा ।
अङ्कुशेनाक्षसूत्रेण पाशपुस्तकधारिणीम् ॥
मुक्ताहारेण संयुक्तां देवीं दिव्य
वस्त्रसमायुजाम् ।
सितेन दर्पणाभेन वस्त्रेण परिभूषिताम् ॥
सुस्तनीं वेदिमध्यां तां चन्द्रार्धकृतशेखराम् ।
जटाकलापसंयुक्तां पूर्णचन्द्रनिभाननाम् ॥ १ ॥
त्रिलोचनीं महादेवीं स्वर्णनूपुरधारिणीम् ।
कटकैः स्वर्णरत्नाद्यैः महावलयभूषिताम् ॥
केयूरैर्मेखलाद्यैश्च द्योतयन्तीं जगत्त्रयम् ।
शब्दब्रह्ममयीं ध्यायेत् धेनुवागीश्वरीं पराम् ॥
(शारदातिलकः)

132. தேநு வாகீச்வரீ த்யாநம்
(ஆச்வலாயநகல்பம்)

சுத்தமான ஸ்படிகத்தைப்போன்ற சரீர காந்தியை யுடையவளும், வெண்பட்டாடையை அணிந்திருப்பவளும், அங்குசம், ஜபமாலே, பாசம், புஸ்தகம் இவைகளை ஏந்தி யிருப்பவளும், முத்துமாலேயை அணிந்திருப்பவளும், அழகான நான்கு கைகளேயுடையவளும், கண்ணுடிபோன்ற வெண்மையான வஸ்திரத்தைப் போற்றிக்கொண்டிருப்ப வளும், அழகான ஸ்தநங்களும், சிறுத்த இடையும், அரை வட்டச் சந்திரனேயுடைய சிரஸ்ஸும், பின்னிய கூந்தலும், பூர்ண சந்திரனேப்போன்ற முகமும், 3 கண்களுமுடைய வளும், ஸுவர்ண்ணமயமான அரைநூல் மாலேயை அணிந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வளும், ஸுவர்ணமயமான கடகம், வலயம், (வளை), கேயூரம், ஒட்டியாணம் இவைகளாலே மூன்று உலகங்களையும், பிரகாசிக்கச் செய்கின்றவளும், சப்தபிரம்ஹ ஸ்வரூபிணியுமான பராதேநுவாகீச்வரீ தேவியை தியானம் செய்யவேண்டும். (வெளுப்பு நிறம்)

௧௩௩. 𑌅𑌥 𑌸𑍌𑌭𑌾𑌗𑍍𑌯𑌵𑌾𑌗𑍀𑌶𑍍𑌵𑌰𑍀 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

(𑌶𑌾𑌰𑌦𑌾𑌤𑌿𑌲𑌕𑍇)

𑌤𑌰𑌣𑌶𑌕𑌲𑌮𑌿𑌨𑍍𑌦𑍋𑌰𑍍𑌬𑌿𑌭𑍍𑌰𑌤𑍀 𑌶𑍁𑌭𑍍𑌰𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌃
𑌕𑍁𑌚𑌭𑌰𑌨𑌮𑌿𑌤𑌾𑌙𑍍𑌗𑍀 𑌸𑌨𑍍𑌨𑌿𑌷𑌣𑍍𑌣𑌾 𑌸𑌿𑌤𑌾𑌬𑍍𑌜𑍇 ।
𑌨𑌿𑌜𑌕𑌰𑌕𑌮𑌲𑍋𑌦𑍍𑌯𑌲𑍍𑌲𑍇𑌖𑌨𑍀𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌶𑍍𑌰𑍀𑌃
𑌸𑌕𑌲𑌵𑌿𑌭𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍈 𑌪𑌾𑌤𑍁 𑌵𑌾𑌗𑍍𑌦𑍇𑌵𑌤𑌾 𑌨𑌃 ॥ ௧ ॥

(𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

133. ஸௌபாக்ய வாகீச்வரீ த்யானம்

(சாரதா திலகம்)

பிரகாசமான சந்திரகலையை தரிப்பவளும், வெளுப்பு நிறமானவளும், ஸ்தநபாரத்தினாலே வணங்கிய அங்கங்களையுடையவளும், வெள்ளைத்தாமரை மலரில் வீற்றிருப்பவளும், தனது கரகமலத்தில் பிரகாசிக்கும் எழுதுகோல், புஸ்தகங்களையுடையவளுமான வாக்தேவதையானவள் நமக்கு ஸகல விபவங்களையும் கொடுத்துக் காப்பாற்றுவாளாக. (வெளுப்பு நிறம்)

௧௩௪. 𑌅𑌥 𑌪𑌦𑍍𑌮𑌨𑌾𑌭𑌕𑍁𑌟𑍁𑌮𑍍𑌬𑌿𑌨𑍀 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

(𑌪𑌾𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑍇 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌪𑌾𑌦𑍇)

𑌪𑌦𑍍𑌮𑌾 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑌾𑌸𑍀𑌨𑌾 𑌪𑌦𑍍𑌮𑌹𑌾 𑌪𑌦𑍍𑌮𑌵𑌰𑌸𑌿𑌤𑍀 ।
𑌹𑍇𑌮𑌾𑌭𑌾 𑌤𑍍𑌰𑌿𑌜𑌗𑌜𑍍𑌜𑌨𑌨𑍀 𑌕𑍁𑌙𑍍𑌕𑍁𑌮𑌾𑌭𑌾 𑌕𑌣𑍍𑌠(𑌶𑍍𑌰𑍁𑌤𑌿)
𑌦𑌙𑍍𑌗𑌨𑌾(𑌨𑌾) ॥ ௧ ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

ஸம்பூர்ணபிம்பாஸ்யருசி: கர்ணபூராய(ய)தேக்ஷணா ।
ஸயௌவநா ஸுரக்தோஷ்டீ குஞ்சிதப்ரூ: ஸுவிப்ரமா ॥

ரக்தோஷ்டீ பீநகண்டா ச கஞ்சுகாச்சாதிதஸ்தநீ ।
ஶிரஸா ஶங்கசக்ரப்ஜவீதைவதகடு ॥ ௩ ॥

நாகஹஸ்தஸமௌ பாஹூ கேயூரகடகோஜ்ஜ்வலௌ ।
பங்கஜம் ஶ்ரீஃபலம் வாமே தக்ஷிணே பிப்ரதீ பரா ॥ ௪ ॥

ஶாதநாம்பரஸம்வீதா விபுலஶ்ரோணிகா ததா ।
ஸர்வாபரணஸந்த்ராங்கா ருக்மிணீ லக்ஷ்மீர் விசிந்த்யதாம்
(பத்மவர்ணா:) ॥ ௫ ॥

134. பத்மா என்ற லக்ஷ்மீ த்யாநம்
(பாஞ்சராத்திரம் கிரியா பாதத்தில்)

பத்மா என்று கூறப்படுகின்ற லக்ஷ்மீ தேவியானவள் பத்மாஸனத்தில் வீற்றிருப்பவளும், தாமரை மலர் நிறமானவளும், தாமரை மலரில் வஸிப்பவளும், ஸுவர்ணம் ரத்னங்களாலே பிரகாசிக்கின்ற மகர குண்டலத்தை கர்ணாபரணமாக தரிப்பவளும், சந்திரபிம்பம்போல மாசற்று விளங்கும் முகத்தையுடையவளும், கண்ணின் பக்கத்தில் விளங்கும் கர்ணபூரத்தையுடையவளும், (கர்ணபூரம் – அலங்காரமாக காதில் வைத்துக்கொள்ளப்படும் புஷ்பம்) அல்லது நீலோத்பலத்தைப் போன்று நீண்ட கண்களையுடையவளும், யௌவனப்பருவமுடையவளும், மனோஹரமான அங்கங்களையுடையவளும், வளைந்த புருவத்தின் அழகையுடையவளும், சிவந்த உதட்டையுடையவளும், பருத்த (சதைப்பற்றுள்ள) கன்னங்களையுடையவளும், ரவிக்கையணிந்த ஸ்தநங்களையுடையவளுமாவாள். சங்கம், சக்கரம், பத்மம் இவைகள் போன்ற தலையணியையுடையவளும், யானையின் துதிக்கை போலிருக்கும் கைகளில் கேயூரம் கடகங்களை அணிந்

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திருப்பவளும், இடது கையில் தாமரை மலரையும் வலது கையில் ஸ்ரீ பலத்தையும் (ஸ்ரீபலம் - பில்வபலம்) தரிப்பவளும், அழகான ஆடையணிந்தவளும், விஸ்தாரமான ச்ரோணிபாகத்தையுடையவளும், (ச்ரோணீ—பிருஷ்டபாகம்) ஒட்டியாணமும், அரைநூல் மாலையும் தரித்தவளுமாவாள். இந்த லக்ஷ்மீ தேவியானவள் ஸகல ஸம்பத்துக்களையும் விருத்தி செய்பவளாவாள். (தாமரை மலர் நிறம்)

௧௩௫. 𑌅𑌥 𑌚𑌤𑍁𑌷𑍍𑌷𑌷𑍍𑌟𑌿𑌯𑍋𑌗𑌿𑌨𑍀 𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌚

(𑌰𑍁𑌦𑍍𑌰𑌯𑌾𑌮𑌲𑍇)

𑌅𑌷𑍍𑌟𑌾𑌷𑍍𑌟𑌕𑌂 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌯𑍋𑌗𑌿𑌨𑍀𑌨𑌾𑌂 𑌸𑌮𑌾𑌸𑌤𑌃 ।
𑌆𑌦𑍍𑌯𑌾𑌷𑍍𑌟𑌕𑌂 𑌸𑌰𑍍𑌵𑌵𑌰𑍍𑌣𑌾𑌹𑌂 𑌤𑍍𑌰𑌿𑌸𑌪𑍍𑌤𑌾𑌂𑌶𑌂 𑌮𑍁𑌖𑌂 𑌤𑌥𑌾 ॥

𑌵𑌾𑌮𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌮𑍁𑌖𑌾𑌨𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗
𑌸𑌂𑌹𑌤𑌮𑍍 ।
𑌅𑌥 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌕𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 𑌅𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌮𑌯𑌾𑌂𑌕𑍁𑌶𑌮𑍍 ॥ ௨ ॥

𑌮𑍁𑌖𑌾𑌨𑌾𑌂 𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌂 𑌵𑍀𑌣𑌾𑌂 𑌸𑍁𑌵𑍍𑌰𑍁𑌤𑌂 𑌮𑌣𑌿𑌹𑌸𑍍𑌤𑌣𑌮𑍍 ।
𑌵𑍍𑌰𑌾𑌜𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌗𑌦𑌾𑌂 𑌖𑌡𑍍𑌗𑌂 𑌮𑍁𑌖𑌾𑌨𑌾𑌂 𑌨𑍀𑌲𑌵𑌰𑍍𑌣𑌕𑌮𑍍 ॥ ௩ ॥

𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌷𑍍𑌟𑌕𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ।
𑌪𑌦𑍍𑌮𑌂 𑌖𑍇𑌟𑌂 𑌪𑌾𑌶𑌂 𑌚 𑌮𑍁𑌖𑌾𑌨𑌾𑌂 𑌪𑌂𑌚𑌕𑌂 𑌤𑌥𑌾 ॥ ௪ ॥

𑌯𑌮𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌦𑌷𑍍𑌟𑌕𑌲𑌾𑌧𑌰𑌾𑌤𑍍 ।
𑌖𑌡𑍍𑌗𑌂 𑌖𑍇𑌟𑌂 𑌚 𑌪𑌰𑌿𑌘𑌂 𑌭𑌿𑌂𑌡𑌿𑌂 𑌶𑌾𑌲𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥

𑌪𑌂𑌚𑌾𑌷𑍍𑌟𑌕𑌮𑌤𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌮𑌨𑍋𑌹𑌰𑌮𑍍 ।
𑌪𑍀𑌤𑌂 𑌷𑌡𑍍𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌶𑍀𑌰𑍍𑌷𑌾𑌷𑍍𑌟𑌂 𑌚 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ॥ ௬ ॥

𑌖𑌡𑍍𑌗𑌾𑌦𑌿𑌕𑌂 𑌸𑌮𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌷𑌡𑍍𑌰𑌸𑌹𑍍𑌯𑌾𑌷𑍍𑌟𑌾𑌂𑌗𑌕𑌮𑍍 ।
𑌦𑌿𑌵𑍍𑌯𑌯𑍋𑌗𑌾 𑌮𑌹𑌾𑌯𑍋𑌗𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍋𑌗𑌾 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑍀 ॥ ௭ ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

விஶாலிநீ ஶாகிநீ ச காலராத்ரீ நிஶாசரீ |
கங்காலீ ரௌத்ரவேதாலீ ஹூங்காரீ புவநேஶ்வரீ || ௮ ||

ஊர்த்வகேஶீ விரூபாக்ஷீ ஶுஷ்காங்கீ நரபோஜிநீ |
ஃபட்காரீ வீரபத்ரா ச தூம்ராக்ஷீ கலஹப்ரியா ||

ரக்தாக்ஷீ ராக்ஷஸீ கோரா விஶ்வரூபா பயங்கரீ |
காமாக்ஷீ உக்ரசாமுண்டா பீஷணா த்ரிபுராந்தகா ||

வீரகௌமாரிகா சண்டீ வாராஹீ முண்டதாரிணீ |
பைரவீ ஹஸ்திநீ க்ரோததுர்முகீ ப்ரேதவாஹிநீ ||

கட்வாங்கதீர்கலம்போஷ்டீ மாலதீ மந்த்ரயோகிநீ |
அஸ்திநீ சக்ரிணீ க்ராஹா கங்காலீ புவநேஶ்வரீ || ௧௨ ||

கண்டகீ காடகீ ஶுப்ரா க்ரியாதூதீ கராலிநீ |
ஶங்கிநீ பத்மிநீ க்ஷீரா அஸந்தா ச ப்ரஹாரிணீ ||

லக்ஷ்மீஶ்ச காமுகீ லோலா காகத்ருஷ்டிரதோமுகீ |
தூர்ஜடீ மாலிநீ கோரா கபாலீ விஷபோஜிநீ ||

சதுஷ்ஷஷ்டிஸமாக்யாதா யோகிந்யோ வரவிக்ரஹா: ||

135 சதுஷ்ஷஷ்டி (64) யோகிநீ த்யாநம்

(பெயர்கள் ருத்திரயாமளத்தில்)

64 யோகிநிகளைச் சுருக்கமாகக் கூறுகிறேன். அவைகளில் முதலாவது 8 ஸுவர்ணவர்ணமாகும். முச்சூலம், உடுக்கை, பாசம், கத்தி இவைகளை தரித்திருப்பதாகும். ஸர்வாங்க ஸுந்தரமாக இருப்பதாகும். இவ்விதமாக தியாநம் செய்யவேண்டும்.

இரண்டாவது 8 யோகிநிகளை ஜபமாலை, அங்குசம், வீணை இவைகளை தரித்தும் வெளுப்பு நிறமாகவும்,

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ரத்நாலங்காரங்களை தரித்திருப்பதாகவும் த்யாநிக்க வேண்டும்.

மூன்றாவது 8 யோகினிகளை தீச்சுடர், சக்தி என்னும் ஆயுதம், கதை, குந்தம் என்னும் ஆயுதம் இவைகளைத் தரித்து நீலநிறமாகவும், சுபத்தைக்கொடுக்கக்கூடியவை களாகவும், சுபகரமான லக்ஷணங்களுடன் கூடியவை களாகவும், த்யாநம் செய்யவேண்டும்.

நான்காவது கணம் 8ம், கத்தி, கேடயம், பட்டிசம், பரசு இவைகளை தரித்தும், புகை நிறமாகவும் இருப்பதாக, அன்புடன் த்யாநம் செய்யவேண்டும்.

ஐந்தாவது யோகினீ கணம் 8ம், குந்தாயுதம், கேடயம், பரிகாயுதம், பிண்டிபாலம் இவைகளை தரித்தும், வெளுப்பு நிறமாகவும், மனோஹரமாகவுமிருப்பதாகும்.

ஆறாவது கணம் 8ம், மஞ்சள் நிறமாகவும், ஏழாவது கணம் 8ம் சிவப்பு நிறமாகவும் எட்டாவது கணம் 8ம் மின்னல் நிறமாகவுமிருப்பதாகும். 6, 7, 8வது கணங்கள் (5வது கணத்தைப்போல) குந்தம், கேடயம், பரிகம், பிண்டிபாலம் இவைகளை தரித்திருப்பவைகளாகும்.

இந்த யோகினிகளின் பெயர்கள் :—

திவ்யயோகை 1, மஹாயோகை 2, ஸித்தயோகை 3, மஹேசுவரீ 4, பிசாசினீ 5, டாகினீ 6, காலராத்ரீ 7, நிசாசரீ 8, கங்காளீ 9, ரௌத்ரவேதாளீ 10, ஹுங்காரீ 11, புவனேசுவரீ 12, ஊர்த்துவகேசீ 13, விரூபாக்ஷீ 14, சுஷ்காங்கீ 15, நரபோஜினீ 16, பட்காரீ 17, வீரபத்திரா 18, தூம்ராக்ஷீ 19, கலஹப்ரியா 20, ரக்தாக்ஷீ 21, ராக்ஷஸீ 22, கோரா 23, விசுவரூப 24, பயங்கரீ 25, காமாக்ஷீ 26, உக்கிர சாமுண்டை 27, பீஷணீ 28 திரிபுராந்தகை 29, வீரகௌமாரிகை 30, சண்டீ 31, வாராஹீ 32, முண்டதாரிணீ 33, பைரவீ 34, ஹஸ்தினீ 35, குரோததுர்முகீ 36, ப்ரேதவாஹினீ 37, கட்வாங்கதீர்கலம்போஷ்டீ 38, மாலதீ 39,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மந்திரயோகினீ 40, அஸ்தினீ 41, சக்கிரிணீ 42, கிராஹா 43, கங்காலீ 44, புவனேசுவரீ 45 கண்டகீ 46, காடகீ 47, சுப்பிரா 48, கிரியாதூதீ 49, கராலினீ 50, சங்கினீ 51, பத்மினீ 52, க்ஷீரா 53, அஸங்கா 54, பிரஹாரிணீ 55, லக்ஷ்மீ 56, காமுகீலோலா 57, காகதிருஷ்டி 58, அதோமுகீ 59, தூர்ஜடீ 60, மாலினீ 61, கோரா 62, கபாலீ 63, விஷபோஜினீ 64. இந்த 64 யோகினிகளும் சிறந்த ஸித்திகளைக் கொடுப்பவர்களாவார்கள்.

௧௩௬. 𑌅𑌥 𑌶𑌰𑍀𑌰𑌷𑌟𑍍𑌚𑌕𑍍𑌰𑌦𑍇𑌵𑌤𑌾𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

(𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌰𑍀𑌤𑍍𑌯𑌾)

𑌆𑌧𑌾𑌰𑍇 𑌲𑌿𑌂𑌗𑌨𑌾𑌭𑍌 𑌹𑍃𑌦𑌯𑌸𑌰𑌸𑌿𑌜𑍇
𑌤𑌾𑌲𑍁𑌮𑍂𑌲𑍇 𑌲𑌲𑌾𑌟𑍇
𑌦𑍍𑌵𑍇 𑌪𑌤𑍍𑌰𑍇 𑌷𑍋𑌡𑌶𑌾𑌰𑍇 𑌦𑍍𑌵𑌿𑌦𑌶𑌦𑌶𑌦𑌲𑍇
𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌰𑍇 𑌚𑌤𑍁𑌷𑍍𑌕𑍇 ।
𑌨𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑍇 𑌬𑌾𑌲𑌮𑌧𑍍𑌯𑍇 𑌡𑌫𑌕𑌠𑌸𑌹𑌿𑌤𑍇 𑌕𑌣𑍍𑌠𑌦𑍇𑌶𑍇
𑌸𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂
𑌹𑌂𑌕𑍍𑌷𑌂𑌤𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑌕𑌲𑌦𑌲𑌗𑌤𑌂
𑌵𑌰𑍍𑌣𑌰𑍂𑌪𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 ॥ ௧ ॥

136 சரீரஷட்சக்கிரதேவதாத்யானம்

(வேதாந்தம் யோக சாஸ்திர ரீதியாக)

மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரம், அநாஹதம், விஶுத்தி, ஆஞ்ஞை என்பவைகள் சரீரத்திலுள்ள ஷட் சக்கரங்களாம். இவைகளின் ஸ்தானங்கள், குதம் மேட்ரம் இவைகளின் மத்தியம், லிங்கத்திற்கு ஆதாரமான இடம், நாபிமத்தியம் ஹிருதயம், கண்டம், புருமத்தியம் இவைகளாகும். இவைகளில் மூலாதாரத்தில் வகாரம் முதல் ஸகாரம் வரையுள்ள 4 அக்ஷரங்களுடன் கூடிய (4 இதழ்களுடைய) சதுர்தள பத்மமும், ஸ்வாதிஷ்டானத்தில் ப (ப)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காரம் முதல் லகாரம் வரையிலுள்ள 6 அக்ஷரங்களுடன் கூடிய ஷட்தள (6 இதழ்களுடைய) பத்மமும், மணி பூரத்தில் ட (ட)காரம் முதல் ப (ப) காரம் வரையிலுள்ள தசதள (10 இதழ்களுடைய) பத்மமும், அநாஹதத்தில் ககாரம் முதல் ட (ட) காரம் வரையிலுள்ள துவாதசதள (12 இதழ்களுடைய) பத்மமும், விசுத்தியில் அகாராதிகளான 16 ஸ்வரங்களுடன் கூடிய ஷோடசதள (16 இதழ்களுடன் கூடிய) பத்மமும், ஆஞ்ஞாஸ்தாநத்தில் ஹகாரம் க்ஷகாரம் ஆகிய 2 அக்ஷரங்களுடன் கூடிய துவிதள (2 இதழ்களுடன் கூடிய) பத்மமும் இருக்கின்றன.

இவ்விதமாக ஷட்சக்கரங்களிலும் ஸகல அக்ஷர ஸ்வரூபமாக விளங்குகின்ற ஷட்சக்கரதேவதா ஸ்வரூபத்தை நமஸ்கரிக்கின்றேன்.

𑌅𑌥 𑌵𑌰𑍍𑌣𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑌿

(𑌸𑌿𑌦𑍍𑌧𑌶𑌾𑌬𑌰𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍇)

𑍧𑍩𑍭. 𑌅𑌥 𑌅𑌕𑌾𑌰𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

𑌅𑌜𑌾𑌸𑍍𑌯𑌾 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌾 𑌹𑌂𑌸𑌸𑍍𑌥𑌾 𑌯𑌜𑍍𑌞𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌾 ।
𑌶𑌰𑌾𑌸𑌨𑌂 𑌵𑌰𑌂 𑌦𑌕𑍍𑌷𑍇 𑌧𑌤𑍍𑌤𑍇 𑌵𑌾𑌮𑍇 𑌶𑌰𑌾𑌭𑌯𑌮𑍍 ॥𑍧॥

(𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

எழுத்துக்களின் த்யாநம்

(ஸித்தசாபர தந்திரத்தில்)

137. அகார த்யாநம்

அகாரத்தின் அதிதேவதையானவள், செம்மறியாட்டின் முகமும், சிவப்பு நிறமும், அன்னவாஹநமும், வெளுப்பு ஆடையும் உடையவளாய் வலது (இடது) கைகளில் வில், வரதம் இவைகளும் இடது (வலது) கைகளில் அம்பு, அபயம் இவைகளும் தரித்திருப்பவளாவாள். (சிவப்புநிறம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௧௩௭. அத ஆகார த்யானம்

ஆகாராக்யாதர்வணீ து ஶ்யாமஶுக்லாம்பராம்ஶுகா |
தத்தே கட்வாங்கம்(ஶூலம்)ச கேடம் ச த்ருதவேகேனைவ வராபயௌ ॥
(ஶ்யாமவர்ண:)

138. ஆகார த்யானம்

ஆகாரத்தின் அதிதேவதையான அதர்வணியானவள், பச்சை நிறமும், வெளுப்பு ஆடையுமுடையவளாகவும் வேகமாகச் செல்லுகின்றவளாகவுமிருப்பவளாவாள். கைகளில் கட்வா என்ற ஆயுத விசேஷம் (அல்லது கத்தி,) கேடயம் வரதம், அபயம் இவைகளை தரிப்பவளாவாள். (பச்சை நிறம்.)

௧௩௮. அத இகார த்யானம்

இகாராக்யா த்விளாதேவீ ஶ்வேதா மத்தகஜா ஶுபா |
கட்கவராந் தக்ஷே வாமே தத்தே கதாபயம் ॥
(ஶ்வேதவர்ண:)

139. இகார த்யானம்

இகாரத்தின் தேவதையான இளாதேவியானவள், வெளுப்பு நிறமும், மத்தகஜவாஹநமும், சுபகரமான குணங்களுமுடையவளாவாள். அவள் வலது கைகளில் கத்தி, வரதங்களையும், இடது கைகளில் கதை, அபயங்களையும் தரிப்பவளாவாள். (வெளுப்பு நிறம்.)

௧௪௰. அத ஈகார த்யானம்

ஈகாரஶ்ரீ ஶ்வேதவர்ணாபா வ்ருஷாரூடா
ஸிதாம்ஶுகா |

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

ஶாரிகாம் ச வரம் த³தே⁴ வாமே யஸ்தேஜஸாஹ்வயா ॥
(ஸ்வர்ணவர்ணா)

140. ஈகார த்யாநம்

ஈகாரத்தின் அதிதேவதை ஈச்வரியாவாள். அவள் ஸுவர்ணவர்ணமான சரீர சோபையும், விருஷப வாஹநமும், வெள்ளை நிறமான ஆடையும் தரிப்பவளாவாள். அவள் வலது (இடது) பக்கம் கைகளில் நாகத்தாப்புள்ளும், வரஹஸ்தமும், இடது (வலது) கைகளில் அங்குசம், அபயமும் தரிப்பவளாவாள் (ஸுவர்ண வர்ணம்.)

க௪க. அத² உகார த்⁴யாநம்

உக்³ராதே³வீ ஹ்ரீங்காராத்⁴யா ஷட்³பு⁴ஜா
ஸிம்ஹவாஹிதா ।
த³தே⁴ ஶூலாங்குஶவராந் வாமே வாமே பாஶக³தா³ப⁴யாந் ॥
(ஶுப்⁴ரவர்ணா)

141 உகார த்யாநம்

உகாரத்திற்கு தேவதை உக்கிராதேவியாவாள் இவள் 6 கைகளும், ஸிம்ஹவாஹநமும், வெளுப்பு நிறமுமுடையவளாவாள். வலது கைகளில் சூலம், அங்குசம், வரதங்களையும், இடது கைகளில் பாசம், கதை, அபயங்களையும் தரிப்பவளாவாள். (வெளுப்பு நிறம்)

க௪உ. அத² ஊகார த்⁴யாநம்

ஊகாரோர்ஜஸ்வலா தே³வீ ஶார்தூ³லவரவாஹநா ।
ரக்தா சதுர்பு⁴ஜா த³த்தே வஜ்ரவேத³வராப⁴யாந் ॥ க ॥
(ரக்தவர்ணா)

142. ஊகார த்யாநம்

ஊகார தேவதையான ஊர்ஜஸ்வலா தேவியானவள்,

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy
Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேங்கை வாகனமும், சிவப்பான மேனியும், 4 கைகளு முடையவளாவாள் கத்தி, கேடயம், வரம், அபயங்களை தரிப்பவளாவாள். (சிவப்பு நிறம்)

கசரு. ஊய ஜகார யூாநடீ

ஜதாயாஸா ஜகாராவூா ரக்தவணாூா வ்ரஷவூிதா ।
உகெஷ வாமவரஎ யகெத்த தயா வாமெஂகுமாஹயஎ ॥
(ரக்தவணாூ:)

143. ருகாரத்யாநம்

ருகாரத்தின் தேவதையான ருதுதாமா என்பவள் சிவப்பு நிறமும், விருஷப வாஹநமும், வலது கைகளில் பாசம், வரமும், இடது கைகளில் அங்குசம், அபயமும் தரித்திருப்பவளாவாள். (சிவப்பு நிறம்)

கசச. ஊய ஜூகார யூாநடீ

ஜூகாராவூா ரெணாகெயஂ ஷலாவூா ஷலூஜாவிதா ।
மாஞஂ வாமஂ வரஂ உகெஷ வாசெ வஜூமதாஹயாநு ॥
உயாநா ரக்தவிஂஹவூா க்ருஉரா லொகஹயஂகரீ ॥
(ஸ்வேதவணாூ:)

144 ரூகாரத்யாநம்

ரூகாரத்தின் தேவதையான ரேணுகையானவள், 6 முகங்களும், 6 கைகளும், வெளுப்பு நிறமுமுடையவளாவாள். வலது பக்கம் கைகளில் சூலம், பாசம், வரதங்களையும், இடது கைகளில் கத்தி, கதை, அபயங்களையும், தரிப்பவளாவாள். சிவப்பு நிறமான சிங்க வாஹநத்திலிருப்பவளாவாள். உலகத்திற்கு பயத்தை யுண்டு பண்ணுகிறவளாவாள், (வெளுப்பு நிறம்)

௧௪௫. अथ ऌकार ध्यानम्

ऌतम्भरा ऌकारार्णस्था श्यामा व्याघ्रपृष्ठिता ।
चतुर्मुखाष्टहस्तेयं धत्ते शस्त्राणि करैः
दक्षैः ॥ १ ॥

त्रिशूलपाशडमरुवरांश्च वामकरैस्तथा ।
खड्गं कपालमुसलाभयांश्च पीताम्बरा शुभा ॥ २ ॥
(श्यामवर्णा)

145 ஌கார த்யாநம்

஌காரத்தின் அதிதேவதை ஌தம்பரையாவாள். இவள் பச்சை நிறமானவள். புலியின்மீது வீற்றிருப்பவளாவாள். 4 முகங்களும், 8 கைகளுமுடையவளாவாள். வலது கைகளில் திரிசூலம், பாசம்-டமரு-வரதம் இவைகளையும், இடது கைகளில் கத்தி, கபாலம், உலக்கை, அபயம் இவைகளையும் தரிப்பவளாவாள். சுபலக்ஷணமுடைய வளாக பீதாம்பரம் தரித்திருப்பவளாவாள். (பச்சை நிறம்.)

௧௪௬. अथ ॡकार ध्यानम्

ॡकारा ॡञ्जिकादेवी पुष्पदन्तगजस्थिता ।
रक्ता दशहस्ताऽजाद्येषु दक्षादिक्रमशः करैः ॥ १ ॥

त्रिशूलपाशमुसलचक्राभयवरान् शुभान् ।
वामैः करैः वज्रखेटमहाशक्तिद्वयान्वया ॥ २ ॥
(रक्तवर्णा)

146. ஌ாகார த்யானம்

஌ாகாரத்திற்கு தேவதை ஌ாஞ்சிகை என்பவளாவாள். இவள் புஷ்பதந்தகஜத்தின்மேலே வீற்றிருப்பவளாவாள்,

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சிவப்பு நிறமும், 10 கைகளுமுடையவளாவாள். வலது பக்கம் கைகளில், மேல் கை முதல் முறையே, முச்சூலம், பாசம், உலக்கை, கத்தி, வரதம் இவைகளையும் இடது பக்கம் கைகளில், கத்தி, கேடயம், கதை, சக்தி, அபயம் இவைகளையும் தரிப்பவளாவாள். (சிவப்புநிறம்)

௧௪௭ அத ஏகார த்யாநம்

ஏகாராக்யா ரேவதீ ஸ்யாத் கபந்தஸ்ரக்
ப்ரதாரிணீ |
ரக்தா விம்ஶத்புஜா ஸிம்ஹவாஹநா ஸா த்ரிலோசநா ||

தக்ஷிணே ஹஸ்தே சக்ரஶூலபாஶாஸிகமண்டலூந் |
அக்ஷஸூத்ரம் ச சிந்முத்ராம் புஶுண்டீம்
முத்கரம் வரம் || ௨ ||

வாமே ஹஸ்தே ஶங்கபிண்டீசந்த்ரம்ருககேடகாந் |
கபாலம் ஶோஷணம் கோஷம் தண்டம் சைவ கதாபயம் ||
(ரக்தவர்ணா:)

147. ஏகார த்யாநம்

ஏகாரத்தின் அதிதேவதை ரேவதியாவாள். கபந்த மாலையை யணிந்திருப்பவளாவாள். (ருண்டம்-முண்டம். கை கால் தலையற்ற உடல்) சிவப்புநிறமானவளாவாள். 20 கைகளும், ஸிம்ஹவாஹநமும், நெற்றிக்கண்ணுமுடைய வளாவாள். வலது பக்கம் கைகளில், சக்கரம் 1, சூலம் 2, பாசம் 3, கத்தி 4, கமண்டலம் 5, ஜபமாலை 6, சின்முத்திரை 7, புசுண்டி என்ற ஆயுதம் 8, முத்கராயுகம் 9, வரதம் 10 இவைகளையும், இடதுபக்கம் கைகளில், சங்கம் 11, பிண்டி 12, சந்திரன் 13, மான் 14, கேடையம் 15, கபாலம் 16, சோஷணாங்கிரி 17, தண்டம் 18, கதை 19, அபயம் 20 இவைகளையும் தரிப்பவளாவாள். (சிவப்புநிறம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௧௪௮. அத² ஐகார த்⁴யாநம்

ஐகாராக்²யா ஶங்க²வர்ணா ரேவதீ த்ரிஶிரா ஸிதா |
மயூரஸ்தா² ஷட்³பு⁴ஜேயம் ரக்தகேஶைஸ்ஸுஸம்வ்ருதா ||

த³க்ஷிணேஷு கரேஷ்வஸ்யா சக்ரம் த்ரிஶூலம் வரம் ததா² |
வாமே ஶங்க²ம் க³தா³ம் ஶ்ரேஷ்டா²ம் கரயோரப⁴யம் ததா² ||௨||

(ஶுப்⁴ரவர்ணா:)

148. ஐகார த்யாநம்

ஐகாரத்தின் அதிதேவதை சுஷ்கரேவதியாவாள். இவள் 3 தலையும், மயில் வாஹநமும், 6 கைகளும், சிவப்பு நிறமான கூந்தலுமுடையவளாவாள். வலது பக்கம் கைகளில் சக்கரம், திரிசூலம், வரதமும், இடது கைகளில் சங்கம், பளுவான கதை அபயங்களையும் தரிப்பவளாவாள். (வெளுப்பு நிறம்)

௧௪௯. அத² ஓகார த்⁴யாநம்

ஓகாரா கபிலினீ தே³வீ ரக்தவர்ணா ஷடா³நநா |
மயூரவரவாஹநா: ஸௌம்யா த்⁴யேயா
த்³விநேத்ரா த்³வாத³ஶபு⁴ஜா ||௧||

வஜ்ரம் பாஶம் ச திந்து³ஜ்யாம் ஶரம் சாங்குஶமேவ ச |
வாமே பத்³மம் கார்முகம் ச கே²டம் க்ஷுரிகமேவ ச ||௨||

புஸ்தகம் சாப⁴யம் சைவ ஸர்வஶத்ருப⁴யங்கரீ ||

(ரக்தவர்ணா:)

149. ஓகார த்யாநம்

ஓகாரதேவதையான அசுவிநீ தேவியானவள், சிவப்பு நிறமும், 6 முகங்களும், மயில் வாஹநமும், 12 கைகளும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வக்கிரமான பார்வையுமுடையவளாவாள். வலது பக்கம் கைகளில் அங்குசம், அம்பு, கத்தி, பாசம், சின்முத்திரை, சங்கம் இவைகளையும், இடது பக்கம் கைகளில் சூலம், வில், கேடயம், உலக்கை, புஸ்தகம், அபயம் இவைகளையும் தரிப்பவளாவாள். ஸகல சத்துருக்களுக்கும் பயத்தைக் கொடுப்பவளாவாள். (சிவப்பு நிறம்)

௧௪௯. அத ஔகார த்யாநம்

ஔகாராக்யா ஹ்ருதயோதயம் கராளீ
தீர்க்கஜிஹ்விகா ।
வக்ரவக்த்ரா வக்ரநேத்ரா ஹ்ருத்கோடீ கோடிவீக்ஷணா ॥

நீலஜீமூதஸங்காஶா பீஷணா பீஷவாஹநா ।
ஷட்புஜாஶூலகட்கவரதா கதா கேடம் அபயம் ததா ।
மஹாவேகாலயாத்து வாமே த்யாநா ச ஜ்யோதரீ ॥

(ஶாக்தஸங்கமே)

150. ஔகார த்யாநம்

ஔகாரதேவதையான அகோரையானவள், பயங்கரமான முகமும், நீண்ட நாக்கும், ஒரே முகமும், வக்கிரமான கண்ணும், புருவத்தை நெரிப்பதனாலே கோணலான பார்வையும், நீருண்ட மேகத்தைப்போன்ற நிறமும், பயங்கரமான தோற்றமும், பயங்கரமான வாஹனமும், 6 கைகளுமுடையவளாவாள். வலது பக்கம் கைகளில் சூலம், கத்தி, வரங்களையும், இடது கைகளில் கதை, கேடயம், அபயங்களையும் தரிப்பவளாவாள். பருத்த வயிறுடையவளாவாள். (பச்சை நிறம்)

௧௫௧. அத ஸகார த்யாநம்

அஞ்ஜநாஞ்ஜநஸங்காஶா வக்ராஸ்யா ஜடிலா க்ருஶா ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

லம்போ³த³ரீ உக்³ரா வ்யாக்⁴ரவரவாஹநஶோபி⁴தா ॥ ௧ ॥
சதுர்பு⁴ஜா ஶூலபாஶவராப⁴யகரா ஸ்ம்ருதா ॥

(க்ருஷ்ணவர்ண:)

151. அம்கார த்⁴யாநம்

அம் என்ற அக்ஷரத்திற்கு தேவதையான அஞ்சநா தேவியானவள் மைபோன்ற நிறமும், 5 தலையும் (அல்லது விறிந்த முகமும்) சடைகளாலான கூந்தலும், மெலிந்த சரீரமும், பருத்த வயிறும், சூலம், பாசம், வரம், அபயங்களை தரித்த 4 கைகளுமுடையவளாய், பெரிய புலிவாகநத்தின் மீது வீற்றிருப்பவளாவாள். (கருப்பு நிறம்)

கருஉ. அத² அ:கார த்⁴யாநம்

அ: அஜாக்²யா அஜாதே³வீ த்ரிஶிராஸ்து த்ரிலோசநா ।
ரக்தா ச பீதாம்ப³ரா க்ரூரா தரக்ஷுவரவாஹநா ॥ ௧ ॥
ஷட்³பு⁴ஜா ஶூலபட்டிஶவரதா³ங்குஶஶோபி⁴தா ।
வாமே கே²டாப⁴யாந்யுக்தே கரை:
க்ரூராக்ஷ ॥ ௨ ॥

(ரக்தவர்ணா)

152. அ: (அஹ)கார த்⁴யாநம்

அஹ என்ற எழுத்திற்கு தேவதையான அஜாதேவி யானவள் 3 தலைகளும் (முகங்களும்) 3 கண்களும், சிவப்பு நிறமும், பீதாம்பரமும், புலிவாஹநமும், 6 கைகளுமுடைய வளாவாள். வலது கைகளில் சூலம், பட்டாக்கத்தி, வரத ஹஸ்தங்களையும், இடது கைகளில் அங்குசம், பெரிய கேடயம், அபயஹஸ்தங்களையுமுடையவளாவாள். (சிவப்பு நிறம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௧௫௩. அத² ககார த்⁴யாநம்

ஶ்ருதவிந்யாஸிநீ ஶுப்⁴ரா க³ஜாரூடா⁴ சதுர்பு⁴ஜா |
த்ரிஶூலம் ச வரம் த³க்ஷே வாமே(அ)ங்குஶாப⁴யாந்விதா ||௧||

(ஶ்வேதவர்ணா:)

153 ககார த்⁴யாநம்

ககார தேவதையான பூதவிங்யாஸிநியானவள் வெளுப்பு நிறமும், கஜவாஹநமும், 4 கைகளுமுடையவளாவாள். வலது கைகளில் திரிசூலம், வரதமும், இடது கைகளில் அங்குசம், அபயமும் தரிப்பவளாவாள். (வெளுப்பு நிறம்)

௧௫௪. அத² க²கார த்⁴யாநம்

வஜ்ரபீட²ஸ்தி²தா பீதா த்ரிஶிராஶ்ச த்ரிஶூலிநீ |
வாஶ்ரா வஜ்ரோத்³யோதிநீ வஜ்ரவராப⁴யகரா ததா² ||

(பீதவர்ணா:)

154 க² கார த்⁴யாநம்

க² கார தேவதையான கத்தியோதிநியானவள், கரிச்சான் வாஹநமும், மஞ்சள் நிறமும், 3 தலைகளும், சூலம், கத்தி, வரம், அபயம் தரித்த கைகளுமுடையவளாவாள். (மஞ்சள் நிறம்)

௧௫௫. அத² க³கார த்⁴யாநம்

கா³யத்ரீ ஸஹிதா சதுர்வக்த்ரா [illegible]
[illegible] ||
ஸஹிதாங்கா³ த³க்ஷிணே ஹஸ்தே ஶூலம் [illegible]
[illegible] ||௧||

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வாமே து புஸ்தகம் குண்டீம் கபாலமபயம் க்ரமாத் ।
(தூ⁴ம்ரவர்ணா:)

155 க³காரத்யாநம்

க³காரத்திற்கு அதிதேவதையான தூம்ரையானவள், 4 முகங்களும், ஸிம்ஹவாஹநமும், 8 கைகளும், புகை நிறமான சரீரமுமுடையவளாவள். வலது கைகளில் சூலம், ஜபமாலை, ஸ்ருவம், வரதம் இவைகளையும், இடது கைகளில் புஸ்தகம், கிண்டி, கபாலம், அபயம் இவைகளையும் தரிப்பவளாவாள். (புகை நிறம்)

௧௫௫ ஸ்ய வகார த்யாநம்

க்ருஷ்ணவர்ணா வராஹாஸ்யா ச லம்போதரா
க்ருசோதரீ ।
ஷட்³பு⁴ஜா முத்³க³ரம் சூலம் கட்வாங்கம் த³க்ஷஹஸ்தகே
க்ரமாத் ॥ ௧ ॥

வாமே வஜ்ரம் ததா² கேடமபயம் ஶத்ருஹந்த்ரிணீ ।
(க்ருஷ்ணவர்ணா:)

156 க⁴காரத்யாநம்

க⁴காரதேவதையானவள், கருப்பு நிறமும், பன்றி முகமும், ஒட்டியவயிறும், 6 கைகளும் உடையவளாவாள். வலது கைகளில் முத்கரம், சூலம், கட்வாங்கம், வரதங்களையும், இடதுகைகளில் கத்தி, கேடயம், அபயங்களையுமுடையவளாவாள். சத்துருக்களை அழிப்பவளாவாள். (கருப்பு நிறம்)

௧௫௬. ஸ்ய ஙகார த்யாநம்

அநந்தஶக்திஸம்யுக்தா ரக்தாபா ஹம்ஸவாஹநா ।
ஷடா³நநே ப்ரணவாக்ஷரீ வேதஶாஸ்த்ராதி³பூஜிதா ॥
(ரக்தவர்ணா:)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

157. ஙகார த்யாநம்.

ஙகாரத்திற்கு அதிதேவதையான அநந்த சக்தி என்ற தேவேசியானவள், சிவப்புநிறமும், மயில்வாஹநமும், 6. முகங்களுமுடையவளாவாள். அம்பு வில், கத்தி, கேடயம், வரதம், அபயம், இவைகளை தரிப்பவளாவாள். (சிவப்பு நிறம்)

கருஎ. அத ஙகார த்யாநம்

ஸூக்ஷ்மா ஷண்முகதேவஷா ஹயாரூடா வதாஸநா ।
வஜ்ரகேடயதா சாபா வராபயகரா ஸுபா ॥

(ரக்தவர்ணா:)

158. சகார த்யாநம்.

சகாரத்தின் அதிதேவதையான ஸூக்ஷ்மையானவள், ஒருமுகமும், குதிரைவாஹநமும், 4 கைகளும், உடைய வளாவாள் கைகளில், கத்தி, கேடயம், வரதம் அபயங்களை தரிப்பவளாவாள். (தங்க நிறம்.)

கருஅ. அத சகார த்யாநம்

ஹேம நிஸ்ஸ்ருதாஸுதீயம் பீதா சதுர்புஜவாஹநா ।
த்ரி ஸூலம் கட்க(கே)டிகாம் வாமா வேடா ச
அபயதீ ஸுபா ॥

(பீதவர்ணா:)

159 ச² கார த்யாநம்.

ச² காரத்திற்கு தேவதை, நிர்ஜராருந்ததி என்பவளாவாள். இவள் மஞ்சள் நிறமும், குரங்கு வாஹநமுமுடையவள்ாவாள். கைகளில் முச்சூலம், சிறிய கத்தி,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பாசம், கேடயம் இவைகளை தரிப்பவளாவாள். மங்கள குணமுடையவளாவாள். (மஞ்சள் நிறம்)

கசுய. அத² ஜகார த்⁴யாநம்

ஜகாரோ போ⁴க³தா³ ஹி ரக்தா ஸ்யாத் த்ரிநேத்ரா
ஸிம்ஹவாஹநா |
சதுர்பு⁴ஜா க²ட்³க³கே²டவராப⁴யகராந்விதா ||
(ரக்தவர்ண:)

160. ஜகார த்யாநம்

ஜகாரதேவதையான போகதா என்பவள், சிவப்பு நிறமும், 3 கண்களும், ஸிம்ஹ வாஹநமுமுடையவளாவாள். 4 கைகளுடையவளாவாள். கைகளில் கத்தி, கேடயம் வரதம் அபயங்களையுடையவளாவாள். (சிவப்பு நிறம்)

கசுக. அத² ஜ²கார த்⁴யாநம்

ஜ²காரோ நிர்ஜ²ரநதீ தே³வீ ஶரத³ப்⁴ரநிபா⁴ம்பு³ஜா |
பாஶம் வராப⁴யௌ பி³ப்⁴ரதீ நக்ரஸ்தா² ஶுப⁴தா³ ந்ருணாம் ||
(ஶுப்⁴ரவர்ண:)

161 ச⁴ கார த்யாநம்

ச⁴ காரத்தின் அதிதேவதை நிர்ஜரநதீ தேவியாவாள். சரத்கால மேகத்தைப்போன்ற நிறமுடையவளாவாள். முதலை வாஹநத்திலிருப்பவளாவாள். தாமரை மலர், பாசம், வரதம், அபயம் இவைகளை தரிப்பவளாவாள். மனிதர்களுக்கு நன்மைகளைச் செய்பவளாவாள். (வெளுப்பு நிறம்)

கசுஉ. அத² ஞகார த்⁴யாநம்

ஞாநரூபா ஜ்ஞாநதா³யிநீ ஶுப்⁴ரா ஸிம்ஹஸ்தா²
விஶ்வரூபிணீ |

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

த்ரிஶூலாம்பஜவிநேத்ராஹயாங்கிதகரா ஶ்வாஹா ||

(ஶ்வேதவர்ண:)

162 ஞகார த்யாநம்.

ஞகாரத்தின் தேவதை பிரபோதினீ என்பவளாவாள். வெளுப்பு நிறமும், சிம்ம வாஹநமுமுடையவளாவாள். ஞானஸ்வரூபிணியாவாள். சுபகரையாவாள். முச்சூலம், பத்மம், சின்முத்திரை அபயங்களை கைகளில் தரிப்பவளாவாள். (வெளுப்பு நிறம்.)

கசுங. அத டகார த்யாநம்

டாவ்யா வ யாமிநீ தேவீ ஶூலடங்கவராஹயா |

யதேத உக்ஷதம்ஶவ்யா பாடலாபா விதாம்ஶுகா ||

(பாடலவர்ண:)

163. டகார த்யானம்

டகாரத்தின் அதிதேவதை தாரிணீ என்பவளாவாள். சூலம், டங்கம், (மழு) வரம், அபயங்களை தரிப்பவளாவாள். மதங்கொண்ட யானை வாஹநமும், பாடல (வெண் சிகப்பு) வர்ணமானமேனியும், வெளுப்பு ஆடையுமுடையவளாவாள். (பாடல வர்ணம்)

கசுச: அத டகார த்யாநம்

க்ரியாஸரஸ்வதீ தவ்யா டாங்கஶவராஹயாது |

யத்தே ஸிம்ஹஸ்வராரூடா சைகவக்த்ராருணா உதா ||

(அருணவர்ண:)

164. ட² கார த்யானம்

ட² காரத்தின் தேவதை கிரியாஸரஸ்வதீ என்பவளாவாள். மழு, அங்குசம், வரம், அபயங்களை தரிப்பவ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ளாவாள். ஸிம்ஹவாஹநமும், ஒரு முகமும், சிவப்பு நிறமு முடையவளாவாள் (சிவப்பு நிறம்)

கசாரு. அத ஜகார த்யாநம்

ஜகாரிணீ பஞ்சவக்த்ரா லஸிதா டங்கமஹாயுதா ।
பத்மாபயாஹ்வா ஸ்ரக்பூஷா வராஹயகரா ச ஸா ॥

(ஸாஹ வர்ணா:)

165 ட^3 கார த்யாநம்

ட^3 காரத்தின் தேவதை டகாரிணீ எனப்படுவாள். இவள் 5 முகமும் வெளுப்பு நிறமும், மழு, கதை வரம், அபயங்களை தரித்த 4 கைகளும், கோழிவாஹநமுமுடை யவளாவாள் (வெளுப்பு நிறம்)

கசாசா. அத ஜகார த்யாநம்

ஜாலிநீ ஸ்ரீமுநாஸா பஞ்சவக்த்ரா ஜயேச்வரா ।
தடித்க்ஷமாளீ கமோயுக்தே ஸாலூடங்கவராஹயாந்து ॥

(ஹேமவர்ணா:)

166 ட^4 கார த்யாநம்

ட^4 காரரூபிணியானவள் ஸ்ரீகரா என்பவளாவாள். இவள் 5 முகங்களும், மயில் வாஹநமும், மின்னல்போன்ற மஞ்சள் நிறமும், சூலம் மழு, வரம், அபயங்களை தரித்த கைகளையுமுடையவளாவாள். (ஸ்வர்ண வர்ணம்)

கசாஎ. அத ணகார த்யாநம்

ணோ ரத்னஸாஸ்த்ரிகேஸவேஸ்ரீ ரக்தா லஹிரணவாஹநா ।
பஞ்சவக்த்ரா ஸாலூஸ்த்ரீவராஹயகரா ஸாஹா ॥

(ரக்தவர்ணா:)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

167. ணகார த்யாநம்

ணகாரத்தின் அதிதேவதை அநந்த சக்தி என்பவளாவாள். சிவப்பு நிறமும், மயில் வாஹநமும், ஒருமுகமும் சூலம், சக்தி, வரம், அபயங்களை தரித்த கைகளுமுடையவளாவாள். சுபங்களையளிப்பவளாவாள். (சிவப்பு நிறம்)

௧௬௮. அத² தகார த்⁴யாநம்

த்⁴யாதவ்யா ஸரஸ்வதீ ஶுப்⁴ரா ஸிதவஸ்த்ராஸநாம்ஶுகா |
ஏகவக்த்ரா கரைர்த⁴த்தே வீணாபாஶவராப⁴யாந் ||

(ஶுப்⁴ரவர்ண:)

168. தகார த்யாநம்

தகார தேவதை ஸரஸ்வதியாவாள். இவள், வெண்தாமரை ஆஸநமும், வெண்மையான ஆடையும், ஒரு முகமும், வீணை, பாசம், வரம், அபயம் இவைகளை தரித்த கைகளுமுடையவளாவாள். (வெளுப்பு நிறம்)

௧௬௯. அத² த²கார த்⁴யாநம்

பஞ்சவக்த்ரா ஸிதா த்⁴யேயா நீலகண்டா² ஸரஸ்வதீ |
ஶூலிநாம் ட³மருகம் த⁴த்தே வ்ருஷாரூடா⁴ வராப⁴யே ||

(ஶ்வேதவர்ண:)

169. த² கார த்யாநம்

த² காரத்தின் அதிதேவதை நீலகண்ட ஸரஸ்வதியாவாள். இவள் 5 முகங்களும், வெளுப்பு நிறமும், விருஷப வாஹநமும், நாகத்தாய்புள், உடுக்கை, வரம், அபயங்களை உடையவளுமாவாள். (வெளுப்பு நிறம்)

௧௭௦. அத² த³கார த்⁴யாநம்

9 ஏகவக்த்ராருணா த்⁴யேயா ஷட்³பு⁴ஜா ஹேமஶாயிநீ |

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹஸ்தேஷ்வப்ஜம் ஶாரிகாம் வீணாம் டக்காம் ம்ருக வராபயாந்து ॥
(அருணவர்ணா:)

170. த³ கார த்யானம்

த³ கார தேவதை போகதாயினீ என்று பெயருடையவளாவாள். ஒரு முகமும் சிவப்பு நிறமும் 8 கைகளுமுடையவளாவாள். (இரண்டு) தாமரை மலர்கள், சாரிகை, (நாகத்தாப்புள்) வீணை, உடுக்கை, மான், வரம், அபயம் இவைகளை தரிப்பவளாவாள். (சிவப்பு நிறம்)

௧௭௧. அத தகார த்யாநம்

ஶ்யாமாங்கீ சாமலா த்யேயா ஏகவக்த்ரா சதுர்புஜா ।
வ்ருஷஸ்தா ஶாரிகாப்ஜம் ச பிப்ரதீ து வராபயே ॥
(ஶ்யாமவர்ணா:)

171. த⁴ கார த்யானம்

த⁴ காரத்திற்கு தேவதை அமலா என்பவளாவாள். இவள் பச்சை நிறமும், ஒரு முகமும், 4 கைகளும், விருஷப வாஹனமும், சாரிகை, (நாகத்தாம்புள்) தாமரைமலர், வரதம், அபயங்களை தரித்த கைகளுமுடையவளாவாள். (பச்சை நிறம்)

௧௭௨. அத நகார த்யாநம்

தோதண்டஶக்திரேகவக்த்ரா ஏகாதஶமஹாஸ்ஸ்தா ।
வநகவக்த்ரா தசிஹேமாபா ஹஸ்தே வஜ்ரவராபயாந்து ॥
(ஹேமவர்ணா:)

172. ந கார த்யானம்

ந காரத்திற்கு தேவதை அனந்த சக்தியாவாள். இவள் மதம் பிடித்த யானையின்மீது வீற்றிருப்பவளாவாள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஒரு முகமும், மின்னலைப்போன்ற மஞ்சள் நிறமுமுடையவ ளாவாள் பத்மங்கள், வரம், அபயங்களை தரிப்பவளாவாள். (தங்க நிறம்)

௧௭௩. அத² பகார த்⁴யாநம்

பேச்சா²ஶக்திரூபேயம் ஶூலஶக்திவராப⁴யாந் |
த³த⁴தீ கரை: பஞ்சவக்த்ரா ஸரோஜவிஷ்டராஸநா ||

(ரக்தவர்ணா)

173. பகாரத்யாநம்

பகார தேவதையானவள் இச்சாசக்தி ரூபிணியாவாள். இவள் கைகளில் சூலம் சக்தி, வரதம், அபயங்களை வஹிப் பவளாவாள். 5 முகங்களையுடையவளாவாள். மலர்ந்த தாமரை மலரில் வீற்றிருப்பவளாவாள். (சிவப்பு நிறம்)

௧௭௪. அத² ப²கார த்⁴யாநம்

பஞ்சவக்த்ரோக்³ரஸிம்ஹஸ்தா² பாடலாதபகோமலா |
கீரம் ஸாரங்கே³ணாஸிகே²டவராப⁴யஶராந் ஶராந் ||
பாஶம் ச ட³மருகம் த³தே⁴ (ட³க்கம் ஶூலம்) க்ரமேண
த³ஶபி⁴: கரை: |

(பாடலவர்ணா)

174. ப² கார த்யாநம்

𑌪𑌰𑌾𑌪𑌰𑍈𑌃 𑌦𑍃𑌢𑌶𑌂𑌸𑌂 𑌚 𑌵𑍇𑌦𑌪𑌾𑌶𑌪𑌰𑌶𑍍𑌵𑌧𑌾𑌨𑍍 ।
𑌉𑌗𑍍𑌰𑌂 𑌬𑌰𑌾𑌙𑍍𑌗𑌂 𑌪𑌟𑌹𑌂 𑌵𑍀𑌣𑌾𑌂 𑌚 𑌵𑌹𑍍𑌨𑌿𑌕𑍇 ॥

𑌕𑌪𑌾𑌲𑌂 𑌖𑌟𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌂 𑌨𑌾𑌗𑌪𑌾𑌶𑌂 𑌪𑌰𑍀𑌪𑌾𑌲𑌿 ।
𑌘𑌣𑍍𑌟𑌾𑌂 𑌪𑌟𑌹𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌂 𑌤𑌾𑌲𑌕𑍇 ॥

𑌕𑌤𑍍𑌤𑍁𑌰𑍀𑌂 𑌖𑌡𑍍𑌗𑌮𑌾𑌲𑌾𑌂 𑌬𑌿𑌭𑍍𑌰𑌾𑌣𑍋 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌕𑍈𑌃 ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இஹாத்ர ஸதாசிவஸ்ஸோயம் ராஜதே தத்ர
ஸர்வதா ॥ ௧௬ ॥
(ஸூதஸம்ஹிதா)

3. மஹா கைலாசமூர்த்தி த்யாநம்.

(ஸ்காந்தம் சங்கரஸம்ஹிதையில் உபதேச காண்டத்தில்)

ஹே பிராம்ஹணர்களே ! எல்லோரும் மிகச்சிறந்ததும் மிகவும் ரஹஸ்யமுமான விஷயத்தைக்கேளுங்கள்.

மேருபர்வதத்திற்கு வடக்கு பாகத்தில் பெரிதான கைலாஸ பர்வதம் இருக்கின்றது. இந்த மலையானது அம்பிகையுடனும் பக்தர்களுடனும் கூடிய சந்திர சூடனுன பரமேசுவரனுடைய வாஸஸ்தலமாகும். அது, 20 கோடி யோஜன விஸ்தாரமுடையதாகும். ஹே அந்தணர்களே ! இதனுடைய உயரமானது, விஸ்தாரத்தைப்போல இரண்டு மடங்கு உடையதாகும். அதனுடைய மத்திய பாகத்தில் நவரத்நமயமானதோர் சிகரமிருக்கின்றது. அங்கு, நாநா விதமான ரத்நங்களினுலும் விசித்திரமான, பரமேசுவரனுடைய ஆலயமிருக்கின்றது. அது, பிராகாரங்கள், கோபுரங்கள், சந்துகள், வலபிகள், (வளைவுகள்) இவைகளுடன் விளங்கிக்கொண்டிருக்கின்றது. (4)

அங்கு மலர்ந்த தாமரை மலர்களைப்போல சிறப்பாக பிரகாசிக்கின்ற 25 முகங்களையுடையவரும், நாநாவித ஆயுதங்களுடன் விளங்குகின்ற 50 கைகளையுடையவரும், மலர்ந்த செந்தாமரை மலரைப்போன்ற சோபையுடன் கூடிய தொப்புளுடனும், 2 கால்களுடனும் பிரகாசிப்பவரும், விசித்திரமான ரத்திநங்களாலிழைக்கப்பட்ட ஆபரணங்களையணிந்திருப்பவரும், அநேகம் கோடி ஸூரியனைப்போன்ற பிரகாசமுடையவரும், பரமாநந்த மயமான ஸ்வரூபமுடையவரும், அப்ராக்ருதமான (தேஜோமயமான) சரீரமுடையவரும், ஸர்வைசுவரிய ஸம்பன்னரும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

லக்ஷ்யலக்ஷணங்களற்றவரும், (லக்ஷணங்களாலே நிர்ணயம் செய்யமுடியாதவரும்). வாக்குக்கும் மனதுக்கும் எட்டாதவரும், கங்கைதவழும் ஜடாபாரத்தைதரிப்பவரும், சந்திரரேகையை ஆபரணமாக அணிந்திருப்பவரும், ஸகல அங்கங்களிலும் திருநீர் பூசிக்கொண்டிருப்பவரும், ஸர்ப யஞ்ஞோபவீதத்தையணிந்திருப்பவரும், கபால மாலையை தரிப்பவரும், புலித்தோலாடையையணிந்திருப்பவரும், ஒவ்வொரு முகத்திலும் 3, 3 கண்களுடையவரும், பக்தர்களின் ஸகல காரிய ஸித்தியையுமளிப்பவருமான மஹா சம்புவான ஸதாசிவன், ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருக்கின்றார்.

அவர், வலது காலை நீட்டிவைத்துக்கொண்டும், இடது காலை மடக்கி வைத்துக்கொண்டும், வலது பக்கத்திலிருக்கின்ற 25 கைகளிலும் அபயம் 1, சக்கரம் 2, சூலம் 3, டங்கம் (உளி) அல்லது மண்வெட்டி 4, பாணம் 5, கதை 6, பத்மம் 7, கத்தி 8, தோமரம் 9, சக்தி 10, பரசு (மழு) 11, பிராஸம் 12, பந்நகம் (ஸர்பம்) 13, கலப்பை 14, அங்குசம் 15, ஜபமாலை 16, சுரிகை (சிறிய கத்தி) 17, துவஜம் (பாவட்டா) 18, தண்டம் 19 வஜ்ஜிரம் 20, குந்தம (கடப்பாரை அல்லது குந்தாலி) 21, அஸ்திதம்ஷ்ட்ரம் (பனைமட்டையைபோல பற்களுடன் கூடிய எலும்பு) 22, கிரகசம் (ரம்பம்) 23, பிண்டி 24, பாலம் 25, என்னும் 25 ஆயுதங்களையும், இடதுபக்கத்திலிருக்கின்ற 25 கைகளிலும் வரதம் 1, வில் 2 மான் 3, சங்கம் 4, கேடயம் 5, பாசம் 6, பரசுவதம் (கோடரி) 7, முத்கரம் 8, உடுக்கை 9, மணி 10, ருத்திர வீணை 11; புஸ்தகம் 12; கபாலம் 13, முண்டம் (தலை) 14, கட்வாங்கம் 15, புசுண்டி 16, பரிகம் (லோஹ முகமான ஆயுதம்) 17, பலகை 18, பட்டஸம் (பட்டயம்) 19, பிரம்பு 20, கமண்டலம் 21, அக்கினி 22, கத்தரிக்கோல் 23, உலக்கை 24, மயில்தோகை 25, என்னும் 25 ஆயுதங்களையும் தரித்துக்கொண்டிருக்கின்றார். இத்தகைய மஹாஸதாசிவன், அந்தக்கயிலயங்கிரியில் விளங்கிக்கொண்டிருக்கின்றார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௪. அத த்வாத்ரிம்சத்புஜாகோராஸ்த்ரஸ்ய த்யாநம்.

(சிவதத்வரத்நாகரே)

ஏகவக்த்ரம் ஸதாநந்தம் த்வாத்ரிம்சத்புஜஸம்யுதம் ।
ஜடாமகுடஸம்யுக்தம் த்ரிநேத்ரம் சந்த்ரசேகரம் ॥ க ॥

அபயம் கட்கசூலம் ச சக்ரம் டமருகம் ததா ।
அஸ்திபாணௌ ச கதாம் பத்மம் கபாலகம் ॥ உ ॥

ஜ்ஞாநமுத்ராம் குந்தமங்குசம் சாக்ஷமாலிகாம் ।
கட்வாங்கம் பரசும் சைவ ததாநம் தக்ஷிணை:
கரை: ॥ ௩ ॥

பாசம் ச கேடகம் சைவ டங்கம் சாபம் ச முத்கரம் ।
நாகாஸ்த்ரம் வஜ்ரம் கண்டாம் தநுஸ்ச கபிஹஸ்தகம் ॥ ௪ ॥

ரத்நம் ச கலசம் கங்கா சாபம் ச புஸ்தகம் ததா ।
ஏவம் வாமபுஜஸம்யுக்தம் ஸர்வாபரணவிபூஷிதம் ॥ ௫ ॥

காருண்யம்பவஸ்ய சிரஸி ஸ்திதம் ஸர்வாபயப்ரதம் ॥

(நீலவர்ண:)

4. துவாத்ரிம்சத் (32) புஜ அகோர த்யாநம்.

(சிவதத்துவ ரத்நாகரத்தில்)

இந்த அகோரர், ஒரே முகமுடையவரும், எப்பொழுதும் ஆநந்தமயமானவரும், 32 கைகளையும், ஜடாமகுடத்தையும், 3 கண்களையுமுடையவரும், சந்திரனை சிரஸ்ஸில் தரிப்பவரும், வலது கைகளில் அபயம் 1, கத்தி 2, சூலம் 3, சக்கரம் 4, உடுக்கை 5, எலும்பு 6, அம்பு 7, கதை 8, பத்மம் 9 கபாலம் 10, ஜ்ஞாநமுத்திரை 11, குந்தம் 12, அங்குசம் 13, ஜபமாலை 14, கட்வாங்கம் 15, பரசு 16,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இவைகளையும், இடது கைகளில் வரதம் 1, பலகை 2, உளி 3, பாசம் 4, முத்கரம் 5, ஸர்பம் 6, அக்கினி 7, மான் 8, மணி 9, வில் 10, கடிஹஸ்தம் (இடுப்பில் கை) 11, ரத்நம் 12, ஆம்பல் 13 கலசம் 14 உலக்கை 15, புஸ்தகம் 16 இவைகளையும் தரிப்பவரும், கபந்த மாலையை தரிப்பவரும், காலமூண்டனுடைய சிரஸ்ஸில் இருப்பவரும், எல்லோருக்கும் அபயத்தைக் கொடுப்பவருமாவார். (நீல நிறம்)

௫. அத தஶபுஜாகோரமூர்த்தி த்யாநம்.

(வாதுலாகமே)

பரஶும் டமரும் கட்கம் கேடகம் பாணமேவ ச ।
தநு: ஶூலம் கபாலஞ்ச வராபயகரம் ததா ॥ ௧ ॥

த்ரிநேத்ரமுக்ரவேஷஞ்ச நீலாங்கம் ரக்தவாஸஸம் ।
ஸர்வாங்கபூஷிதம் ஸர்பை: அகோரமூர்த்திமாஶ்ரயே ॥

(நீலவர்ண:)

5 தசபுஜ அகோர த்யாநம்.

(பாஞ்சராத்திரத்தில்)

பரசு 1, உடுக்கை 2, கத்தி 3, கேடயம் 4 அம்பு 5, வில் 6, சூலம் 7, கபாலம் 8, அபயம் 9, வரதம் 10, இவைகளை தரிப்பவரும், விரும்பியதையளிப்பவரும், 3 கண்களையும், பயங்கரமான முகத்தையும், நீலநிறமான சரீரத்தையுமுடையவரும், சிவப்பு வஸ்திரத்தை தரிப்பவரும், ஸகல அங்கங்களிலும் ஸர்பங்களை ஆபரணமாக அணிந்திருப்பவருமான ஸ்ரீ அகோர மூர்த்தியை உபாஸிப்போமாக. (நீலநிறம்)

௬. அத ஷோடஶபுஜாகோர த்யாநம்.

(ஶிவதத்வரத்நாகரே)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மஹாகாலோ யஞ்ஜநாபாஸ: காள்யாலிங்கிதவிக்ரஹ: |
ஶ்யாமகஞ்சுகதாரீ ச மதாருணவிலோசந: || க ||

ப்ருஹந்மாம்ஸசஷகே பூர்ணம் பிபந் விஶ்வரஸாஸவம் |
மஹாகாளீம் ச நீலாம்போதநிபாம் ஸாபிலாஷமவேக்ஷயந் || ௨ ||

ஸிம்ஹாஸநே ஸமாஸீந: கல்யாணகுணநாயகே |
காலம்ருத்யுப்ரமுகைஸ்ஸர்வைஶ்ச ஸர்வலோகைகஸம்ஹாரக: ||

லலிதாத்யாநஸம்பந்நோ லலிதாபூஜநோத்ஸுக: |
விதநோது லலிதபக்தேஷ்வாயுஷோ தீர்க்கதீர்க்கதாம் ||

(நீலவர்ண:)

6. மஹாகாளியுடன்கூடிய மஹாகால த்யானம்.

(லலிதோபாக்கியானத்தில்)

மஹாகாலரானவர், மேகம்போன்ற நீலநிறமுடையவராவார். காளிகாதேவியை ஆலிங்கனம் செய்துகொண்டிருப்பவராவார். நீலநிறமான சட்டையையணிந்திருப்பவராவார். மதத்தினாலே சிவந்த கண்களையுடையவராவார். பெருங்கொண்டமாகிய பானபாத்திரத்தில் நிறைந்திருக்கின்ற விசுவரஸமாகிய ஆஸவத்தை (மதுவை) அருந்துகிறவரும், நீண்டமேகம்போல நீலநிறமாக இருப்பவளும், ஆசை நிறைந்த மனமுடையவளுமான மஹாகாளியை கடைக்கண்ணால் பார்ப்பவரும், அழகாக அமைக்கப்பட்ட ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருப்பவரும், காலன், ம்ருத்யு முதலியவர்களுடனிருப்பவரும், ஸகல லோகங்களையும் ஒருவராகவே அழிப்பவரும், லலிதாதேவியை த்யானம் செய்பவரும் லலிதையை பூஜிப்பதில் உத்ஸாஹமுடையவரும், ஸ்ரீ லலிதையின் பக்தர்களுடைய ஆயுஸ்ஸை மேன்மேலும் விருத்தி செய்பவருமாவார். (நீலநிறம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௭. அத அம்ருதம்ருத்யுஞ்ஜய த்யாநம்.

(காரணாகமே)

சந்த்ராவலிஷ்டாச ஸம்பத்மாஸநவிராஜிதம் ।
சந்த்ரவர்ணம் ஸ்ரவத்வஹ்நிம்ருதசந்த்ரகலாதரம் ॥ க ॥

யோகமுத்ராஸம்பத்தாதரஹஸ்தத்வயாந்விதம் ।
அம்ருதாபூர்ணகநககும்பாட்யகரத்வயம் ॥ உ ॥

ஸோமஸூர்யாக்நிநேத்ரம் ச பத்தபிங்கஜடாதரம் ।
நாநாபரணஸம்பூஷம் நாகயஜ்ஞோபவீதிநம் ॥ ௩ ॥

வ்யாக்ரசர்மாம்பரதரம் தேவம் பக்தாநுகம்பிநம் ।
பஸ்மாநுலேபிநம் ஸாந்த்ரம் ம்ருத்யுஞ்ஜயமிமம் ஸ்மரேத் ॥

(ஸாஹ்ரவண:)

7. அம்ருதம்ருத்யுஞ்ஜய த்யாநம்.

(காரணகமத்தில்)

சந்திர பிம்பத்தில் பத்மாஸநத்தில் வீற்றிருப்பவரும், சந்திரனைப்போன்ற சரீர காந்தியையுடையவரும், அமிருதத்தை பெருக்கிக்கொண்டிருக்கும் சந்திரகலையை தரிப்பவரும், யோகமுத்திரையில் ஸம்பந்தித்த உதடுகளையும், இரு கைகளையுமுடையவரும், அமுதம் நிறைந்த ஸுவர்ண கலசத்தை இரு கைகளில் வைத்துக்கொண்டிருப்பவரும், ஸூரியன், சந்திரன், அக்நி, ஆகிய நேத்திரங்களையுடையவரும், சேர்த்துக்கட்டப்பட்டிருக்கின்ற பொன்னிறமான சடைமுடியையுடையவரும், நாநாவிதமான ஆபரணங்களையணிந்திருப்பவரும், ஸர்பத்தை யஜ்ஞோபவீதமாக அணிந்திருப்பவரும், புலித்தோலாடையையணிந்திருப்பவரும், பக்தர்களிடத்தில் தயையுடையவரும், திருநீறைப் பூசிக்கொண்டிருப்பவரும், துன்பமுற்றவனைத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காப்பாற்றும் தெய்வமுமான மிருத்யுஞ்ஜய மூர்த்தியை ஸ்மரிக்கவேண்டும். (வெளுப்பு நிறம்)

அ. அத² நீலகண்ட²த்⁴யாநம்

(வாதுலாக்²யே)

ஜடாப³த்³தே⁴ந்து³நாக³ம் ஸர்பபூ⁴ஷணபூ⁴ஷிதம் ।
அக்ஷமாலாம் ச ஶூலம் ச கபாலம் த³த⁴தம் கரை꞉ ॥
க²ட்வாங்க³மபி பஞ்சாஸ்யம் வஸாநம் வ்யாக்⁴ரசர்ம ச ।
த்ரிணேத்ரம் ஜ்ஞாநநிலயம் பா³லார்கஸத்³ருஶப்ரப⁴ம் ॥ ௨ ॥
ஸாத⁴காபீ⁴ஷ்டதா³தாரம் நீலகண்ட²ம் ப⁴ஜே ॥

(அருணவர்ண꞉)

8. நீலகண்டத்யானம்.

(பாஞ்சராத்திரத்தில்)

சடைமுடியில் சந்திரனை தரிப்பவரும், ஸர்பங்களை ஆபரணங்களாக அணிந்திருப்பவரும், ஜபமாலை, சூலம், கபாலம், கட்வாங்கங்களை கைகளிலேந்தியிருப்பவரும், 5 முகங்களையுடையவரும், புலித்தோலாடையணிந்திருப்பவரும், 3 கண்களையுடையவரும், பாலஸூரியனைபோன்ற சரீரகாந்தியையுடையவரும், தன்னை ஆராதிப்பவர்கள் விரும்பியதையளிப்பவருமான ஸ்ரீ நீலகண்ட மூர்த்தியை வணங்குகிறேன். (அருணவர்ணம்)

௯. அத² ஸதா³ஶிவமூர்த்தித்⁴யாநம்.

(வாதுலாக்²யே)

கைலாஸாஸநம் பஞ்சவக்த்ரம் தே³வ்யா யுக்தம் த்ரிணேத்ரகம் ।
நீலகண்ட²ம் ஸர்வபூ⁴ஷம் வ்யாக்⁴ரசர்மாம்ப³ராவ்ருதம் ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சக்ஷுஷாமுத்வராஹீ திசூலம்பருத்துவஸக்ஷாரு ।
வம்ஶாந்தம்மாஜடாஜகூடம் ரூத்ரம் தம் ப்ரணமாம்யஹம் ॥

(ஶ்வேதவர்ண:)

9. ருத்திரமூர்த்தி த்யாநம்.

பாஞ்சராத்திரத்தில்)

கைலாச மலையைபோன்றிருப்பவரும், 5 முகங்களையுடையவரும், தேவியுடனிருப்பவரும், 3 கண்களுடையவரும், நீலகண்டனும், ஸர்பங்களை ஆபரணங்களாக அணிந்திருப்பவரும், புலித்தோலாடையையணிந்திருப்பவரும், ஜபமாலை, வரதம், அபயம், கமண்டலங்களினாலே அலங்கரிக்கப்பட்ட கைகளையுடையவரும், சந்திரனையும் கங்கையையும் ஜடையிலணிந்திருப்பவருமான ஸ்ரீருத்திரமூர்த்தியை வணங்குகிறேன். (வெளுப்பு நிறம்)

ம. ஸுய ஸபரிவாரோமாமஹேஶ்வர த்யாநம்.

(காரணாகமே)

வாமே கௌரீஸமேதா வரவ்ருஷப: வஸ்தாஸு ஸோமேந்த்ரஶ்ச

சைத்ராஸி வியிஷ்ட வாஸ்வோ: வாயுநி கோணேஷு ச ।

ஹ்ரீம் நாரதவீணாவாதஹரமஜரஸ்ய ஸ்துதிஸேவ்யமாந:

உஶ்யோ ஶாஹ்யஸமோஜகோமபதம்சிம் ஶம்பும் ஹ்ருதி பாவயாமி ॥ க ॥

(ஶ்வேதவர்ண:)

10. பரிவாரங்களுடன் உமாமஹேசுவர த்யாநம்.

(காரணாகமத்தில்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இடது பக்கத்தில் பார்வதி தேவியும், எதிரில் விருஷப தேவரும், பின்பக்கத்தில் இந்திரன் முதலிய தேவர்களும், பக்கங்களில் விஷ்ணுவும், பிருஹ்மாவும், வாயுதிக்கு முதலிய கோணங்களில் பிருங்கி, நாரதர், பாணாஸுரன், பைரவர், கஜமுகன், ஸுப்ரம்ஹண்யர், வீரேசுவரர்களும் (சூழ்ந்திருக்க) மத்தியில் வெண்தாமரை மலரைப்போல் வெளுப்பான சரீரகாந்தியுடன் வீற்றிருக்கும் ஸ்ரீபரமேசுவரனை ஸேவிக்கின்றேன். (வெளுப்பு நிறம்)

கக. ஸபாபதி த்யானம்

(காரணாகமே)

கைலாஸஶைலப₄வநே த்ரிஜக₃ஜ்ஜநித்ரீம்
கௌ₃ரீம் நிவேஶ்ய கநகாஞ்சிதரத்நபீடே₂ |
ந்ருத்யஞ்சாபி₄வாஞ்ச₂தி ஶஶிஶேக₂ரம் தம்
தே₃வா: ப்ரதோ₃ஷஸமயே(அ)நுப₄ஜந்தி ஸர்வே ||௧||

ப்₃ரஹ்மா தாலத₄ரோ ஹரிஸ்ஸபடஹோ
வீணாகரா பா₄ரதீ
வம்ஶம் ஶம்யுதா ஸஹஸ்ரகரணா
கா₃தும் ப்ரவ்ருத்தா ஶுபா₄ |
ஸாக்ஷாத் த₄ம்ப₃ரநாரத₃ ஸநந்த₃நா
நந்தீ கு₃ஹாரக்₃ரகா₃
ரூபோ ந்ருத்தகர: ஸ்வஸாவஜநிதம் நாட்யம்
ஸதா₃ பாது ந: ||௨||

(மஹாவஸநம்:)

11. ஸபாபதி த்யானம்

(காரணகமத்தில்)

பிரதோஷ காலத்தில் கைலாச பர்வதத்தின் சிகரத்தில், ரத்தினங்களை பதிப்பித்த ஸுவர்ணபீடத்தில், ஸகல ஜகத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திற்கும் தாயான ஸ்ரீ பார்வதீ தேவியை இருக்கச்செய்து நர்த்தநம் செய்கின்ற ஆதிபுருஷனை சந்திரசேகரனை தேவர்கள் யாவரும் வணங்குகிறார்கள்.

எந்த நடனத்தில், பிரம்ஹா தாளம்போடுகிறவராகவும், விஷ்ணு படஹ வாத்தியத்தை வாசிப்பவராகவும், ஸரஸ்வதிதேவி வீணை வாசிப்பவளாகவும், பிரகாசமான கைகளையுடைய ஸூரிய சந்திரர்கள் புல்லாங்குழலை வாசிப்பவர்களாகவும், தும்புருவும், நாரதரும் கானம் செய்பவர்களாகவும், நந்திகேசுவரனும் குமாரனும் மிருதங்கம் வாசிப்பவர்களாகவும், பரமேசுவரன் நர்த்தநம் செய்பவராகவும் இருக்கின்றாரோ, அப்படிப்பட்ட பரமேசுவரனுடைய ஸ்வபாவஸித்தமான நாட்டியமானது எப்பொழுதும் நம்மைக் காப்பாற்றவேண்டும். (வெளுப்பு நிறம்)

अथ सद्योजातादिपञ्चमूर्तिध्यानम्

(शैवे कारणागमे)

கஉ. तत्रादौ सद्योजातध्यानम्.

कुन्देन्दुशङ्खस्फटिकावभासो

वेदाक्षमालावरदाभयाङ्कः ।

त्र्यक्षश्चतुर्वक्त्र उदारभावः

सद्योऽभिजातोऽवतु मां प्रतीच्याम् ॥ क ॥

([illegible])

ஸத்யோஜாதாதி பஞ்சமூர்த்தி த்யாநம்.

(சைவம் காரணாகமத்தில்)

12. ஸத்யோஜாத த்யாநம்.

16 முல்லை, சந்திரன், சங்கம், ஸ்படிகம் இவைகளைப் போன்ற வெளுப்பான சரீரகாந்தியையுடையவரும், வேதம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

(புஸ்தகம்) ஜபமாலை, வரதம், அபயங்களை அடையாளமாகக் கொண்டவரும், 3 கண்களையுடையவரும், 4 முகங்களையுடையவரும், மிகப் பெருமைவாய்ந்தவருமான ஸத்யோஜாத மூர்த்தியானவர், மேற்கு திக்கில் என்னைக் காப்பாற்றுவாராக. (வெளுப்பு நிறம்)

௧௩. 𑌅𑌥 𑌵𑌾𑌮𑌦𑍇𑌵 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌵𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌭𑌯𑌟𑌙𑍍𑌕𑌹𑌸𑍍𑌤𑌃
𑌸𑌰𑍋𑌜𑌕𑌿𑌞𑍍𑌜𑌲𑍍𑌕𑌸𑌮𑌾𑌨𑌵𑌰𑍍𑌣𑌃 ।
𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑌶𑍍𑌚𑌾𑌰𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑍋 𑌮𑌾𑌂
𑌪𑌾𑌯𑌾𑌦𑍁𑌦𑍀𑌚𑍍𑌯𑌾𑌂 𑌦𑌿𑌶𑌿 𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌃 ॥ ௧ ॥

(𑌕𑌨𑌕𑌵𑌰𑍍𑌣𑌃)

13 வாமதேவ த்யாநம்.

வரதஹஸ்தம், ஜபமாலை, அபயஹஸ்தம், உளி அல்லது மழு, இவைகளை கைகளில் தரிப்பவரும், பத்மத்தின் குஞ்சத்தைப்போன்ற நிறமுடையவரும், 3 கண்களையுடையவரும், அழகான 4 முகங்களையுடையவருமான வாமதேவ மூர்த்தியானவர், வடக்கு திக்கில் காப்பாற்றுவாராக. (தங்க நிறம்)

௧௪. 𑌅𑌥 𑌅𑌘𑍋𑌰 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌕𑍁𑌠𑌾𑌰𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌪𑌾𑌶𑌶𑍂𑌲
𑌕𑌪𑌾𑌲𑌢𑌕𑍍𑌕𑌾𑌕𑍍𑌷𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 𑌦𑌧𑌾𑌨𑌃 ।
𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑍋 𑌨𑍀𑌲𑌰𑍁𑌚𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌃
𑌪𑌾𑌯𑌾𑌦𑌘𑍋𑌰𑍋 𑌦𑌿𑌶𑌿 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌸𑍍𑌯𑌾𑌮𑍍 ॥ ௧ ॥

(𑌨𑍀𑌲𑌵𑌰𑍍𑌣𑌃)

14. அகோர த்யாநம்.

கோடரி, வேதம் (புஸ்தகம்) அங்குசம், பாசம், சூலம், கபாலம், உடுக்கை, ஜபமாலை இவைகளை தரிப்பவரும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

4 முகங்களுடையவரும், நீலநிறமானவரும், 3 கண்களை யுடையவருமான அகோரமூர்த்தியானவர், தெற்கு திக்கில் காப்பாற்றுவாராக. (நீலநிறம்)

௧௫. अथ तत्पुरुषध्यानम्.

प्रोद्यद्विद्युत्कनकाभदेहो
विद्यावराभीतिकुठारपाणिः ।
चतुर्मुखस्तत्पुरुषस्त्रिणेत्रः
प्राच्यां स्थितो रक्षतु मामजस्रम् ॥ १ ॥

(कनकवर्णः)

15. தத்புருஷ த்யாநம்.

மின்னுகின்ற மின்னலைப்போலும் ஸுவர்ணத்தைப் போலுமிருக்கின்ற சரீரகாந்தியையுடையவரும், வித்யை (புஸ்தகம்) வரதம், அபயம், கோடரி இவைகளை கைகளில் வஹிப்பவரும், 4 முகங்களையுடையவரும், (ஒவ்வொரு முகத்திலும்) 3 கண்களையுடையவருமான தத்புருஷ மூர்த்தி யானவர், கிழக்கு திக்கிலிருந்துகொண்டு என்னை எப்பொழுதும் காப்பாற்றுவாராக. (தங்க நிறம்)

௧௬. अथ ईशानध्यानम्.

वेदाभयेष्टाङ्कुशपाशटङ्क
कपालढक्काक्षकशूलपाणिः ।
सितद्युतिः पञ्चमुखोऽवतान्माम्
ईशान ऊर्ध्वं परमप्रकाशः ॥ १ ॥

(श्वेतवर्णः)

16. ஈசாந த்யாநம்.

வேதம் (புஸ்தகம்) அபயம், வரதம், அங்குசம், பாசம், டங்கம், (உளி) கபாலம், உடுக்கை, ஜபமாலை, சூலம், இந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

10 ஆயுதங்களையும் 10 கைகளிலும் தரிப்பவரும், வெளுப்பான சரீரகாந்தியையுடையவரும், 5 முகங்களையுடையவரும், மிகுந்த பிரகாசமாக இருப்பவருமான ஈசாந மூர்த்தியானவர், மேலே (ஆகாச திக்கில்) என்னைக் காப்பாற்றுவாராக. (வெளுப்பு நிறம்)

அத ஸப்தமாத்ருகா ஸ்வரூபாணி.

(பூர்வ காரணாகமே)

௧௭. தத்ராதௌ ப்ராஹ்மீமாத்ரு த்யாநம்.

* சதுர்புஜாம் த்ரிணேத்ராம் ச ப்ரஸாரிதஜடாந்விதாம் |
கௌரவர்ணாம் ஸுப்ரஸந்நாக்ஷீம் ஹம்ஸவாஹநஸம்ஸ்திதாம் || ௧ ||

அக்ஷம் தக்ஷிண(வாமே து)ஹஸ்தே து ஸ்ருவம் பத்ம
தாரிணீம் |
தக்ஷிணே புஜயோர்த்வே து ஜாநுஸ்பர்சம் ப்ரஸாரிதாம் ||

வாமகர்ணே ச குண்டலம் தக்ஷிணே நக்ரகுண்டலம் |
ஸர்வாபரணஸம்யுக்தாம் ஸர்வலக்ஷணஸம்யுதாம் || ௨ ||

ப்ராஹ்மீ ரஜ்ஜுநாம் பரித்யக்தம் பத்மகிங்கிணிகாயுதாம் |
ரக்தாம்பரதராம் வாமே தக்ஷிணே ஹஸ்தபங்கஜம் ||

பத்மம் ஸவ்யஹஸ்தே து பத்மம் சைவ வாமகே
த்வயம்(?) |
பத்மம் து தக்ஷிணம் பாதவக்ஷஸ் பீடே பாதயுதாம் ||

ஸர்வாங்கம் வாமபாதம் து பாதாக்ரம் தக்ஷிணாநநம் |
ப்ராஹ்மீமாதரம் ஸ்ம்ருத்வா — — — || ௩ ||

(கௌரவர்ணா:)

---

* 1-4½ பூர்வகாரணே ஸாமே ஷட்த்ரிம்சே படலே: ப்ராம்ஹீம்ஸ்சை; ப்ராஹ்மீதேவ்யா நாமிதேஜஸா ஸ்வரூபம் ஸ்ம்ருதி,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸப்த தாண்டவ மூர்த்தி ஸ்வரூபங்கள்.

(சைவம் காரணாகமத்தில்)

17. அவைகளில் முதலாவது ஆனந்த தாண்டவ த்யானம்.

4 கைகளையுடையவரும், 3 கண்களையுடையவரும், விரிந்த சடைகளையுடையவரும், வெளுப்புநிறமுடையவரும், மயில் தோகையையணிந்திருப்பவரும், தலையில் சடையில் வலது (இடது) பக்கத்தில் ஊமத்தம் பூவையும் அரைவட்ட சந்திரனையும் தரிப்பவரும், வலது பக்கத்தில், தனது சடையின் நுனியில் கங்கையினாலே சோபிப்பவரும், இடது காதில் கர்ண பத்ரமும், வலது காதில் மகரகுண்டலமும் அணிந்திருப்பவரும், ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்ப வரும், யஞ்ஞோபவீதத்தை தரிப்பவரும், புலித்தோல் ஆடையையணிந்திருப்பவரும், கால்களில் சதங்கைகளை அணிந்திருப்பவரும், இடது பக்கத்தில் கையை நீட்டிக் கொண்டிருப்பவரும், வலது பக்கத்தில் அபயஹஸ்தத்துட னிருப்பவரும், வலது கையில் உடுக்கையை தரிப்பவரும் இடது கையில் அக்நியை தரிப்பவருமான பரமேசுவரன், அபஸ்மாரன் மேலேவைத்திருக்கும் வலதுகாலைக்கோணலாக வைத்துக்கொண்டும், ஊர்த்துவமுகமான (மேல் நோக்கான) இடது காலின் நுனிப்பக்கத்தை வலது பக்கமாக வைத்துக் கொண்டும் செய்யும் நர்த்தநமானது, ஆநந்ததாண்டவம் எனப்படும். (வெளுப்பு நிறம்)

கஎ. அத ஆனந்ததாண்டவ த்யானம்.

சதுர்புஜம் த்ரிணேத்ரம் ச ஜடாமகுடஶோபிதம்
த்வயம்(ஜடாதாரிணம்) ।
அபயம் டமரும் வஹ்நிம் வாமே விம்ஹம் ஸவிஷயம் ॥
அபஸ்மாரம் விதா தக்ஷே வாமோர்த்வாகுஞ்சிதம்
ஸ்திதம் ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஊர்த்வே து தக்ஷிணம் பாதமேவமத்ராநுகம்
தயம்(ஸ) ॥௨॥

தத்த்வாதம் குஞ்சிதம் வாம ஸர்பகங்கணபூஷிதம் ।
ஸந்த்யாதாண்டவமேவம் ஸ்யாத் — — ॥

(பணாக்ஷிகம் பஞ்சபஞ்சகம்)

18. ஸந்தியாதாண்டவ த்யாநம்.

4 கைகளும், 3 கண்களும், ஜடாமகுடமும் தரிப்பவரும், வலது பக்கம் கைகளில் அபயத்தையும், டமருவையும், இடதுகைகளில் மயில்தோகையையும் விஸ்மய ஹஸ்தத்தையும் தரிப்பவரும், அபஸ்மாரனின்றி பீடத்தின் மேலே இடது காலை குஞ்சிதமாக வைத்திருப்பவரும், ஸர்பங்களை கங்கணங்களாக அணிந்திருப்பவருமான ஸ்ரீ பரமேசுவரன், இடது பக்கமாக இருக்கும் வலது காலை ஊர்த்வமுகமாகவாவது (மேல் நோக்காகவாவது) குஞ்சிதமாகவாவது வைத்துக்கொண்டு செய்யும் தாண்டவமானது, ஸந்தியாதாண்டவமாகும். (நிறம் முதலியன முன்பு கூறியதுபோல்)

௧௯. அத உமாதாண்டவ த்யாநம்.

ஏகவக்த்ரம் த்ரிநயநம் ஜடாமகுடபூஷிதம் ।
ஶூலாம்ஶம் ஷட்கஹஸ்தம் ஜோர்த்வ தர்ஜநீயம் பாஶம் ததா ॥
ஶங்கம் தக்ஷிணபார்ஶ்வே து கபாலம் விஸ்மயம்
ததா ।
கஜஹஸ்தாபஸம் ஹஸ்தம் ஸவ்யபார்ஶ்வாநுகம்
தயம்(யஸ) ॥௨॥

ததைவ பாதபாதம் ச ஹஸ்தவஸ்த்ரோவரிஷ்டிதம் ।
உத்த்ருதம் தக்ஷிணம் பாதம் பாதபாதாநுகம் ததா ॥௩॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வாமபாகே ஹ்யுமாதேவீஸஹிதம் ஜாஹ்நவீயுதம் |
ஸர்வாபரணஸம்யுக்தம் வ்யாக்ரசர்மோத்தரீயகம் || ௪ ||
உமாதாண்டவமூர்த்திம் (இத்யுக்தம்) — — ||

(ஶிஷ்டம் [illegible])

19. உமாதாண்டவ த்யாநம்.

ஒரு முகமுடையதும், 3 கண்களுடையதும், ஜடா மண்டலத்தை தரிப்பதும், வெளுப்பு நிறமுடையதும், 6 கைகளுடையதும், அபயம், டமரு, சூலம் இவைகளை வலது பக்கம் கைகளிலும், கபாலம், விஸ்மயஹஸ்தம், கரிஹஸ்தம் இவைகளை இடது பக்கம் கைகளிலும் தரிப்பதும், இடது காலை அபஸ்மாரன் மேலே வைத்துக் கொண்டிருப்பதும், இடது காலை ஒட்டி வலது காலை மேலே தூக்கிக்கொண்டிருப்பதும், இடது பக்கத்தில் உமாதேவி யுடன் கூடியிருப்பதும், கங்கையை தரித்திருப்பதும், ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பதும், புலித்தோலாடையை யணிந்திருப்பதுமான பரமேசுவரமூர்த்தியானது, உமா தாண்டவ மூர்த்தி எனப்படும். (மற்றது முன்புபோல்)

௨௰. அத கௌரீதாண்டவ த்யாநம்.

ஶாந்தம் சதுர்புஜம் தேவம் ரக்தவர்ணம்
ஸ்மிதாநநம் |
கரோடீம் வக்ஷவ்ருக்ஷம் ச யுக்தமுரம்
தாக்ஷவ்ருக்ஷகம் || ௧ ||

பாலசந்த்ரஜடாஜூடம் ஸர்வகீர்ணஜடாந்விதம் |
ஸர்வகங்கணஸம்யுக்தம் ஸர்வாபரணபூஷிதம் || ௨ ||

தக்ஷிணம் குஞ்சிதம் பாதம் வாமபாதம் ததோத்ருதம் |
ஸர்வஜ்ஞ த்யாநயோகேந்த்ரம் ஸமம் கரே || ௩ ||

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதோ⁴ஹஸ்தே ஸர்பமேவோர்த்⁴வே வஹ்நிபாத்ரகம் |
வாமே கௌ³ரீஸமாயுக்தம் த³க்ஷே நந்தி³கேஶ்வரம் ॥ ௪ ॥

ஸம்விகீர்ணஜடாபா⁴ரம் ஜடாமகுடஸம்யுதம் |
வாமே கௌ³ரீ(க³ங்கா³)ஸமாயுக்தம் ஶேஷம்
ஆத்³யந்ருத்தவத் ॥ ௫
கௌ³ரீதாண்ட³வமூர்த்யம் — — — ॥

(ரக்தவர்ண:)

20. கௌரீ தாண்டவ த்யாநம்

மன அமைதியையுடையதும், 4 கைகளும் சிவப்ப நிறமும் சிரித்த முகமுமுடையதும், மண்டையோடு ப புஷ்பம் (கொக்குமந்தாரைப்பூ) ஊமத்தம்பூ, எருக்கம்பூ இவைகளையும் இளம்பிறை சந்திரனையுமணிந்து விரி திருக்கும் சடைகளையுடையதும், ஸர்ப கங்கணத்தை தரிப்பதும், அபஸ்மாரன்மேலே வலது காலை குஞ்சிதமா வைத்துக்கொண்டு, இடது காலை மேலே தூக்கிக்கொண் டிருப்பதும், வலது பக்கம் கையில் அபயமும், உடுக்கையும் இடதுபக்கம் கைகளில் கீழ்க்கையில் ஸர்பமும் மேல்கையி அக்கினிபாத்திரமும் தரிப்பதும், இடது பக்கத்தில் கௌ தேவியுடனும், வலது பக்கத்தில் நந்திகேசுவரருடனும் கூடியிருப்பதும், விரிந்திருக்கும் சடையை அல்லது ஜட மகுடத்தை தரிப்பதும், இடது பக்கத்தில் கௌரியை (கங்கையை) தரிப்பதுமான மூர்த்தியானது, கௌ தாண்டவமூர்த்தி எனப்படும். மற்றவைகள் முதலாவது நர்த்தநத்தில் கூறியிருப்பதைப்போலவேயாகும். (சிவப்ப நிறம்)

௨௧. அத² காளிகாதாண்ட³வ த்⁴யாநம்.

ஏகவக்த்ரம் த்ரிநயநம் ஜடாஸம்கீர்ணமஸ்தகம் |
ஹஸ்தாஷ்டகஸமாயுக்தம் ஸர்வாப⁴ரணஸம்யுதம் ॥ ௧ ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸவக்ூ்ம் வாஃவார்ஷம் தடிவஷூாரொவரி ஷூிதழ் |
சுஹயம் பாஉுவாஶம் வ ஃஉரஃம் ஒக்ஷிணெ கரெ ‖ ௨ ‖

கூவாஙும் வாஹ்ீவாக்ூம் வ வாடிாம் வாஃகரெ வாடி |
மஜஹவெஷூாவஃம் ஹஸூம் ஷூவஶ்ரதம் ஒக்ஷிணா௩ஃமழ் ‖

ஓயக் ருக்ஷணவஸ்ம்யக்ூம் வெஷம் ஷூயஃநுதூவக் |
காஙிகாதாஃஃவம் வெஜாக்ூம் — — ‖ ௪ ‖

(மளாஶவணஃ:)

21. காளிகாதாண்டவ த்யாநம்.

ஒரு முகமும், 3 கண்களும், ஜடைகளினாலே சுத்தப் பட்ட தலையும், 8 கைகளும், நன்கு உயரத்தூக்கிய வலது காலும், அப்ஸ்மாரன்மேலே குஞ்சிதமாக (சிறிது வளைந் திருக்கும்படி) வைக்கப்பட்டிருக்கும் இடது காலும் உடையதும், அபயம், சூலம், பாசம், உடுக்கை இவைகளை வலது கைகளிலும், கபாலம், அக்கிநிபாத்திரம், மணி, வலது பக்கத்தில் நீட்டித்தொங்கவிடப்பட்ட கரிஹஸ்தம்போன்ற கை, இவைகளை வலது கைகளிலும் தரித்து, ஸகல லக்ஷணங் களும் பொருந்தியிருக்கின்ற மூர்த்தியானது, காளிகா தாண்டவமூர்த்தி எனப்படும். மற்றவை முதலாவது நர்த்தநத்திற்குக் கூறியதுபோலவேயாகும். (வெளுப்பு நிறம்.

௨௨. சுய த்ரிபுரதாண்டவ த்யாநம்.

ஜொஹிஃ ஷொஃஶஹியஃக்ூம் வாஜெ மளா
ஸ்ம்ஃரிதழ் |
ஷூஷும் ஒக்ஷிணவாஜெஃ த்ஃ ஸவஷஹஜெஷூ
யஶ்தாஜுஙிழ் ‖ க ‖

சுஹயம் ஃஉரஃம் பெவவ வஜஷம் பாஉும் வ லிஜரதழ் |

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சாபம் டங்கம் ததா ஶங்கம் நாகம் சைவ தக்ஷிணே
கரே ||௨||

ஸவ்யாந்யம் கரம் சைவ வாமே வரதகரம் ததா |
ஶூலம் புஸ்தகம் சைவ வஜ்ரம் கேதுகேடகௌ ||
கண்டாம் சைவ கபாலம் ச வாமஹஸ்தேஷு ஷட்பி:
கரை: |
ஸர்வலக்ஷணஸம்யுக்தம் ஶேஷம் ந்ருத்தவத் ||
த்ரைபுரம் தாண்டவம் ப்ரோக்தம் — — ||

(காரணாகம:)

22. திரிபுரதாண்டவ த்யாநம்.

16 கைகளுடன் கூடியதும், இடது பக்கத்தில் கௌரீ தேவியை அணைத்துக்கொண்டிருப்பதும், வலது பக்கத்தில் முருகனுடனிருப்பதும், வலது கையை அஞ்ஜலியாக் (குழிவாக) வைத்துக்கொண்டிருப்பதும், வலது பக்கத்திலுள்ள 8 கைகளில், அபயம் 1, உடுக்கை 2, வஜ்ரம் 3, சூலம் 4, பாசம் 5, டங்கம் (உளி அல்லது மழு அல்லது மண்வெட்டி) 6, தண்டம் 7, நாகம் 8, இவைகளையும், இடது பக்கத்திலுள்ள 8 கைகளில், வலது பக்கத்தில் நீட்டிய பூர்வகரம் 1, அக்கினிபாத்திரம் 2, புஸ்தகம் 3, வரதம் 4, துவஜம் 5, கேடயம் 6, மணி 7, கபாலம் 8 இவைகளையும் தரிப்பதும், ஸகல லக்ஷணங்களுடன்கூடியதுமான மூர்த்தியானது, திரிபுரதாண்டவமூர்த்தியாகும். மற்றவை முதலாவது நிருத்தமூர்த்திக்குக் கூறப்பட்டதைப் போன்றவைகளேயாம். (வெளுப்பு நிறம்)

௨௩. அத ஸம்ஹாரதாண்டவ த்யாநம்.

த்ரிணேத்ரம் சாஷ்டஹஸ்தம் ச ஸம்வீக்ஷ்ய
ஜடாங்கிதம் |

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌂 𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑌂 𑌤𑍍𑌵𑌪𑌸𑍍𑌮𑌾𑌰𑍋𑌪𑌰𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ॥
𑌉𑌦𑍍𑌧𑍃𑌤𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌚𑌰𑍍𑌮𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌕𑌮𑍍 ।
𑌅𑌭𑌯𑌂 𑌶𑍂𑌲𑌪𑌾𑌶𑍌 𑌚 𑌡𑌮𑌰𑍁𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌕𑌰𑍇 ॥

𑌕𑌪𑌾𑌲𑌂 𑌵𑌹𑍍𑌨𑌿𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌦𑍍𑌵𑌯𑌂(𑌯𑌮𑍍) 𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑌹𑌸𑍍𑌤𑌕𑌮𑍍 ।
𑌗𑌜𑌹𑌸𑍍𑌤𑍋𑌪𑌮𑌂 𑌵𑌾𑌮𑍇 𑌚 𑌤𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑌿𑌤𑌮𑍍 ॥ ௧ ॥

𑌗𑌜𑌹𑌸𑍍𑌤𑍋𑌪𑌮𑌂 𑌸𑌵𑍍𑌯𑍇𑌪𑌸𑌵𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌤𑌥𑌾 ।
𑌨𑌨𑍍𑌦𑍀𑌶𑌂 𑌸𑌵𑍍𑌯𑌭𑌾𑌗𑍇 𑌤𑍁 𑌵𑌾𑌮𑍇 𑌗𑍌𑌰𑍀 𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ॥

𑌸𑌪𑍍𑌤𑌮𑌂 𑌨𑍃𑌤𑍍𑌤𑌸𑌞𑍍𑌜𑌾𑌤𑌂 𑌜𑌗𑌦𑍍𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌕𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌨𑍃𑌤𑍍𑌤𑌵𑌤𑍍 ॥

(𑌕𑌾𑌰𑌣𑌾𑌗𑌮𑌃)

23. ஸம்ஹாரதாண்டவ த்யானம்.

ஸம்ஹாரதாண்டவ மூர்த்தியானது, 3 கண்கள், 8 கைகள், விறிந்தசடைகள், அபஸ்மாரன் மேலே குஞ்சிதமாக வைத்துக்கொண்டிருக்கின்ற இடதுகால், உயரத் தூக்கியிருக்கின்ற வலது கால், மேலே அணியப்பட்ட புலித்தோலாடை, இவைகளையுடையதும், வலது கைகளில் அபயம், சூலம், பாசம், உடுக்கைகளையும், இடது கைகளில் கபாலம், அக்நிபாத்திரம், விஸ்மயஹஸ்தம், வலது பக்கத்தில் நீட்டப்பட்டிருக்கும் கஜஹஸ்தம் போன்ற ஹஸ்தம், இவைகளை தரித்திருப்பதும், வலது பக்கத்தில் நந்திகேசுவரர், இடது பக்கத்தில் கௌரீதேவி, இவர்களுடன் கூடியிருப்பதுமாகும். இது, 7வது நிருத்தமாகும். இது, உலகத்திற்கு விருத்தியையளிக்கும். மற்றது முதலாவது நிருத்தத்தைப்போன்றதாகும். (வெளுப்பு நிறம்)

𑌅𑌥 𑌏𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌪𑍍𑌤𑌤𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌨𑌾𑌂 𑌨𑌾𑌮𑌾𑌨𑌿.

(𑌶𑍈𑌵𑍇 𑌕𑌾𑌰𑌣𑌾𑌗𑌮𑍇)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

𑌆𑌨𑌨𑍍𑌦𑌤𑌾𑌣𑍍𑌡𑌵𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌤𑌾𑌣𑍍𑌡𑌵𑌮𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ।
𑌉𑌮𑌾𑌤𑌾𑌣𑍍𑌡𑌵𑌮𑍇𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍 𑌗𑍌𑌰𑍀𑌤𑌾𑌣𑍍𑌡𑌵𑌮𑍇𑌵 𑌚 ॥ ௧ ॥

𑌕𑌾𑌳𑌿𑌕𑌾𑌤𑌾𑌣𑍍𑌡𑌵𑌂 𑌚𑍈𑌵 𑌷𑌷𑍍𑌠𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌤𑌾𑌣𑍍𑌡𑌵𑌮𑍍 ।
𑌸𑌂𑌹𑌾𑌰𑌤𑌾𑌣𑍍𑌡𑌵𑌂 𑌸𑌪𑍍𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑌾 𑌸𑌪𑍍𑌤𑌤𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌃 ॥ ௨ ॥

ஏழு தாண்டவமூர்த்திகளின் பெயர்கள்.
(சைவம், காரணாகமத்தில்)

ஆநந்ததாண்டவம் 1, ஸந்தியாதாண்டவம் 2, உமா தாண்டவம் 3 கௌரீதாண்டவம் 4, காளிகாதாண்டவம் 5, திரிபுரதாண்டவம் 6. ஸம்ஹாரதாண்டவம் 7 என்பன முறையே ஏழு தாண்டவங்களின் பெயர்களாகும்.

௨௩. 𑌭𑌵𑌾𑌦𑍍𑌯𑌷𑍍𑌟𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌭𑌵𑌶𑍍𑌶𑌰𑍍𑌵𑌸𑍍𑌤𑌥𑍇𑌶𑌾𑌨𑌃 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌰𑍁𑌗𑍍𑌰𑌕𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌭𑍀𑌮𑍋 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌃 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌷𑍍𑌟
𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑌃 ॥ ௧ ॥

𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌣𑍇𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌧𑌾𑌰𑌿𑌣𑌃 ।
𑌵𑌰𑌾𑌭𑌯𑌕𑌰𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌟𑌙𑍍𑌕𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑍃𑌗𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ॥ ௨ ॥

𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌰𑌕𑍍𑌤𑌕𑍍𑌷𑍌𑌮𑌾𑌮𑍍𑌬𑌰𑌾 𑌇𑌮𑍇 ।
𑌏𑌤𑍇𑌷𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 —
𑌶𑍁𑌕𑍍𑌲𑌃 𑌶𑍍𑌯𑌾𑌮𑌶𑍍𑌚 𑌰𑌕𑍍𑌤𑌶𑍍𑌚 𑌕𑍃𑌷𑍍𑌣𑍋 𑌗𑍋𑌕𑍍𑌷𑍀𑌰𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌃 ।
𑌕𑍇𑌸𑌰𑍋 𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍋 𑌨𑍀𑌲𑍋 𑌭𑌵𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌚
𑌵𑌰𑍍𑌣𑌕𑌾𑌃 ॥ ௧ ॥

24. பவாதி அஷ்டமூர்த்தி த்யாநம்.

பவன் 1, சர்வன் 2, ஈசாநன் 3, பசுபதி 4, உக்ரன் 5, ருத்திரன் 6, பீமன் 7, மஹாதேவன் 8, இவர்கள், அஷ்டமூர்த்திகளாவார்கள்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இவர்கள், 4 கைகளும், 3 கண்களுமுடையவர்களாவார்கள். ஜடாமகுடத்தை தரிப்பவர்களாவார்கள். கைகளில் வரம், அபயம், மழு, மான் இவைகளை தரிப்பவர்களாவார்கள். ஸகல ஆபரணங்களையுமணிந்து, சிவப்புப் பட்டாடையை அணிந்திருப்பவர்களாவார்கள்.

இவர்களின் நிறங்கள்: —

வெளுப்பு, சியாமம் (நீலம்), சிவப்பு, கருப்பு, பசும்பால் நிறம், தாமரை மலரிலிருக்கின்ற குஞ்ஜத்தின் நிறம், பவழ வர்ணம், நீலநிறம், இவைகள், முறையே, பவாதி மூர்த்திகளின் நிறங்களாகும்.

ஏகாதஶருத்ராணாம் நாமாநி.

(ஶைவாகமே)

ஶம்பு: பிநாகீ கிரிஶ: ஸ்தாணுர்பர்க:
ஸதாஶிவ: ।
ஶிவோ ஹரஶ்ச ஶர்வ: கபாலீ பவ ஏவ ச ॥
ஏகாதஶைதே கதிதா: ருத்ரா லோகஹிதே
ரதா: ॥

ஏகாதச (11) ருத்ரர்களின் பெயர்கள்.

(சைவாகமத்தில்)

சம்பு 1, பிநாகீ 2, கிரிசன் 3, ஸ்தாணு 4, பர்கன் 5, ஸதாசிவன் 6, சிவன் 7, ஹரன் 8, சர்வன் 9, கபாலீ 10, பவன் 11, என்று பெயருடைய இந்த பதினொரு ருத்ரர்களும் உலகத்தின் நன்மையைக் கருதுகிறவர்களாவார்கள்.

௨௫. தத்த்வாதீந ஸம்ஹார த்யாநம்.

ப்ரஹ்மவிஷ்ணுமஹேஶாநஸதாஶிவஶக்த்யாக்ஷரா: ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யஸ்மாத் ப்ரஜஜ்ஞிரே தேவா: தம் ஶம்பும்
ப்ரணமாம்யஹம் ‖ ௧ ‖

(ஶோணவர்ண:)

25. முதலாவது சம்புவின் த்யாநம்.

பிரம்ஹா, விஷ்ணு, மஹேசன், தேவர்கள், தாநவர்கள், ராக்ஷஸர்கள், இவர்கள், யாதொருவரிடத்திலிருந்து உண்டானார்களோ அந்த சம்புவை, நான் வணங்குகின்றேன். (சிவப்பு நிறம்)

௨௬. அத பிநாகி த்யாநம்.

க்ஷமாரதஸமாரூடம் ப்ரஹ்மஸூத்ராவலம்பிதம் ।
சதுர்வேதைஶ்ச ஸஹிதம் பிநாகிநமஹம் பஜே ‖

(ஹரித்வர்ண:)

26. பிநாகி த்யாநம்.

பொறுமையாகிய ரதத்திலேறிக்கொண்டிருப்பவரும், பிரம்ஹஸூத்திரத்தை தரிப்பவரும், 4 வேதங்களுடனிருப்பவருமான பிநாகியை, நான் ஸேவிக்கின்றேன். (பச்சை நிறம்.)

௨௭. அத கிரிஶ த்யாநம்.

கைலாஸஶிகரே ரத்நமணிமண்டபமத்யக: ।
கிரிஶோ கிரிஜாப்ராணவல்லபோஸ்து ஸதா முதே ‖

(நீலவர்ண:)

27. கிரீச த்யாநம்.

கைலாச பர்வதத்தில் துலங்குகின்ற மணி மண்டபத்தின் மத்தியிலிருப்பவரும், பார்வதீ தேவிக்கு மனதிற்குகந்த கணவனுமான (உமாதேவியுடனிருப்பவருமான) கிரிச

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஞனவர் எப்பொழுதும் ஸந்தோஷத்தையளிப்பாராக. (நீலநிறம்)

௨௮. அத ஸ்தாணு த்யாநம்.

வாமாங்கந்யஸ்தஸம்தோஷிதகிரிஜாநந்தவாஹநம் ।
ஸ்தாணும் நமாமி ஶிரஸா ஸர்வதேவநமஸ்க்ருதம் ॥

(ஶ்வேதவர்ண:)

28. ஸ்தாணு த்யாநம்.

இடது மடியில் உட்கார்ந்துகொண்டிருக்கின்ற உமா தேவிக்கு ஸந்தோஷத்தையளிக்கின்றவரும், அல்லது உமா தேவியினாலே ஸந்தோஷத்தையடைகின்றவரும், ஸகல தேவர்களாலும் வணங்கப்பட்டவருமான, ஸ்தாணுவை, சிரத்தால் வணங்குகின்றேன். (வெளுப்பு நிறம்)

௨௯. அத பர்க த்யாநம்.

சந்த்ராவதம்ஸோ ஜடிலஸ்த்ரிணேத்ரோ பஸ்மபாண்டர: ।
ஹ்ருதயஸ்தஸ்ஸதா பூயாத் பர்கோ பயவிநாஶந: ॥

(ஶ்யாமவர்ண:)

29. பர்க த்யாநம்.

சந்திரனை அணிந்திருப்பவரும், சடையுடையவரும், 3 கண்களுடையவரும், திருநீற்றைப் பூசியிருப்பதனாலே அல்லது திருநீற்றைப்போல வெளுப்புநிறமாக இருப்பவரும், பயங்களைப்போக்குகின்றவருமான பர்கனவர், என்னுடைய ஹிருதயத்தில் எப்பொழுதுமிருப்பாராக. (சியாம — நீலநிறம்)

௩௰. அத ஸதாஶிவ த்யாநம்.

ப்ரஹ்மா ஹரேஶ்வர: ஸ்ருஜந் லோகம் விஷ்ணுஸம்ஹேஶ்வராய
வர்ஜயந் ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்ரஷ்டா ஸம்ரக்ஷகோ ஹர்த்தா ஜக³தாம் பாது மாம்

ஸதா³ஶிவ: ।

(ஶ்யாமவர்ண:)

30. ஸதாசிவ த்யாநம்.

பிரம்ஹதேவராக இருந்து உலகத்தைப் படைப்பவரும், விஷ்ணுவாக இருந்து உலகத்தைக் காப்பாற்றுகிறவரும், முடிவில், ருத்திரனாக இருந்து உலகத்தையழிப்பவருமான ஸதாசிவன், என்னைக் காப்பாற்றுவாராக. (நீல நிறம்)

௩௧. அத² ஶிவத்⁴யாநம்.

கா³யத்ரீப்ரதிபாத்³யாயாப்யோங்காரக்ருதஸத்³மநே ।
கல்யாணகு³ணதா⁴ம்நே(அ)ஸ்து ஶிவாய விஹிதா நதி: ॥

(பீதவர்ண:)

31. சிவ த்யாநம்.

காயத்திரியினாலே கூறப்படுகின்ற வஸ்துவாக விளங்குகிறவரும், ஓம்காரத்தை இருப்பிடமாகக்கொண்டவரும், (ஓம்காரத்தின் பொருளாக இருப்பவரும்) மங்களகரமான குணங்களுக்கு இருப்பிடமாக இருப்பவருமான சிவனுக்கு, என்னுடைய நமஸ்காரமானது உரியதாகும். (மஞ்சள் நிறம்)

௩௨. அத² ஹரத்⁴யாநம்.

ஆஶீவிஷாஹாரக்ருதே தே³வௌக⁴ப்ரணதாங்க்⁴ரயே ।
பிநாகாங்கிதஹஸ்தாய ஹராயாஸ்து நமஸ்க்ருதி: ॥

(க்ருஷ்ணவர்ண:)

32. ஹர த்யாநம்.

ஸர்பத்தை (தாருகாவநத்திலுள்ள மஹர்ஷிகள் ஆபிசாரத்தினாலே அனுப்பிய கொடிய ஸர்பத்தை)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தன்னுடையதாகச்செய்துகொண்டவரும், தேவத்தொகுதிகளாலே வணங்கப்பட்ட பாதங்களையுடையவரும், பிநாகத்தை (பிநாகம் – பரமேசுவரனுடைய வில்) கையில் வைத்துக்கொண்டிருப்பவருமான ஹரனுக்கு என்னுடைய நமஸ்காரமானது உரியதாகும். (கருப்பு நிறம்)

௩௩. அத² ஶர்வத்⁴யாநம்.

த்ரிபுராணாம் ச த³க்³தா⁴ ஹந்தா க்ருதாந்தஸ்ய க²ட்³க³ப்⁴ருத:|
ப³ப்⁴ருவர்ணஸ்தீக்ஷ்ணத³ம்ஷ்ட்ர: ஶர்வ: பாது ஸதா³ மம

உரஸே ஸதா³ ||௧||

(ப³ப்⁴ருவர்ண:)

33. சர்வ த்யாநம்.

திரிபுராஸுரர்களுடைய 3 நகரங்களையும் எரித்து அழித்தவரும், காலனுடைய கொழுப்பை நாசம் செய்தவரும், கையில் கத்தியை தரிப்பவரும், கூர்மையான தெத்திப்பற்களையுடையவருமான சர்வன், எனக்கு சந்தோஷத்தையளிப்பாராக. (பப்ருவர்ணம், – சிவப்பும் மஞ்சளும் கலந்த நிறம்)

௩௪. அத² கபாலி த்⁴யாநம்.

த³க்ஷாத்⁴வரத்⁴வம்ஸகர: கோபயுக்தமுகா²ம்பு³ஜ: |
ஶூலபாணிஸ்ஸுகா²யாஸ்து கபாலீ மே

ஹ்ருதி³ ப்ரபு⁴: ||௧||

(பாடலவர்ண:)

34. கபாலி த்யாநம்.

17 தக்ஷப்ரஜாபதியின் யாகத்தையழித்தவரும், கோபத்துடன் கூடிய முகத்தையுடையவரும், சூலத்தைக் கையில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஏந்தியிருப்பவருமான கபாலியானவர், எனக்கு என்றும் ஸௌக்கியத்தைக்கொடுப்பாராக. (பாடலம்—வெளுப்பும் சிவப்பும் கலந்த நிறம்)

௩௫. அத² ப⁴வத்⁴யாநம்.

யோகீ³ந்த்³ரநுதபாதா³ப்³ஜம் த்³வந்த்³வாதீதம் ஜநாஶ்ரயம் |
வேதா³ந்தக்ருதஸஞ்சாரம் ப⁴வம் தம் ஶரணம் ப⁴ஜே ||

(ஶ்ரீதத்த்வநிதி⁴:)

35. பவ த்யாநம்.

ச்ரேஷ்டர்களான யோகிகளினால் போற்றப்பட்ட பாதாரவிந்தங்களையுடையவரும் (பிறப்பு, இறப்பு, ஸுகம் துக்கம் முதலான) இரட்டைகளைக்கடந்தவரும், ஸகல ஜ்ஞானங்களுக்கும் உறைவிடமாக இருப்பவரும், வேதாந்தத்தில் ஸஞ்சரிப்பவரும், (உபநிஷத்துக்களின் பொருளாக இருப்பவரும்) ஆன பவனை சரணமடைகிறேன் (வெளுப்பு நிறம்)

அத² ப⁴வதே³வாநாம் த்⁴யாநாநி.

(வாதூலதந்த்ரே)

த்ரிணேத்ரா: ஶுத்³த⁴ஸத்த்வா: ஜடாமகுடதா⁴ரிண: |
ஶுத்³த⁴ம் த்ரிணேத்ரவக்த்ரம் ஜடாமண்ட³லதா⁴ரிணம் ||

ஸ்ப²டிகாப⁴ம் நீலகண்டே²ந்து³ஶேக²ரவிபூ⁴ஷிதம் |
தே³வ்யா ஸமந்விதம் ஸர்வாப⁴ரணபூ⁴ஷிதம் ||

கராப்⁴யாமபி பூர்வாப⁴்யாம் வரதா³ப⁴யத³ம் பரம் |
அவராப்⁴யாம் ச ஹஸ்தாப்⁴யாம் பி³ப்⁴ராணம்

பரஶும் ம்ருக³ம் || ௧

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஏதேஷாம் வர்ணா:—

ஶோணஶ்ச ஹரிதோ நீல: ஶ்வேத: ஶ்யாமலமேசக: |

பீத: காலஸ் ததா பப்ருவர்ணக: பாடலஸ்ஸித: ||

ஏகாதஶாநாம் ருத்ராணாம் வர்ணோ(அ)யம்

ஸமுதாஹ்ருத: ||

ஏகாதச ருத்திரர்களின் உருவங்கள்.

(பாத்ம புராணத்தில்)

இவர்கள் ருத்திரமூர்த்தியைப்போன்ற உருவமுடைய வர்களும், 3 கண்களுடையவர்களும், ஜடாமகுடம் தரித் திருப்பவர்களுமாவார்கள். (இனி ருத்திரமூர்த்தியின் ஸ்வரூபம் கூறப்படுகிறது.

3 கண்களும் சிவப்புநிறமுமுடையவரும், ஜடா மண்டலத்தை தரிப்பவரும், 4 கைகளும் நீலகண்டமு முடையவரும், இளம் பிறை சந்திரனை அலங்காரமாகக் கொண்டவரும், புலித்தோலை ஆடையாக அணிந்திருப்ப வரும், ஸகல ஆபரணங்களினாலேயும் அலங்கரிக்கப்பட் டிருப்பவரும், முக்கியமான இரண்டு கைகளிலும் எப்பொழுதும் வரதம் அபயங்களையும் மற்ற இரண்டு களிலும் மழுவையும் மானையும் வஹிப்பவருமான ருத்திர மூர்த்தியை (வணங்குகின்றேன்)

இவர்களின் நிறங்கள்:—

சிவப்பு 1, பச்சை 2, நீலம் 3, வெளுப்பு 4, சியாமளம்-நீலம் 5, பச்சை 6, மஞ்சள் 7, கருப்பு 8, பப்ரு (மஞ்சளும் சிவப்பும் கலந்த நிறம்) வர்ணம் 9, பாடலம் (வெண் சிகப்பு) 10, வெளுப்பு 11, இந்த நிறங்கள் முறையே, ஏகாதச ருத்திரர்களின் நிறங்களாகக் கூறப்பட்டு இருக்கின்றன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अथ

அத² பஞ்சவிம்ஶதிலீலாமூர்தீநாம் த்⁴யாநம்.

(ஶைவே காரணாக³மே)

௩௬. ப்ரத²மசந்த்³ரஶேக²ர த்⁴யாநம்.

கலயது ரஸஹாஸ்யம் ஸஶ்ருங்கா³ரபா⁴வம்
விகஸிதவத³நநேத்ரம் சந்த்³ரபி³ம்பா³ம்ஶமௌலிம் ।
ஸ்தி²ரதரஸமபாத³ஸ்தா²நகம் வித்³ருமாப⁴ம்
ஹரிணபரஶுவராபீ⁴திம் ப⁴ஜ ஶ்ரீசந்த்³ரமௌலிம் ॥

(ஶ்ரீதத்வநிதௌ)

பஞ்சவிம்சதி (25) லீலாமூர்த்தி த்யாநம்.

(சைவம் காரணகமத்தில்)

36. முதலாவது சந்திரசேகர த்யாநம்.

சந்திரசேகரமூர்த்தியானது, கைகளில் வரதம், அபயம் மான், மழு, இவைகளை தரித்துக்கொண்டிருப்பதும், சாந்தமான சிருங்கார ரஸபாவத்தையுடையதும், விஸ்தாரமான முகம், மலர்ந்த கண்கள், இவைகளையுடையதும், சந்திரபிம்பத்துடன் கூடிய சிரஸ்ஸையுடையதும், நேராக நிமிர்ந்த சரீரத்தையுடையதும், ஸமபாதமாக நின்ற வடிவமுடையதும், பவழ நிறமுடையதும், பத்மபீடத்தின்மேல் வீற்றிருப்பதுமாகும். (பவழ நிறம்)

௩௭. ஸமேதத்வாஸ்வ்யஸ்தூ²லமூர்தி த்⁴யாநம்

ஶ்யாமாம் த்ரிநேத்ராம் த்³விபு⁴ஜாம் த்ரிப⁴ங்கீ³ம்
ஸவ்யாபஸவ்யஸ்தி²தகல்ஹாரஹஸ்தாம் ।
ஸவ்யே து தீ³ர்க⁴ப்ரஸாரஹஸ்தாம்
தே³வஸ்ய வாமஸ்தி²தப⁴த்³ரபீடா²ம் ॥ ௧ ॥

(ஶ்ரீதத்வநிதௌ)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

37. அரன் பக்கத்திலிருக்கும் கௌரீ த்யானம்.

சந்திரசேகர மூர்த்தியின் இடது பக்கத்திலிருக்கின்ற கௌரீ மூர்த்தியானது, பச்சை நிறமுடையதும், அல்லது நடுத்தர யௌவநப்பருவமுடையதும், 3 கண்களுடையதும் 2 கைகளுடையதும், 3 பங்கங்களுடையதும், (பங்கம் நிற்கும்பொழுது அங்கங்களிலுண்டாகும் வளைவு) ஊன்றி நிற்கும் இடது காலையும் குஞ்சிதமான (சிறிது வளைவான) வலது காலையுமுடையதும், வலது பக்கத்தில் நீலோத்பலத்தை தரித்திருக்கின்ற அழகிய கையையுடையதும், பரமேசுவரனுடைய இடது பக்கத்தில் பத்மபீடத்தில் நின்ற வடிவமுடையதுமாகும். (பச்சை நிறம்)

௩௮. அத உமாமஹேஶ்வர த்யாநம்.

யவஹாஜ்ஜஸா வாவஸநவஷிஹிதம்
ஆரமலிம்ஹகடங்கவராஹயிநம் ।
ஸாஂஶாவம் வரஶாத்துயூஹாஷம்(யா)
ஹஸ்யாஶயா ஸஹ நளஶி ஸாராவெவஶிடீ ॥

(ஶ்லோகபஞ்சகம்)

38. உமாமஹேசுவர த்யானம்.

வெண்தாமரைமலரில் ஸுகாஸநத்தில் வீற்றிருப்பவரும், மான், மழு, வரதம், அப்யம் இவைகளை தரிப்பவரும் அழகான முகத்துடன் கூடியவரும், சிறந்த ரூபலாவண்யத்துடன் கூடியவரும், நீலம்—வரதங்களை தரிப்பவளான உமாதேவியுடன் கூடியிருப்பவருமான உமாமஹேசுவரரை வணங்குகின்றேன். (வெளுப்பு நிறம்)

௩௯. அத வ்ருஷாரூட த்யாநம்.

ஸவ்யெ ஸ்யாஅக்ஷூதூஂஶாங்கிதகடககரஂ மொவதெ:
வ்ருஷவஸம்ஸ்தம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வாமோத்ஸங்காயதும் (வாமே ஹஸ்தேந) ஸவ்யகக்ஷம்

வரகரயுகளே டங்கக்ருஷ்ணம் ததாநம் ।

பாலாக்ஷம் ப்ரஸந்நம் த்ரிநயநஸஹிதம்

பத்தவேணீகிரீடம்

வாமே தேவ்யா ஸமேதம் நமத ஸுககரம்

தம் வ்ருஷாரூடமீசம் ‖ க ‖

(ச்வேதவர்ண:)

39. விருஷபாருட த்யானம்.

வலதுபக்கத்தில் (மடியில் வைத்துக்கொண்டிருக்கின்ற) கணபதியையணைத்துக்கொண்டிருக்கின்றகடகஹஸ்தத்தை யுடையவரும், வலது கையில் அழகான ஜபமாலையை தரிப்பவரும், பரகரங்கள் இரண்டிலும் மானையும் மழுவை யும் தரிப்பவரும், நெற்றிக்கண்ணுடையவரும், அழகான முகமுடையவரும், 3 கண்களுடையவரும், பின்னலையும் கிரீடத்தையும் தரித்து இடது பக்கத்திலிருக்கின்ற உமா தேவியுடன் கூடியிருப்பவரும், ஸகல ஸௌக்கியங்களையு மளிப்பவரும், விருஷபத்தின் மீது வீற்றிருப்பவருமான ஸ்ரீ பரமேசுவரனை வணங்குவீர்களாக. (வெளுப்பு நிறம்)

௪௰. ஸந்த்யா ந்ருத்தமூர்த்தி த்யாநம்.

ஸம்ப்ராப்தவஸாநே ஸ்வஸ்திகஸ்திதபதம் விஷ்ணுநாஸேவ்யமாநம்

வாமம்

ஜாநுஸ்தாநுஸ்தஸ்ய தக்ஷே நடநமபிநவம்

ஸந்த்யாஸமயே ஸேவிதாஸ்து ய: ।

ஸர்வாம்ஹோநிக்ருந்தநம் ஹஸ்தாப்ர

வாஹாக்ர்யயோ:

கக்ஷம் பாண்டுவர்ணாபயம் கராப்ஜம் த்ருதவா

நடேசம் பஜே ‖

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

(ரக்தவர்ணா:)

𑌶𑌿𑌵𑌕𑌾𑌮𑌵𑌲𑍍𑌲𑍀 𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌸𑌮𑌯𑌨𑌤𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑌿𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌂𑌬𑌰𑌾𑌵𑌸 𑌨𑌾𑌯𑌿𑌕𑌾 ॥

40. நாட்டியமூர்த்தி த்யாநம்.

நடராஜமூர்த்தியானவர், படுத்துக்கிடக்கின்ற அபஸ்மாரன்மீது (இடது) காலைப்பதித்துவைத்திருப்பவரும், இடது (வலது) காலைத்தூக்கிக்கொண்டிருப்பவரும், தீச்சுடர்களின் நடுவிலிருப்பவரும், நடிக்கின்ற நாகத்தின் பருத்த தலையைப்பற்றியிருப்பவருமாவார். இவர், திருநீறு பூசிய உடலும், சிவப்பான கைத்தலம், பாததலமுமுடையவரும், அக்நி–ஆடுகின்ற வரத ஹஸ்தம்–அபயம்–உடுக்கை இவைகளை தரிப்பவருமாவார். இந்த நடராஜரை வணங்குகின்றேன். (சிவப்பு நிறம்).

சிவகாமஸுந்தரியை சந்திரசேகரரின் பக்கத்திலிருக்கின்ற தேவியைப்போல் கல்பிக்கவேண்டும்.

௪௧. ஜய கல்யாணஸுந்தரமூர்த்தித்யாநம்.

𑌵𑌿𑌭𑍍𑌰𑌾𑌣𑌂 𑌤𑍍𑌰𑌿𑌣𑍇𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌹𑌸𑌿𑌤𑌵𑌦𑌨𑌂
𑌹𑌾𑌰𑌕𑍇𑌯𑍂𑌰𑌭𑍂𑌷𑌂
𑌦𑌿𑌵𑍍𑌯𑍈𑌰𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌰𑍍𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌂𑌬𑌰𑌕𑌟𑌕𑌮𑍁𑌖𑍈𑌃
𑌕𑌲𑍍𑌹𑌾𑌰𑌭𑍂𑌷𑌂 ।
𑌸𑌵𑍍𑌯𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌪𑌾𑌣𑌿𑌨𑌾𑌤𑍍𑌤𑌕𑌰𑌂 𑌸𑌵𑍍𑌯𑍇𑌨
𑌸𑌂𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌿𑌤𑌂
𑌟𑌙𑍍𑌕𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑍃𑌗𑌂 𑌪𑌰𑌂 𑌵𑌰𑌕𑌰𑌂(𑌰𑍌) 𑌚𑌾𑌭𑌯𑌂
𑌭𑌾𑌵𑌯𑍇 ॥ ௧ ॥

𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 ।
𑌤𑍍𑌰𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌂 𑌸𑍌𑌮𑍍𑌯𑌂 𑌨𑌵𑌯𑍌𑌵𑌨
𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 ॥ ௨ ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸமபங்கயுதம் தேவஸ்தானகம் ஸம்ப்ரகீர்த்திதம் ।
குஞ்சிதம் ஸவ்யபாதேன ஸ்திதஸவ்யேதராங்க்ரிகம் ॥
(ஸிந்தூரவர்ண:)

41. கல்யாணஸுந்தர த்யானம்.

இந்த மூர்த்தியானது, ஸிந்தூர நிறமும், 3 கண்களும் 4 கைகளுமுடையதும், ஹாரம், கேயூரங்களை அணிந்திருப்பதும், சிறந்த ஆடையையணிந்திருப்பதும், வரத கடக ஹஸ்தத்தில் (கடக ஹஸ்தமான இடது கையில்) அழகாக பிரகாசிக்கின்ற ஸுவர்ணமயமான செங்கழிநீர் புஷ்பத்தை (மாலையை) ஆபரணமாக அணிந்திருப்பதுமாம். ஸர்வ மங்களங்களையுமளிப்பதும், பார்வதீதேவியின் வலது கையைத் தன்னுடைய வலது கையினலே பிடித்துக் கொண்டிருப்பதும், பரகரங்களில் மழு, மான்களை தரிப்பதும், சிரஸ்ஸில் சந்திரகலையையணிந்திருப்பதுமாகும்.

ஜடாமகுடத்தை தரிப்பதும், அரைவட்ட சந்திரனை அணிந்திருப்பதும், 3 கண்களும், 4 கைகளுமுடையதும், புதிதான யௌவனப்பருவத்தினலே அலங்காரமுடையது மான இந்த மூர்த்தியை வணங்குகிறேன். (2)

இந்த மூர்த்தியானது, ஸமபங்க லக்ஷணத்துடன் கூடியதாகவும், ஸ்தானக (நின்றவடிவமான) மூர்த்தியாகவும் இருக்கவேண்டுமென்றும், இடது கால் குஞ்சிதமாகவும், வலதுகால் ஸ்திதபாதமாகவுமிருக்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கின்றது. (ஸிந்தூர நிறம்)

அத ஶிவஶக்திஸம்பேதா உச்யந்தே —

௪௨. அத தத்ராதௌ கிரிஜா த்யானம்.

ஸீமந்தாக்ரம் ஸிந்தூரம் ச ஸீமந்தஸமலங்க்ருதம் ।
விவாஹாங்கம் ஸிந்த்ராம் ச ஸர்வாபரண
பூஷிதாம் ॥ ௧ ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

பீனோருவக்ஷஸ்தநாம் தேவீம் த்யாயேச் சிவஸ்ய
வாமகே ।

(பூர்வகாரணாத்)

கல்யாண ஸுந்தரேச அங்க மூர்த்திகள்.

42. முதலாவது கிரிஜா த்யானம்.

பரமேசுவரனுடைய இடது பக்கத்தில், பருத்த துடைகளும், பெரிதான (சதைப்பற்றுள்ளதான) கன்னங்களும், பருத்த கைகளும், 2 கைகளும், 2 கண்களும் உடையவளும், ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பவளும், வெண் பட்டாடையையணிந்திருப்பவளுமான கௌரீ தேவியைக் கல்பிக்கவேண்டும். (பச்சை நிறம்)

௪௩. அத ப்ரஹ்ம த்யானம்.

சதுர்முகம் சதுர்பாஹும் கமண்டல்வக்ஷதாரிணம் ।
யஜ்ஞஸூத்ரோத்தரீயம் ச ஜடாமகுடஸம்யுதம் ॥ ௧ ॥

ஸவ்யஹஸ்தேऽக்ஷமாலாம் ச வாமஹஸ்தே கமண்டலும் ।
ஸ்ருவம் தக்ஷிணஹஸ்தே து புஸ்தகம் வாமகே
த்வயம் (யது) ॥ ௨ ॥

பத்மாஸநஸ்தம் ஸுவர்ணம் ப்ரஹ்மாணம்
ஹம்ஸவாஹநம் ।
கண்டே து சதுர்ஸூத்ரம் சைவ ஸௌவர்ணாத்யஸம்யுதம் ॥

நாபியோநிஸமாயுக்தம் ஸர்வலக்ஷணலக்ஷிதம் ।
த்யாயேந்நித்யம் ஹம்ஸவாஹம் ஜ்ஞாநமுத்ராக்ஷஸம்யுதம் ॥

ப்ரஹ்மண: பார்ச்வதோ வாமே ஸ்ருஷ்டாந்தீம்
ஸம்ப்ரகல்பயேத் ॥

(வாதுளகாரணாத்)

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

43. பிரம்ஹதேவ த்யாநம்

(கல்யாணஸுந்தரேசருக்கு முன்பக்கத்தில்) 4 முகங்களும் 4 கைகளுமுடையவரும், கமண்டலுவையும், ஜபமாலையும் தரிப்பவரும், யஞ்ஜ ஸூத்திரம், உத்தரீயம் (மேலே தரிக்கும் வஸ்திரம்) இவைகளை தரிப்பவரும், ஜடா மகுடத்துடனிருப்பவரும், வலது கையில் ஜபமாலையையும், இடது கையில் கமண்டலுவையும் தரிப்பவரும் (முக்கியமான கைகள் இரண்டுகளில்) வலது கையில் ஸ்ருவத்தையும் இடது கையில் புஸ்தகத்தையும் தரிப்பவரும், பத்மாஸநத்தில் வீற்றிருப்பவரும், சிரித்த முகத்துடன் இருப்பவரும், பத்மாஸநத்தில் வீற்றிருப்பவருமான பிரப்ஹதேவரைக் கல்பிக்கவேண்டும்.

(அந்த பிரப்ஹாவுக்கு முன் பக்கத்தில்) 3 மேகலைகள், நாபி, யோநி இவைகளுடன் கூடியதும், குண்டத்திற்குக் கூறப்பட்டிருக்கின்ற ஸகல லக்ஷணங்களுடன் கூடியதும் சதுரச்ரமுமான (சதுரச்ரம்—சச்சதுரம்) அக்நிகுண்டத்தைக் கல்பிக்கவேண்டும். அந்த குண்டத்தின் மத்தியில், 5 சிகை (சிகை—ஜ்வாலை)களுடன் கூடிய அக்நியைக் கல்பிக்க வேண்டும். அந்த அக்நியானது (அக்நிகுண்டமானது சந்தணம், அக்ஷதை, புஷ்பம் முதலியவைகளாலே) நன்கு பூஜிக்கப்பட்டு (அலங்காரம் செய்யப்பட்டு) இருக்க வேண்டும். (பாடல வர்ணம்—வெண்சிவப்பு நிறம்)

௪௪. 𑌅𑌥 𑌨𑌨𑍍𑌦𑌿 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌨𑌨𑍍𑌦𑌿𑌨𑌂
𑌸𑍁𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌨𑌨𑌂 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌶𑍋𑌭𑌿𑌤𑌮𑍍 ॥

(𑌕𑌾𑌰𑌣𑌾𑌗𑌮𑍇)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

44. மேநகா த்⁴யாநம்

பார்வதீ தேவியின் வலது பக்கத்தில் சிரித்த முக முடையவளும், ஸகல அணிகளையுமணிந்திருப்பவளும், ஸகல ஆபரணங்களினாலேயும் அழகாக பிரகாசிப்பவளு மான மேநகை (மேனை)யைக் கல்பிக்கவேண்டும். (இவள் பித்ரு தேவதைகளின் மாநஸிக் புத்ரியாவாள்) (தங்க நிறம்)

௪௫. அத² ஶிவவிவாஹ:

ஹஸ்தத்³வயே ஹேமகும்ப⁴ஜலாட்⁴யாக்ருதிம் ஸ்மரேத் ॥ ௧ ॥

பத்³மபீடோ²பவிஷ்டாம் சைவ தத்பார்ஶ்வே ஶிவாத்³ஸ்தி²த: |
* தத³க்³ரே வ்ருஷபே⁴ ஸ்தி²த்வா ஜயாநாக்ருதிஸம்ஸ்தி²தா ॥

தே³வஸ்ய வாமபார்ஶ்வே து ஸநகஸ்து ஸநந்த³ந: |
ஸ்தி²தௌ க்ருதாஞ்ஜலிபுடௌ ஜடாவல்கலதா⁴ரிணௌ ॥

விஷ்ணுப்³ரஹ்மேந்த்³ரமுக்²யாஸ்து விவாஹே தே³வதா யுதா: |
கல்யாணஸந்தோ³ஹம் ப்ரோக்தம் — — ॥ ௨ ॥

(ஶிவாத் பஶ்சிமபார்ஶ்வ: | ஸநகஸநந்த³நௌ வாமபார்ஶ்வே | விஷ்ண்வாதீ³நாம் தத்பரத: ॥)

45. ஹிமவானுடைய த்⁴யாநம்.

மேனையானவள், இரண்டு கைகளிலும் ஜலத்துடன் கூடிய ஸுவர்ண கடத்தை வைத்துக்கொண்டிருப்பவளும், பத்மபீடத்தின் மேலிருப்பவளுமாவாள்:

---

* தத்பார்ஶ்வே வ்ருஷப⁴: காய: ஜயாநாக்ருதிஸ்ததா² | இதி பாடா²ந்தரம் து ஶோதிதம் பாட²: ஸம்யக்³ஜ்ஞாதா ஸம்ப்ரதா³யதே ஜ்ஞாதி |

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மேனையின் அல்லது பார்வதியின் பக்கத்தில் ஹிமவான் நின்றுகொண்டிருப்பவராவார். *

... ...

ஸ்வாமியின் இடது பக்கத்தில் ஸநகரையும் ஸநந்தரையும் கல்பிக்கவேண்டும். இவர்கள் ஜடாபந்தம் தரித்திருப்பவர்களும், அஞ்சலிபந்தம் செய்துகொண்டிருப்பவர்களும், பரமேசுவரனுக்கு எப்பொழுதும் பிரியமானவர்களுமாவார்கள்.

பார்வதீ பரமேசுவர விவாஹத்தை ஸேவிப்பதற்கு ஆசையுடையவர்களான விஷ்ணு முதலிய தேவர்களையும் கல்பிக்கவேண்டும்.

இவ்விதமாக கல்யாண ஸுந்தர லக்ஷணம் கூறப்பட்டிருக்கின்றது.

(ஹிமவான் வெளுப்பு நிறம். ஸநக ஸநந்தனர்கள் வெண்சிவப்பு நிறம். விஷ்ணுவாதி தேவர்கள் அவரவர்களுக்கு உரிய நிறம்)

௪௬. அத பிக்ஷாடனமூர்த்தி த்யானம்.

சதுர்ப்புஜம் த்ரிணேத்ரம் ச நக்னம் சைவ
ஸ்மிதானனம் ।
ஹஸ்தத்ரயே விசுதாஹம் கட்யாம் பன்னகஸம்வ்ருதம் ॥ ௧ ॥
ஸுவ்ருத்தாலங்க்ருதம் ஹ்ரஸ்வஶிகாட்யம் பாதுகாஸம்யுதம் ।
தக்ஷிணம் தத்கராக்ரம் து ஹரிணாஸ்யார்ப்பிதம்
பவேத் ॥ ௨ ॥

---

* பரமேசுவரனுடைய பக்கத்தில் சரத்கால மேகத்தைப் போல வெளுப்பு நிறமுடைய விருஷபதேவரைக் கல்பிக்க வேண்டும், என்று பொருள்படும்படி திருத்திக்கொள்ள வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

தக்ஷிணே பரஹஸ்தே து டமரும் சைவ காரயேத் |
வாமே சாபரஹஸ்தே து த்ரிஶூலம் பிஞ்சதாரிணம் ||

குஞ்சிதம் தக்ஷிணம் பாதம் வாமபாதம் து ஸுஸ்திதம் |
ஸர்பம் வஸ்த்ராந்தகம் ச பாதே நூபுரவேஷ்டிதம் || ௪ ||

* கபாலபாத்ரஹஸ்தம் ச வ்ருஷ(தேவ)வாஹிஸம் பவேத் |
ஏவம் பிக்ஷாடநம் ப்ரோக்தம் கங்காலமதோ ஶ்ருணு || ௫ ||

தேவஸ்ய வாமபார்ஶ்வே து கங்காலதண்டஸுஸ்திதம் |
ஹஸ்தத்வயஸமாயுக்தம் கபாலம் ஶிரஸி ந்யஸேத் || ௬ ||

பூதாகாரஸமாயுக்தம் கம்பளே கண்டயோ ந்யஸேத் |
தம்ஷ்ட்ராகராலவக்த்ரம் ச பார்ஶ்வே ரக்தலக்ஷணாந்விதம் ||

(தேவோ வித்ருதவர்ணக: | கங்காள: ஶ்யாமவர்ணக: |)

46. பிக்ஷாடநமூர்த்தி த்யாநம்.

பிக்ஷாடநமூர்த்தியானது, 4 கைகளும் 3 கண்களும், ஆடையற்றதும், சிரித்த முகமுடையதும், திருநீறைப் பூசிக்கொண்டிருப்பதும், பவழ நிறமுடையதும், இடுப்பில் ஸர்பத்தைச் சுற்றிக்கொண்டிருப்பதுமாகும்.

இந்த மூர்த்தியின் வலதுகை நுனியானது மானின் முகத்திற்கு ஸமீபத்திலிருக்கவேண்டும். வலது பரஹஸ்தத்தில் உடுக்கையைக் கல்பிக்கவேண்டும். இவர் இடது பக்கம் அபரஹஸ்தத்தில் திருசூலத்தையும்

* ஶ்லோகார்த்தமிதம் 6 ஶ்லோகாத்மககோஶேஷு நாஸ்தி |

பரஹஸ்தத்தில் மயில் தோகையையும் தரிப்பவராவார். வலதுகால் குஞ்சிதமாகவும், இடதுகால் ஸுஸ்திதமாகவும் (ஊன்றியும்) இருப்பதாகும். (இந்த மூர்த்தியானது) ஸமபங்க லக்ஷணத்துடன் கூடிய ஸ்தாநக (நின்ற வடிவமான) மூர்த்தியாகவும், நடப்பதற்கு முயற்சியுடைய மூர்த்தியாகவுமிருக்கவேண்டும். இவ்விதமாக பிக்ஷாடந மூர்த்தி லக்ஷணம் கூறப்பட்டிருக்கின்றது. இனி குண்டோதர லக்ஷணத்தைக் கேட்பாயாக.

பிக்ஷாடநரின் இடதுபக்கத்தில், கீழே, குண்டோதரனை 2 கையுடன் கல்பிக்கவேண்டும். அவனுடைய சிரஸ்ஸில் கபாலத்தை வைக்கவேண்டும். அந்த கபாலத்தைப் பிடித்திருக்கின்ற கையானது, ஸ்வாமியின் நாபிக்கு ஸமமாக இருக்கவேண்டும். குண்டோதரன், பூதவடிவமுடையவனும், தெத்திப்பற்களுடன்கூடிய பயங்கரமான முகத்தையுடையவனுமாவான். (இவ்விதமாக இந்த மூர்த்தியை) கீழே கூறப்பட்ட லக்ஷணங்களுடன் கல்பிக்கவேண்டும். (ஸ்வாமி பவழ நிறம். குண்டோதரன் நீலநிறம்).

௪௭. அத காமதஹநமூர்த்தித்யானம்.

உக்ரரூபம் து காமாரிம் சதுர்புஜஸமந்விதம் |
க்ருஷ்ணடங்கஸமாயுக்தஹஸ்தவரதாந்விதம் ‖ க ‖
காமநிக்ரஹரூபம் து பத்மபீடோபரிஸ்திதம் |
தக்ஷிணே குஞ்சிதம் பாதம் வாமபாதம் து ஶாயிதம் ‖
காயஜ: காமரிபோர்தேவம் வக்ஷ்யேஹம் காமநாஶநம் |

(ரக்தவர்ண:)

47. காமதஹந மூர்த்தி த்யாநம்.

காமதஹந மூர்த்தியானது, உக்ரமான ஸ்வரூபமும், 4 கைகளுமுடையதாகும். கைகளில் மான், மழு, வரதம்,

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அபயம் இவைகளை தரித்திருப்பதாகும். பத்மபீடத்தில் வீற்றிருப்பதாகும். தொங்குகின்ற வலது காலையும் படுக்கையாக இருக்கின்ற இடது காலையுமுடையதாம். காமதஹந மூர்த்தியை இவ்விதமாகக் கல்பிக்கவேண்டும். இனி காலநாசந மூர்த்தியைக் கூறுகிறேன். (சிவப்பு நிறம்)

௪௮. अथ कालसंहारमूर्तिध्यानम्.

बन्धूकाभं त्रिणेत्रं शूलिनं सरोज
हस्तेषूज्ज्वलं
टङ्कं सच्छत्रवरं सपाशसहितं दंष्ट्रा
करालास्यकम् ।
वामे(दक्षे) कुञ्चितपादपद्मरुचिरं
कालस्य वक्षःस्थले
विक्षिप्ताङ्घ्रिजटाभरं गिरिजया युक्तं जगद्दैवतम् ॥
उद्धृतं वामपादं तु कालवक्षःस्थले स्थितम् ।
सव्यपादं भूमिपृष्ठे स्थितं सम्यग्विभावयेत्
भजेत् ॥ २ ॥
(रक्तवर्णः)

48 காலநாசமூர்த்தி த்யாநம்.

செம்பரத்தம்பூவின் நிறமுடையதும், 3 கண்களுடையதும், சூலம், பத்மம், மழு, பாசக்கயிறு இவைகளையுடையதும், தெத்திப்பற்களாலே பயங்கரமான முகமுடையதும், குஞ்சிதமான இடது(வலது) காலையுடையதும், காலனின் மார்பில் உதைத்த இடது காலையுடையதும், சிதறிப்பிறிந்த ஜடைகளையுடையதும், பார்வதி தேவியுடன் கூடியதும், ஸகல ஜகத்திற்கும் ஒப்பற்ற தெய்வமானதும், உயரத்தூக்கப்பட்டதும் காலனின் மார்பிலிருப்பதுமான

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இடது காலையுடையதும், லிங்கத்தின் சிரஸ்ஸில் வைக்கப் பட்டிருக்கின்ற வலது காலையுடையதும், பயங்கரமான முகத்தையுடையதுமான இந்த காலநாச மூர்த்தியை ஸேவிப்பாயாக. (சிவப்பு நிறம்)

அதாங்கமூர்த்தயஃ —

௪௮. அத மார்க்கண்டேய த்யாநம்.

மார்க்கண்டேயஃ ஸ்திதோ தக்ஷே லிங்கமூலம் து
ஸம்ஸ்ப்ருஶந்து |
த்விபுஜஶ்ச த்விநேத்ரஶ்ச பஸ்மருத்ராக்ஷஸம்யுதஃ ॥ ௧ ॥
ஶிவார்ச்சநபரஶ்ஶாந்தஃ ஶிவத்யாநபரோ பவேத் |
(ஶ்ரீதத்வநிதிஃ)

காலநாச அங்கமூர்த்திகள்

49. மார்க்கண்டேய த்யாநம்.

காலநாசமூர்த்திக்கு வலது பக்கத்தில், மார்க்கண்டேயரானவர், லிங்கத்தின் அடியைத்தொட்டுக் கொண்டிருக்கவேண்டும். அவர் 2 கைகளும், 2 கண்களு முடையவராவார், பஸ்மருத்ராக்ஷங்களை தரித்துக் கொண்டு, சிவனை பூஜித்துக்கொண்டு, சிவனை த்யாநம் செய்துகொண்டு இருப்பவராவார். (வெளுப்பு நிறம்)

௫௰. அத கால த்யாநம்.

தேவஸ்ய வாமபார்ஶ்வே து காலம் ப்ரத்யக்ஷரூபகம் ॥
கிரீடகங்கணோபேதம் ஸாக்ஷஸூத்ரம் ரூபகம் |
ஹஸ்தத்வயே தண்டபாஶக்ஷுண்ணாக்ருதிஸமந்விதம் ॥ ௨ ॥
த்ருஶ்யோ த்விபுஜஸ்ஸ்தித்வா காலஸம்ஹாரமூர்த்தயே |
(ஶ்ரீதத்வநிதிஃ)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

50. கால த்யாநம்.

காலஸம்ஹாரமூர்த்தியினுடைய இடது பக்கத்தில், கிரீடம் குண்டலங்களையணிந்திருப்பவனும், தெத்திப்பற்களுடன் பயங்கரமான ரூபமுடையவனும், இரண்டு கைகளில் தண்டத்தையும் (மார்க்கண்டேயனைக்கட்டி) இழுக்கின்ற பாசத்தையும் தரிக்கின்ற வடிவமுடையவனும், மிருத்யு ஸ்வரூபமுடையவனுமான காலனைக் கல்பிக்கவேண்டும். இதற்கிடையில் எருமைக்கடாவாஹநமிருப்பதனால் இங்கு கால ஸ்வரூபம் கூறப்படுகின்றது. (காலனுடைய வாஹநமான எருமைக்கடாவையும் கல்பிக்கவேண்டும் என்பது பொருள்) (நீலநிறம்)

௫௧. அத த்ரிபுராரிமூர்த்தித்யாநம்.

சதுர்ப்புஜம் த்ரிணேத்ரம் ச ஜடாமகுடதாரிணம் ।
யஜ்ஞோபவீதஸமாயுக்தம் ஸ்த்ரியா ஸஹிதம் ததா ॥ ௧ ॥

ஸர்வாபரணஸம்யுக்தம் திவ்யாம்பரஸமாவ்ருதம் ।
பத்ரம் த்ரயம்(யது) வாமகேண தக்ஷிணே
கம்ஸமந்விதம் ॥ ௨ ॥

உபவீதஸமாயுக்தம் ஸஸ்நேஹம் தயாந்தம் ஶிவம் ।
ஜடாமகுடஸம்யுக்தம் விஶ்வஸ்ருஷ்ட்யாந்தகம் ॥ ௩ ॥

ஏவம் த்ரிபுரஸம்ஹாரம் — — ॥

(விஷ்ணுதர்மே)

51. திரிபுராரிமூர்த்தி த்யாநம்.

18 திரிபுரஸம்ஹாரமூர்த்தியானது, 4 கைகளும், 3 கண்களுமுடையதாகும். மான், மழு, வில், அம்பு இவைகளை தரித்திருப்பதாகும். பார்வதி தேவியுடன் கூடியிருப்ப

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தாகும். ஸகல ஆபரணங்களையுமணிந்து திவ்யமான ஆடையை அணிந்திருப்பதாகும். இடது காதில் கர்ண பத்திரத்தையும், வலது காதில் குண்டலத்தையும் தரித்துக் கொண்டிருப்பதாகும். யஞ்ஞோபவீதத்தை தரிப்பதாகும். ஸமபங்க லக்ஷணத்துடனிருப்பதாகும். ஜடாமகுடம் தரித்திருப்பதும், பவழம்போன்ற சரீரகாந்தியுடனிருப்பதுமான சிவமூர்த்தியாகும். இவ்விதமாக திரிபுரஸம்ஹார மூர்த்தியின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கின்றது. (பவழநிறம்)

௫௨. அத ஜலந்தரஹரமூர்த்தி த்யாநம்.

ரக்தாபம் த்ரிநயநம் ஸிம்ஹாஜிநம் ச த்ரிணேத்ரகம் |
உபவீதஸமாயுக்தம் ஸர்வாபரணஶோபிதம் ‖ ௧ ‖

பாதயோ: பாதுகாயுக்தம் கிஞ்சிதேவ ஶிரோந்நதம் |
தக்ஷஹஸ்தே ஸ்திதம் சக்ரம் வாமே சாஸ்ய
கமண்டலும் ‖ ௨ ‖

ஸவிகீர்ணஜடாபாரம் கங்காசந்த்ரஸமந்விதம் |
கர்ணகுண்டலஸம்யுக்தம் ஹாரகேயூரஸம்யுதம் ‖

ஸிம்ஹாஜிநம் ச த்ரிநேத்ரம் ச கிரீடகடகாந்விதம் |
ஸர்வாபரணஸம்யுக்தம் கஶேஷவஸ்த்ரஸமந்விதம் ‖ ௩ ‖

க்ருதாஞ்ஜலிபுடோபேதம் ஹஸ்தே சக்ரம் த்வயம்(யுக்த)பரம் |
ஜலந்தரவதே ப்ரோக்தம் — — ‖

(தேவோ ரக்தவர்ண: | ஜலந்தர: பீதவர்ண:)

52. ஜலந்தரஹரமூர்த்தி த்யாநம்.

ஜலந்தரஹரமூர்த்தியானது, சிகப்பு நிறமும், உக்கிரமான கண்களும், 2 கைகளும், 3 கண்களும், உபவீதமுமுடையதும், ஸகல அலங்காரங்களாலும் சோபிப்பதும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரண்டு கால்களிலும் பாதுகைகளையுடையதும், சிறிது நடக்கவிருப்பமுடையது போன்ற தோற்றமுடையதும், வலதுகையில் குடையையும் இடதுகையில் ஜலம் நிறைந்த கமண்டலத்தையும் தரித்திருப்பதும், விரிந்த ஜடாபாரத்தையுடையதும், சிரஸ்ஸில் கங்கையையும் சந்திரனையும் தரித்திருப்பதும், காதுகளில் குண்டலங்களை தரித்திருப்பதும், ஹாரம், நூபுர (அரை நூல் மாலை)ங்களை தரித்திருப்பதுமாகும்.

ஜலந்தராஸுரனுடைய ஸ்வரூபமானது, 2 கைகளும், 2 கண்களுமுடையதும், கிரீட, கடகங்களை தரித்து ஸகல அலங்காரங்களையும் தரித்திருப்பதும், கக்கத்தில் கத்தியை வைத்துக்கொண்டிருப்பதும், இரு கைகளையும் கூப்பி அஞ்சலிபந்தநம் செய்துகொண்டிருப்பதுமாகும். இவ்விதமாக ஜலந்தர (ஹர)மூர்த்தியின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கின்றது.)பரமேசுவரனுடைய நிறம் சிவப்பு. ஜலந்தரனுடைய நிறம் மஞ்சள்)

௫௩. அத ப்ரஹ்மஶிரச்சேதமூர்த்தித்யாநம்.

பைரவஞ்ச த்ரிணேத்ரஞ்ச ஜடாமகுடவிராஜிதம் |
கட்வாங்கம் ஶூலஞ்ச ஸவ்யவாமேதரேஷு விப்ரதம் ||

வ்யாக்ரசர்மாம்பரதரம் சதுர்புஜஸமந்விதம் |
வஜ்ரஞ்ச வாமபாஹுவேதாளம் (கங்காளம்) வாமே
ப்ரஹ்மகபாலிநம் ||உ||

ஶ்வேத ... ஸம் ச ஶேஷம் பூர்வவத்ஸமா
சரேத் |

(பைரவம்)

53. பிரம்ஹ சிரச்சேதகமூர்த்தி த்யாநம்.

இந்த மூர்த்தியானவர், வெளுப்பு நிறமும், 3 கண்களும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சடைமுடியும், வலது காதில் ஓலையும், இடது காதில் குண்டலமும். புலித்தோலாடையும், 4 கைகளும், வலது கைகளில் வஜ்ரம், பாசுவும், இடது கைகளில் பிரம்ஹாவின் கபாலம் சூலங்களையும் தரிப்பவராவார். மற்றவைகளை முன்புகூறியதைப்போலவே கல்பித்துக்கொள்ளவேண்டும். (வெளுப்பு நிறம்)

௫௩. அத கஜாஸுரஸம்ஹாரமூர்த்தி த்யாநம்.

* ஶூலிசவா ஹஸ்திசிரஸ்யு உக்ஷவரணம் வாமாங்க
உக்ஷேபாஸ்ருதம்
ஸவ்யோத்யத்பாதபத்மாத்ருதகரே ஶைலஜாவலி
ஸ்யாம்போஜஹஸ்தம் ।
டங்கம் க்ருஷ்ணம்ருகம் யஸம் வரகரே வீக்ஷா
நகேதுச்சஹஸ்தம்
வாமோதிஹஸ்தயோர்த்வவீவஸ்தயஸ்தம் ஸமுத்யாஸ்யா
ஹஸ்தஸம்ஹார்யம் ॥ ௧॥
(ஶ்வேதவர்ண:)

54. கஜாஸுரஸம்ஹாரமூர்த்தி த்யாநம்.

கஜஸம்ஹாரமூர்த்தியானது, வலது காலை யானையின் தலையில் வைத்துக்கொண்டும், இடது காலை பிருஷ்டபாகம் (புட்டம்) வரையில் தூக்கிக்கொண்டும், யானையை

---

* ஶ்லோகாந்தரமேவம் ஸோய நீய இதி ஹாதி.

நத்ஸம் ஹஸ்திசிரஸ்ஸ்தவவ்யசரணம் வாமோஸ்தி மஜ்ஞோத்ருதம்
ஸவ்யோத்யுத்ருதஹஸ்தத்மகோசயஸ்தம் ஶைலஜவத்மோஜ்வலம் ।
ஶூலாடங்கக்ருஷம்யஸம் நிஜகரே: வீக்ஷாநகேதுச்சஹஸ்தம்
வாமே லீயஸ்தயோர்யா வாஸஸ்தயா க்ருஷ்ணம் ஸஸ்த்வீ
சேவஹே ॥ இதி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரண்டாகக்கிழித்து அதன் தோலை இரண்டு கைகளாலே உயரத்தூக்கிப் பிடித்துக்கொண்டு, மற்ற கைகளில் சூலம், கத்தி, உடுக்கை, மழு, மான், ஸர்ப்பமுகம் இவைகளை தரித்துக்கொண்டு இருப்பதும், பயங்கரமான முகமும் சந்திரனைப்போல வெளுப்பான சரீரகாந்தியையுடையது மாகும். இடது பக்கத்தில், உமாதேவியானவள் குமாரனை வைத்துக்கொண்டு, பரமேசுவரனை பயத்துடன் பார்த்துக் கொண்டிருப்பவளாவாள். இந்த மூர்த்தியை இவ்வித லக்ஷணத்துடன் கல்பிக்கவேண்டும். (வெளுப்பு நிறம்)

ருரு. அத வீரபத்ரமூர்த்தித்யாநம்.

சதுர்புஜம் த்ரிணேத்ரம் ச ஜடாமகுடமண்டிதம் ।
தக்ஷிணே கட்கபாணௌ ச வாமே சாபம் கதாம் ததா ॥

தம்ஷ்ட்ராகராலவதநம் பீமம் பைரவபூஜிதம் ।
ரக்தாம்பராலங்காரயுக்தம் பாதுகோபரி ஸம்ஸ்திதம் ॥

பத்ரகாளீஸமாயுக்தம் கராளம் புஜே விந்யஸேத் ।
நீலவர்ண: । தக்ஷப்ரஹ்மஸ்வரூபம் —

வீரபத்ரதக்ஷபாகே தக்ஷப்ரஹ்மாணமாஸ்திதம் ।
அஜவக்த்ரம் த்விநயநம் ப்ராஞ்ஜலியவிபூஷிதம் ॥ க ॥

நமஸ்காராஞ்ஜலிம் பிப்ரம் ஶிவத்யாநபராயணம் ॥ உ ॥

(ஶ்ரீதத்வநிதி:)

55. வீரபத்திரமூர்த்தி த்யாநம்.

4 கைகளும், 3 கண்களுமுடையவரும், சடைமுடி தரித்திருப்பவரும், வலது கைகளில் கத்தி, அம்பு இவை களையும், இடது கைகளில் கதை, வில் இவைகளையும் தரிப்பவரும், தெத்திப்பற்களாலே பயங்கரமான முகத்தை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தரிப்பவரும், பயங்கரமான ஸ்வரூபமுடையவரும், பயங்கரமாக கர்ஜிப்பவரும், ருண்டமாலையை (ருண்ட—கைகாலற்ற முண்டம்) அணிந்துகொண்டிருப்பவரும் பாதுகைகளை தரித்திருப்பவரும், பத்ரகாளியுடனிருப்பவரும், பயங்கரமான தோற்றமுடையவருமான வீரபத்ர மூர்த்தியை மனதில் த்யானம் செய்யவேண்டும். (நீலநிறம்)

தக்ஷ பிரஜாபதியின் ஸ்வரூபம் :—

வீரபத்ரருடைய வலதுபக்கத்தில், ஆட்டின் முகமும், 2 கண்களும், 2 கொம்புகளும் உடையவரும், நமஸ்காரம் செய்யும் பாவனையைக்குறிக்கின்ற அஞ்சலி முத்திரையையுடையவரும், பிராமணனும், சிவ த்யானம் செய்பவருமான தக்ஷப்ரம்ஹாவை நின்ற வடிவத்தில் கல்பிக்கவேண்டும். (நீல நிறம்)

௫௬. அத ஹரிஹர த்யாநம்.

ஸவ்யாம்ஶே விஷ்ணு[illegible]

[illegible]

வாமாம்ஶே ஶாம்ப[illegible]

[illegible] !

ஸவ்யே [illegible]

[illegible]

கிஞ்சித் (ஸவ்யே) [illegible]

ஸ்ரீஹர[illegible] ॥ ௧ ॥

ஸவ்யே * டங்கம் [illegible]

[illegible]

வாமே [illegible]

[illegible] ।

---

* டங்கா[illegible] இதி பாட:

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ध्यायेद्देवं नारायणार्धकलितशिवम्

सर्पयज्ञोपवीतम्

हस्ताभ्यां बिभ्राणं शङ्खं सचक्रं सशार्ङ्गहस्तम्

सर्वसंपत्करार्धप्रदम् ॥ २ ॥

(स्कान्दपुराणे शंकरसंहितायाः । विष्णुधर्मः शिवपुराणेः)

56. ஹரிஹர த்யாநம்.

ஹரிஹரார்த மூர்த்தியானது, வலது பக்கத்தில் (ஈசுவர பாகத்தில்) பவழநிறமுடையதும், சந்திரகலையை தரித்த முடியுடையதும், பஸ்மம், ருத்திராக்ஷம் இவைகளை ஆபரணமாக உடையதுமாகும். இடது பக்கத்தில் நீலநிறமுடையதும், மணிமகுடமணிந்திருப்பதும், பீதாம்பரம் தரித்து சோபிப்பதுமாகும். வலது கைகளில் மழுவும், அபயமும் தரித்திருப்பதாகும். இடது கைகளில் சங்கமும் கதையும் தரித்திருப்பதாகும். வலது பக்கத்தில் நெற்றிக் கண்ணுடனிருப்பதாகும். இவ்விதமாக வலது பக்கத்தில் பரமேசுவர லக்ஷணங்களுடனும், இடது பக்கத்தில் மஹாவிஷ்ணுவின் லக்ஷணங்களுடனும் விளங்குகின்ற ஹரிஹரார்த மூர்த்தியானது என் முன்னிலையில் பிரகாசித்துக்கொண்டிருக்கவேண்டும். (1)

வலதுபக்கத்தில் மழு (அபயங்களை) தரிப்பதும், இடது பக்கத்தில் கடக முத்திரை சங்கங்களை தரிப்பதும், வலது பக்கத்தில் (சடைமுடியில்) கங்கையை தரிப்பதும், இடது பக்கத்தில் கிரீடத்தை தரிப்பதும், வலது பக்கத்தில் சிவப்பு நிறமாகவும் இடது பக்கத்தில் நீலநிறமாகவுமிருப்பதும், வலது பக்கத்தில் புலித்தோலாடையும், இடது பக்கத்தில் பீதாம்பரத்தையும் தரிப்பதும், வலது நெற்றியில் அரைக் கண்ணை தரிப்பதும், ஸமபாதமாக இருப்பதும், வெண்மையான யஞ்ஞோபவீதத்தையணிந்திருப்பதும், ஸகலவிதமான க்ஷேமங்களையுமளிப்பதும், ஸகல ஸம்பத்துக்களையுமளிப்பது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மான, ஹரிஹரார்த்த ஸ்வரூபமுடைய பரமேசுவரனை வணங்குகின்றேன். (பரமேசுவர பாகம் சிவப்பு நிறம். விஷ்ணு பாகம் நீலநிறம்) (2)

௫௭. அத அர்த்தநாரீஶ்வரமூர்த்தி த்யானம்.

சதுர்புஜம் த்ரிணேத்ரம் ச ஶிவாம்ஶம்
தக்ஷபார்ஶ்வகே ।
வாமாயாம் வாமஹஸ்தே து ஶ்ரீஶக்தியுதகாரயேத் ‖ ௧ ‖

நேத்ராயாம் து(யேந)ஶ்ருங்காரே து ஸம்யுக்தம்
தக்ஷிணாம்ஶகே ।
தக்ஷிணே கர்ணமூலம் கர்ணே து வாமே து
பத்ரகம் ‖ ௨ ‖

கட்யாம் வா கல்பிதம் வாமே ஸ்வர்ணடங்கம் ச தக்ஷிணே ।
வாமபார்ஶ்வகே வாமே கேயூரகடகாந்விதம் ‖ ௩ ‖

அம்ஶே து ஸ்தநம் காயாத் ஸ்வர்ணஹாரா
(காரேண)யுதம் து வா ।
ஶ்ரோண்யாம் தக்ஷிணே ஸம்ஹோஃ வ்யாக்ரசர்ம
க்ருதாம்பரம் ‖ ௪ ‖

ஊர்த்வம் கல்பஸூத்ரம்(ஹாரம்) து சித்ரவஸ்த்ர
பரிக்ஷிப்தம் ।
ஸவ்யபாதம் க்ருதம் வாமே ஸவ்யபாதம் து
குஞ்சிதம் ‖ ௫ ‖

ஶ்யாமம் ரக்தவர்ணஃ ஸ்யாத் ஸர்வாபரண
வாமஹஸ்தகம் ।
அர்த்தநாரீஶ்வரம் த்யாயேத் — — ‖

(ஶங்கரஹஸ்தோ ரக்தவர்ணஃ । தேவீஹஸ்தஃ ஶ்யாம
வர்ணஃ)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

57. அர்த்தநாரீசுவர த்யாநம்.

அர்த்தநாரீசுவரமூர்த்தியானது, 4. கைகளும், 3. கண்களுமுடையதாகும். உடலின் வலதுபக்கம் பாதி, சிவஸ்வரூபமாகும் இடது பக்கம் பாதி, உமாதேவியின் ஸ்வரூபமாகும். இடது பக்கத்தில், தலைவகுடும், நெற்றிச் சுட்டியுமிருக்கவேண்டும். வலது பக்கத்தில், நெற்றியில் அரைக்கண்ணிருக்கவேண்டும். வலது காதில், குண்டலமும், இடது காதில் கர்ண பத்திரமும் இருப்பதாகும். இடது பக்கத்தில், (கையை) இடுப்பில் வைத்திருக்கவேண்டும். வலது கைகளில், அபயமும் மழுவுமிருக்கவேண்டும். இடது கைகளில், வரதமும், நீலோத்பலமுமிருக்கவேண்டும். உமாம்சமான இடது பக்கத்தில், அழகான ஸ்தநத்தைக் கல்பிக்கவேண்டும். வலது பக்கத்தில், அடிவயிறானது, புலித்தோலாடையை அணிந்திருக்கவேண்டும். இடது பக்கத்தில், இடுப்பில், சித்திரவர்ணமான வஸ்திரத்தை யுடுத்தியிருக்கவேண்டும். இடது காலானது, பாதஸரத்தை யணிந்திருக்கவேண்டும். வலது காலானது, குஞ்சிதமாக இருக்கவேண்டும். பரமேசுவர பாகம் பவழ நிறமாகவும், பார்வதி பாகம் பச்சை நிறமாகவுமிருக்கவேண்டும். இவ்விதமாக அர்த்தநாரீசுவர லக்ஷணம் கூறப்பட்டிருக்கின்றது. (பரமேசுவரபாகம் சிவப்பு நிறம். பார்வதி பாகம் பச்சை நிறம்)

௫௮. அத² கிராதார்ஜுநமூர்த்தித்⁴யாநம்.

சதுர்பு⁴ஜம் த்ரிணேத்ரம் ச ஜடாமகுடஸம்யுதம் |
ஸர்வாப⁴ரணஸம்யுக்தம் தி³வ்யாம்ப³ரஸமாவ்ருதம் || க ||

த⁴நுர்பா³ணாயுதம் ரக்தம் க்ருஷ்ணவராஹஸம்யுதம் |
உபவீதஸமாயுக்தம் [illegible] || உ ||

வாமே கௌ³ரீஸமாயுக்தம் த³க்ஷிணே சார்ஜுநம் ஸ்தி²தம் ||

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அர்ஜுநஸ்வரூபம் —

ஏகவக்த்ரம் த்விநயநம் ஜடாமகுடஸம்யுதம் ॥ ௬ ॥

ஸர்வாபரணஸம்யுக்தம் க்ருதாஞ்ஜலிபுடம் ஸ்திதம் ॥

ஏவம் கிராதரூபம் — — ॥

(தேவோ ரக்தவர்ண: । அர்ஜுந: ஶ்யாமவர்ண:)

58. கிராதார்ஜுநமூர்த்தி த்யாநம்.

கிராதார்ஜுநமூர்த்தியானது, 4 கைகளும், 3 கண்களுமுடையதும், ஜடாமகுடம் தரித்திருப்பதும், ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பதும், சிறந்த ஆடையையுடுத்தியிருப்பதும், வில், அம்பு, மான், மழு இவைகளை ஏந்திக்கொண்டிருப்பதும், உபவீதமணிந்திருப்பதும், ஸமபங்கலக்ஷணத்துடனிருப்பதும், இடது பக்கத்தில் கௌரீ தேவியுடனும், வலது பக்கத்தில் அர்ஜுநனுடனும் நின்ற வடிவமாக இருப்பதாம்.

அர்ஜுநஸ்வரூபம்—

அர்ஜுந வடிவமானது, ஒருமுகம், 2 கண்களுடையதாகும். ஜடாமகுடம் தரித்ததும, ஸகல அணிகளையுமணிந்திருப்பதும், கைகளைக்கூப்பி அஞ்சலிபந்தம் செய்துகொண்டிருப்பதும், நின்றவடிவமுடையதுமாகும்.

இவ்விதமாக கிராதார்ஜுநமூர்த்தி ஸ்வரூபம் கூறப்பட்டிருக்கின்றது. (பரமேசுவரன் சிவப்பு நிறம். அர்ஜுநன் நீலநிறம்)

௫௯. அத கங்காளமூர்த்தி த்யாநம்.

ஹஸ்தாப்யாமூர்த்வகாப்யாம் ஶிகிமணிபுஜகஸம்ஸ்பர்ஶகம்
காணுகக்ஷம்
டக்காம் வாமே கபாலம் த்ரயமபிபுஜகஸம்ஸ்பாம்ஶூ
ஸிதஸ்ரக்தேஹம் ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஶாந்தம் க்ருஷ்ணம்ருகாஸ்ருங்கம்பிதகரம் பத்மேந்து
சஶிகம் ஹாரம்
வந்தே தேவகிரீஷ்வரேஶ: ஸுவிக்ருதம் வேதாந்தவேத்ய
அஷ்டாம்பரம் ॥ க ॥

சதுர்புஜம் த்ரிணேத்ரம் ச ஜடாமகுடஸம்யுதம் ।
பாதயோ: பாதுகாயுக்தம் கிங்கிணீசைவ நூபுரவத் ॥
ஸர்வாபரணஸம்யுக்தம் யஜ்ஞஸூத்ரோத்தரீயகம் ।
ஶூலம் து வாமஹஸ்தே து தக்ஷிணே
டக்காம் கமண்டலும் ॥ உ ॥

கிஞ்சித் ப்ரஹஸிதாஸ்யம் ச நாநாரத்நஸமாவ்ருதம் ।
ஶாரிகாம் தக்ஷகர்ணாம் து வாமே ஹஸ்தஸம்யுதம் ॥

பிக்ஷார்த்தஶிவநாயாத்ய ஶிவபக்தாதிஸம்யுதம் ।
தேவஸ்ய பார்ஶ்வயோர்து ஸ்தாபயேத் ப்ருதக்வ்யயேத் ॥
விஹங்கமா ச விமாநஶ்ச ச கணாத்யைரபிபூஜிதம் ।
ப்ரபாதம் ஶிரஸி ந்யஸ்ய தேவஸ்ய து ஸமாஶ்ரிதம் ॥
ஏவம் பிக்ஷாடநாகாரம் — — ॥

(தேவோ ரக்தவர்ண: । ஹஸ்த: க்ருஷ்ணவர்ண: ॥)

59. கங்காளமூர்த்தி த்யாநம்.

விபூதியைப்பூசிக்கொண்டு, அதை முப்பட்டையாகவும் அணிந்திருப்பவரும், அழகான ரத்நங்களைப்போல் பிரகாசிக்கின்ற மயில்தோகை, கங்காளம், (சரீரத்தின் எலும்புக்கூடு) இவைகளை வலது பக்கத்தில் தரிப்பவரும், இடது கையில் மழுவை தரிப்பவரும், ஸிந்தூரம் போன்ற சிவப்பான சரீரகாந்தியையுடையவரும், சூலாயுதத்தை ஏந்தியிருப்பவரும், மானின் முகத்தைத்தழுவித் தொங்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கின்ற கையையுடையவரும், சந்திரனை முடியிலணிந்திருப்பவரும், புலித்தோலாடையையணிந்திருப்பவரும், தேவர்களாலேயும், முனிவர்களாலேயும், சூழப்பட்ட வருமான ஹரனை (கங்காள மூர்த்தியை) வணங்குகின்றேன்.

4 கைகளும் 3 கண்களுமுடையவரும், சடைமுடியை தரித்திருப்பவரும், கால்களில் பாதுகைகளை தரித்திருப்ப வரும், சிறிது நடக்கவிருப்பமுடைய வரும், ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பவரும், யஞ்ஞோபவீதம், உத்தரீயம், (மேலாடை) இவைகளை தரிப்பவரும், இடது காதில் சங்கு வளையமும், வலது காதில் மகரகுண்டலமும் அணிந்திருப்ப வரும், சிறிது சிரித்த முகமுடையவரும், நாநாவிதமான லீலைகளைச் செய்பவரும், வலது பக்கம் இடுப்பில் கத்தியை தரிப்பவரும், பூதங்களுடனிருப்பவரும், பிச்சையிடுமன்னத்திற்காக வந்திருக்கின்ற மிருகங்கள் பக்ஷிகளுடன் கூடியவருமான (கங்காளமூர்த்தியை வணங்குகின்றேன்)

ஸ்வாமியின் வலதுபக்கத்தில், பெரியதோர் பூதத்தைக் கல்பிக்கவேண்டும். அந்த பூதமானது, 2 கைகளும், 2 கண்களும், பயங்கரமான முகமுடையதாகவும், மண்டையோட்டைத்தலையில் வைத்துக்கொண்டு, ஸ்வாமியின் இடது பக்கத்தில் நின்றுகொண்டிருப்பதுமாகும். இவ்விதமாக, கங்காளமூர்த்தியின் லக்ஷணமானது கூறப்பட்டிருக்கின்றது. (ஸ்வாமியின் நிறம் சிவப்பு. பூதத்தின் நிறம் கருப்பு)

௫௰, ஸம்ஹாராநுக்ரஹமூர்த்தி த்யானம்.

ஸம்ஹாரம் பீதவர்ணம் ச ஸுமுகம் ஸஹிதம்
தக்ஷஹஸ்தே ச டங்கம்
வாமே க்ருஷ்ணம் ஸுக்ஷ்ம வரதாபய ஸஹிதம் வாமபார்ஸ்வே
வாஹனம்!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

சண்டேஶப்ரஸாதார்த்தம் ப்ரதிநிதிகரம்
தக்ஷபாகே த்ரிநேத்ரம்
பரஶுமாகாரயுக்தம் ஶாந்திகருணாகரம் ஶம்பூமாயுக்தமீடே ||

தேவஸ்ய தக்ஷபாகே து சண்டேஶம் து ப்ரகல்பயேத் |
தேவஸ்ய பாஹுமாத்ரேண சண்டேஶாயாம உச்யதே ||

ந்யஸ்தவ்யா ச ஸ்வபாதேந சண்டேஶோ ஹஸ்தஸம்யுத: |
சண்டேஶ்வரம் ஸ்வர்ணவர்ணம் பாலபூஷணபூஷிதம் ||

தேவம் ஶிரஸி சாஸ்யஸ்ய ஶ்ரியா பரிஶோபிதம் .
சண்டேஶாநுக்ரஹம் ப்ரோக்தம் --- --- ||
(தேவ: சண்டேஶ்வரஸ்ய வீதவர்ண:)

60. சண்டேசாநுக்ரஹ மூர்த்தி த்யாநம்.

சண்டேசாநுக்ரஹ மூர்த்தியானது, மஞ்சள் நிறமும், 4 கைகளுமுடையதாம். வலது பக்கம் கையில் மழுவும், இடது கையில் மானும், தரித்திருப்பதாம். இடது பக்கத்தில் பார்வதீ தேவியுடனிருப்பதாகும். வலது பக்கத்திலிருக்கின்ற சண்டிகேசுவரருடைய தலையில், கையை (வலது பக்கம் பூர்வஹஸ்தத்தை) வைத்துக்கொண்டிருப்பதாம். 3 கண்களையுடையதாம். ஸகல அலங்காரங்களையும் தரித்திருப்பதாம். சிரஸ்ஸில் சந்திரகலையையும், கங்கையையும் தரித்திருப்பதாம். இவ்விதமாக இருக்கின்ற சண்டேசாநுக்ரஹமூர்த்தியை வணங்குகின்றேன். (1)

ஸ்வாமியின் வலது பக்கத்தில், சண்டிகேசுவரரை கல்பிக்கவேண்டும். சண்டிகேசரின் உயரமானது *கை

---

* கையின் அளவு உயரத்தில் ஸரிபாதியளவாகும். பரமேசுவரன் உத்தமதசதாலம். கையின் அளவு உத்தம பஞ்சதாலம். எனவே சண்டிகேசுவரரின் உயரம் உத்தம பஞ்சதாலம் என்று கொள்ளவேண்டும். மேலே குழந்தைகளுக்குறிய ஆபரணங்களையணிந்திருப்பவராவார். என்று கூறப்பட்டிருப்பதைக் காண்க,

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy
Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யளவினாலே கூறப்பட்டிருக்கின்றது. ஈசுவராநுக்கிரஹம் பெற்ற சண்டேசமூர்த்தியானது, பக்தியுடனிருப்பதாக வைக்கப்படவேண்டும். சண்டிகேசமூர்த்தியானது, தங்கம் போன்ற நிறமுடையதாம். குழந்தைகளுக்குரிய ஆபரணங்களை அணிந்துகொண்டிருப்பதாகும். சண்டிகேசுவரரின் சிரஸ்ஸில் (கையை வைத்துக்கொண்டு) விளையாட்டாக இருப்பவரைப்போல, பரமேசுவரனை கல்பிக்கவேண்டும். இவ்விதமாக, சண்டேசாநுக்ரஹ மூர்த்தியின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கின்றது. (பரமேசுவரன் மஞ்சள் நிறம். சண்டிகேசுவரரும் மஞ்சள் நிறம்)

௬௰. அத விஷாபஹரமூர்த்தித்யாநம்.

ஏகவக்த்ரம் த்ரிநயநம் ஜடாமகுடஸம்யுதம் |
சதுர்புஜதரம் ஸர்வாங்கம் ஸசந்த்ரம் பரஶுதாரிணம் ||

தக்ஷஹஸ்தே ம்ருகம் த்ருத்வா வாமேநாந்யேந தக்ஷிணம் |
பாஶம் வாமஹஸ்தே து ஸர்பாலங்காரஸம்யுதம் || ௨ ||

தேவஸ்ய வாமபார்ஶ்வே து தேவீம் சைவ து காரயேத் ||

ஶ்யாமாம் த்விநேத்ராம் த்விபுஜாம் த்ரிபங்கீம்
ஸர்வாபரணபூஷிதகாந்திதாங்கீம் |
கண்டே நிவேஶ்ய பூஷிதஸர்பமுக்யம்
விஷாக்நிஜ்வாலாதுஷ்டநேத்ரீம் || ௩ ||

பீதவஸ்த்ராம் த்விநயநாம் பாம்ஶிதாயுகமுபாஶ்ரிதாம் || ௪ ||
(தேவோ ரக்தவர்ண: | தேவீ ஶ்யாமவர்ணா ||)

61. விஷாபஹரமூர்த்தி த்யானம்.

விஷஹரமூர்த்தியானது, ஒருமுகம், 3 கண்களுமுடையதாகும். சடைமுடி தரித்திருப்பதாகும். 4 கைகளும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சிவந்த திருமேனியுமுடையதாகும். கைகளில், மானையும், மழுவையும் தரித்திருப்பதாகும். வலது கையில் விஷத்தை தரித்துக்கொண்டு, அதை உண்ண விருப்பமுள்ளதும் மதங்கொண்ட கண்களையுடையதுமாகும். இடது கையை வரதமாகவுடையதும், ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பதுமாகும். (2)

பரமேசுவரனுடைய இடது பக்கத்தில், தேவீமூர்த்தியைக் கல்பிக்கவேண்டும். அந்த மூர்த்தியானது, பச்சை நிறமும், 2 கண்களும், 2 கைகளும், திரிபங்கமும், (உடலில் 3 நெளிவுகள்) உடையதாகும். வலது கால் ஊன்றியும் இடது கால் குஞ்சிதமாகவும் இருப்பதாகும். கழுத்தை கட்டிக்கொண்டு தொங்குகின்ற வலது கையையுடையதாக இருப்பதாகும். கலங்கிய மனதையுடையதும், பரமேசுவரனுக்கு ஸந்தோஷத்தை அளிப்பதுமாகும். (3)

பார்வதீ தேவியின் மூர்த்தியானது, மஞ்சள் ஆடையையணிந்திருப்பதும், 2 கண்களையுடையதும், விருப்பியபலனைக் கொடுப்பதுமாகும். (4)

(பரமேசுவரன் சிவப்பு நிறம். அம்பாள் பச்சைநிறம்)

சுஉ அய விஷாபஹரணமூர்த்தி த்யானம்.

விஷ்ணுப்ரஹ்மேந்த்ரமுக்யைர் முநிகணஸஹிதை: தேவஸங்கை: ப்ரணாமை:
ஸம்ஸ்துத்யமானம் க்ஷுபிதஜலநிதே: ஸம்பவம் காலகூடம் । ...

* யஸ்யாஸ்யே ஸ்தாப்யமானம் ... ப்ரதிஷ்டயா

* ... ஸர்வேஷ்டாதிஸாதநம்.

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

𑌟𑌙𑍍𑌕𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑍃𑌗𑌂 𑌵𑌰𑌂 𑌚 𑌦𑌧𑌤𑌂 𑌚𑌕𑍍𑌰𑌪𑍍𑌰𑌦𑌂
𑌤𑌂 𑌭𑌜𑍇 ॥௧॥

𑌏𑌕𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌸𑌂𑌯𑍁𑌤𑌂 ।
𑌦𑌧𑍇(𑌦𑍇)𑌣𑌂 𑌚 𑌪𑌰𑌶𑍁𑌂 𑌵𑌰𑌂 𑌚𑍈𑌵 𑌚 𑌵𑌾𑌮𑌕𑍇 ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌚𑌕𑍍𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌦𑌾𑌤𑍃𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌪𑍂𑌜𑌿𑌤𑍇 ।
𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑍇 𑌤𑍁 𑌗𑍌𑌰𑍀𑌦𑍇𑌵𑍀
𑌸𑍁𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 ॥௩॥

𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌪𑍀𑌤𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌕𑌂 ।
𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌚𑌾𑌷𑍍𑌟𑌭𑍁𑌜𑌂 𑌸𑍍𑌮𑌰𑍇𑌤𑍍 ॥௪॥

𑌏𑌵𑌂𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌪𑍂𑌜𑌿𑌤𑌂 ।
(𑌦𑍇𑌵𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃 । 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌃 ॥)

62. சக்ரதாநமூர்த்தி த்யாநம்.

விஷ்ணுவானவர், பரமேசுவரனுடைய பாதாரவிந்தங்களில் தனது கண்ணை வைத்துவிட்டு, இருகைகளையும்கூப்பி வைத்துக்கொண்டிருப்பவராவார். பரமேசுவரன், அந்த விஷ்ணுவுக்கு, அழகான மாலை, பீதாம்பரம், கௌஸ்துபம், இவைகளை என்றுமிருக்கும்படி கொடுத்து, அவருக்கு பத்மாக்ஷன் என்ற பெயரையும் வழங்கினார். மழு, மான், வரதம், அபயம் இவைகளை தரித்திருப்பவரும், விஷ்ணுவுக்கு சக்கிராயுதத்தை வழங்கியவருமான அந்த பரமேசுவரனை பஜிக்கின்றேன். (1)

இங்கு, பரமேசுவர ஸ்வரூபமானது, ஒருமுகம், 3 கண்களுடையதாகவும், சடைமுடி தரித்தும், மான், மழு, இவைகளை தரித்தும், இடதுகை வரதஹஸ்தமாகவும், வலதுகை (விஷ்ணுவுக்குக் கொடுக்கப்படும்) சக்ராயுதத்துடனுமிருக்கவேண்டுமென்று கூறப்படுகின்றது. (2½)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விஷ்ணு ரூபமானது, பரமேசுவரனுடைய இடது பக்கத்தில் நீலநிறமுடையதும், ஸகல ஆபரணங்களையு மணிந்தும், பீதாம்பரத்தை தரித்தும், பரஹஸ்தங்களில் சங்க சக்கிரங்களை தரித்தும், மற்ற இரு கைகளையும் அஞ்சலிபந்தனம் செய்துகொண்டும் நின்ற வடிவமுடையதாகவுமிருக்கவேண்டும். இங்கு, விஷ்ணு ஸ்வரூபமானது இவ்வித லக்ஷணங்களுடன் இருக்கவேண்டுமென்று கூறப் படுகிறது. (பரமேசுவரன் வெளுப்பு நிறம். விஷ்ணு நீல நிறம்)

௬௩. அத² விஷ்ணுப்ரஸாத³மூர்த்தித்⁴யாநம்.

சதுர்பு⁴ஜம் த்ரிநேத்ரம் ச ஜடாமகுடஸம்யுதம் ।
அப⁴யம் ஶிரஸி ந்யஸ்ய வரத³ம் வாமஹஸ்தகே ॥ ௧ ॥

க்ருஷ்ணாபரஶுஸம்யுக்தம் விஷ்ணோஶ்ச த³க்ஷிணே ஸ்தி²த꞉ ।
ஶயாநம் த³க்ஷிணம் பாத³ம் த்³வயம்(ததா²) வாமம் து குஞ்சிதம் ॥ ௨ ॥

ஸர்வாப⁴ரணஸம்யுக்தம் ஶ்யாமவர்ணம் ஸுஶோபி⁴தம் ।
தே³வஸ்ய வாமபார்ஶ்வே து தே³வீம் ப்ரஹஸிதாநநாம் ॥
ஸர்வாலங்காரஸம்யுக்தாம் ஸவ்யே தத்³ரூபதா⁴ரிணீம் ।
வாமே வரத³ஸம்யுக்தாம் த்³விபு⁴ஜாம் ச த்ரிநேத்ரகாம் ॥
த³க்ஷிணே ஶயிதம் பாத³ம் த்³வயம்(யச்ச) வாமே து குஞ்சிதம் ।
[illegible] தே³வீம் [illegible] ॥ ௩ ॥

19 விஷ்ணும் ரக்தவர்ணம் ச கிரீடமகுடாந்விதம் ।
ப³த்³தா⁴ஞ்ஜலிகரம் வாமபார்ஶ்வஸமந்விதம் ॥ ௪ ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸர்வலக்ஷணஸம்யுக்தம் ஸர்வாபீஷ்டபலப்ரதம் ।
விக்நேச்வராநுக்ருஹீதம் — — ॥

(தேவோ தேவீ ச ஸோமாஸ்கந்தவத் । விக்நேசோ ரக்த வர்ண: ।)

63. விக்நேசுவரப்ரஸந்த மூர்த்தி த்யாநம்.

பரமேசுவரன், 4 கைகளும், 3 கண்களுமுடையவராவார். சடை முடியை தரித்திருப்பவராவார். அபய ஹஸ்தத்தை (விக்நேசருடைய)சிரஸ்ஸில் வைத்துக்கொண்டு இடது கையில் வரதத்தை தரிப்பவராவார். (மற்ற 2 கைகளில்) மானையும் மழுவையும் தரிப்பவராவார். அவருடைய வலது பக்கத்தில் விக்நேசர் இருப்பவராவார். (பரமேசுவரனுடைய) வலது கால் படுக்கையாகவும் இடது கால் தொங்கிக்கொண்டுமிருப்பதாகும். (பரமேசுவர மூர்த்தியானது) ஸகல ஆபரணங்களையுமணிந்துகொண்டும் கருப்பு நிறமுடையதாகவும் அழகாகவுமிருப்பதாகும்.

பரமேசுவரனுடைய இடது பக்கத்தில், சிரித்த முகமுடையவளும், ஸகல அலங்காரங்களையுமணிந்திருப்பவளும், வலது கையில் நீலோத்பலத்தையும் இடது கையில் வரதத்தையும் தரிப்பவளும், 2 கைகளையும் 3 கண்களையுமுடையவளுமான தேவியைக் கல்பிக்கவேண்டும். (உமாதேவியின்) வலது கால் படுக்கையாகவும், இடது கால் தொங்கவிடப்பட்டுமிருப்பதாகும்.

தேவியை ஸோமாஸ்கந்தருக்குக் கூறியிருப்பதைப் போல ஒரே பீடத்திலிருப்பதாகக் கல்பிக்கவேண்டும்.

விரும்பிய ஸகல பலன்களையுமளிப்பவரான விக்நேசுவரரை, சிவப்பு நிறமுடையவராகவும், கிரீடமகுடம் தரித்திருப்பவராகவும், நமஸ்கார முத்திரையாகிய அஞ்சலியை தரிப்பவராகவும், பாசம், அங்குசம் இவைகளை தரிப்பவராகவும், ஸகல லக்ஷணங்களுடன் கூடியவராகவும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கல்பிக்கவேண்டும். விக்நேசப்ரஸாத மூர்த்தியானது இவ்விதமாகக் கூறப்பட்டிருக்கின்றது. (பரமேசுவரன் பார்வதி இவர்கள் சியாமவர்ணம். விக்நேசுவரர் சிவப்பு நிறம்)

௩௪. 𑌅𑌥 𑌸𑍋𑌮𑌾𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌉𑌦𑍍𑌯𑌦𑍍𑌭𑌾𑌨𑍁𑌨𑌿𑌭𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌯𑍁𑌤𑌂 𑌕𑍇𑌯𑍂𑌰𑌹𑌾𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌃
𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍁𑌤𑌂 𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌿𑌨𑌂 𑌸𑌂𑌶𑍋𑌭𑌿
𑌨𑍇𑌤𑍍𑌰𑌤𑍍𑌰𑌯𑌂 ।
𑌵𑌾𑌮𑍇 𑌗𑍌𑌰𑍀𑌯𑍁𑌤𑌂 𑌸𑍁𑌵𑌾𑌸𑌸𑍁𑌭𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌂
𑌸𑍋𑌮𑌾𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌵𑌿𑌭𑍁𑌂 𑌮𑍃𑌗𑌾𑌭𑌯𑌵𑌰𑌾𑌦𑌟𑌙𑍍𑌕𑌂
𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌭𑌜𑍇 ॥ ௧ ॥

𑌸𑍋𑌮𑌾𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌭𑍋𑌗𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌂 ।
𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌂 ॥ ௨ ॥

𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑌰𑌦𑌾𑌭𑌯𑌹𑌸𑍍𑌤𑌕𑌂 ।
𑌕𑍃𑌷𑍍𑌣𑌟𑌙𑍍𑌕𑌂 𑌦𑌧𑌾𑌨𑌂 𑌚 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌵𑌾𑌮𑌕𑍇𑌽𑌪𑌿 𑌚 ॥ ௩ ॥

𑌵𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌵𑌾𑌮𑌕𑍇𑌨𑌾𑌪𑌿 𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇
𑌨𑌕𑍍𑌰𑌕𑌾𑌂𑌶𑍁𑌂 ।
𑌉𑌪𑌵𑍀𑌤𑌯𑍁𑌤𑌂 𑌚𑍈𑌵 𑌶𑌯𑌾𑌨𑌂 𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑌕𑌂 ॥ ௪ ॥

𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌵𑌾𑌮𑍇 𑌗𑍌𑌰𑍀𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌂 ।
𑌤𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌗𑌤𑌂 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑌂𑌯𑍁𑌤𑌂 ॥

𑌸𑍋𑌮𑌾𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌗𑌙𑍍𑌗𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌂 ।
𑌸𑍋𑌮𑌾𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌸𑍍𑌯 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌭𑍋𑌗𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑍁 𑌵𑌾𑌮𑌕𑍇 ॥

𑌵𑍀𑌰𑌂 𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌚𑌾𑌸𑍀𑌨𑌂 𑌵𑌾
𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌤𑍁 𑌵𑌾 ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌸𑍋𑌮𑌾𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑍋
𑌉𑌦𑌾𑌹𑍃𑌤𑌃 ॥ ௭ ॥

𑌉𑌦𑍍𑌭𑌵𑌾𑌂𑌶𑌸𑌂𑌹𑌕𑌾𑌶𑍇 𑌤𑍁 𑌸𑍋𑌮𑌾𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃
(𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇) ।
𑌯𑌸𑍍𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌕𑌾𑌮𑌦𑌾𑌂 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌵𑌾𑌮𑍇 𑌵𑌾𑌮𑌦𑌸𑌂𑌯𑍁𑌤𑌾𑌮𑍍 ॥

𑌶𑌯𑌾𑌨𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑌂 𑌤𑍁 𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍 —
𑌬𑌾𑌲𑌰𑍂𑌪𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌂 𑌦𑍍𑌵𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌮𑍍 ॥

𑌸𑌰𑍋𑌜𑌦𑍍𑌵𑌯𑌂 𑌹𑌸𑍍𑌤𑍌 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑍋𑌮𑌾𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌬𑌿𑌮𑍍𑌬𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 — — ॥

(𑌦𑍇𑌵𑍋 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌃 । 𑌦𑍇𑌵𑍀 𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌾 । 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑍋 𑌨𑍀𑌲(𑌜𑌵𑌾)𑌵𑌰𑍍𑌣𑌃 ॥)

64. ஸோமாஸ்கந்தமூர்த்தி த்யாநம்.

உதயசூரியனைப்போன்ற சரீரசோபையையுடையவரும் 4 கைகளையுடையவரும், கேயூரம், ஹாரம் முதலியவைகளுடன் சிறந்த ஆடையையணிந்திருப்பவரும், சடைமுடியை தரிப்பவரும், 3 கண்களுடையவரும், இடது பக்கத்தில் கௌரீதேவியுடனிருப்பவரும், ஸுகாஸநத்திலிருப்பவரும், தனக்கும் (பரமேசுவரனுக்கும்) பார்வதீ தேவிக்கும் நடுவிலிருக்கின்ற குமாரனுடனிருப்பவரும், மான், மழு, வரதம், அபயங்களை தரிப்பவருமான ஸோமாஸ்கந்தேசுவரரை வணங்குகின்றேன். (1)

ஸோமாஸ்கந்த ஸ்வரூபமானது, போகசக்தியான பார்வதீ தேவியுடனிருப்பதாகும். 4 கைகளும் 3 கண்களுமுடையதாகும். சடைமுடியை தரித்தும், ஸகல ஆபரணங்களையுமணிந்துமிருப்பதாகும். வரத அபயஹஸ்தங்களையுடையதாகும், வலதுகை இடது கைகளில் மானையும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மழுவையும் தரித்திருப்பதாகும். இடது காதில் ஓலையும், வலது காதில் மகரகுண்டலமும் தரித்திருப்பதாகும். உபவீதத்தை தரித்திருப்பதாகும். இடது காலை படுக்கையாகவும், வலதுகாலைத் தொங்கவிட்டுக்கொண்டுமிருப்பதாகும். இடது பக்கத்தில் கௌரீதேவியுடனிருப்பதாகும். அவர்களின் மத்தியிலிருக்கின்ற பாலஸுப்ரம்ஹண்ய மூர்த்தியானது, ஸகல லக்ஷணங்களுடனும் இருப்பதாகும். ஸோமாஸ்கந்த மூர்த்தியானது கங்கையுடனும் சந்திரனுடனும் கூடியதாகும். இவ்விதமாக ஸோமாஸ்கந்தரின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கின்றது. ஸோமாஸ்கந்தருடைய இடது பக்கத்தில் போகசக்தியான பார்வதிதேவி இருப்பவளாவாள். அவளுடைய வலது பக்கத்தில் பாலஸுப்ரம்ஹண்யமூர்த்தியை நின்ற வடிவமாகவாவது உட்கார்ந்த வடிவமாகவாவது கல்பிக்கவேண்டும்.

சிவமூர்த்திகள் 25-களுள் ஸோமாஸ்கந்த மூர்த்தியானது, மிகச்சிறந்த மூர்த்தியாகுமென்று கருதுகின்றனர். உத்ஸவ ஆரம்பகாலத்தில் ஸோமாஸ்கந்த மூர்த்தியானவர் விசேஷித்து ஆராதிக்கப்படுகிறார்.

உமாதேவியை, வலதுகையில் ஆம்பலும் இடதுகையில் வரதமுமுடையவளாகவும், வலது காலை படுக்கையாகவும் இடது காலை தொங்கவிட்டும் வைத்துக்கொண்டிருப்பவளாகவும் கல்பிக்கவேண்டும். (8½)

ஸ்கந்த த்யாநம்:—

ஸ்கந்தனை பாலரூபியாகவும் நின்ற வடிவமாகவும், 2 கண்களும் 2 கைகளுமுடையவராகவும், அழகிய தாமரை மலரை கையில் வைத்துக்கொண்டிருப்பவராகவும், ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பவராகவும் கல்பிக்கவேண்டும்.

இவ்வித லக்ஷணங்களுடன் கூடிய மூர்த்தியானது, ஸோமாஸ்கந்தமூர்த்தியாகுமென்று கூறப்பட்டிருக்கின்றது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

(ஸ்வாமியின் நிறம் சிவப்பு. உமையாள் நிறம் பச்சை. ஸ்கந்தரின் நிறம் நீலம். (சம்பரதப்பூவின் நிறம்)

௬௫ அத ஏகபாதமூர்த்தி த்யானம்.

த்யாயேத் கோடிரவிப்ரபம் த்ரிநயனம் சீதாம்சு
கங்காதரம்
தக்ஷோர்த்வ டங்கம்ருகம் வராபயகரம் வாமேச ஹஸ்தாம்புஜம்
விபும் ।
ஸம்ஹோத்ய தக்ஷிணவாமகக்ஷபுஜயோ:
ப்ரஹ்மாச்யுதாப்யாம் ஸ்திதம்
தத்தல்லக்ஷணஸாயுதை: பரிவ்ருதம்
ஹஸ்தத்வயாப்யாஞ்ஜலிம் ॥ ௧ ॥
ப்ரஹ்மாண்டப்ரளயே ஸர்வஸம்ஸ்திதவபு: ப்ரஹ்மாண்ட
மத்யஸ்திதம்
தேஹம் லக்ஷணஸம்யுதம் ஸாரஸம்
வாமேச கல்பாந்த்ருதம் ।
ஏகபாதாக்ருதி ப்ராப்தம் ஸர்வாவஸானம் —
(ரக்தவர்ண: । பக்ஷாந்தரே ச்வேதவர்ணோ ரவி
ப்ரபஸ: ।)

65 ஏகபாத மூர்த்தி த்யானம்.

கோடிஸூரிய பிரகாசனும், 3 கண்களுடையவனும், சந்திரன் கங்கைகளை தரிப்பவனும், கைகளில் மான், மழு, வரதம், அபயம் இவைகளையுடையவனும், ஓரேகாலுடையவனும், எங்கும் நிறைந்தவனும், வலதுபக்கம் இடதுபக்கங்களில் அவரவர்களுக்குரிய லக்ஷணம் ஆயுதங்களுடன் இரு கைகளையும் அஞ்சலிபந்தநம் செய்துகொண்டு, கக்ஷம் புஜங்களிலிருக்கின்ற பிரம்ஹா விஷ்ணு இவர்களுடனிருப்பவனும், பிரம்ஹாண்ட பிரளயகாலத்தில் பிரம்ஹாண்ட

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மத்தியிலிருந்துகொண்டு காலை ஊன்றி வைத்துக்கொண்டிருப்பவனும், ஒரே பாதத்துடனிருப்பவனும், இவ்வித லக்ஷணங்களுடன் கூடியவனும், ஏகபாதனென்ற பெயருடையவனும், ஸுகாஸனத்திலிருப்பவருமான புரஹரனை த்யானம் செய்யவேண்டும். (சிவப்பு நிறம். வெளுப்பு நிறமாகவும் கூறப்பட்டிருக்கின்றது)

கூகூ. அத² ஸுகா²ஸீநமூர்த்தித்⁴யாநம்.

ஸுவர்ணாப⁴ஸஹஸ்ரவித்³யுத்ப்ரப⁴ம்
ஹரிணீவரடங்கவராப⁴யம் |
ஸுவர்ணாம்பரஶோபி⁴தவக்ஷஸம்
ஶோணநேத்ரஸுகா²ஸநஸமந்விதம் ॥ க ॥

சதுர்பு⁴ஜம் த்ரிணேத்ரம் ச ஜடாமகுடஸம்யுதம் |
அப⁴யம் த³க்ஷிணே ஹஸ்தே வரத³ம் வாமஹஸ்தகே ॥ உ ॥

க்ருஷ்ணாபரஶுஸம்யுக்தம் வாமத³க்ஷிணஹஸ்தயோ: |
ஶயாநம் த³க்ஷிணம் பாத³ம் த³யம்(யச்ச) வாமம் து
குஞ்சிதம் ॥ ௩ ॥

உமாஸஹிதவச்ச ஸவ்யம் ஹஸ்தமௌளீவிவர்ஜிதம் |
ஸுகா²ஸீநமிதி ப்ரோக்தம் — — ॥
(ரக்தவர்ண:)

66. ஸுகாஸீந மூர்த்தி த்யாநம்.

சிவப்பு நிறமுடையதும், விபூதியைப் பூசிக்கொண்டிருப்பதும், மான், மழு, வரதம், அபயம் இவைகளை தரித்திருப்பதும், வெண்மையான ஆடையுடன் பிரகாசிப்பதும், ஸகல மங்களங்களையுமளிப்பதும், 3 கண்களையுடையதுமான இந்த ஸ்வரூபமானது ஸுகாஸந மூர்த்தியின் ஸ்வரூபமாகும். (1)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இந்த ஸுகாஸநமூர்த்தியானது, 4 கைகளும், 3 கண்களுமுடையதாகும். வலது கையில் அபயமும் இடதுகையில் வரதமும் தரித்திருப்பதாகும். இடது வலது கைகளில் மானையும் மழுவையும் தரித்திருப்பதாகும். படுக்கையான வலது காலையும் குஞ்சிதமான இடதுகாலையுமுடையதாகும். இந்த மூர்த்தியானது, ஸோமாஸ்கந்த மூர்த்தியைப்போன்ற லக்ஷணங்களுடையதாகும். ஸ்கந்தரும் கௌரீதேவியுமின்றி தனித்திருக்கும் மூர்த்தியாகும். இவ்விதமாக ஸுகாஸநமூர்த்தியானது கூறப்பட்டிருக்கின்றது. (சிவப்பு நிறம்)

௨௭௭. 𑌅𑌥 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍 — 𑌅𑌥𑌵𑌾 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌭𑌸𑍍𑌮𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌰𑌾𑌙𑍍𑌗𑌃 𑌶𑌶𑌿𑌶𑌕𑌲𑌧𑌰𑍋
𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑍀
𑌵𑍀𑌣𑌾𑌪𑍁𑌸𑍍𑌤𑍈𑌰𑍍𑌵𑌿𑌰𑌾𑌜𑌤𑍍𑌕𑌰𑌕𑌮𑌲𑌧𑌰𑍋
𑌯𑍋𑌗𑌪𑌟𑍍𑌟𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌃 ।
𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌪𑍀𑌠𑍇 𑌨𑌿𑌷𑌣𑍍𑌣𑌃 𑌸𑌨𑌕𑌮𑍁𑌨𑌿𑌵𑌰𑍈𑌃
𑌸𑍇𑌵𑌿𑌤𑌸𑍍𑌸𑍁𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌃
𑌸𑌵𑍍𑌯𑌾𑌲𑌃 𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌾𑌸𑌾𑌃 𑌸𑌤𑌤𑌮𑌵𑌤𑍁 𑌨𑍋
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌰𑍀𑌶𑌃 ॥ ௧ ॥

𑌨𑌾𑌭𑍇𑌷𑍋 𑌜𑌾𑌨𑍁𑌨𑍀𑌸𑍍𑌤𑍍𑌵 𑌉𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 ।
𑌹𑌸𑍍𑌤𑌾𑌜𑍍𑌯𑌸𑍍𑌥𑌲𑌨𑌕𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌵𑍍𑌯𑌮𑌸𑍍𑌸𑍍𑌯𑌾 𑌹𑌾𑌸𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌯𑌾 ॥ ௨ ॥

𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌵𑌿𑌯𑌾𑌤𑌵𑍍𑌯𑌾𑌃 𑌕𑌿𑌙𑍍𑌕𑌰𑌾𑌦𑍍𑌯𑍈𑌸𑍍𑌸𑍁𑌸𑍇𑌵𑌿𑌤𑍇 ।
𑌕𑍋𑌣𑌾𑌸𑌵𑌵𑌤𑍍𑌤𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌵𑌟𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌮𑍂𑌲𑌕𑍇 ॥

𑌶𑍁𑌭𑍀𑌠𑌂 𑌸𑌕𑌲𑍋𑌪𑍇𑌤𑌂 𑌤𑍁 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍂𑌲𑌂 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌪𑌸𑍍𑌮𑌾𑌰𑌂 𑌤𑍁
𑌶𑌾𑌮𑌯𑍇𑌤𑍍 ॥ ௩ ॥

(𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌚𑌨𑌮𑍍)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

67. தக்ஷிணாமூர்த்தி த்யாநம் அல்லது வியாக்யாந மூர்த்தி த்யாநம்.

விபூதியை தரித்திருப்பதனாலே விசேஷித்து வெளுப்பான சரீரகாந்தியையுடையவரும், சந்திரகலையை தரிப்பவரும், ஞானமுத்திரை, ஜபமாலை, வீணை, புஸ்தகம், இவைகளுடன் பிரகாசிக்கின்ற தாமரை மலர்போன்ற கைகளையுடையவரும், யோகபட்டத்துடன் அழகாக இருப்பவரும், வியாக்கியாந பீடத்தில் வீற்றிருப்பவரும், ஸகல முனிவரர்களாலேயும் ஸேவிக்கப்பட்டவரும், தெளிவான (சாந்தமான) ஸ்வரூபத்துடனிருப்பவரும், ஸர்பங்களையணிந்திருப்பவரும், யானைத்தோலாடையை யணிந்திருப்பவரும், தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபியாக இருப்பவருமானபரமேசுவரன், எப்பொழுதும் காப்பாற்றுவாராக.

இந்த மூர்த்தியின் வலது பக்கத்தில் நாரதர், ஜமதக்நி, வஸிஷ்டர், பிருகு இவர்களையும், இடது பக்கத்தில் பரத்வாஜர், சௌநகர், அகஸ்தியர், பார்கவர் (பரசுராமன்) இவர்களையும் கல்பிக்கவேண்டும்.

கிந்நரர் முதலிய தேவயோநி விசேஷங்களால் ஸேவிக்கப்படுகின்ற கைலாஸபர்வதத்தில், ஆலமரத்தினடியில் உட்கார்ந்துகொண்டிருப்பவரும், ஸகல உலகங்களுக்கும் ஈசனாக இருப்பவரும், சாந்தமான ஸ்வரூபமுடையவருமான ஸ்ரீ பரமேசுவரனையே தக்ஷிணாமூர்த்தி என்று கூறுகிறார்கள். இந்த மூர்த்தியில் கீழே அபஸ்மாரனை படுக்கையாகக் கல்பிக்கவேண்டும். (வெளுப்பு நிறம்)

௬௭. அத² ஶ்ரீத³க்ஷிணாமூர்த்தித்⁴யாநம்.

ஶ்ரீமத்ராகாரஸ்ய மத்⁴யே த்ரு வம்ஶஶைவாலயச் ஶ்ரீதம் |
ஹார்த்³ராகாயஸ்ரீதம் வாதம் ஶ்ரீமத்³ஹ்ரஸ்வபா³ஹு || ௧ ||

விசிஷ்டபுஷ்பவர்ணவேணு த்⁴யாயேந்முமுக்ஷுபாணிர் |

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஊகெஷ வராஹரூவெஷ ரூவெணாயொமதொ
ஹரிஃ ‖ ௨ ‖

வாமஷக்ஷிணவாஸ்பூஃஸ்ஸா க்ரு தாஞ்நிலஃநி தா ।
ஸ்வூஷெண விவாஷ(ஸ்ரூ)ஸ்லாவஜவிஷ்ணு
விஹொ: வரெ ‖ ௩ ‖

ஸவம் ஶ்ரீம்மாவதாரம் தூ ஸவுமாஞிகரம் ஸஷா ।
தூம்மாம் மவிஷ்ருதிநதாம்ஸ(ஶ)கஶும்ஸஙாபெநெ:(ந)
ஸம்வஞவிஹூஹூஜஹூஷணவணுஹெஷெ: ।
ஸொஹாஙிதம் ஶாஹகரம் ஸகஞுஜா நம
ஷொஸ்யுஸம்ஸவரிவ்ருஜிகரம் விஷயாஸ ‖ ௪ ‖
(வக்ஷாஞ்ரெ ஶாஹுவணெரவி ஞாவிஜ:)

68. லிங்கோத்பவ மூர்த்தி த்யாநம்.

லிங்க வடிவத்தின் மத்தியில், சந்திரசேகரமூர்த்தியைப் போல நின்றவடிவமானதும், லிங்காளத்திற்குக் கீழே யுள்ள பாதத்தையுடையதுமான மூர்த்திபானது லிங்கோத்பவமூர்த்தியாகும். (1)

இந்த மூர்த்தியின் இடது பக்கத்தில் மேலே அன்னப் பக்ஷியின் வடிவத்துடன், மேல் நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்ற பிரம்ஹா, வலது பக்கத்தில் வராஹரூபத்துடன் கீழே கீழ்நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்ற விஷ்ணு இவர்களைக் கல்பிக்கவேண்டும். மேலும் (2½)

லிங்கோத்பவ மூர்த்தியின் இடது பக்கத்தில் அஞ்ஜலி பந்தநம் செய்துகொண்டிருக்கிற பிரம்ஹா, வலது பக்கத்தில் அஞ்ஜலிபந்தநம் செய்துகொண்டு நிற்கின்ற விஷ்ணு இவர்களையும் கல்பிக்கவேண்டும். இவ்விதமான லிங்கோத்பவ மூர்த்தியானது, எல்லாத்தீங்குகளையும் விலக்குவதாகும். (3½)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

(இந்த மூர்த்தியை) உயரம், விஸ்தாரம் நதமாநம், லம்பமாநம், அடையாளம், கைகள், ஆபரணங்கள், நிறம், இவைகள், பாகுபாடுகளுடன் நிறைவுற்றிருக்கும்படி கல்பிக்கவேண்டும். இவ்விதம் அழகாகக் கல்பிக்கப்படும் மூர்த்தியானது, ஸகல ஜனங்களுக்கும் மங்களங்களையும் நிறைந்த செல்வத்தையுமளிப்பதாகும். (வெளுப்பு நிறமும் கூறப்பட்டிருக்கின்றது)

௯௯. அத ஶரபமூர்த்தித்யாநம்.

ஸஹஸ்ரஶீர்ஷஸாகாரஸஹஸ்ரபாதம் ஸவிக்ரஹம் |
ஆத்ரிம்ஶத்பாஹுஸம்யுக்தம் ஸர்வாயுதஶோபாட்ய
ஶோபநம் ॥ ௧ ॥

ஊர்த்வாகாரோவக்ஷம் ச ஸுதீக்ஷ்ணநகராஞ்சிதம் |
ஊர்த்வகேஶம் ஸஹஸ்ரபாஹும் நாநாலங்காரபூஷிதம் ॥

வஜ்ரதம்ஷ்ட்ராயுதம் சக்ரம் ஶக்திம் அங்குஶபாஶகௌ ததா |
பத்மவஜ்ரம்பரஶும் நக்ஷத்ராஸிஶங்ககம் ॥ ௩ ॥

ப்ரதிஸ்வ ஸ்ருவம் பாணிம் அபாங்கம் தக்ஷிணை:
கரை: |
வரதம் பாஶகுஞ்சம் ச ஶூலம் பாணயுஜங்க ததா ॥ ௪ ॥

த்ரிஶூலம் கேயூரம் ச கேடம் நாகம் ச பங்கஜம் |
ஸ்வாபம் பார்ஶ்வகாம் கண்டாம் அபராஸ்த்ரிஷு
கராம்பூஜம் ॥ ௫ ॥

ஸஹஸ்ரம் பாஶ அபாங்கம் ச ஹீஷணம் கரபங்கஜை: |
ஶங்கோஷ்டாங்குஷ்டாஸம் ஸஹஸ்ரபிம்ஹஸ்தாஸ்த்ரநிபீதம் ॥ ௬ ॥

(ரக்தவர்ண:)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

69. சரபமூர்த்தி த்யாநம்.

சரபமூர்த்தியானது, மஹாமேருவைப்போல கம்பீரமான உருவமும், 8 கால்களும், ஸூரியனைப்போல மிகப் பிரகாசமான சரீரகாந்தியுமுடையதாகும். 32 கைகளை யுடையதாகும். ஸூரியன், சந்திரன், அக்கினி இவைகளைக் கண்களாகவுடையதாகும். துர்கையையும், காலனையும், இருபக்கங்களிலுமுடையதாகும். ஊர்துவமுகமான கேசங்களையுடையதும் பெருமை பொருந்திய கைகளையுமுடையதாகும். நாநாவிதமான ஆபரணங்களையணிந்திருப்பதாகும்.

வலது பக்கத்திலுள்ள கைகளில், வஜ்ரம் 1, முஷ்டி 2, அபயம் 3, சக்கரம் 4, சக்தி 5, தண்டம் 6, அங்குசம் 7, கத்தி 8, கட்வாங்கம் 9, பரசு 10, ஜபமாலை 11, எலும்பு 12, சூலம் 13, வில் 14, உலக்கை 15, அக்னி 16, இவைகளையும், இடதுபக்கம் கைகளில், வரதம் 17, பாசம் 18, கதை 19, அம்பு 20, துவஜம் 21, ரம்பம் 22, பன்றி 23, சங்கம் 24, கேடயம் 25, நாகம் 26, பத்மம் 27, கபாலம் 28, புஸ்தகம் 29, குந்தம் 30, துர்கையை ஆலிங்கனம் செய்து கொண்டிருக்கின்ற கை 31, கலப்பை 32, இவைகளை தரித்திருப்பதாகும். தெத்திப்பற்களுடன் மஹா ஸிம்ஹத்தின் பிடரிமயிரைப்போல அடர்த்தியான பிடரி மயிர்களுடனும் கூடியதாய் பயங்கரமான வடிவமுடையதாகும். (சிவப்பு நிறம்)

𑌅𑌥 𑌦𑍍𑌵𑌾𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑍍𑌗𑌣𑌪𑌤𑌿𑌨𑌾𑌮𑌾𑌨𑌿.

(𑌉𑌤𑍍𑌤𑌰𑌪𑍁𑌰𑌾𑌣𑍇)

𑌬𑌾𑌲𑌸𑍍𑌤𑌰𑍁𑌣𑌭𑌕𑍍𑌤𑌶𑍍𑌚 𑌵𑍀𑌰𑌶𑍍𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑍍𑌵𑌜𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌸𑌿𑌦𑍍𑌧 𑌉𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌵𑌿𑌘𑍍𑌨𑍇𑌶𑍌 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑍋 𑌹𑍇𑌰𑌮𑍍𑌬𑌨𑌾𑌯𑌕𑌃 ॥

𑌲𑌕𑍍𑌷𑍀𑌮𑌹𑌾𑌗𑌣𑌪𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌘𑍍𑌨𑍇𑌶𑍍𑌚 𑌮𑌹𑌾𑌵𑌿𑌘𑍍𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌵𑌿𑌜𑌯𑌃 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌨𑍃𑌤𑍍𑌤𑌶𑍍𑌚𑌾𑌵𑍍𑌯𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌵𑌿𑌘𑍍𑌨𑍇𑌶 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௨ ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

ஏகாக்ஷரோ வரஶ்சைவ த்ர்யக்ஷர: க்ஷிப்ரதாயக: |
ஹரித்ராக்யஶ்சைகதந்த: ம்ரு(த்ரு)ஷ்டிருத்தண்டநாயக: ||
ருணமோசநகோ டுண்டி: த்விவக்த்ரஸ்த்ரிவக்த்ரகா |
ஸிம்ஹோ யோகஶ்ச துர்கா ச தேவஸ்ஸங்கடஹாரக: ||

த்வாத்ரிம்ஶத் விக்நராஜாக்யா: தேஷாம்
த்யாநமதோச்யதே |

32 கணபதிகளின் பெயர்கள்
(முத்கல புராணத்தில்)

பாலகணபதி 1, தருண கணபதி 2, பக்த கணபதி 3, வீரகணபதி 4, சக்தி கணபதி 5, த்விஜ கணபதி 6, ஸித்த கணபதி 7, உச்சிஷ்ட கணபதி 8, க்ஷிப்ரகணபதி 9, ஹேரம்பநாயக கணபதி 10, லக்ஷ்மீ கணபதி 11, மஹா விக்நேசுவரகணபதி 12, விஜயகணபதி 13, கல்பகணபதி 14, ந்ருத்த கணபதி 15, ஊர்த்துவவிக்நேச கணபதி 16, ஏகாக்ஷர கணபதி 17, வரகணபதி 18, திரியக்ஷர கணபதி 19, க்ஷிப்ரதாயக கணபதி 20, ஹரித்ரா கணபதி 21, ஏகதந்த கணபதி 22, ம்ரு(து)ஷ்டி கணபதி 23, உத்தண்ட கணபதி 24, ருணமோசந கணபதி 25, டுண்டி கணபதி 26, த்விமுககணபதி 27, த்ரிமுககணபதி 28, ஸிம்ஹகணபதி 29, யோக கணபதி 30, துர்கா கணபதி 31, ஸங்கடஹர கணபதி 32 என்பன 32 கணபதிகளின் பெயர்களாகும். இனி அந்த மூர்த்திகளின் த்யாநங்களைக்கூறுகிறேன்.

௧ம். தத்ராதௌ பாலகணபதி த்யாநம்.

கரஸ்தகதலீசூதபநஸேக்ஷுகமோதகம் |
பாலஸூர்யநிபம் வந்தே தேவம் பாலகணாதிபம் ||

(ரக்தவர்ண:)

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy
Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

70. முதலாவது பாலகணபதி த்யாநம்.

கைகளில், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு, மோதகம் இவைகளை வஹிப்பவரும் பாலசூரியனைப் போன்ற சரீரகாந்தியையுடையவருமான இந்த பால கணபதியை வணங்குகின்றேன். (சிவப்பு நிறம்)

௭௧. அத தருணகணபதி த்யாநம்.

பாஶாங்குஶாபூபகபித்தஜம்பூ

ஸ்வதந்தஶாலீக்ஷுமபி ஸ்வஹஸ்தை: ।

தத்தே ஸதா யஸ்தருணாருணாப:

பாயாத்ஸ யுஷ்மாம்ஸ்தருணோ கணேஶ: ॥

(ரக்தவர்ண:)

71. தருணகணபதி த்யாநம்.

எப்பொழுதும், கைகளில், பாசம், அங்குசம், அபூபம், விளாம்பழம், நாவல்பழம் தன்னுடைய தந்தம், நெல்கதிர், கரும்பு, இந்த 8 பதார்த்தங்களையும் வஹிப்பவரும், நடுப் பகல் சூரியனைப்போன்ற பிரகாசமுடையவருமான தருண கணபதியானவர், உங்களைக்காப்பாற்றுவாராக.

௭௨. அத பக்தகணபதி த்யாநம்.

நாரிகேளாம்ரகதலீகுடபாயஸதாரிணம் ।

ஶரச்சந்த்ராபவபுஷம் பஜே பக்தகணாதிபம் ॥

(ஶ்வேதவர்ண:)

72. பக்த கணபதி த்யாநம்.

தேங்காய், மாம்பழம், வெல்லம், பாயஸம் இவைகளை தரிப்பவரும், சரத்கால சந்திரனைப்போல வெண்மையான சரீரத்தையுடையவருமான பக்த கணபதியை வணங்குகிறேன். (வெளுப்பு நிறம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

७३. अथ वीरगणपतिध्यानम्.

वेतालशक्तिशरकार्मुकचक्रखड्ग
खट्वाङ्गमुद्गरगदाङ्कुशनागपाशान् ।
शूलं च कुन्तपरशुध्वजमुद्वहन्तं
वीरं गणेशमरुणं सततं स्मरामि ॥

(रक्तवर्णः)

73. வீரகணபதி த்யாநம்.

வேதாளம் 1, சக்தியாயுதம் 2, அம்பு 3, வில் 4, சக்ராயுதம் 5, கத்தி 6, கட்வாங்கம் 7, முத்கரம் 8, (இரும்பு உலக்கை) கதை 9, அங்குசம் (மாவெட்டி) 10, நாகம் 11, பாசம் 12, சூலம் 13, குந்தம் 14, மழு 15, துவஜம் 16, ஆகிய 16 ஆயுதங்களையும் தரித்திருப்பவரும், சிவப்பு நிறமாக இருப்பவருமான வீரகணபதியை எப்பொழுதும் ஸ்மரிக்கின்றேன். (சிவப்பு நிறம்)

७४. अथ शक्तिगणपतिध्यानम् ॥

आलिङ्ग्य देवीं हरिताङ्गयष्टिं
परस्पराश्लिष्टकटिप्रदेशम् ।
सन्ध्यारुणं पाशसृणी वहन्तं
भयापहं शक्तिगणेशमीडे ॥ १ ॥

(सिन्दूरवर्णः)

74. சக்தி கணபதி த்யாநம்.

தேவியை (ஸித்தி தேவியை) ஆலிங்கநம் செய்து கொண்டிருப்பவரும், ஒருவருக்கொருவர் கட்டிக்கொண்டிருக்கின்ற இடுப்பையுடையவரும், ஸந்தியாகாலத்தைப் போல சிவப்பு நிறமாக இருப்பவரும், பாசம் அங்குசங்களை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வஹிப்பவரும், பயங்களைப் போக்குகின்றவருமான சக்தி கணபதியை வணங்குகின்றேன். (ஸிந்தூர நிறம்)

௭௫. 𑌅𑌥 𑌦𑍍𑌵𑌿𑌜𑌗𑌣𑌪𑌤𑌿 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌯𑌂 𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌾𑌕𑍍𑌷𑌗𑌣𑌦𑌣𑍍𑌡𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌶𑍍𑌰𑍀
𑌵𑌿𑌦𑍍𑌯𑍋𑌤𑌮𑌾𑌨𑌕𑌰𑌭𑍂𑌷𑌣𑌮𑌿𑌨𑍍𑌦𑍁𑌵𑌰𑍍𑌣𑌮𑍍 ।
𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑍇𑌰𑌮𑌾𑌨𑌨𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌶𑍋𑌭𑌮𑌾𑌨𑌂
𑌤𑍍𑌵𑌾𑌂 𑌯𑌃 𑌸𑍍𑌮𑌰𑍇𑌤𑍍 𑌦𑍍𑌵𑌿𑌜𑌗𑌣𑌾𑌧𑌿𑌪𑌤𑍇
𑌸 𑌧𑌨𑍍𑌯𑌃 ॥ ௧

(𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌣𑌵𑌃)

75. த்விஜகணபதி த்யாநம்.

ஹே த்விஜ கணபதியே! யாதாமொருவன், புஸ்தகம், ஜபமாலை, தண்டம், கமண்டலம் இவைகளின் சோபையுடன் பிரகாசிக்கின்ற கையிலணிந்திருக்கின்ற ஆபரணங்களையுடையவரும், சந்திரனைப்போல வெண்மையான நிறமுடையவரும், 4 யானை முகங்களுடன் சோபிக்கின்றவருமான தங்களை ஸ்மரிக்கின்றானோ, அவன் பாக்கியசாலியாவான். (வெளுப்பு நிறம்)

௭௬. 𑌅𑌥 𑌸𑌿𑌦𑍍𑌧(𑌦𑍍𑌧𑌿)𑌗𑌣𑌪𑌤𑌿 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌪𑌕𑍍𑌵𑌚𑍂𑌤𑌫𑌲𑌪𑍁𑌷𑍍𑌪𑌮𑌞𑍍𑌜𑌰𑍀𑌇𑌕𑍍𑌷𑍁𑌦𑌣𑍍𑌡𑌤𑌿𑌲
𑌮𑍋𑌦𑌕𑍈𑌃 𑌸𑌹 ।
𑌉𑌦𑍍𑌵𑌹𑌨𑍍 𑌪𑌰𑌶𑍁𑌮𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 𑌨𑌮𑌃 𑌶𑍍𑌰𑍀𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌿𑌯𑍁𑌤
𑌹𑍇𑌮𑌪𑌿𑌙𑍍𑌗𑌲 ॥

(𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌰𑍍𑌣𑌵𑌃)

76. ஸித்த(த்தி)-கணபதி த்யாநம்.

பழுத்த மாம்பழம், பூங்கொத்துக்கள், கருப்பங்கழி, எள்ளுக்கொழுக்கட்டை, இவைகளுடன், மழுவை வஹிப்பவரும், தங்கத்தைப்போன்ற மஞ்சள் நிறமுடையவரும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்ரீதேவீ—ஸம்ருத்திதேவீ இவர்களுடனிருப்பவருமான ஹே கணபதே தங்களை வணங்குகின்றேன். (மஞ்சள் நிறம்)

௭௭. அத உச்சிஷ்டகணபதி த்யாநம் |

நீலாப்ஜதாடிமீவீணாஶாலிகுஞ்ஜாக்ஷஸூத்ரகம் |
தததுச்சிஷ்டநாமாயம் கணேஶ: பாது மேசக: ‖ ௧ ‖

ப்ரகாராந்தரேண —

நாரீயோநிரஸாஸ்வாதலோலுபம் காமமோஹிதம் |

(நீலவர்ண:)

77. உச்சிஷ்டகணபதி த்யாநம்

நீலோத்பலம், மாதுளம்பழம், வீணை, நெல்கதிர், குன்றிமணியாலான ஜபமாலை இவைகளை தரிப்பவரும், நீலநிறமாக இருப்பவருமான உச்சிஷ்ட கணபதியானவர் காப்பாற்றுவாராக.

மற்றொருவிதமாக :—

ஸ்திரீயின் யோநி முகத்தை ருசி பார்ப்பதில் ஆசையுள்ளவரும், காமத்தினுலே மோஹமடைந்தவருமான (கணபதியை த்யாநம் செய்கிறேன்)

௭௮. அத விக்ந(விக்நேஶ)கணபதி த்யாநம்.

ஶங்கேக்ஷுசாபகுஸுமேஷுகுடாரபாஶ
சக்ரஸ்வதந்தஸ்ருணிமஞ்ஜரிகாஶராத்யை: |
பாணிஶ்ரிதை: பரிஸமீஹிதபூஷணஶ்ரீ:
விக்நேஶ்வரோ விஜயதே தபநீயகௌர: ‖ ௧ ‖

(ஸ்வர்ணவர்ண:)

20

78. விக்ந (விக்நேச) கணபதி த்யாநம்.

சங்கு, கரும்பு வில், புஷ்பபாணம், கோடரி, பாசம்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சக்கரம், தன்னுடைய தந்தம், மழு, பூங்கொத்து, அம்பு முதலியவைகளை கைகளில் வைத்துக்கொண்டிருப்பவரும், விரும்பி அணிந்திருக்கின்ற ஆபரணங்களின் சோபையையுடையவரும், தங்கத்தைப்போன்ற சரீரசோபையையுடையவருமான, விக்னேசுவரர் (விக்னனுக்கு அதிபதியான கணபதியானவர்) ஸர்வோத்க்ருஷ்டமாக விளங்குகின்றார். (தங்க நிறம்)

௭௯ அத க்ஷிப்ரகணபதித்யானம் ॥

தந்தகல்பலதாபாசரத்னகும்பாங்குசோஜ்ஜ்வலம் ।
பந்தூககமநீயாபம் த்யாயேத் க்ஷிப்ரகணாதிபம் ॥

(ரக்தவர்ண:)

79. க்ஷிப்ர கணபதி த்யானம்.

தந்தம், கல்பலதை (கல்பவிருக்ஷத்தின் கிளை) பாசம், ரத்னகலசம், அங்குசம், (மாவெட்டி) இவைகளை தரித்துக்கொண்டிருப்பவரும் சம்பரத்தம்பூவைப்போல அழகான சரீர காந்தியையுடையவருமான க்ஷிப்ரகணபதியை த்யானம் செய்வாயாக. (சிவப்பு நிறம்)

௮௰. அத ஹேரம்பகணபதித்யானம்.

அபயவரதஹஸ்த: பாசதந்தாக்ஷமாலா
ஸ்ருணிபரசு ததானோ முத்கரம் மோதகம் ச ।
பலமதிகதஸிம்ஹ: பஞ்சமாதங்கவக்த்ரோ
கணபதிரதிகௌர: பாது ஹேரம்பநாமா ॥

(கௌரவர்ண:)

80. ஹேரம்ப கணபதி த்யானம்.

அபய வரத ஹஸ்தங்களுடனிருப்பவரும், பாசம், தந்தம், ஜபமாலை, அங்குசம், கோடரி, முத்கரம், மோதகம்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பழம் இவைகளை தரிப்பவரும், ஸிம்ஹவாஹநத்திலிருப்பவரும், 5 யானை முகங்களுடனிருப்பவரும், அதிக மஞ்சள் நிறமானவருமான ஹேரம்ப கணபதியானவர் (நம்மைக்) காப்பாற்றுவாராக. (மஞ்சள் நிறம்)

௮௧. அத² லக்ஷ்மீக³ணபதி த்⁴யாநம்.

பி³ப்⁴ராண꞉ ஶுகபீ³ஜபூரகமிலந்மாணிக்ய
கும்பா⁴ங்குஶாந்
பாஶம் கல்பலதாம் ச க²ட்³க³விலஸஜ்ஜ்யோதி꞉ ஸுதா⁴
நிர்ஜ²ர꞉ ।
ஶ்யாமேநாத்தஸரோருஹேண ஸஹிதம் தே³வீ
த்³வயம் சாந்திகே
கௌ³ராங்கோ³ வரதா³நஹஸ்தஸஹிதோ லக்ஷ்மீ
க³ணேஶோ(அ)வதாத் ॥
(கௌ³ரவர்ண꞉)

81. லக்ஷ்மீ கணபதி த்யாநம்

கிளி, மாதுளம்பழம், மாணிக்கரத்நங்களுடன் கூடிய கலசம், அங்குசம், பாசம், கல்பலதை, ஒளியுடன் பிரகாசிக்கின்ற கத்தி இவைகளை தரிப்பவரும், அமிருத பிரவாகமாக இருப்பவரும், நீலோத்பலத்தை கையில் வைத்துக்கொண்டிருக்கின்ற இரு தேவிகளை இருபக்கங்களில் வஹிப்பவரும், மஞ்சள் நிறமாக இருப்பவரும், வரதஹஸ்தத்துடனிருப்பமான வருலக்ஷ்மீகணபதியானவர் (நம்மைக்) காப்பாற்றுவாராக. (மஞ்ச்ள் நிறம்)

௮௨. அத² மஹாக³ணபதி த்⁴யாநம்.

ஹஸ்தீந்த்³ராநநமிந்து³சூட³மருணச்சா²யம் த்ரிணேத்ரம்
ரஸாத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

ஶ்லிஷ்டம் ப்ரியயா ஸபத்மகரயா ஸ்வாங்கஸ்தயா ஸந்ததம் |
பீஜாபூரகதேக்ஷுகார்முகருஜாசக்ர(ரூஜோ)
பக்த்ரார்ஜ்ஜுபாஶோத்பல
வ்ரீஹ்யக்ரஸ்வவிஷாணரத்னகலஶாந் ஹஸ்தைஸ்ஸ
வஹந்தம் பஜே ||

(ரக்தவர்ண:)

82. மஹா கணபதி த்யாநம்.

யானை முகமுடையவரும், சந்திரனை சிரஸ்ஸில் அணிந்திருப்பவரும், சிவப்பு நிறமாக இருப்பவரும், 3 கண்களையுடையவரும், தனது மடியில் விற்றிருப்பவளும், கையில் தாமரை மலரை வைத்துக்கொண்டிருப்பவளுமான மனைவியினுலே எப்பொழுதும் ஸந்தோஷத்துடன் ஆலிங்கனம் செய்துகொள்ளப்பட்டவரும், மாதுளம்பழம் 1, கதை 2, கரும்புவில் 3, பிரகாசிக்கின்ற (முச்சூலம்) சக்கரம் 4, தாமரை மலர் 5, பாசம் 6, நீலோத்பலம் 7, நெல்கதிர் 8, தனது தந்தம் 9, ரத்னகலசம் 10 இவைகளை கைகளில் வஹிப்பவருமான மஹாகணபதியை ஸேவிக்கின்றேன். (சிவப்பு நிறம்)

௮௩. அத விஜயகணபதி த்யாநம்.

வாமாங்கஸ்யஸ்வபத்நீ ஹஸ்தவாநாமவ்யாஹத: |
விக்னம் நிஹந்து ந: ஸர்வம் ரக்தவர்ணோ விநாயக: ||

(ரக்தவர்ண:)

83. விஜய கணபதி த்யாநம்.

பாசம், அங்குசம், தனது தந்தம், மாம்பழம், இவைகளை தரித்திருப்பவரும், மூஷிக வாஹனத்திலிருப்பவரும், சிவப்பு நிறமாக இருப்பவருமான விநாயகர்

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நம்முடைய இடையூறுகளையெல்லாம் நாசம் செய்வாராக. (சிவப்பு நிறம்)

௮௪. ந்ருத்தகணபதி த்யாநம்.

பாஶாங்குஶாபூபகுடாரதந்த-
சஞ்சத்கராக்லுப்தவராங்குலீயகம் ।
பீதப்ரபம் கல்பதரோரதஸ்தம்
பஜாமி ந்ருத்தோபபதம் கணேஶம் ॥ ௧ ॥

(ரக்தவர்ண:)

84. நிருத்த கணபதி த்யாநம்.

பாசம், அங்குசம், அபூபம், (அதிரசம்) கோடரி, தந்தத்தில் சுழலுகின்ற கைவிரல் இவைகளையுடையவரும், மஞ்சள் நிறமாக இருப்பவரும், கல்பவிருக்ஷத்தினடியில் இருப்பவருமான நர்த்தந கணபதியை வணங்குகின்றேன். (சிவப்பு நிறம்)

௮௫. ஊர்த்வகணபதி த்யாநம்.

கல்ஹாரஶாலிகமலேக்ஷுகசாபபாண-
தந்தப்ரரோஹககதீ கநகோஜ்ஜ்வலாங்க: ।
ஆலிங்கநோத்யதகரோ ஹரிதாங்கயஷ்ட்யா
தேவ்யா கரோது ஶுபமூர்த்வ-
கணாதிபோ மே ॥ ௧ ॥

(கநகவர்ண:)

85. ஊர்த்துவ கணபதி த்யாநம்.

செங்கழுநீர்ப்பூ, நெல்கதிர், தாமரைப்பூ, கரும்புவில், அம்பு, தந்தாக்ரம், கதை இவைகளை தரிப்பவரும், தங்கத்தைப்போல பிரகாசமான அங்கங்களையுடையவரும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

(தங்க நிறமானவரும்) பச்சை நிறமுடையவளான தேவியினுலே ஆலிங்கனம் செய்துகொள்ளப்பட்டவருமான ஊர்த்வ கணபதியானவர், எனக்கு மங்களத்தைக் கொடுப்பாராக. (தங்க நிறம்)

அசு. ஏகாக்ஷரகணபதி த்யாநம்.

ரக்தோ ரக்தாங்கராகாம்ஶுககுஸுமயுத:
துந்திலஶ்சந்த்ரமௌளி:
நேத்ரைர்யுக்தஸ்த்ரிபிர்வாமநகரசரணோ
பீஜபூரம் ததாந: ।
ஹஸ்தாக்ராக்லுப்தபாஶாங்குஶரதவரதோ
நாகவக்த்ரோஹிபூஷ:
தேவ: பத்மாஸநஸ்தோ பவது ஸுககரோ
பூதயே விக்நராஜ: ॥
(ஸ்ரக்தரா)

86. ஏகாக்ஷர கணபதி த்யாநம்

சிவப்பு நிறமாக இருப்பவரும், சிவப்பு நிறமான சந்தனம், வஸ்திரம், புஷ்பம் இவைகளை தரிப்பவரும், பருத்த வயிறுடையவரும், சந்திரனை சிரஸ்ஸில் அணிந்திருப்பவரும், 3 கண்களையுடையவரும், குட்டையான கை கால்களையுடையவரும், மாதுளம்பழத்தை தரித்திருப்பவரும், பாசம், அங்குசம், தந்தம், வரதம் இவைகளை தரிப்பவரும், கஜமுகமுடையவரும், ஸர்பங்களையணிந்திருப்பவரும், பத்மாஸநத்தில் வீற்றிருப்பவரும், ஸகல ஸௌக்யங்களையுமளிப்பவருமான விக்நராஜன் என்ற தேவனானவர் ஸகல க்ஷேமலாபங்களையுமளிப்பாராக. (சிவப்பு நிறம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௮௭ அத வரகணபதித்யானம்.

ஸிந்தூராபமிபானனம் த்ரிநயனம் ஹஸ்தே ச
பாஶாங்குஶௌ
பிப்ராணம் மதுமத்கபாலமநிஶம் ஸாத்விந்துமௌலிம்
பஜே ।
புஷ்ட்யாஶ்லிஷ்டதநும் த்வஜாக்ரகரயா பத்மோல்லஸத்தஸ்தயா
தத்யோன்யாஹிதபாணிமாத்தவஸுமத்பாத்ரோல்லஸத்
புஷ்கரம் ॥

(ரக்தவர்ண:)

87. வரகணபதி த்யானம்.

ஸிந்தூரத்தைப்போன்ற நிறமுடையவரும், யானை முகமுடையவரும், 3 கண்களுடையவரும், கைகளில் பாசம், அங்குசம், மதுவுடன் கூடிய கபாலம் இவைகளை தரிப்பவரும், எப்பொழுதும் சந்திரனை ஸிரஸ்ஸில் தரிப்பவரும், த்வஜாக்ரம், தாமரை மலர் இவைகளை கைகளில் தரிப்பவளான புஷ்டியினாலே ஆலிங்கனம் செய்துகொள்ளப்பட்ட சரீரத்தையுடையவரும், அந்த புஷ்டியினுடைய யோநியில் கையை வைத்துக்கொண்டிருப்பவரும், ஸகல நிதிகளையுமளிக்கக்கூடிய பத்மத்தைத் துதிக்கையில் வைத்திருப்பவருமான கணபதியை ஸேவிக்கின்றேன். (சிவப்பு நிறம்)

௮௮. அத த்ர்யக்ஷரகணபதி த்யானம்.

கஜேந்த்ரவதனம் ஸாக்ஷாச் சலத்கர்ணஸுசாமரம் ।
ஹேமவர்ணம் சதுர்பாஹும் பாஶாங்குஶதரம் வரம் ॥

ஸ்வதந்தம் தக்ஷிணே ஹஸ்தே ஸவ்யே த்வாம்ரபலம் ததா ।
புஷ்கரே மோதகம் சைவ தாரயந்தமனுஸ்மரேத் ॥

(ஸ்வர்ணவர்ண:)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

88. திரியக்ஷரகணபதி த்யாநம்.

யானை முகமுடையவரும், அசைந்துகொண்டிருக்கின்ற காதுகளாகிய சாமரங்களையுடையவரும், தங்க நிறமான வரும், 4 கைகளையுடையவரும், பாசம், அங்குசம் இவைகளை தரிப்பவரும், வலது கையில் தன்னுடைய தந்தத்தையும் இடதுகையில் மாம்பழத்தையும் தரிப்பவரும், துதிக்கையில் மோதகத்தை தரிப்பவருமான கணபதியை ஸ்மரிக்க வேண்டும். (ஸுவர்ண வர்ணம்)

௮௯. 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌗𑌣𑌪𑌤𑌿𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌧𑍃𑌤𑌪𑌾𑌶𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌕𑌲𑍍𑌪
𑌲𑌤𑌾𑌵𑌰𑌦𑌶𑍍𑌚 𑌬𑍀𑌜𑌪𑍂𑌰𑌯𑍁𑌤𑌃 ।
𑌶𑌶𑌿𑌶𑌕𑌲𑌕𑌲𑌿𑌤𑌮𑍌𑌲𑌿𑌃
𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑍋𑌽𑌰𑍁𑌣𑌶𑍍𑌚 𑌗𑌜𑌵𑌦𑌨𑌃 ॥ ௧ ॥

𑌭𑌾𑌸𑍁𑌰𑌭𑍂𑌷𑌣𑌦𑍀𑌪𑍍𑌤𑍋
𑌬𑍃𑌹𑌦𑍁𑌦𑌰𑌃 𑌪𑌦𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌟𑌰𑍋𑌲𑍍𑌲𑌸𑌿𑌤𑌃 ।
𑌵𑌿𑌘𑍍𑌨𑌪𑌯𑍋𑌧𑌰𑌪𑌵𑌨𑌃
𑌕𑌰𑌧𑍃𑌤𑌕𑌮𑌲𑌃 𑌸𑌦𑌾𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇 𑌭𑍂𑌤𑍍𑌯𑍈 ॥
(𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

89. க்ஷிப்பிர பிரஸாத கணபதி த்யாநம்.

பாசம், அங்குசம், கல்பலதை, தன்னுடைய தந்தம், மாதுளம்பழம் இவைகளை கைகளில் தரிப்பவரும், சந்திர கலையை சிரஸ்ஸில் தரிப்பவரும், 3 கண்களும் சிவப்பு நிறமும் யானைமுகமுமுடையவரும், பிரகாசமான பூஷணங்களையணிந்து பிரகாசிப்பவரும், பெருவயிறுடையவரும், பத்மாஸநத்திலிருப்பவரும், விக்நங்களை விலக்குகின்றவரும், கையில் தாமரை மலரை வைத்துக்கொண்டிருப்பவருமான

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கணபதியானவர் எப்பொழுதும் எனக்குச் செல்வத்தை யளிப்பாராக. (சிவப்பு நிறம்)

௯௰. அத ஹரித்ராகணபதி த்யானம்.

ஹரித்ராபம் சதுர்பாஹும் ஹரித்ராவதனம்
ப்ரபும் ।
பாசாங்குசதரம் தேவம் மோதகம் தந்தமேவ ச ॥
பக்தாபயப்ரதாதாரம் வந்தே விக்னவினாசனம் ॥
(ஹரித்ராவர்ண:)

90. ஹரித்ரா கணபதி த்யானம்.

மஞ்சள்நிறமும், 4 கைகளும், மஞ்சளான முகமுடையவரும், பாசம், அங்குசம், மோதகம், தந்தம் இவைகளை தரிப்பவரும், பக்தர்களுக்கு அபயமளிப்பவருமான ஹரித்ரா கணபதியை வணங்குகின்றேன். (மஞ்சள் நிறம்)

௯௧. அத ஏகதந்தகணபதி த்யானம்.

லம்போதரம் ஶ்யாமதனும் கணேசம்
குடாரமக்ஷஸ்ரஜமூர்த்வகாத்ரம் (ஹஸ்தை) ।
ஸலட்டுகம் தந்தமத:கராப்யாம்
வாமேதராப்யாம் ச ததானமீடே ॥ ௧ ॥
(ஶ்யாமவர்ண:)

91. ஏகதந்த கணபதி த்யானம்.

பெருவயிறுடையவரும், நீலநிறமானவரும், மேற் கைகளில் கோடரி, ஜபமாலைகளையும், கீழ்க்கைகளில் இடது வலது கைகளில் இட்டலி, தந்தம் இவைகளையும் தரிப்பவருமான ஏகதந்த கணபதியை வணங்குகின்றேன். (நீல நிறம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௯௨. அத2 ஸ்ருஷ்டிக3ணபதி த்4யாநம்

பாஶாங்குஶஸ்வத3ந்தாம்ரப2லவாநாகு2வாஹந: |
விக்4நம் நிஹந்து ந: ஶோண: ஸ்ருஷ்டித3க்ஷோ
விநாயக: ||

(ரக்தவர்ண:)

92. ஸ்ருஷ்டி கணபதி த்யாநம்.

பாசம், அங்குசம், தனது தந்தம், மாம்பழம் இவைகளை தரிப்பவரும், மூஞ்சூறு வாஹநத்திலிருப்பவரும், சிவப்பு நிறமாக இருப்பவரும், ஸ்ருஷ்டி செய்வதில் சிறந்த ஸாமர்த்தியமுடையவருமான ஸ்ருஷ்டி விநாயகர், நம்முடைய ஸகல விக்நங்களையும் நாசம் செய்வாராக. (சிவப்பு நிறம்)

௯௩. அத2 உத்3த3ண்ட3க3ணபதி த்4யாநம்.

*கல்ஹாராம்பு3ஜபீ3ஜபூரகக3தா3த3ந்தேக்ஷுசாபம்
ஸுமம்
பி3ப்4ராணோ மணிகும்ப4ஶாலிகலஶ(ம்) பாஶம்
ஸ்ருணிம் சாப்3ஜகம் |
கௌ3ராங்க்3யா ருசிராரவிந்த3கரயா தே3வ்யா
ஸமாலிங்கி3த:
ஶோணாங்க3: ஶுப4மாதநோது ப4ஜதாமுத்3த3ண்ட3
விக்4நேஶ்வர: || ௧ ||

(ரக்தவர்ண:)

---

*கல்ஹாராதி3 ஸுமாந்தம் பாத3த்3வயம் ஶ்லோக: ஸ்கந்த3மஹாதந்த்ரே த்3ருஶ்யதே; ஶங்கரோத்தரதந்த்ரே நாஸ்தி |

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

93. உத்தண்ட கணபதி த்யாநம்.

* செங்கழிநீர்ப்பூ அல்லது நீலோத்பலம் 1, அப்ஜம் 2, மாதுளம்பழம் 3 கதை 4, தந்தம் 5, கரும்பு வில் 6, புஷ்பம் 7, ரத்நகலசம் 8, நெற்கதிர் 9, பாசம் 10, அங்குசம் 11, பத்மம் 12 இவைகளை கைகளில் தரிப்பவரும், அழகிய தாமரை மலரைக் கையில் வைத்துக்கொண்டிருப்பவளும், மஞ்சள் நிறமாக இருப்பவளுமான தேவியினாலே ஆலிங்கநம் செய்து கொள்ளப்பட்டவரும், சிவப்பு நிறமாக இருப்பவருமான உத்தண்ட கணபதியானவர் பஜிப்பவர்களுக்கு மங்களத்தைக்கொடுப்பாராக. (சிவப்பு நிறம்)

௯௪. அத² ருணமோசநக³ணபதி த்⁴யாநம்.

பாஶாங்குஶௌ த³ந்தஜம்பூ³ த³தா⁴ந: ஸ்ப²டிகப்ரப⁴: ।
ரக்தாம்ஶுகோ க³ணபதி: முதே³ ஸ்யாத்³ருணமோசக: ॥
(ஶ்வேதவர்ண:)

94. ருணமோசந கணபதி த்யாநம்.

பாசம், அங்குசம், தந்தம், நாவல்பழம் இவைகளை தரிப்பவரும், ஸ்படிகம் போன்ற நிறமுடையவரும், சிவப்பு ஆடையையணிந்திருப்பவருமான, ருணமோசந கணபதியானவர் ஸந்தோஷத்தைக் கொடுப்பாராக. (வெளுப்பு நிறம்)

௯௫. அத² டு⁴ண்டி⁴க³ணபதி த்⁴யாநம்.

அக்ஷமாலாம் குடா²ரம் ச ரத்நபாத்ரம் ஸ்வத³ந்தகம் ।
த⁴த்தே கரைர்விக்⁴நராஜோ டு⁴ண்டி⁴நாமா முதே³ऽஸ்து ந: ॥
(ரக்தவர்ண:)

---

* வல்லப கணபதியை நினைக்கச் செய்கின்ற இந்த ச்லோகமானது கைகளிலுள்ள ஆயுதங்களாலே ஸந்தேகத்தை யுண்டுபண்ணுகின்றது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

95. டுண்டி கணபதி த்யாநம்.

ஜபமாலை, கோடரி, ரத்நபாத்திரம், தந்தம், இவைகளை தரிப்பவரும், விக்நராஜனுமான டுண்டி கணபதியானவர் நமக்கு ஸந்தோஷத்தையளிப்பாராக. (சிவப்பு நிறம்)

௯௯. அத டு³ண்டி³க³ணபதி த்⁴யாநம்.

அக்ஷமாலாம் குடா²ரம் ச ரத்நபாத்ரம் ஸ்வத³ந்தகம் கரைர்த³தா⁴நோ
ஹரிநீலகா³த்ர: ।
ரத்நாம்ஶுகோ ரத்நகிரீடமாலீ ஸதை³வ பூ⁴யாத்
ஸ விக்⁴நராஜோ க³ணேஶ: ॥ ௧ ॥
(ஹரிவர்ண:)

96. த்விமுக கணபதி த்யாநம்.

தந்தம், பாசம், அங்குசம், ரத்நபாத்திரம் இவைகளை கைகளில் தரிப்பவரும், இந்திர நீலக்கல்லைப்போன்ற நிறமுடையவரும், சிவப்பு ஆடையையணிந்திருப்பவரும், ரத்நங்களாலே செய்யப்பட்ட கிரீடம், மாலை இவைகளை தரிப்பவருமான த்விமுக கணபதியானவர் எனக்கு எப்பொழுதும் செல்வத்தைக்கொடுப்பாராக. (நீலநிறம்)

௯௭. அத த்³விமுக²க³ணபதி த்⁴யாநம்.

ஸ்வத³ந்தபாஶாங்குஶரத்நபாத்ரம் கரைர்த³தா⁴நோ
ஹரிநீலகா³த்ர: ।
ரக்தாம்ஶுகோ ரத்நகிரீடமாலீ பூ⁴த்யை
ஸதா³ மே த்³விமுகோ² க³ணேஶ: ॥
(ரக்தவர்ண:)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

97. த்ரிமுக கணபதி த்யாநம்.

சோபையும் சுணையுமுள்ள முனையுடன் கூடிய மாவட்டி, ஜபமாலை, வரதம் இவைகளை இடது பக்கம் கைகளில் தரிப்பவரும், பாசம், அமிருதகலசம், அபயம் இவைகளை வலது கரங்களில் தரிப்பவரும், ஸுவர்ணமயமான தாமரைமலரில் பிரகாசிக்கின்ற அழகிய கர்ணிகையுடன் விளங்குகின்ற பீடத்தில் ஸந்தோஷமாக வீற்றிருப்பவரும், புரசம்பூவைப்போன்ற நிறமுடையவருமான த்ரிமுக கணபதியானவர் நம்மைக் காப்பாற்றுவாராக. (சிவப்பு நிறம்)

௯௮. 𑌅𑌥 𑌸𑌿𑌂𑌹𑌗𑌣𑌪𑌤𑌿 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌵𑍀𑌣𑌾𑌂 𑌕𑌲𑍍𑌪𑌲𑌤𑌾𑌮𑌰𑌿𑌂 𑌚 𑌵𑌰𑌦𑌂 𑌦𑌕𑍍𑌷𑍇 𑌵𑌿𑌧𑌤𑍍𑌤𑍇
𑌕𑌰𑍈𑌃
𑌵𑌾𑌮𑍇 𑌤𑌾𑌮𑌰𑌸𑌂 𑌚 𑌰𑌤𑍍𑌨𑌕𑌲𑌶𑌂 𑌸𑌨𑍍𑌮𑌞𑍍𑌜𑌰𑍀𑌂 𑌚𑌾𑌭𑌯𑌂 ।
𑌶𑍁𑌣𑍍𑌡𑌾𑌦𑌣𑍍𑌡𑌲𑌸𑌨𑍍𑌮𑍃𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌦𑌨𑌃 𑌶𑌙𑍍𑌖𑍇𑌨𑍍𑌦𑍁𑌗𑍌𑌰𑌃
𑌶𑍁𑌭𑌃
𑌦𑍀𑌵𑍍𑌯𑌦𑍍𑌰𑌤𑍍𑌨𑌨𑌿𑌭𑌾𑌂𑌶𑍁𑌕𑍋 𑌗𑌣𑌪𑌤𑌿𑌃 𑌪𑌾𑌯𑌾
𑌦𑌪𑌾𑌯𑌾𑌤𑍍𑌸 𑌨𑌃 ॥

(𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

98. ஸிம்ஹ கணபதி த்யாநம்.

வீணா, கல்பலதை, சக்ராயுதம், வரதம் இவைகளை இடது பக்கம் கைகளிலும், தாமரை மலர், ரத்நகலசம், அழகான பூங்கொத்து, அபயம் இவைகளை வலது கைகளிலும் வஹிப்பவரும், துதிக்கையுடன் விளங்குகின்ற ஸிம்ஹ முகத்தையுடையவரும், சங்கம், சந்திரன் இவைகளைப்போன்ற வெளுப்பு நிறமுடையவரும், ஸகல மங்களங்களையுமளிப்பவரும், பிரகாசிக்கின்ற ரத்நங்களைப்போன்ற ஆடையையுமணிந்திருப்பவருமான ஸிம்ஹ கணபதியானவர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நம்மை துன்பங்களிலிருந்து காப்பாற்றுவாராக. (வெளுப்பு நிறம்)

௯௮. அத யோககணபதி த்யாநம்

யோகாரூடோ யோகபட்டாபிராம:
பாலார்காபஶ்சேந்த்ரநீலாம்ஶுகாட்ய: ।
பாஶேக்ஷ்வக்ஷாந் யோகதண்டம் ததாந:
பாயாந்நித்யம் யோகவிக்நேஶ்வரோ ந: ॥

(ரக்தவர்ண:)

99. யோககணபதி த்யாநம்.

யோகத்திலிருப்பவரும், யோக பட்டத்தையணிந்து அழகாக இருப்பவரும், பாலசந்திரனைப்போன்ற சரீர காந்தியையுடையவரும், இந்திரநீலக்கல்லைப்போன்ற ஆடையையணிந்திருப்பவரும், பாசம், கரும்பு, ஜபமாலை, யோக தண்டம் இவைகளை தரிப்பவருமான யோக விக்நேசுவரரானவர், நம்மை எப்பொழுதும் காப்பாற்றுவாராக. (சிவப்பு நிறம்)

௱. அத ஊர்த்வகணபதி த்யாநம்.

தப்தகாஞ்சநஸங்காஶஶ்சாஷ்டஹஸ்தோ த்ரிநேத்ரக: ।
தீவ்ராங்குஶம் ஶரம் சாக்ஷம் பத்மம் பாஶம்
ஹஸ்தகைரே: ॥ க ॥
வாமே சாபம் காஹ்லகம் ச ருத்ராக்ஷம் ஜம்பீரம்
ததக்கரே: ।
ரக்தாம்ஶுகஸ்ரக்தரோ ஹ்ருதயாஸ்ய ஊர்த்வகணபதிரீட்யதே ॥

(கநகவர்ண:)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

100. துர்கா கணபதி த்யாநம்.

உருக்கிய தங்கம்போன்ற நிறமுடையவரும், 8 கைகளை யுடையவரும், பருத்த சரீரத்தையுடையவரும், வலது பக்கத்திலுள்ள பருத்த கைகளில் பிரகாசமான அங்குசம், அம்பு, ஜபமாலை, தந்தம் இவைகளையும், இடது கைகளில் பாசம், வில், (கல்ப)லதை, நாவல்பழம் இவைகளையும் தரிப்பவரும், சிவப்பு ஆடையையணிந்திருப்பவருமான துர்கா கணபதியானவர், எப்பொழுதும் ஸந்தோஷத்தை யளிப்பாராக. (தங்க நிறம்)

௱௧. அத ஸங்கஷ்டஹரகணபதி த்யாநம்.

பாலார்காருணகாந்திர் வாமே பாலாம் வஹந்நங்கே |
லஸதிந்தீவரஹஸ்தாம் கௌராங்கீம் ரத்நஶோபாட்யாம் ||

தக்ஷே(அ)ங்குஶவரதாநம் வாமே பாஶம் ச
பாயஸம் பாத்ரம் |
நீலாம்ஶுகலஸமாந: பீடே பத்மாருணே திஷ்டந் ||

ஸங்கடஹரண: பாயாத் ஸங்கடபூகாத்
கஜாநநோ நித்யம் ||
(ரக்தவர்ண:)

101. ஸங்கஷ்டஹர கணபதி த்யாநம்.

பால சூரியனைப்போன்ற ஒளியுடையவரும், மஞ்சள் நிறமுடையவளும், பிரகாசமான ரத்நங்களை (ரத்நாபரணங்களை) அணிந்திருப்பவளும், கையில் நீலோத்பலத்தை வைத்துக்கொண்டிருப்பவளுமான பாலையை (பாலைப்பருவமுள்ள தன் து சக்தியை) இடது மடியில் வைத்துக்கொண்டிருப்பவரும், இடது பக்கம் கைகளில் அங்குசம், வரதங்களையும், வலது கைகளில் பாசம், பாயஸ பாத்திரங்களையும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தரிப்பவரும், நீலமான ஆடையை அணிந்து பிரகாசிப்ப வரும், பத்மத்தைப்போன்ற (செந்தாமரை மலருடைய) பீடத்தில் நின்றவடிவமாக இருப்பவரும், கஜமுகனுமான ஸங்கடஹரண கணபதியானவர் ஸங்கடத்தொகுதியி லிருந்து எப்பொழுதும் காப்பாற்றுவாராக. (சிவப்பு நிறம்)

𑌅𑌥 𑌷𑍋𑌡𑌶𑌸𑍁𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

(𑌶𑍈𑌵𑌾𑌗𑌮𑍇 𑌶𑍈𑌵𑍇)

௱௨. 𑌤𑌤𑍍𑌰𑌾𑌦𑍌 𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍁𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌏𑌕𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌦𑍍𑌵𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌶𑍍𑌵𑍇𑌤𑌾𑌰𑍍𑌕𑌪𑍁𑌷𑍍𑌪𑌮𑌾𑌲𑌾𑌂 𑌚 𑌹𑍇𑌮𑌸𑌕𑍍𑌤𑌕𑌿𑌰𑍀𑌟𑌿𑌨𑌮𑍍 ॥ ௧ ॥
𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑍈𑌰𑍍𑌵𑌜𑍍𑌰𑌶𑌕𑍍𑌤𑌿𑌕𑍁𑌕𑍍𑌕𑍁𑌟𑌾𑌭𑌯𑌧𑌾𑌰𑌿𑌣𑌮𑍍 ।
𑌦𑌿𑌵𑍍𑌯𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑍁𑌲𑌿𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌿𑌨𑌮𑍍 ॥ ௨ ॥
𑌶𑌿𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌕𑌮𑍍 । (௧)

(𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

பதினேழு ஸுப்ரஹ்மண்ய த்யாநம்
(சைவாகமத்தில் சேகரத்தில்)

102. அவைகளில் முதலில் ஜ்ஞாநசக்தி ஸுப்ரம்ஹண்ய த்யாநம்.

ஒருமுகம் 2 கண்களுடையவரும், ஜடாமகுடம் தரித் திருப்பவரும், வெள்ளெருக்கு மாலையையணிந்திருப்பவரும், ரத்நங்கள் பதித்த ஸுவர்ண கிரீடத்தையணிந்திருப்பவரும், 4 கைகளிலும் வஜ்ராயுதம், சக்தியாயுதம், கோழி அபயங் களை தரிப்பவரும், சிறந்த மணங்கமழும் சந்தனத்தைப் பூசிக்கொண்டிருப்பவரும், வெண்மையான பூநூலையணிந் திருப்பவரும், பரமேசுவரன், தேவியார், ஜ்ஞாநம் இவை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களின் ஸமஷ்டிரூபியும், ஜ்ஞானசக்தி ஸ்வரூபியுமான ஸுப்ரம்ஹண்யனை வணங்குகின்றேன். (வெளுப்பு நிறம்)

௱௩. அத ஸ்கந்தஸுப்ரஹ்மண்ய த்யானம்.

சதுர்புஜம் த்விநேத்ரம் ச ஶ்வேதபத்மாஸநஸ்திதம் ।
குக்குடாபயவஜ்ராணி ததாநம் வரதம் கரை: ॥ ௧ ॥

கிங்கிணீ கௌஶிகாபத்தபுஷ்பமாலாதிராவ்ருதம் ।
கௌபீநாம்பரஸம்வீதம் ரத்நபூஷணபூஷிதம் ॥ ௨ ॥

தூம்ரவர்ணம் ஸுதூம்ரம் ப்ரபாமண்டலமண்டிதம் ।
ஸ்கந்தரூபமிதம் ப்ரோக்தம் — — ॥

(தூம்ரவர்ண:) (௨)

103. ஸ்கந்த ஸுப்ரஹ்மண்ய த்யானம்.

இந்த ஸ்கந்த ஸ்வரூபமானது, 4 கைகளும், 2 கண்களுமுடையதும், வெண்தாமரைமலரில் வீற்றிருப்பதும், கோழி, அபயம், வஜ்ரம், வரதம் இவைகளை கைகளில் தரித்திருப்பதும், சிகையில் புஷ்பமாலையையணிந்திருப்பதும், அரைநூல் மாலையையும் ஆடையையுமணிந்திருப்பதும், ரத்நாபரணங்களையணிந்திருப்பதும், புகைநிறமான சரீரகாந்தியையுடையதும், பிரபாமண்டலத்துடன் விளங்கிக் கொண்டிருப்பதுமாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. (புகை நிறம்.) (2)

௱௪. அத ஶக்திஜாதகஸுப்ரஹ்மண்ய த்யானம்.

ஶிவம் சாஷ்டபுஜாஞ்ச ஶ்வேதம் வர ஶக்திகம்
அபயம் (மசு) ।
ஸ்ருவாக்ஷமாலாம் வஸ்த்ரம் ச ஸ்வஸ்திகம் தக்ஷிணே கரே ॥

21

கமண்டலும் கேடகம் வஜ்ரம் ஜ்வாலாம் து வாமகே ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

ஸுஹோத்ரப்ரியம் தேவமக்நிஜாதமஹம் பஜே ||௨||

(நீலவர்ண:) (௩)

104. அக்நிஜாத ஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

அக்நியின் புதல்வனான ஸுப்ரம்ஹண்யரின் ஸ்வரூபமானது, 2 முகங்களும் 8 கைகளுமுடையதும், வெளுப்பு அல்லது நீலநிறமுடையதும், ஸ்ருவம், ஜபமாலை, கத்தி, ஸ்வஸ்திகம் இவைகளை வலது கைகளிலும், கோழி, கேடயம், வஜ்ராயுதம், ஆஜ்யபாத்திரம் இவைகளை இடது கைகளிலும் வஹித்துக்கொண்டிருப்பதும், அக்நி ஹோத்திரம் செய்துகொண்டிருப்பதுபோன்ற பாவமுடையதுமாகும். (நீல நிறம்) (3)

௱ரு. ஸௌரபேயஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

சதுர்வக்த்ராஷ்டநயநம் புஜாஷ்டகஸமந்விதம் |
குஞ்சிதம் வாமபாதம் ச ஸுஸ்திதம் தக்ஷிணம் பதம் ||
சக்த்யுத்பலே புஷ்பபாணாபயம் தக்ஷிணகே கரே |
வஜ்ரம் சேக்ஷுதநுச்சூலம் வரதம் வாமகே
த்வயம்(யுக்) ||௨||

பத்மாஸநம் சைவ ஸௌரபேயமஹம் பஜே |

(பாடலவர்ண:) (௪)

105. ஸௌரபேய ஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

ஸௌரபேய ஸ்கந்த ரூபமானது 4 முகங்களும், 8 கண்களும், 8 கைகளும், பத்மாஸநமுமுடையதும், இடது கால் குஞ்சிதமாகவும் வலதுகால் ஸுஸ்திதமாகவும் வைத்துக் கொண்டிருப்பதும், வலது கைகளில் சக்தி, நீலோத்பலம், புஷ்பபாணம், அபயம் இவைகளையும், இடது கைகளில் வஜ்ரம், கரும்புவில், சூலம், வரதம் இவைகளையும் தரித்துக்

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy
Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கொண்டிருப்பதும், செந்தாமரை மலர்போன்ற நிறத்துடனிருப்பதுமாகும். (பாடல வர்ணம். பாடலம் - வெண் சிவப்பு) (4)

௱௬. அத² கா³ங்கே³யஸுப்³ரஹ்மண்ய த்⁴யாநம்.

ஏகவக்த்ரம் த்ரிநயநம் தா³டி³மீகுஸுமவிக்³ரஹம் ।
கரண்ட³மகுடோபேதம் குக்குடத்⁴வஜதா⁴ரிணம் ॥ க ॥

நீலோத்பலத⁴ரம் வந்தே³ மகராஸநஸம்ஸ்தி²தம் ।
பரஶும் பூர்ணகும்ப⁴ம் ச ஸவ்யஹஸ்தே து தா⁴ரிணம் ॥ உ ॥

அரணீம் குக்குடம் வாமே கா³ங்கே³யஸம்ஜ்ஞகம் ।
(பாடலவர்ண:) (௫)

106. காங்கேய ஸுப்ரஹ்மண்ய த்யானம்.

ஒரு முகம், 3 கண்களுடையவரும், மாதளம்பூவைப் போன்ற நிறமுடையவரும், கரண்ட மகுடத்தையணிந்திருப்பவரும், குக்குடத்வஜத்தைத் தாங்கியிருப்பவரும், நீலோத்பலத்தை தரிப்பவரும், மகரத்தின் மீது வீற்றிருப்பவரும், குறைவற்றவரும், வலது கைகளில் பரசு (கோடரி) வையும், பூர்ண கும்பத்தையும் தரிப்பவரும், இடது கைகளில் அரணிக்கட்டையையும் கோழியையும் தரிப்பவரும், கங்காஸுதன் என்று சொல்லுவதற்குரிய ஸ்வரூபத்தையுடையவருமான ஸுப்ரம்ஹண்யரை வணங்குகின்றேன். (பாடல வர்ணம்) (5)

௱எ. அத² ஶரவணோத்³ப⁴வஸுப்³ரஹ்மண்ய த்⁴யாநம்.

ஷட்³பு⁴ஜம் த்³விஷட³க்ஷம் பா³லஸூர்யஸமவிக்³ரஹம் ।
ஸர்வாப⁴ரணஸம்யுக்தம் ஸிம்ஹஸ்த²ம் உதி³தம் ப⁴ஜே ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

த்ரிநேத்ரம் ஹஸிதோத்ஸாஹம் வாமபாணௌ க்ஷ-
காஞ்சுகம் |

கட்கம் கேடம் ச வஜ்ரம் ச குக்குடத்வஜதாரிணம் ॥ ௨ ॥

ஶரஜந்மஸமாக்யாதம் — — ॥

(ரக்தவர்ண:) (ரு)

107. சரவணோத்பவ ஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

6 கைகளும் ஒரு முகமுமுடையவரும் பாலஸூர்யனை போன்ற சரீரகாந்தியையுடையவரும், ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பவரும், ஸிம்ஹ வாஹநத்திலிருப்பவரும், 3 கண்களுடையவரும், விபூதியைப் பூசிக்கொண்டிருப்பவரும், புஷ்பபாணம், கரும்புவில், கத்தி, கேடயம், வஜ்ராயுதம் கோழிக்கொடி இவைகளை தரிப்பவரும், சரஜன்மா என்று கூறப்படுகின்றவருமான முருகனை ஸேவிக்கின்றேன். (சரவணம் — நாணல்காடு) (சிவப்பு நிறம்) (௬)

௱அ. அத கார்த்திகேயஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

த்ரிநேத்ரம் தஶஹஸ்தம் ச ஶ்ரீபலே பில்வதாரிணம் |
ஶக்திம் ஶூலம் ததா சக்ரம் ஶங்கம் ஸாஹயதக்ஷிணே ॥ ௧ ॥

வரதம் தோமரம் பாஶம் சாபம் வஜ்ரம் ச வாமகே |
மயூரவாஹநாரூடம் ஸர்வாபரணபூஷிதம் ॥ ௨ ॥

பாலஸூர்யப்ரதீகாஶம் கார்த்திகேயம் ப்ரவாலதம் |

(ரக்தவர்ண:) (எ)

108. கார்த்திகேய ஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

3 கண்களும் 10 கைகளுமுடையவரும், சிரஸ்ஸில் பில்வத்தை தரிப்பவரும், வலது கைகளில் சக்தியாயுதம்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

சூலம், சக்ராயுதம், அங்குசம், அபயம் இவைகளையும் இடது கைகளில் வரதம் தோமரம், பாசம் சங்கம், வஜ்ரம் இவைகளையும் தரிப்பவரும், மயில்வாஹநத்தின் மீது வீற்றிருப்பவரும், ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பவரும் பாலஸூர்யனைப்போன்ற தேஹ காந்தியையுடையவரும், சிவபுத்திரனுமான கார்த்திகேயனை (கிருத்திகா புத்திரனை) வணங்குகின்றேன். (சிவப்பு நிறம்) (7)

௱௮. அத குமாரஸுப்ரஹ்மண்ய த்யானம்.

சதுர்ப்புஜம் ஏகவக்த்ரம் கரண்டமகுடாந்விதம் ।
ஶக்திம் சாபயதம் தக்ஷே வாமே ச வரவஜ்ரகே ॥ ௧ ॥

பத்மமால்யம்(ஹாரம்)தரம் கண்டே ஸ்கந்தம்
பாலஸ்வரூபகம் ।
(ரக்தவர்ண:) (௮)

109 குமாரஸுப்ரஹ்மண்ய த்யாநம்

4 கைகளும், ஒரு முகமுமுடையவரும், கரண்டமகுடத்தை தரிப்பவரும், வலது கைகளில் சக்தி, அபயங்களையும், இடது கைகளில் வரதம், வஜ்ரங்களையும் தரிப்பவரும், கழுத்தில் தாமரை மலரை (மாலையை) தரிப்பவரும், பாலவடிவமுடையவருமான ஸ்கந்தனை (வணங்குகின்றேன்) (சிவப்பு நிறம்) (8)

௱௯. அத ஷண்முகஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

ஶக்திம் ஶரம் ச கட்கம் ச சக்ரம் பாஶாஹ்வயம் ததா ।
கோதண்டம் ச ஶராந் கேடம் ஶங்கம் பத்ம
ஹஸ்தம் வாமே ॥ ௧ ॥

த்விஷட்புஜம் ஷடாஸ்யம் ஸ்வர்ணகுண்டலஸம்யுதம் ।

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஜயா ச விஜயா சைவ வாமதக்ஷிணபார்ச்வயோ: ॥ ௨ ॥

ஸர்வாலங்காரஸம்யுக்தம் ஸர்வாபரணபூஷிதம் ।
ஷண்முகம் சேதி விக்யாதம் — — ॥

(ரக்தவர்ண:) (௯)

110. ஷண்முக ஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

(வலது கைகளில்) சக்தி, அம்பு, கத்தி, சக்ரம், பாசம், அபயம் இவைகளையும் (இடது கைகளில்) கோழி, வில், கேடயம், சங்கம், கலப்பை, வரதம் இவைகளையும் தரித்திருப்பதும், மயில் வாஹநத்தின் மீது வீற்றிருப்பதும், ஸகல லக்ஷணங்களுமமைந்திருப்பதும், இடது பக்கத்தில் ஜயா தேவியுடனும், வலது பக்கத்தில் விஜயா தேவியுடனும் கூடியிருப்பதும், (ஜயா—தேவஸேனை, விஜயா—வல்லீ) ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பதும், ஸகல அலங்காரங்களுடன் கூடியிருப்பதுமான மூர்த்தியானது, ஷண்முக (ஆறுமுகனுடைய) மூர்த்தி என்று கூறப்படுவதாகும். (சிவப்பு நிறம்) (9)

௧௧௧. அத தாரகாரிஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

ஏகவக்த்ரம் த்ரிநயநம் கஜப்ருஷ்டோபரிஸ்திதம் ।
ஷண்முகம் சாபயம் வஜ்ரம் சக்திம் வாமேதரே த்வயம்
(பாதம்) ॥ ௧ ॥

கேடகம் சாக்ஷஸூத்ரம் ச கட்கம் வாமஹஸ்தகே ।
தாரகாரிம் பஜே க்யாதம் — — ॥

(ரக்தவர்ண:) (௰)

111. தாரகாரி ஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

ஒரு முகமும் 3 கண்களுமுடையவரும், யானையின் மீது வீற்றிருப்பவரும், வலது பக்கம் கைகளில் அபயம், கத்தி,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சக்தியாயுதம் இவைகளையும், இடது பக்கம் கைகளில் கேடயம், ஜபமாலை, கோழி இவைகளையும் தரிப்பவரும், தாரகாரி என்று வழங்கப்படுகின்றவருமான முருகனை வணங்குகின்றேன். (சிவப்பு நிறம்) (10)

௧௧௨. அத ஸேநாநீஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

ஏகவக்த்ரம் த்விநயநம் ஶங்கசக்ரவராபயம் ।
ஸர்வாபரணஸம்யுக்தம் திவ்யகந்தாநுலேபநம் ॥ ௧ ॥

ஶ்யாமவர்ணம் ப்ரஹ்ருஷ்டம் சைவ ஶுக்லயஜ்ஞோபவீதிநம் ।
ஸுஸ்மிதம் சாருவதநம் தேவஸேநாபதிம் பஜே ॥

(ஶ்யாமவர்ண:) (௧௧)

112. ஸேநாநீ ஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

ஒரு முகமும் 2 கண்களுமுடையவரும், சங்கம், சக்ரம், வரதம், அபயங்களை தரிப்பவரும், ஸகல ஆபரணங்களையு மணிந்திருப்பவரும், நறுமணங்கமழும் சந்தனத்தைப்பூசிக் கொண்டிருப்பவரும், நீலநிறமுடையவரும், பெருமை வாய்ந்தவரும், வெண்மையான பூநூலையணிந்திருப்பவரும், புன்சிரிப்புடன் கூடிய அழகிய முகமுடையவருமான தேவ ஸேநாபதியை ஸேவிக்கின்றேன். (நீல நிறம்) (11)

௧௧௩. அத குஹஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

சதுர்புஜம் த்ரிணேத்ரம் ச ஹேமரத்நகிரீடிநம் ।
ஶக்திம் வஜ்ரம் ஶரம்[1] ஸவ்யே வராபயகராந்விதே ॥ ௧ ॥

கேடவஸ்த்ரதரம் சைவ ஸர்வபூஷா
ரக்ஷோகணாந்தகம் ।
ஜயயா வாமபார்ஶ்வே து கல்யாணோத்ஸவவிக்ரஹம் ॥

---

1. கோதண்டம் இதி பாடோ யுக்த: ஸ்யாதிதி பாதி ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பாதாம்போஜம் ஹ்ருதி ப்ராக்வத் குஹாரூபம் ஸமாஶ்ரயே ॥
(ஶ்யாமவர்ண:) (௧௨)

113. குஹ ஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

4 கைகளும் மூன்று கண்களுமுடையவரும், ரத்நங்கள் பதிப்பித்த ஸுவர்ண கிரீடமுடையவரும், [1]வலது கைகளில் சூலத்தையும் வஜ்ராயுதத்தையும் தரிப்பவரும் மீதமுள்ள கைகளில் வரதம் அபயங்களை தரிப்பவரும், வெளுப்பு ஆடையையணிந்திருப்பவரும், எல்லோரையும் காப்பாற்றும் நோக்கமுடையவரும், இடது பக்கத்திலிருக்கின்ற ஜயா தேவியுடன் கல்யாண கோலத்திலிருப்பவருமான குஹஸ்வரூபத்தை அவருடைய பாதபத்மங்களை மனதில் தியானித்து பற்றிக்கொள்ளுகின்றேன். (நீலநிறம்)

௧௧௪. அத ப்ரஹ்மசாரிஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

த்விநேத்ரம் த்விபுஜம் சைவ பாலஸூர்யஸமப்ரபம் ।
தக்ஷஹஸ்தே தண்டஹஸ்தம் [2]வஜ்ரம் வாமோருஹஸ்தகம் ॥ ௧ ॥

ஸவ்யாபஸவ்யபாஶம் து ஶோபிதம் காஞ்சிதம் துவா ।
ஶிகாயஜ்ஞோபவீதாட்யம் கௌபீநவஸநம் யுதம் ॥

மௌஞ்ஜீமேகல(ஶோ)பாணம் ருத்ராக்ஷாபரிஶோபிதம் ।
ஶிவப்ரியதரம் தேவம் ப்ரஹ்மசாரிணமாஶ்ரயே ॥ ௨ ॥
(ரக்தவர்ண:) (௧௩)

114. பிரம்ஹசாரி ஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

2 கண்கள், 2 கைகளுடையவரும், பாலஸூரியனைப் போன்ற வடிவமுடையவரும், வலது பக்கம் கையில்

1 'மேல்கைகளில்' என்று இருப்பது பொருத்தமாக இருக்குமென்று தோன்றுகிறது.

2. வாமோரஸ்த வாமஹஸ்தகம் இதி பாட: ஸாதுரிதி பாதி ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

தண்டத்தைத்தரிப்பவரும், [1] வஜ்ரமுடைய வாம ஹஸ்தத்தை இடது தொடையில் வைத்திருப்பவரும்; வலது பாதத்தை ஸ்திதபாதமாகவும் இடது பாதத்தை குஞ்சித மாகவும் வைத்துக்கொண்டிருப்பவரும், சிகை, யஜ்ஞோப வீதம் இவைகளை தரிப்பவரும், முஞ்சிக்கயிற்றுடன் கௌபீநத்தை தரிப்பவரும், மேகலை (முஞ்சி) யின் மேலே ஒட்டியாணத்தையணிந்திருப்பவரும், செந்தாமரை பலரில் நின்ற வடிவமாக இருப்பவரும், தேவத்தன்மை வாய்ந்த (சிறந்த) ஸ்வரூபத்தை தரிப்பவருமான பிரம்மசாரி ஸ்வரூப முடைய முருகக்கடவுளை சரணமடைகிறேன். (சிவப்பு நிறம்) (13)

௧௧௫. அத² தே³ஶிகஸுப்³ரஹ்மண்யத்⁴யாநம்.

ஷட்³பு⁴ஜம் சைகவக்த்ரம் ச கரண்ட³மகுடாந்விதம் |
ஶக்திஹஸ்தத்³வயம் சைவ [2]ஜபமாலாவராப⁴யம் ॥ ௧ ॥
ஊர்த்⁴வாஹஸ்தாம்ப³ரோத்³பா⁴ஸம் வராப⁴யகராம்பு³ஜம் |
இத்த²ம் விதி⁴வத் த்⁴யாயேத் ஶிவதே³வஸ்ய
தே³ஶிகம் ॥ ௨ ॥
(ரக்தவர்ண:) (௧௪)

115. தேசிக ஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

6 கைகளும் ஒருமுகமுமுடையவரும் கரண்டமகுடத்தை தரித்திருப்பவரும், 2 கைகளில் 2 சக்தியாயுதங்கள், [3] ஜபமாலை, வரதம், அபயம் இவைகளை தரிப்பவரும்,

---

1 இடது கையை இடது துடையில் வைத்திருப்பவரும் என்று இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

2 ஶக்த்யாஜபமாலிகம் இதி பாட²ஸ்ஸம்மத: ஸ்ம்ருதிஸாரஸ்ய |

3 சின்முத்திரை, ஜபமாலை என்று இருப்பது பொருத்த மாக இருக்குமென்று தோன்றுகிறது.

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மயில்வாஹநத்தின் மீது வீற்றிருப்பவரும், சிவ பெருமானுக்கு உபதேசிப்பவருமான இத்தகைய ஸ்கந்தனை விதியுடன் தியானிக்கவேண்டும். (சிவப்பு நிறம்) (14)

ககசு. அத க்ரௌஞ்சபேதந ஸ்கந்தஸ்வரூப த்யாநம்.

1 சதுர்புஜம் த்ரிநேத்ரம் ச ஷஷ்டிதம்
ஸிம்ஹாஸநோபரி ।
வரதாபயஸம்யுக்தம் புஷ்பபாணேக்ஷுகார்முகம் ॥ க ॥

மயூரவாஹநாரூடம் நவரத்ந ரக்ஷிணோத்பவம் ।
க்ரௌஞ்சபேதகராப்ஜாப்யாம் க்ரௌஞ்சபேதிஸ்வரூபகம் ॥ உ ॥

(ரக்தவர்ண:) (கரு)

116. க்ரௌஞ்ச பேதந ஸம்ப்ரஹரண்ய த்யாநம்.

[2] 4 கைகளும் 3 கண்களுமுடையவரும், ஸிம்ஹாஸநத்தி லிருப்பவரும், வரதம், அபயம், புஷ்பபாணம், கரும்புவில் இவைகளை தரிப்பவரும், மயில் வாஹநத்தின் மீது வீற்றிருப்பவரும், க்ரௌஞ்ச பர்வதத்தை பேதிக்கின்ற இரு கைகளையுடையவருமான க்ரௌஞ்சபேதி குமாரரின் ஸ்வரூபத்தை (வணங்குகின்றேன்) (சிவப்பு நிறம்) (15)

ககஎ. அத ஶிகிவாஹநஸ்கந்தஸ்வரூப த்யாநம்.

சதுர்புஜம் சைகவக்த்ரம் த்ரிணேத்ரத்வயம் வரம் ।
வாமாங்கோர்த்வகரம் சைவ ஜாநுமேகாஶிகோமலகம் ॥

ஸங்க்ரீடந்தமயூராரூடம் ரக்தோத்துங்கஸமந்விதம் ।
சதுர்திக்ஷுஸாதிஹஸ்தம் ஶிகிவாஹநமாஶ்ரயே ॥ உ ॥

(ரக்தவர்ண:) (கசு)

1 த்யாநமிதம் திவ்யம் ।

2. இந்த தியானத்தை யோஜித்துப் பார்க்கவேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

117 சிகி (மயில்) வாஹந ஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

4 கைகளும், ஒரு முகமும், 3 கண்களுமுடையவரும், அபயம், வரதம், பாசம், அங்குசம் இவைகளை தரிப்பவரும், ஒளிக்கதிர் வீசுகின்ற தலைமயிரில் மயில் தோகையை தரித்திருப்பவரும், இந்திர நீலரத்தில் (இந்திரநீலம்போன்ற நிறமுடைய மயிலில்) ஏறிக்கொண்டிருப்பவரும், செந்தாமரை மலரைப்போன்ற சரீர காந்தியையுடையவரும், 14 புவனங்களுக்கும் காரணமான புவனத்தில் (ஸ்கந்த லோகத்தில்) இருப்பவருமான சிகிவாஹநனை அடைக்கலமாக அடைகிறேன். (சிவப்பு நிறம்) (16)

௧௧௮. ஶக்திஹஸ்த (ஶக்த்யா)யுத ஸுப்ரஹ்மண்ய த்⁴யாநம்.

ஸ்கந்தம் ரக்தாம்ஶுகாபம் ஸமரகணரணாபம்
த்விஹஸ்தம் ஹாஸயுக்தம் த்ரிநயனமேகவக்த்ரம் ।
காத்யாயநீஸுதம் தம் கடிவிந்யஸ்தவாம
ஹஸ்தம் ச த³ண்ட³(ஶக்தி)யா த³க்ஷிணஹஸ்தகே ச ॥
(ரக்தவர்ண꞉) (௧௭)

118. வேலாயுத ஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

தன்னை வணங்கியவர்களுக்கு கல்பவிருக்ஷத்தைப் போல வேண்டியவைகளையளிப்பவரும், செந்தாமரை மலரைப்போன்ற நிறமுடையவரும், 2 கைகளுடையவரும், ஒருமுகமுடையவரும், ஆரோக்கியமுடையவரும், பார்வதீ தேவியின் புதல்வரும், இடது கையை இடுப்பில் வைத்துக் கொண்டிருப்பவரும், வலது கையில் தண்டத்தை (சக்தி ஆயுதத்தை) வைத்துக்கொண்டிருப்பவருமான ஸ்கந்தனை வணங்குகிறேன். (சிவப்பு நிறம்) (17)

௧௧௯. ஸ்ய வீரப⁴த்³ர த்⁴யாநம்.

நீலவர்ணம் த்ரிணேத்ரம் ச வஜ்ரபாணயதம்ஷ்ட்ரிண꞉ ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

[illegible] ‖ ௧ ‖

[illegible] ।

(நீலவர்ண:)

119. வீரபத்திர த்யாநம்.

நீலநிறமானவரும், 3 கண்களுடையவரும், கத்தி, அம்பு, வில், கதை இவைகளை தரிப்பவரும், முண்டமாலையை தரிப்பவரும், இரு கால்களிலும் இருபாதுகைகளை தரித்துக்கொண்டிருப்பவரும், மிகுந்த ஸாமர்த்தியமுடையவரும், பீதாம்பரத்தை தரித்திருப்பவருமான வீரபத்திரரை உபாஸிக்கிறேன். (நீல நிறம்)

௧௨0. [illegible]

(தந்த்ரகல்பே)

[illegible]

[illegible] ।

[illegible] ‖ ௧ ‖

[illegible] ।

[illegible] ‖

[illegible] ।

[illegible] ‖ ௩ ‖

[illegible] ।

(பீதவர்ண:)

120 ஸ்வர்ணாகர்ஷண பைரவ த்யாநம்.

(அந்த கல்பத்தில்)

மஞ்சள் நிறம், 4 கைகள், 3 கண்கள், மஞ்சள் ஆடை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இவைகளையுடையவரும், குறைவற்ற ஸுவர்ணம், மாணிக்கங்கள் இவைகளால் நிறைந்த பாத்திரத்தை வஹிப்பவரும், பெரிய சூலத்தையும் சாமரத்தையும் தோள்களில் வைத்துக் கொண்டிருப்பவரும், தோமரத்தை வஹிப்பவரும், ஸகல ஸித்திகளையுமளிப்பவருமான பைரவரை பக்தியுடன் எப்பொழுதும் த்யானம் செய்யவேண்டும்.

மந்திரத்தையறிந்தவன், ஸ்வர்ணாகர்ஷண பைரவரை நாநாவிதமான ஆபரண சோபையையுடையவராகவும், ஆநந்தமயமான ஸுகஸ்வரூபியாகவும், மதத்தினாலே உன்மத்தனாக இருப்பவராகவும், எப்பொழுதும் ஆநந்த ஸ்வரூபியாகவும், ஸகல தேவதைகளாலேயும் நமஸ்கரிக்கப் பட்டவராகவும் த்யானம் செய்வதுமாகும். (மஞ்சள் நிறம்)

௧௨௧. 𑌅𑌥 𑌵𑌟𑍁𑌕𑌭𑍈𑌰𑌵 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

(𑌤𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑍇)

𑌵𑌿𑌕𑍀𑌰𑍍𑌣𑌲𑍋𑌹𑌿𑌤𑌜𑌟𑌂 𑌤𑍍𑌰𑌿𑌣𑍇𑌤𑍍𑌰𑌂 𑌰𑌕𑍍𑌤𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ।
𑌶𑍂𑌲𑌂 𑌕𑌪𑌾𑌲𑌂 𑌪𑌾𑌶𑌂 𑌚 𑌡𑌮𑌰𑍁𑌂 𑌦𑌧𑌤𑌂 𑌕𑌰𑍈𑌃 ॥
𑌨𑌾𑌨𑌾𑌰𑍂𑌪𑍈𑌃 𑌪𑌿𑌶𑌾𑌚𑍈𑌶𑍍𑌚 𑌨𑌾𑌨𑌾𑌰𑍂𑌪𑍈𑌰𑍍𑌗𑌣𑍈𑌰𑍍𑌵𑍃𑌤𑌮𑍍 ।
𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍀𑌶𑌂 𑌚 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌂 𑌵𑌟𑍁𑌕𑌂 𑌭𑍈𑌰𑌵𑌂 𑌭𑌜𑍇 ॥
(𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

121. வடுக பைரவ த்யானம்

(பைரவ கல்பத்தில்)

விரிந்தும் சிவப்பாகவும் இருக்கின்ற சடையையுடையவரும், 3 கண்களுடையவரும், சிவப்பு நிறமுடையவரும், கைகளில் சூலம், கபாலம், பாசம், உடுக்கை இவைகளை தரிப்பவரும், நாநாவிதமான உருவங்களையுடைய பைசாசங்களாலேயும், நாநாவிதமான உருவங்களையுடைய பூதகணங்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களாலேயும் சூழப்பட்டவரும், நாய் வாஹநத்தின் மேலே இருப்பவரும், ஆடை அணிந்துகொள்ளாமல் திகம்பரனாக இருப்பவருமான வடுக பைரவரை வணங்குகின்றேன். (சிவப்பு நிறம்)

௩௨௨. [illegible]

([illegible])

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௧ ॥

[illegible]
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible]
[illegible] ॥ ௩ ॥

[illegible]
[illegible]
[illegible] ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கநககிரிஸமாநம் கௌரவர்ணாபிராமம்
ஸகலநிகமஸாரம் நௌமி மல்லாரிதேவம் ॥ ௪ ॥
(ரத்நவர்ண:)

122. மல்லாரி சிவ த்யாநம்.

(மல்லாரி மாஹாத்மியத்தில்)

கிரீடத்திலிருக்கின்ற ரத்நங்களின் ஒளியினாலே தன்னொளி இழந்த மற்ற ரத்நங்களையுடையவரும், நிர்மலமான சந்திரகலையை தரிப்பவரும், அழகான நீலோத்பலத்தைப்போன்ற கண்களையுடையவரும், சந்திரனைப்போல் பிரகாசிக்கின்ற குண்டலங்களை தரித்திருப்பவரும், அழகிய மந்தஹாஸத்தையுடையவரும், பிரகாசிக்கின்ற பற்களின் சோபையினாலே வைரங்களின் ஒளியை வெற்றிகொண்டவரும், புதிதான மணிமாலை, முத்துமாலை, சம்பக புஷ்பமாலை பற்பல பூங்கொத்துக்கள் . இவைகளாலே சோபிக்கின்ற மார்பையுடையவரும், படத்துடன் கூடிய ஸர்பங்களை கைகளிலணிந்திருப்பவரும், கையிலிருக்கின்ற உடுக்கையின் ஒளியினாலே தேவலோகம் ஆகாயம் இவைகளின் மத்தியபாகத்தை நிரப்புகின்றவரும் திரிபுவநாதிபதியாக இருப்பவரும், பீதாம்பரத்தை அணிந்திருப்பவரும், அஸுரர்களைப் பொசுக்குகின்ற ஆற்றலுடையவரும், ஒளி வீசும் கத்தியைக் கையில் வைத்திருப்பவரும், நாக ரத்நங்களிழைத்த ஆபரணங்களையணிந்திருப்பவரும், வணங்குகின்ற தேவர்களின் கிரீடங்களினாலே சூழப்பட்ட பாதாரவிந்தத்தையுடையவரும், வெண்மையான குதிரையை வாஹனமாகக்கொண்டவரும், ஹாரங்களை அணிந்திருப்பவரும், அதிபயங்கரமான 7 வேட்டை நாய்களினாலே சூழப்பட்டவரும், மேருபர்வதத்தைப்போல் கம்பீரமான தோற்றமுடையவரும், குங்குமப் பொடியைப் போன்ற சரீரசோபையையுடையவரும், ஸகல வேதங்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஜயா ச விஜயா சைவ வாமதக்ஷிணபார்ச்வயோ: ॥ ௨ ॥

ஸர்வாபரணஸம்யுக்தம் ஸர்வாலங்காரபூஷிதம் ।

ஷண்முகம் சேதி விக்யாதம் — — ॥

(ரக்தவர்ண:) (௯)

110. ஷண்முக ஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

(வலது கைகளில்) சக்தி, அம்பு, கத்தி, சக்ரம், பாசம், அபயம் இவைகளையும் (இடது கைகளில்) கோழி, வில், கேடயம், சங்கம், கலப்பை, வரதம் இவைகளையும் தரித்திருப்பதும், மயில் வாஹநத்தின் மீது வீற்றிருப்பதும், ஸகல லக்ஷணங்களுமமைந்திருப்பதும், இடது பக்கத்தில் ஜயா தேவியுடனும், வலது பக்கத்தில் விஜயா தேவியுடனும் கூடியிருப்பதும், (ஜயா–தேவஸேனை, விஜயா–வல்லீ) ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பதும், ஸகல அலங்காரங்களுடன் கூடியிருப்பதுமான மூர்த்தியானது, ஷண்முக (ஆறுமுகனுடைய) மூர்த்தி என்று கூறப்படுவதாகும். (சிவப்பு நிறம்) (9)

௧௧௧. அத தாரகாரிஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

ஏகவக்த்ரம் த்ரிநயநம் கஜவர்யோபரிஸ்திதம் ।

ஷண்முகம் சாபயம் வஜ்ரம் சக்திம் வாமேதரே ததம்

(யதா) ॥ ௧ ॥

கேடகம் பாசசூலம் ச குக்குடம் வாமஹஸ்தகே ।

தாரகாரிம் இதி ப்ரோக்தம் — — ॥

(ரக்தவர்ண:) (௰)

111. தாரகாரி ஸுப்ரஹ்மண்ய த்யாநம்.

ஒரு முகமும் 3 கண்களுமுடையவரும், யானையின் மீது வீற்றிருப்பவரும், வலது பக்கம் கைகளில் அபயம், கத்தி,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

𑌸𑌾𑌙𑍍𑌗𑌂 𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌂 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌸𑌂𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 𑌸𑍁𑌧𑍀𑌃 ॥

(𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

124. பாசுபதாஸ்திர த்யானம்.

(சைவாகமத்தில்)

4 முகங்களும் 4 கைகளுமுடையவரும், கோடி ஸூரியனைப்போன்ற பிரகாசமுடையவரும், ஸம்ஹார மூர்த்தியைப்போன்றவரும், (ஸம்ஹாராஸ்திர ஸ்வரூபமான வரும்,) அழகான தலையையுடையவரும், ஒவ்வொரு முகத்திலும், 3 கண்களுடையவரும், பிரகாசமான தந்தாக்ரம், மயிர், புருவம், மீசை இவைகளாலே பயங்கர மானவரும், மஹாபலமுடையவரும், சக்தி, முத்கரம் என்ற ஆயுதம், சங்கம், கத்தி இவைகளை தரிப்பவரும், ஸோம ஸூத்திரமுடையவரும், அங்கங்களுடன் கூடியவரும், பத்மாஸனத்திலிருப்பவருமான பாசுபதாஸ்திர மூர்த்தியை ஸேவிக்கின்றேன். (சிவப்பு நிறம்)

௧௨௫. 𑌅𑌥 𑌖𑌡𑍍𑌗𑌰𑌾𑌵𑌣 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

(𑌪𑌾𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑍇)

𑌰𑍋𑌹𑌿𑌤𑌾𑌙𑍍𑌗𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑍌𑌳𑌿𑌂 𑌪𑌞𑍍𑌚𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑌮𑍍 ।
𑌪𑌿𑌙𑍍𑌗𑌾𑌂 𑌜𑌟𑌾𑌂 𑌚 𑌬𑌿𑌭𑍍𑌰𑌾𑌣𑌂 𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌲𑌂 𑌭𑍀𑌷𑌣𑌾𑌕𑍃𑌤𑌿𑌮𑍍 ॥

𑌖𑍇𑌟𑌕𑌂 𑌖𑌡𑍍𑌗𑌮𑌙𑍍𑌕𑍁𑌶𑌂 𑌪𑌾𑌶𑌂 𑌚 𑌤𑌥𑌾𑌭𑌯𑌮𑍍 ।
𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 𑌰𑌕𑍍𑌤𑌵𑌸𑌨𑌂 𑌹𑍃𑌦𑌿𑌸𑍍𑌥𑌂 𑌖𑌡𑍍𑌗𑌰𑌾𑌵𑌣𑌮𑍍 ॥

(𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

125. கட்கராவண த்யானம்.

22 (பாஞ்சராத்திரத்தில்)

சிவப்பு நிறமானவரும், சந்திரனை முடியில் தரித்தவரும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

5 முகங்களுடையவரும், 3 கண்களுடையவரும், மணி 1, கபாலம் 2, பாசம் 3, முண்டம் (கைகால்களற்ற உடல்) 4, கத்தி 5, கேடயம் 6, கட்வாங்கம் என்ற ஆயுதம் 7, சூலம் 8, உடுக்கை 9, அபயம் 10 இவைகளை தரிப்பவரும், சிவப்பு ஆடையையணிந்திருப்பவருமான கட்கராவணனை நான் வணங்குகின்றேன். (சிவப்பு நிறம்)

அத பைரவாஷ்டாஷ்டக த்யாநம்.

(ருத்ரயாமலே)

இத: பரம் ப்ரவக்ஷ்யாமி ஶ்ருணு ராஜந் ஸமாஹித: |
அஷ்டாஷ்டகமிதம் புண்யம் பைரவாணாமபீஷ்டதம் ||

பூர்வோக்தவர்ணபேதேந த்யேயம் ஸர்வே ப்ருதக்ப்ருதக் |

அஷ்ட அஷ்ட (8 × 8 = 64) பைரவ த்யாநம்
(ருத்திரயாமளத்தில்)

ஹே அரசனே! இதற்கு மேலே ஸகல அபீஷ்டங்களையுமளிக்கக்கூடியதும், பரிசுத்தமுமான பைரவ அஷ்டாஷ்டகத்தை (எட்டு எட்டாக எட்டு பைரவத் தொகுதியை) விசேஷித்துக் கூறுகின்றேன்.

இந்த பைரவர்களை, யாவரும் தனித்தனியே, முன்பு கூறப்பட்டிருக்கின்ற நிறத்துடனேயே த்யானம் செய்ய வேண்டும்.

௩௨௯. தத்ராதௌ ப்ரதமாஷ்டக த்யாநம்.

ஆத்யாஷ்டகம் ஸுவர்ணாபம் த்ரிநேத்ரம் சதுர்புஜம் ததா |
பாஶம் சாபம் தநும் சைவ த்யாயேத் ஸர்வார்த்தஸித்தயே ||

(கநகவர்ண:)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

126. முதலாவது பைரவாஷ்டக த்யாநம்.

முதலாவது பைரவாஷ்டகத்தை (8 பைரவர்களை) தங்க நிறமுடையதாகவும், மூச்சூலம், உடுக்கை, பாசம், கத்தி இவைகளை தரித்திருப்பதாகவும், அழகான ஸகல அங்கங்களையுமுடையதாகவும் த்யாநம் செய்யவேண்டும். (ஸ்வர்ண நிறம்)

௧௨௭. 𑌅𑌥 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌷𑍍𑌟𑌕 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌅𑌥 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌕𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 𑌅𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌂 |
𑌦𑌧𑌾𑌨𑌂 𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌂 𑌵𑍀𑌣𑌾𑌂 𑌶𑍍𑌵𑍇𑌤(𑌤𑌂)
𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌮𑍍 ||
(𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

127. இரண்டாவது பைரவாஷ்டக த்யாநம்.

இரண்டாவது பைரவாஷ்டகத்தை (8 பைரவர்களை) ஜபமாலை, அங்குசம், புஸ்தகம், வீணை இவைகளை தரித்திருப்பதாகவும், வெளுப்பு நிறமான(தும்) ரத்நங்கள் பதிப்பிக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்திருப்பதாகவும் த்யாநம் செய்யவேண்டும். (வெளுப்பு நிறம்)

௧௨௮. 𑌅𑌥 𑌤𑍃𑌤𑍀𑌯𑌾𑌷𑍍𑌟𑌕 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌜𑍍𑌵𑌾𑌲𑌾𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌗𑌦𑌾𑌂 𑌶𑌙𑍍𑌖𑌂 𑌦𑌧𑌾𑌨𑌂 𑌨𑍀𑌲𑌵𑌰𑍍𑌣𑌕𑌂 |
𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌶𑍁𑌭𑌾𑌷𑍍𑌟𑌕𑌂 𑌶𑍁𑌭𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ||
(𑌨𑍀𑌲𑌵𑌰𑍍𑌣𑌃)

128. மூன்றாவது பைரவாஷ்டக த்யாநம்.

மூன்றாவது பைரவாஷ்டகத்தை சக்தி, கதை குந்தம் (குத்தாலி) இவைகளை தரித்திருப்பதாகவும், நீலவர்ணமுடையதாகவும், சுபகரமான லக்ஷணங்களுடையதாகவும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

ஸகல மங்களங்களையுமளிக்கக்கூடியதாகவும் த்யாநம் செய்யவேண்டும். (நீலநிறம்)

௧௨௯. அத சதுர்த்தபைரவாஷ்டகத்யாநம்.

கட்கம் கேடம் பட்டிஶம் ச பரஶும் ததா ।
தூம்ரவர்ணமபீஷ்டதம் த்யாயேதஷ்டகமாதராத் ॥
(தூம்ரவர்ண:)

129. நான்காவது பைரவாஷ்டக த்யாநம்.

கத்தி, கேடயம், பட்டஸம், பரசு (கோடரி) இவைகளை தரித்திருப்பதும், புகை நிறமானதும், விரும்பியதையளிக்க வல்லதுமான நான்காவது பைரவாஷ்டகத்தை ஆதரவுடன் த்யாநம் செய்யவேண்டும். (புகை நிறம்)

௧௩௦. அத பஞ்சமாஷ்டகத்யாநம்.

குந்தம் கேடம் ச பரிகம் பிண்டிபாலஞ்ச பிப்ரதம் ।
பஞ்சமாஷ்டகமேதத்தி ஶ்வேதம் ஸர்வமநோஹரம் ॥
(ஶ்வேதவர்ண:)

130. ஐந்தாவது பைரவாஷ்டக த்யாநம்.

இந்த ஐந்தாவது பைரவாஷ்டகமானது, குந்தம் (குத்தாலி) கேடயம், பரிகாயுதம், பிண்டிபாலம் இவைகளை கைகளில் தரித்திருப்பதும், வெளுப்பு நிறமுடையதும் மனோஹரமானதுமாகும். (வெளுப்பு நிறம்)

௧௩௧. அத ஷஷ்டஸப்தமாஷ்டமாஷ்டக த்யாநம்.

பீதம் ஷஷ்டம் ஸப்தரக்தமஷ்டமம் ச ததிப்ரபம் ।
குந்தாதிகம் ஸமம் ப்ரோக்தம் ஷஷ்டாத்யஷ்டாஷ்டகேஷு ச ॥
(க்ரமேண பீதரக்தததிவர்ணாநி)

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy
Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

131. 6வது, 7வது, 8வது பைரவாஷ்டக த்யானம்

ஆறுவது பைரவாஷ்டகமானது மஞ்சள் நிறமாகவும், ஏழாவது பைரவாஷ்டகமானது சிவப்பு நிறமாகவும், எட்டாவது பைரவாஷ்டகமானது மின்னற்கொடி நிறமாகவுமிருப்பதாகும். இந்த 6, 7, 8 பைரவாஷ்டகங்களுக்கு, குந்தம் முதலிய (குந்தம், கேடயம், பரிகம், பிண்டிபாலம் ஆகிய) ஆயுதங்கள் ஸமமாகக்கூறப்பட்டிருக்கின்றன. (முறையே மஞ்சள், சிவப்பு, மின்னல் நிறங்கள்)

अथ च षष्ठ्यादि भैरवाणां ध्यानानि.

असिताङ्गो विशालाक्षो शातकुम्भो

मोदकप्रियः ।

स्वच्छो विश्वसन्तुष्टः खेचरः सचराचरः ॥

सर्वस्य क्रोधसन्दृष्ट्वा तथैव च जटाधरः ।

विश्वरूपो विरूपाक्षो नानारूपधरः परः ॥

वज्रहस्तो महाकायः चण्डांशुः प्रलयान्तकः ।

भूमिकम्पो नीलकण्ठो विष्णुश्च कुलपालकः ॥ १ ॥

मुण्डपालः कामपालः क्रोधयो वै

विज्ञलक्षणः ।

सहस्रपो यमपालः कूपिनो मन्त्रनायकः ॥

रौद्रः पितामहो विष्णुर्वसुदेवो वटुनायकः ।

शङ्करो भूतवेतालस्त्रिणेत्रः

त्रिपुरान्तकः ॥ २ ॥

वरदः पर्वतावासः कपालश्री(भूष)भूषणः ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

[illegible]
[illegible] ॥ ௬ ॥

[illegible]
[illegible] ॥ ௭ ॥

[illegible]
[illegible] ॥ ௮ ॥

[illegible]
[illegible] ॥

[illegible] ॥

64 பைரவர்களின் பெயர்கள்

அஸிதாங்கன் 1, விசாலாக்ஷன் 2, மார்த்தாண்டன் 3, மோதகபிரியன் 4, ஸ்வச்சந்தன் 5, விக்நஸந்துஷ்டன் 6, கேசரன் 7, ஸசராசரன் 8, ருரு 9, க்ரோடதம்ஷ்டிரன் 10, ஜடாதரன் 11, விசுவரூபன் 12, விரூபாக்ஷன் 13, நாநாரூபதரன் 14, வஜ்ரஹஸ்தன் 15, மஹாகாயன் 16, சண்டன் 17, பிரளயாந்தகன் 18, பூமிகம்பன் 19, நீலகண்டன் 20, விஷ்ணு 21, குலபாலகன் 22, முண்டபாலன் 23, காமபாலன் 24, க்ரோதன் 25, பிங்களேக்ஷணன் 26, அப்பிரரூபன் 27, தராபாலன் 28, குடிலன் 29, மந்திரநாயகன் 30, ருத்திரன் 31, பிதாமஹன் 32, உந்மத்தன் 33,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வடுகன் 34, சங்கரன் 35, பூதவேதாலன் 36, த்ரிநேத்திரன் 37, த்ரிபுராந்தகன் 38, வரதன் 39, பர்வதாவாஸன் 40, கபாலன் (லீ) 41, சசிபூஷணன் 42, ஹஸ்திசர்மாம்பரதரன் 43, யோகீசன் 44, பிரம்ஹராக்ஷஸன் 45, ஸர்வஜ்ஞன் 46, ஸர்வதேவேசன் 47, ஸர்வபூதஹ்ருதிஸ்திதன் 48, பீஷணன் 49, பயஹரன் 50, ஸர்வஜ்ஞன் 51, காலாக்நி 52, மஹாரௌத்திரன், 53, தக்ஷிணன் 54, முகரன் 55, ஸ்திரன் 56, ஸம்ஹாரன் 57, அதிரிக்தாங்கன் 58, காலாக்நி 59, பிரியங்கரன் 60, கோரநாதன் 61, விசாலாக்ஷன் 62, யோகீசன் 63, தக்ஷஸம்ஸ்திதன் 64.

இவைகள் 64 பைரவர்களின் பெயர்களாம்.

ஸ்ரீமத் யதுகுல வாரிதிசந்திரரும், சங்கம், சக்கரம் முதலிய பிருதுகளையுடையவரும், மைஸூர் ஸம்ஸ்தாந மஹா ராஜாவுமான ஸ்ரீமான் க்ருஷ்ணராஜ மஹாராஜா அவர்களாலியற்றப்பட்ட ஸ்ரீ தத்துவநிதியில் மஹேசுவராதி சிவமூர்த்தி ஸ்வரூப நிருபண மென்னும் மூன்றாவது சிவதத்துவநிதி முற்றும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌧𑌿𑌃 ॥

---

௧. 𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

(𑌶𑍈𑌵𑌾𑌗𑌮𑍇)

𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌬𑌾𑌹𑍁𑌂 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍍𑌵𑌕𑍍𑌷𑌧𑌾𑌰𑌿𑌣𑌮𑍍 ।
𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌂 𑌚 𑌜𑌟𑌾𑌕𑍂𑌟𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ॥ ௧ ॥

𑌸𑌵𑍍𑌯𑌹𑌸𑍍𑌤𑍇𑌽𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌂 𑌚 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌮𑍍 ।
𑌸𑍍𑌰𑍁𑌵𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌹𑌸𑍍𑌤𑍇 𑌚 𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌕𑍇 ॥

𑌅𑌂𑌬𑍁𑌜𑌾𑌸𑌨𑌾𑌸𑍀𑌨𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌸𑌂𑌮𑍀𑌲𑌿𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌂 ।
𑌪𑌦𑍍𑌮𑌪𑌤𑍍𑌰𑌾𑌗𑍍𑌰𑌭𑌾𑌸𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌦𑍇𑌵𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑌮𑍍 ॥ ௨ ॥

(𑌪𑌾𑌟𑌲𑌵𑌰𑍍𑌣𑌃)

ஸ்ரீதத்த்வநிதியில்

நான்காவது ப்ரஹ்ம தத்வநிதி

1. சதுர்முக த்யாநம்.

(சைவாகமத்தில்)

4 முகங்கள், 4 கைகளுடையவரும், கமண்டலம், ஜபமாலைகளை தரிப்பவரும், யஜ்ஞோபவீதம் மேலாடைகளை யணிந்திருப்பவரும், ஜடாமகுடத்தை தரிப்பவரும், வலது கைகளில் ஜபமாலை, ஸ்ருவங்களையும் இடது கைகளில் கமண்டலம் புஸ்தகங்களையும் தரிப்பவரும், பத்மாஸநத்தில் வீற்றிருப்பவரும், த்யாநத்தினலே மூடிய கண்களையுடையவரும், தாமரை இதழின் நுனியைப்போன்ற சரீரகாந்தியை யுடையவருமான சதுர்முகனை த்யாநம் செய்யவேண்டும். (பாடலம்-வெண்சிவப்பு நிறம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௨. अथ सरस्वती ध्यानम्.

(श्रीसिंहप्रासादे)

देवी सरस्वती कार्या सर्वाभरणभूषिता ।
चतुर्भुजा सा कर्तव्या तथैव च समस्थिता ॥

पुस्तकं चाक्षमाला च धार्या दक्षिणहस्तयोः ।
वामयोस्तु तथा कार्ये वीणा चाथ कमण्डलुः ॥

समपादा प्रतिष्ठाप्या कार्या सौम्यमुखी
सिता ।

(श्वेतवर्णा)

2. ஸரஸ்வதீ த்யானம்.

(ஸ்ரீஸிம்ஹ பிராஸாதத்தில்)

ஸரஸ்வதீ தேவியை ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பவளாகவும், 4 கைகளையுடையவளாகவும், ஸமமாக நிற்ப்பவளாகவும் கற்பிக்கவேண்டும். அவளுடைய வலது கைகளில் புஸ்தகம், ஜபமாலைகளையும், இடது கைகளில் வீணை, கமண்டலங்களையும் கல்பிக்கவேண்டும். ஸரஸ்வதி தேவியை ஸமபாதமாகவும், ஸௌம்யமான முகமுடையவளாகவும், வெளுப்பு நிறமாகவும் செய்து பிரதிஷ்டை செய்யவேண்டும். (வெளுப்பு நிறம்)

अथ पञ्चब्रह्मणां ध्यानम्.

(श्रीसिंहप्रासादे)

௩. तत्रादौ सद्योब्रह्म ध्यानम्.

ब्राह्मणं कारयेच्चादौ देवं सौम्यं
चतुर्भुजम् ।
श्वेतवर्णाननं त्र्यक्षं तथा कृष्णाजिनाम्बरम् ॥ ௧॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

ஜடாதரம் சதுர்பாஹும் ஸ்வஹம்ஸாஸனஸம்ஸ்திதம் |
* வாமாந்யஹஸ்தத்ரயகம் தத்ஹஸ்தகம் தோயபூர்ணம்
பவேத் || ௨ ||

ஸாக்ஷஸூத்ரம் தக்ஷிணே பாணாவக்ஷஸூத்ரம் ச
பிப்ரதம் |
கமண்டலும் த்விதீயே ச ஸர்வாபரணதாரிணம் || ௩ ||

ஸர்வலக்ஷணஸம்யுக்தம் ஸௌம்யரூபம் ச பத்மகம் |
க்ருஷ்ணாஜினோத்தரீயம் ச ப்ரஸந்நமுதிதேக்ஷணம் || ௪ ||
ஸூத்ராயுக் காரயேதேவம் விதௌ வா பாஹ்யகர்மணி ||
(வாடுவணம்:)

5 விதமான பிரஹ்ம த்யாநம்

அவைகளில் முதலாவது ஆத்ய பிரஹ்ம த்யாநம்

வித்துவானாக இருப்பவன், ஸௌமியமான வடிவமுடையவரும், 4 கைகளையுடையவரும், பத்மபந்த ஆஸநத்திலிருப்பவரும், ஸந்தோஷமாக இருப்பவரும், கிருஷ்ணாஜிநத்தை ஆடையாக அணிந்திருப்பவரும், ஜடையை தரிப்பவரும், 7 அன்னபக்ஷிகளுடன் கூடிய ரதத்திலிருப்பவருமான பிரஹ்மதேவரை கல்பிக்கவேண்டும்.
* ... ...
வலது பக்கத்திலுள்ள 2 கைகளில் ஒரு கையில் ஜபமாலையும் மற்றொரு கையில் கமண்டலமுமிருக்கவேண்டும்.

---

* வாமே ஸ்ருவம் குசாக்ரம் ச தாரயந்தம் கரத்வயே | இதி போதிதஃ பாடஃ கல்பிதஃ ஸம்மதஃ ஸ்யாதிதி பாதி ||

* இடது பக்கத்திலுள்ள 2 கைகளில் ஸ்ருவமும் குசக்ரந்தியுமிருப்பதாகும் என்று பாடத்தைத் திருத்திக்கொள்ளவேண்டுமென்று தோன்றுகிறது.

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹே அரசனே, ஆசாரியனாக இருப்பவன், ஸகல ஆபரணங்களையும் தரித்திருப்பவரும் ஸகல லக்ஷணங்களுடன் கூடியவரும், சாந்தமான ஸ்வரூபமுடையவரும், தாமரை மலரின் நுனியைப்போன்ற சரீர காந்தியையுடையவரும், த்யானத்தினாலே மூடப்பட்டிருக்கின்ற கண்களையுடையவருமான பிரஹ்மதேவனை, சித்திரத்திலும் வாஸ்து கர்மாவிலும் கல்பிக்கவேண்டும். (பாடல வர்ணம்)

௪. அத லோகபாலப்ரஹ்ம த்யாநம்.

பத்மாஸநஸ்தஶ்ச ப்ரஹ்மா கார்யஶ்சதுர்முக: ।
ஸூர்யவர்ணோ ஹ்யஸௌ ஜ்ஞேய: ஸாக்ஷஸூத்ர
கராந்விதா ॥ ௧ ॥
ஶேஷம் பூர்வோதிதம் கார்யம் ப்ரஹ்மணஶ்ச
ஜகத்பதே: ।
(வாஸ்துவித்யா:)

4. லோகபால பிரஹ்ம த்யானம்.

லோக தேவதையாகக் கல்பிக்கப்படும் பிரஹ்மதேவர், பத்மாஸநத்திலிருப்பவரும், 4 முகங்களுடையவரும், சூரியனைப்போன்ற சரீரகாந்தியுடையவரும், கையில் ஜபமாலையை தரிப்பவருமாவார். ஜகத்பதியான இந்த பிஹ்மதேவரின் மற்ற ஸ்வரூபங்கள் யாவும் முன்பு கூறியிருப்பதை போலவே கல்பிக்கத்தககதாகும். (பாடல வர்ணம்)

௫. அத அத ப்ரஜாபதிப்ரஹ்ம த்யாநம்.

ஹம்ஸயாநேந கர்தவ்ய: ந ச கார்யஶ்சதுர்முக: ।
ஸாவித்ரீ தஸ்ய கர்தவ்யா வாமோத்ஸங்ககதா ஸதா ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப்ரஹ்மோக்தம் வர்ணம் ரௌப்யம் ஸர்வம் காயம்
ப்ரஜாபதே: ।
(பாத்மஸம்ஹிதா) (௪)

5. பிரஜாபதி பிரஹ்ம த்யானம்.

இந்த பிரஹ்மதேவரை, ஹம்ஸவாஹனத்துடன் கல்பிக்க வேண்டும். 4 முகங்களுடையவராகக் கல்பிக்கக்கூடாது. (ஒரே முகத்துடன் கல்பிக்கவேண்டும் என்று பொருள் கொள்ளவேண்டும்) அவருடைய இடது மடியில் சோபநமான ஸ்வரூபமுடைய ஸாவித்ரீ தேவியைக் கல்பிக்க வேண்டும். பிரஜாபதியான இந்த பிரஹ்மதேவரின் மற்ற ஸ்வரூபம் யாவும் முன்பு பிரஹ்மதேவருக்குக் கூறியிருப்பதைப் போலவே கல்பிக்கப்படவேண்டும். (பாடலவர்ணம்)

௬. அத விதிப்ரஹ்ம த்யானம்.

விஶ்வகர்மா து கர்தவ்ய: ஸர்வரூபதர: ப்ரபு: ।
த்விபாஹுர் தஶபாஹுர்வா தேஜோமூர்திர்மஹோத்கட: ॥
(பாத்மஸம்ஹிதா)

6. விதி பிரஹ்ம த்யானம்.

ஸூரிய ரூபத்தை தரிப்பவரும், ஸாமர்த்தியமுடையவரும், 2 கைகளும், 10 கைகளுமுடையவரும், (2 அல்லது 10 கைகளுடையவரும் என்றும் 2 + 10 = 12 கைகளுடையவரும் என்றும் பொருள் கொள்ளலாம்) தேஜோமயமான சரீரத்தையுடையவரும், மஹிமைவாய்ந்தவருமான விச்வகர்மாவானவர் கல்பிக்கத்தக்கவராவார். (பாடலவர்ணம்)

௭. அத விஶ்வகர்மப்ரஹ்ம த்யானம்.

சதுர்வக்த்ரஶ்சதுர்ஹஸ்த: சதுர்பாஹு: ஸிதாம்பர: ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

[illegible] ॥ ௧ ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌚𑌾𑌕𑍍𑌷𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 (𑌜𑍍𑌞𑌾) 𑌵𑌾𑌮𑍇 𑌤𑍁
𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌂 ।

[illegible]
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌹𑌸𑍍𑌤𑌕𑌃 ॥ ௨ ॥

[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௩ ॥
([illegible])

7. விச்வகர்ம பிரஹ்ம த்யாநம்.

விச்வகர்ம பிரஹ்மாவானவர் 4 முகங்களும், 4 கால்களும், 4 கைகளும், வெளுப்பு வஸ்திரமுமுடையவராவார். சாந்தமான ஸ்வரூபமுடையவரும், தர்மகாரியங்களை அறிந்தவரும், குறைவற்றவருமாவார். வலது கையில் ஜபமாலையும் இடது கையில் புஸ்தகமும் தரிப்பவராவார். இவரை ஆற்றலினுருவமாகக் கல்பிக்கவேண்டும். வலது பக்கத்திலுள்ள முகத்தையும், இடது பக்கத்திலுள்ள முகத்தையும் மிகவும் அழகாகக் கல்பிக்கவேண்டும். மற்ற இரு கரங்களையும் சிரஸ்ஸின் மீது (அஞ்ஜலிபந்தனம் செய்து) பத்மாசாரமாக இருக்கும்படி கல்பிக்கவேண்டும. (பாடல வர்ணம்)

𑌅𑌥 𑌨𑌵𑌗𑍍𑌰𑌹𑌾𑌣𑌾𑌂 [illegible] ॥

([illegible] 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂)

[illegible] ।
[illegible] ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நவ (9) ப்ரஜாபதிகளின் பெயர்கள்
(ஸ்காந்தம் — லக்ஷ்மீநாராயண ஸம்ஹிதையில்)

மரீசி 1. அங்கிரஸ் 2, அத்ரி 3. புலஸ்தியர் 4, புலஹர் 5. க்ரது 6, கர்தமர் 7. கச்யபர் 8, தக்ஷர் 9 ஆகிய இந்த 9 முனிவர்களும் பிரஹ்மதேவரின் புதல்வர்கள் ஆவார்கள்.

௮. 𑌤𑌤𑍍𑌰𑌾𑌦𑍌 𑌮𑌰𑍀𑌚𑌿 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌶𑍁𑌭𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌜𑍇𑌶𑌾𑌨𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌮𑌾𑌨𑌸𑌸𑌂𑌭𑌵𑌂 ।
𑌅𑌕𑍍𑌷𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌪𑌾𑌣𑌿𑌂 𑌜𑌟𑌾𑌵𑌲𑍍𑌕𑌲𑌭𑍂𑌷𑌿𑌤𑌮𑍍 ॥

𑌕𑌨𑌕𑌾𑌚𑌲𑌸𑌙𑍍𑌕𑌾𑌶𑌂 𑌜𑌪𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 𑌪𑌰𑌂 ।
(𑌕𑌨𑌕𑌵𑌰𑍍𑌣𑌃)

8. அவர்களில் முதலாவது மரீசியின் த்யாநம்.

முதலாவது பிரஜாபதியானவரும், பிரஹ்மதேவரின் மானஸிகபுத்திரரும், ஜபமாலை, குண்டிகை (கிண்டி) களை தரிப்பவரும், ஜடையை தரித்து மரையுரியையணிந்திருப்ப வரும், மேரு மலையைப்போல் மஞ்சளான சரீரகாந்தியை யுடையவரும், உத்தமமான பிரணவத்தை ஜபம் செய்து கொண்டிருப்பவருமான (மரீசி முனிவரை) வணங்கு கின்றேன். (ஸுவர்ண வர்ணம்)

௯. 𑌅𑌥 𑌅𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑍋 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌋𑌷𑌿𑌮𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌮𑌸𑍍𑌤𑌕𑌂 ।
𑌅𑌕𑍍𑌷𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌹𑌸𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌜𑍇𑌶𑌂 𑌕𑌨𑌕𑌪𑍍𑌰𑌭𑌮𑍍 ॥

(𑌕𑌨𑌕𑌵𑌰𑍍𑌣𑌃)

9. அங்கிரஸ்ஸின் த்யாநம்.

நெற்றியில் த்ரிபுண்ட்ரத்தை அணிந்திருப்பவரும், ஜபமாலை, கிண்டி இவைகளை கைகளில் தரிப்பவரும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப்ரஜாபதியானவரும், தங்கநிறமுடையவருமான அங்கிரஸ் என்னும் முனிவரை வணங்குகின்றேன். (ஸுவர்ண வர்ணம்)

௧௰. அத அத்ரித்யாநம்.

அத்ரிம் மரீசிதநயம் ஸாக்ஷஸூத்ரகமண்டலும் ।
ஜடிலம் ஶ்மஶ்ருலம் ஶாந்தம் ஶ்யாமாங்கம் ப்ரணமே ஸதா ॥

(ஶ்யாமவர்ண:)

10. அத்திரி த்யாநம்.

மரீசி முனிவரின் புதல்வரும், ஜபமாலை, கமண்டலங்களை தரிப்பவரும், சடையை தரிப்பவரும், மீசை தாடிகளையுடையவரும், சாந்தமான ஸ்வருபத்தையுடையவரும், நீலநிறமாக இருப்பவருமான அத்திரி முனிவரை எப்பொழுதும் வணங்குகின்றேன். (நீல நிறம்)

௧௧. அத வஸிஷ்டத்யாநம்.

வஸிஷ்டம் ஶிரஸா நௌமி ப்ரஹ்மணோ மாநஸம் ஸுதம் ।
ஸௌம்யம் ஜிதாரிஷட்வர்கமக்ஷஸூத்ரகதண்டஹஸ்தகம் ॥
க்ருஷ்ணாஜிநோத்தரீயம் ச ஜடிலம் வித்யுதப்ரபம் ।

(வித்யுத்வர்ண:)

11. புலஸ்திய த்யாநம்.

பிரஹ்மதேவரின் மாநஸிக புத்திரரும், சாந்தமான ஸ்வருபமுடையவரும், அரிஷட்வர்கத்தை (காமம் 1, குரோதம் 2, லோபம் 3, மோஹம் 4, மதம் 5, மாத்ஸர்யம் 6 ஆகிய 6 சத்துருக்களை) யும் ஜயித்தவரும், ஜபமாலையையும் தண்டத்தையும் கைகளில் தரிப்பவரும், மான்தோலை உத்தரீயமாக அணிந்திருப்பவரும், ஜடையை தரிப்பவரும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மஞ்சள் நிறமானவருமான புலஸ்திய முனிவரை சிரத்தினாலே வணங்குகின்றேன். (பொன் வர்ணம்)

௧௨. 𑌅𑌥 𑌪𑍁𑌲𑌹 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

𑌤𑌪𑍋𑌨𑌿𑌧𑌿𑌮𑌹𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑍁𑌲𑌹𑌂 𑌨𑍀𑌲𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌮𑍍 ।
𑌅𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌂 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌂 𑌚 𑌧𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑌂 𑌨𑌮𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥
(𑌨𑍀𑌲𑌵𑌰𑍍𑌣𑌃)

12. புலஹ த்யானம்.

ஜபமாலை, குண்டிகைகளை தரிப்பவரும், மேகத்தைப் போன்ற நீலநிறமுடையவரும், சாந்தமான ஸ்வருபமுடையவரும், தபஸ்ஸிற்கு இருப்பிடமானவருமான புலஹ முனிவரை நான் எப்பொழுதும் வணங்குகின்றேன். (நீல நிறம்)

௧௩, 𑌅𑌥 𑌕𑍍𑌰𑌤𑍁 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

𑌕𑍍𑌰𑌤𑍁𑌂 𑌕𑍍𑌰𑌤𑍁𑌵𑌰𑍋𑌦𑍍𑌭𑍂𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍍𑌷𑌿𑌗𑌣𑌸𑌂𑌸𑍍𑌤𑍁𑌤𑌮𑍍 ।
𑌜𑌟𑌿𑌲𑌂 𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌲𑌂 𑌦𑌣𑍍𑌡𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌧𑌰𑌂 𑌰𑌾𑌜𑌨𑍍𑌤𑌮𑍍 ॥ ௧ ॥
𑌸𑌵𑌿𑌤𑌾𑌰𑌮𑌿𑌵 𑌭𑍍𑌰𑌾𑌜𑌨𑍍𑌤𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌽𑌹𑌂 𑌤𑌪𑌸𑌾𑌂 𑌨𑌿𑌧𑌿𑌮𑍍 ।
(𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

13. க்ரது த்யாநம்.

எப்பொழுதும் யஜ்ஞங்களை செய்து கொண்டிருப்பவரும், பிரஹ்மரிஷி கணங்களினாலே துதிக்கப்பட்டவரும், ஜடையை தரிப்பவரும், தாடி மீசைகளுடனிருப்பவரும், தண்டம், கமண்டலம் இவைகளை தரித்துக்கொண்டு பிரகாசிப்பவரும், ஸூரியனைபோல தேஜோராசியாகப் பிரகாசிப்பவரும், தபஸ்ஸிற்கு இருப்பிடமாக விளங்குகின்றவருமான க்ரது என்ற முனிவரை, நான் த்யாநம் செய்கின்றேன். (சிவப்பு நிறம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௧௪. 𑌅𑌥 𑌕𑌰𑍍𑌦𑌮 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌕𑌰𑍍𑌦𑌮𑌂 𑌨𑍌𑌮𑌿 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌪𑌾𑌪𑌕𑌰𑍍𑌦𑌮𑌶𑍋𑌷𑌣𑌮𑍍 ।
𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌶𑍋𑌭𑌾𑌢𑍍𑌯𑌂 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌭𑍍𑌰𑌾𑌰𑍁𑌣𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ॥

𑌅𑌕𑍍𑌷𑌸𑍍𑌰𑌕𑍍𑌕𑍁𑌣𑍍𑌡𑌿𑌕𑌾𑌹𑌸𑍍𑌤𑌂 𑌚𑍀𑌰𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌜𑌿𑌨𑌾𑌮𑍍𑌬𑌰𑌮𑍍 ।
(𑌸𑌿𑌨𑍍𑌦𑍂𑌰𑌵𑌰𑍍𑌣𑌃)

14 கர்தம த்யாநம்.

சடைமுடியை தரித்து அழகாக இருப்பவரும், ஸந்தியா கால மேகத்தைப்போன்ற சிவப்பு நிறமான சரீரத்தை யுடையவரும், ஜபமாலை, குண்டிகை இவைகளை கைகளில் தரிப்பவரும், இடுப்பில் மரையுரியையும் மேலே மான் தோலையுமாடையாக அணிந்திருப்பவரும், பாபமாகிய சேற்றை சுண்டி உலரவைப்பவருமான கர்தமமுனிவரை சிரஸ்ஸினாலே வணங்குகின்றேன். (ஸிந்தூர வர்ணம்)

௧௫. 𑌅𑌥 𑌕𑌶𑍍𑌯𑌪 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌕𑌶𑍍𑌯𑌪𑌂 𑌨𑍌𑌮𑌿 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌮𑌰𑍀𑌚𑌿𑌤𑌨𑌯𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌣𑌵𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑌂𑌸𑌕𑍍𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌸𑌤𑍍𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌪𑍍𑌰𑌭𑌮𑍍 ॥

𑌚𑍀𑌰𑌵𑌲𑍍𑌕𑌲𑌸𑌂𑌵𑍀𑌤𑌂 𑌜𑌟𑌾𑌮𑌣𑍍𑌡𑌲𑌭𑌾𑌸𑍁𑌰𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌜𑌾𑌸𑌂𑌸𑌜𑌨𑍋𑌦𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌕𑍍𑌷𑌸𑍍𑌰𑌕𑍍𑌕𑍁𑌣𑍍𑌡𑌿𑌕𑌾𑌧𑌰𑌮𑍍 ॥
(𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌵𑌰𑍍𑌣𑌃)

15. கச்யப த்யாநம்.

மரீசி முனிவரின் புதல்வனும், மாசற்றவரும், பிரணவ பிரஹ்மத்தில் லயமடைந்த மனதையுடையவரும்,
23 ஸுவர்ணம் போன்ற சரீர காந்தியையுடையவரும், மரை யுரியை ஆடையாக அணிந்திருப்பவரும், ஜடாமண்டலத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

துடன் பிரகாசிப்பவரும், பிரஜைகளை ஸ்ருஷ்டி செய்வதில் முயற்சியுடையவரும், ஜபமாலையையும் குண்டிகை (கிண்டி) யையும் தரிப்பவருமான கச்யப முனிவரை சிரத்தினாலே வணங்குகின்றேன். (ஸுவர்ண வர்ணம்)

கஅ. சுய உகக்ஷ யூ்ாநடீ.

சுஜவக்தும் வி நய நம் ஶூஜ்ஜ அயவிஹமஷிதம் ।
நமஸ்காராஞ்ஜலிம் வதெ ஶிவய்யாநவராயணம் ॥

லூாயம்ஹுவம் வ நஶாஉம் ஷ்கக்ஷஉயூாஶீகஷிதம் ।

(ஶூாஉவணாபு:)

16. தக்ஷ த்யாநம்

ஆட்டு முகமும் 2 கண்களுமுடையவரும், 2 கொம்பு களாலே அலங்கரிக்கப்பட்டிருப்பவரும், நமஸ்காரம் செய்வதைக் குறிக்கின்ற அஞ்ஜலியையுடையவரும், பரமேசுவர த்யாநத்திலீடுபட்டிருப்பவரும், பிரஹ்ம தேவரின் புதல்வனும், மேகத்தைப்போல நீலநிறமாக இருப்ப வரும், யஜ்ஞதீக்ஷையுடையவரு (எப்பொழுதும் யாகங்கள் செய்பவரு)மான தக்ஷ முனிவரை வணங்குகின்றேன். (நீல நிறம்)

கஎ. ஸப்தரிஷீணாம் யூ்ாநம்

(நிரவிம்ஹவர்ாவாதெ)

உஷ்ாவீநா: வெஸாவவீதா: கஉம்ஊலுக்ஷவஸஅக்ரிணா: ।
ஜடிலா: ஶுபுரு்ணா: ஶாஞா: குவீநா யூ்ாநதத்பரா: ।
வஷ்டிஷுயொ வஸிஷ்டஷு காயெபுா ஹாயபுாவஸஉஙிதா: ॥
தெஷாம் நாஊாநி ...

அளதஉஷு ஹு ஆகெஜா விஶ்வாமித்ராய காஶ்யப: ।

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஜடாதீப்தமஹர்ஷிகோஷ்டீ: ஸந்து வைவஸ்வதேऽந்தரே ||௨||

17. ஸப்த (7) இருடிகளின், த்யாநம்.

ஸப்தர்ஷிகள், உலகப்பற்றில்லாதவர்களும், யஜ்ஞோபவீதத்தை தரித்திருப்பவர்களும், கமண்டலம் ஜபமாலைகளை தரித்திருப்பவர்களும், சடை தாடி மீசையுடையவர்களும், சாந்தமான ஸ்வரூபமுடையவர்களும், உட்கார்ந்திருப்பவர்களும், த்யாநத்திலீடுபட்டவர்களுமாவார்கள்.

வஸிஷ்டரை மனைவியுடனிருப்பவராகக் கல்பிக்க வேண்டும்.

அந்த ஸப்தர்ஷிகளின் பெயர்கள் :—

கௌதமர் 1, பரத்வாஜர் 2, விசுவாமித்திரர் 3, காசியபர் 4, ஜமதக்நி 5, வஸிஷ்டர் 6, அத்திரி 7 ஆகிய இந்த 7 முனிவர்களும், வைவஸ்வதமந்வந்தரத்தில் ஸப்தரிஷிகளாக இருப்பவர்களாவார்கள்.

௧௮. தத்ராதௌ கௌதம த்யாநம்.

ரஹூகணாத்மஜம் ஶாந்தம் த்ரிபுண்ட்ராங்கிதமஸ்தகம் |
அக்ஷஸூத்ரகமண்டல்வாதண்டாந் த்யாயேத் கௌதமம் ஹ்ருதி ||
(கநகவர்ண:)

18. அவர்களில் முதலில் கௌதம த்யாநம்.

ரஹூகணனுடைய புதல்வரும், சாந்தமான ஆகாரத்தையுடையவரும், நெற்றியில் திரிபுண்டிரம் தரித்திருப்பவரும், ஜபமாலை, குண்டிகை, (யோக) தண்டம் இவைகளை தரிப்பவருமான கௌதம முனிவரை வணங்குகின்றேன். (கநக வர்ணம்)

௧௯. அத பாரத்வாஜ த்யாநம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

𑌭𑌾𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌂 𑌮𑌹𑌾𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍂𑌚𑍀𑌨𑌾𑌥𑌦𑍃𑌢𑌵𑍍𑌰𑌤𑌮𑍍 ।
𑌅𑌕𑍍𑌷𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌹𑌸𑍍𑌤𑌂 𑌚 𑌆𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑌂 𑌭𑌜𑍇 ॥
(𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌃)

19. பரத்வாஜ த்யாநம்.

மிகவும் சாந்தமானவரும், ஸூசீயின் கணவரும், மன உறுதியுடையவரும், (அல்லது தபஸ்ஸில் உறுதியுடையவரும்) ஜபமாலையையும் யோகதண்டத்தையும் தரிப்பவரும், அங்கிரஸ்ஸின் புதல்வருமான பரத்துவாஜ முனிவரை வணங்குகின்றேன். (சியாம வர்ணம். சியாமம் — நீலம் அல்லது கருப்பு)

௨௰. 𑌅𑌥 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍

𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌸𑌦𑍃𑌶𑌂 𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌧𑌾𑌰𑌿𑌣𑌮𑍍 ।
𑌕𑍁𑌮𑍁𑌦𑍍𑌵𑌤𑍀𑌪𑌤𑌿𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌂 𑌭𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥
(𑌪𑍀𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

20. விசுவாமித்திர த்யாநம்.

பிரஹ்மதேவரைப்போலிருப்பவரும், சடைமுடியை தரிப்பவரும், குமுத்வதீ என்பவளின் கணவனும், சாந்தமான ஸ்வரூபமுடையவருமான விசுவாமித்திரரை நான் வணங்குகின்றேன். (மஞ்சள் நிறம்)

௨௧. 𑌅𑌥 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 𑌮𑌰𑍀𑌚𑌿𑌤𑌨𑌯𑌂 𑌜𑌟𑌾𑌵𑌲𑍍𑌕𑌲𑌧𑌾𑌰𑌿𑌣𑌮𑍍 ।
𑌜𑌪𑌾𑌕𑍍𑌷𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌪𑌤𑍍𑌨𑍀𑌸𑌹𑌿𑌤𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ॥
(𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌃)

21. காசியப த்யானம்.

மரீசி முனிவரின் புதல்வரும், சடை மரவுரி ஜபமாலை இவைகளை தரிப்பவரும், மனைவியுடனிருப்பவரும்,

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முனிச்ரேஷ்டருமான காசியபரை த்யானம் செய்கிறேன். (கருப்பு நிறம்)

௨௨. அத² ஜமத³க்³நி த்⁴யாநம்.

ஶாந்தம் ஜிதாரிஷட்³வர்க³ம் ப்⁴ருகு³வம்ஶ்யம் மஹாத்³யுதிம் |
த³ண்டா³க்ஷஸூத்ரதா⁴ரிணம் ச ஜமத³க்³நிம் நமாம்யஹம் ||
(ரக்தவர்ண:)

22. ஜமதக்னி த்யானம்

சாந்தமான ஸ்வரூபமுடையவரும், அரிஷட்வர்கத்தை (காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸரியம் ஆகிய 6 பகைகளையும்) ஜயித்தவரும், பிருகு முனிவரின் புதல்வரும், மிகுந்த தேஜஸ்ஸையுடையவரும், யோக தண்டம், ஜபமாலைகளை தரிப்பவருமான ஜமதக்னி முனிவரை நான் வணங்குகின்றேன். (சிவப்பு நிறம்)

௨௩. அத² வஸிஷ்ட² த்⁴யாநம்.

தபோநிதி⁴ம் த³யாஸிந்து⁴ம் மித்ராவருணஸம்ப⁴வம் |
ஸ்ரக்³த³ண்ட³தா⁴ரிணம் வரத³ம் வஸிஷ்ட²ம் ப்ரணமாம்யஹம் ||
(ஶ்வேதவர்ண:)

23. வஸிஷ்ட த்யானம்.

தவத்தின் இருப்பிடமாக இருப்பவரும், மித்திரன், வருணன் இவர்களின் புதல்வனாக இருப்பவரும், ஜபமாலை யோக தண்டங்களை கைகளில் தரிப்பவரும், வரன்களை யளிப்பவருமான வஸிஷ்ட முனிவரை, நான் வணங்குகின்றேன். (வெளுப்பு நிறம்)

௨௪. அத² அத்ரி த்⁴யாநம்.

விரிஞ்சிதநயம் தே³வம் ஸாக்ஷஸூத்ரகமண்ட³லும் |

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

அநஸூயாபதிம் ஶாந்தமத்ரிம் நிஷ்கல்மஷம் பஜே ॥

(ஶ்ரீதத்வநிதௌ)

24. அத்திரி த்யாநம்.

பிரஹ்மதேவரின் புதல்வரும், தெய்வத்தன்மை வாய்ந்தவரும், ஜபமாலையையும் கமண்டலத்தையும் தரிப்பவரும், அநஸூயாதேவியின் கணவரும், சாந்தமான ஸ்வரூபமுடையவரும், குற்றமற்றவருமான அத்திரி முனிவரை வணங்குகின்றேன். (கருப்பு நிறம்)

௨௫. அத தர்மாதிசதுஷ்டய த்யாநம்.

(ந்ருஸிம்ஹபுராணே)

தர்மோ ஜ்ஞாநம் ச வைராக்யமைஶ்வர்யம் ச
ததைவ ச ।

ஸிதாருணபீதக்ருஷ்ணஸிம்ஹரூபா: ப்ரகீர்த்திதா: ॥

25. தர்மம் முதலிய 4 களின் த்யாநம்.

(ந்ருஸிம்ஹபிராணத்தில்)

தர்மம், ஜ்ஞாநம், வைராக்கியம், ஐசுவரியம் இந்நான்கும், முறையே, வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு நிறமான ஸிம்ஹ வடிவமுடையவைகளாம் என்று கூறப்பட்டிருக்கின்றன.

௨௬. அத தர்மாதிதேவதா சதுஷ்டய த்யாநம்.

(வாதுளாகமே)

யமவாயுஶிவேந்த்ராஶ்ச ஜ்ஞேயா தர்மாதிதேவதா: ।

(ஏதேஷாம் லக்ஷணாநி திக்பாலலக்ஷணே த்ரஷ்டவ்யாநி. ஶ. நிதௌ ।)

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

26. தர்மாதி 4 களின் அபிமாநி தேவர்களின் த்யாநம்.

யமன் 1, வாயு 2, ஈசாநன் 3, இந்திரன் 4, இந்த 4 தேவர்களும், தர்மம், ஞானம், வைராக்யம், ஐசுவரியம் என்ற நான்கிற்கும் அதிதேவதைகளாவார்கள். (இவர்களின் லக்ஷணம்முதலியவைகளை, 4வது நிதியில், திக்பாலக லக்ஷணத்தில் பார்த்துக்கொள்ளவேண்டும்.)

௨௭. அத அதர்மாதிசதுஷ்டய த்யாநம்.

(பாஞ்சராத்ரே பாத்மஸம்ஹிதாயாம்)

அதர்மாத்யாஸ் தாவதீஷ்வேவ பாதேஷ்வாக்ருதய: ஸ்திதா: |
சதுர்புஜா: ஸிம்ஹவக்த்ரா: ஸிதபூர்வவர்ணா:
பரே || ௧ ||

ஹஸ்தாப்யாம் தக்ஷி(வி)ஸவ்யாப்யாம் ரசிதாஞ்ஜலி
ஸம்புடா: |
அபராப்யாம் ச பிப்ராணா: கராப்யாம்
யோகபீடகம் || ௨ ||

(ஆஸ்யே ஶ்வேதவர்ணா: || ஶரீரே அருணவர்ணா: ||)

27. அதர்மம் முதலிய 4 களின் த்யாநம்.

(பாஞ்சராத்ரத்தில் பாத்மஸம்ஹிதையில்)

அதர்மம், அஜ்ஞானம், அவைராக்யம், அனைசுவரியம் என்ற நான்குபேர்களும், புருஷ வடிவமுடையவர்களாக 4 திக்குகளிலுமிருப்பவர்களாவார்கள். இவர்கள், 4 கைகளும், ஸிம்ஹ முகமுமுடையவர்களாவார்கள். முதலில் வெளுப்பும் பிறகு சிவப்புமான நிறமுடையவர்களாவார்கள். எதிரிலுள்ள (முக்கியமான) இரண்டு கைகளாலேயும் அஞ்ஜலிபந்தநம் செய்து கொண்டிருப்பவர்களாவார்கள். மற்ற இரண்டு கைகளாலேயும் யோகபீடத்தைப்பற்றிக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கொண்டிருப்பவர்களாவார்கள். (இவர்கள் முகத்தில் வெளுப்பு நிறமும் சரீரத்தில் சிவப்பு நிறமுமுடையவர்களாவார்கள்)

உ௮. அத² அத⁴ர்மாதி³சதுஷ்டயாபி⁴மாநிதே³வதா
சதுஷ்டய த்⁴யாநம்.

(பாஞ்சராத்ரே பாத்³மஸம்ஹிதாயாம்)

அத⁴ர்மாதி⁴பதி: நிர்ருதி: ॥ அஜ்ஞாநாதி⁴பதி: து³ர்கா³ ॥ அவைராக்³யாதி⁴பதி: காம: ॥ அநைஶ்வர்யாதி⁴பதி: ருத்³ர: ॥

அபூஜிதா அத⁴ர்மாத்³யா: தா³தாரஸ்தே ததா²வித⁴ா: ।
நிர்ருதிஶ்சைவ து³ர்கா³ ச காமோ ருத்³ரஸ்ததை²வ ச ॥

(ஏதேஷாம் ஸ்வரூபாணி தத்தந்மூர்த்திலக்ஷணே பூர்வமுக்தாநி । வக்ஷ்யந்தே ச க்ரமேண ௪-௫-௨-௫ [illegible] । ருத்³ர: க்ஷேத்ரபாலக்ஷேத்ரதே³வதாவத் ॥ து³ர்கா³ ஶாந்தி வஸ்த்ரதே³வதாவத்)॥

28. அதர்மாதி 4 களின் அபிமாநி தேவதா த்யாநம்.
(பாஞ்சராத்ரத்தில், பாத்மஸம்ஹிதையில்)

அதர்மத்திற்கு அதிபதி நிருருதி. அஜ்ஞாநத்திற்கு அதிதேவதை துர்கை. அவைராக்கியத்திற்கு அதிதேவதை காமன். அநைசுவரியத்திற்கு அதிதேவதை ருத்திரன்.

அதர்மாதி தேவதைகளான நிருருதி, துர்கை, காமன், ருத்திரன் இவர்களைப் பூஜிக்காவிட்டால், அவர்கள் அந்த பலன்களையே (அதர்மாதிகளையே) அளிப்பார்கள். (இவர்களின் ஸ்வரூபங்கள், அந்தந்த மூர்த்தி லக்ஷணத்தில் முன்னமே கூறப்பட்டிருக்கின்றன. இனியும் முறையே 4,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

5, 2, 5, நிதிகளில் கூறப்படும். ருத்திரன், ஆர்திராநக்ஷத்திர தேவதையைப்போன்ற லக்ஷணமுடையவராவார். துர்கா தேவியானவள், ரௌத்திரி வத்ஸரதேவதையைப்போன்ற லக்ஷணமுடையவளாவாள்.

உக. அத புண்யபுருஷலக்ஷணம்.

(காரணாகமே)

ஸிம்ஹாஸநே ஸமாஸீநம் ஸ்வர்ணவர்ணம் கிரீடிநம் ।
ஸுரவந்திதபாதாப்ஜம் புண்யம் ஹ்ருதி விபாவயே ॥

(ஸ்வர்ணவர்ண:)

29. புண்ணிய புருஷ லக்ஷணம்.

(காரணாகமத்தில்)

ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருப்பவரும், தங்கம்போன்ற சரீர காந்தியையுடையவரும், கிரீடத்தை தரித்திருப்பவரும், தேவர்களாலே தோத்திரம் செய்யப்பட்ட பாதபத்மங்களை யுடையவருமான புண்ணியாதி தேவதையை, ஹிருதயத்தில் த்யானம் செய்கிறேன். (தங்க நிறம்)

௩0. அத பாபபுருஷ த்யாநம்.

(பாத்மஸம்ஹிதாயாம்)

ப்ரஹ்மஹத்யாசிரஸ்கம் ச ஸ்வர்ணஸ்தேயபுஜத்வயம் ।
ஸுராபாநஹ்ருதா யுக்தம் குருதல்பகடித்வயம் ॥ க ॥

தத்ஸம்யோகிபதத்வந்த்வம் உபபாதகரோமகம் ।
உபபாதகரோமாணம் விஜ்ஞாநேதரலோசநம் ॥ உ ॥

ஸ்வர்ணச்ம்ருராரம் க்ருஷ்ணம் கர்மபிர் பாபம் விசிந்தயேத் ।

(க்ருஷ்ணவர்ண:)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

30. பாப புருஷ த்யாநம்.

(பாஞ்சராத்ரத்தில்)

பிரம்மஹத்திருபமான சிரஸ்ஸையுடையவனும், ஸுவர்ணஸ்தேய ரூபமான இரு கைகளையுடையவனும், ஸுராபாநரூபமான ஹிருதயத்தையுடையவனும், குருதல்ப ரூபமான இரண்டு பிருஷ்டபாகங்களையுடையவனும, அவர்களின் சேர்க்கையாகிற இருகால்களையுடையவனும், அதிபாதகரூபமான அங்கங்களையும் பிரத்யங்கங்களையுமுடையவனும், உபபாதகரூபமான உரோமங்களையுடையவனும், பொன்னிறமான புருவம் மீசை கண் இவைகளையுடையவனும், கத்தி கேடயங்களை தரிப்பவனும், கருப்பு நிறமாக இருப்பவனுமான பாப புருஷனை, வயிற்றில் த்யாநம் செய்யவேண்டும். (கருப்பு நிறம்)

(பிரம்மஹத்தியா—பிராமணனை கொலை செய்வது ஸுவர்ணஸ்தேயம் — தங்கத்தை திருடுவது, ஸுராபாநம் — கள்ளுக்குடிப்பது, குருதல்பம் — குருக்களுடைய மனைவிகளுடன புணர்ச்சி செய்வது, தத்ஸமயோகம் — கீழே கூறப்பட்ட 4 விதமான பாபங்களைச்செய்தவர்களுடன் பழகுவது. இவைகள் 5 விதமான மஹாபாதகங்களென்று கூறப்பட்டிருக்கின்றன)

௩௧. [illegible]

([illegible])

[illegible] ([illegible]) [illegible]

([illegible]) [illegible] ।

[illegible] ([illegible]) [illegible] ([illegible]) [illegible]

[illegible] ([illegible]) ॥

([illegible])

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

363

31. பிரஹ்மாஸ்திர தேவதா த்யாநம்.

(அந்த கல்பத்தில்)

வலது கையினாலே சத்துருக்களை துன்புறுத்துகின்றவனும், இடது கையில் கதையை வைத்துக்கொண்டிருப்பவனும், (வலது கையில் கதையை உயர்த்திப்பிடித்து, அதனாலே பகைவர்களை துன்புறுத்துகின்றவளும்) நீண்ட நாக்கையுடையவனும், (வளும்) மஞ்சள் ஆடையையணிந்திருப்பவனு (வளு) மான பகளாமுகனை (முகியை) ஸ்மரிக்கின்றேன். (மஞ்சள் நிறம் பிரஸித்தம்)

𑌅𑌥 𑌵𑍇𑌦𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍.

(𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑍇)

௧. 𑌤𑌤𑍍𑌰𑌾𑌦𑍌 𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍:

𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍 𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑍋
𑌰𑌾𑌸𑌭𑌾𑌨𑌨𑌃 ।
𑌅𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌧𑌰𑌃 𑌸𑍌𑌮𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑍋 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾
𑌨𑍋𑌦𑍍𑌯𑌤𑌃 ॥
(𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

4 வேதங்களின் ஸ்வரூபம்.

(ந்ருஸிம்ஹ ப்ராஸாதத்தில்)

32. அவைகளில் முதலில் ருக்வேத ஸ்வரூபம்.

ருக்வேத புருஷன், வெளுப்பு நிறமும் 2 கைகளும் கழுதை முகமுமுடையவரும், ஜபமாலை தரித்திருப்பவரும், ஸௌம்யமான ஆகிருதியுடையவரும், பிரீதியுடையவரும், விரிவாகக் கூறும் நோக்கமுடையவருமாவார். (வெளுப்பு நிறம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௩௩. அத யஜுர்வேதஸ்வரூபம்.

அஜாஸ்ய: பீதவர்ண: ஸ்யாத் யஜுர்வேதோக்ஷ-
ஸூத்ரத்ருக் |
வாமே குலிசபாணிஸ்து பூதிதோ மங்களப்ரத: ||
(பீதவர்ண:)

33. யஜுர்வேத ஸ்வரூபம்.

யஜுர்வேத புருஷன், ஆட்டு முகமுடையவரும், மஞ்சள் நிறமாக இருப்பவரும், (வலது கையில்) ஜபமாலையை தரிப்பவரும், இடது கையில் வஜ்ராயுதத்தை தரிப்பவரும், செல்வத்தையளிப்பவரும், கல்யாணங்களை யளிப்பவருமாவார். (மஞ்சள் நிறம்)

௩௪ அத ஸாமவேதஸ்வரூபம்.

நீலோத்பலதளாபாஸ: ஸாமவேதோ ஹயாநந: |
அக்ஷமாலாந்விதோ தக்ஷே வாமே கும்பயுத: ஸ்ம்ருத: ||
(ஶ்வேதவர்ண:)

34. ஸாமவேத ஸ்வரூபம்.

ஸாமவேத புருஷன், நீலோத்பல தளத்தைப்போன்ற சரீரகாந்தியையுடையவரும், குதிரை முகமுடையவரும், வலது கையில் ஜபமாலையை தரிப்பவரும், இடது கையில் கலசத்தை தரிப்பவருமாவார். என்று கூறப்பட்டிருக்கின்றது. (வெளுப்பு நிறம்)

௩௫. அத அதர்வணவேதஸ்வரூபம்.

அதர்வணாபிதோ வேத: தவளோ மர்கடாநந: |

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அக்ஷமாலாந்விதோ † வாமே த³க்ஷே கமண்ட³லுதா⁴ர꞉ ஸ்ம்ருத꞉ ॥

(ஶ்லோகவர்ண꞉)

35 அதர்வணவேத ஸ்வரூபம்.

அதர்வணவேத புருஷன், வெளுப்பு நிறமுடையவரும், குரங்குமுகமுடையவருமர், * இடது கையில் ஜபமாலையை வைத்திருப்பவரும் வலது கையில் கலசத்தை வைத்திருப்பவருமாவார். (வெளுப்பு நிறம்)

அத² ருக்³வேதா³தி³வேத³பத்நீநாம் ஸ்வரூபாணி.

(ஸ்காந்தே³ லக்ஷ்மீநாராயணஸம்ஹிதாயாம்)

௩௬. தத்ராத்³யா ருக்³வேத³பத்நீஸாமிதே⁴நீஸ்வரூபம்.

மயூராஸ்யா ஶுப்⁴ரவர்ணா கடகத்³வயபூ⁴ஷிதா ।
ஸ்ருவஸ்தா²ல்யௌ த³த⁴தீ ஹஸ்தே வீதவஸ்த்ராநுலேபநா ॥

ஸாமிதே⁴நீ ஸமாக்²யாதா — — ॥

(ஶுப்⁴ரவர்ணா)

ருக்வேதாதி பத்நிகளின் ஸ்வரூபங்கள்.

(ஸ்காந்தத்தில் லக்ஷ்மீ நாராயண ஸம்ஹிதையில்)

36. அவைகளில் முதலாவது ருக்வேதபத்நியான ஸாமிதேநியின் ஸ்வரூபம்.

ருக்வேத பத்நியான ஸாமிதேநியானவள், மயில் முகமும் வெளுப்பு நிறமுமுடையவளும், இரண்டு

† வாமே த³க்ஷே இதி பத³த்³வயம் வ்யத்யஸ்தம் ஸம்ப்ரதா³யே ஸ்யாதி³தி பா⁴தி ।

* வலது கையில் ஜபமாலையும் இடது கையில் கலசமும் என்று இருந்தால் பொருத்தமாக இருக்குமென்று தோன்றுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கடகாபரணங்களையணிந்திருப்பவளும், இரண்டு கை களிலும் தாமரை மலரை தரிப்பவளும், நிகரற்ற மஞ்சள் பட்டாடையையணிந்திருப்பவளுமாவாளென்று கூறப் பட்டிருக்கிறது. (வெளுப்பு நிறம்).

௩௭. அத யஜுர்வேதபத்நீஸ்ருகாஸ்வரூபம்.

— — ஸ்ருகாயா லக்ஷணம் ச்ருணு ।
ரக்தவர்ணா விசாலாக்ஷீ பத்மஹஸ்தா க்ருசோதரீ ॥
(ரக்தவர்ணா)

37. யஜுர்வேத பத்நீ ஸ்ருகா ஸ்வரூபம்.

யஜுர்வேதத்தின் மனைவியான ஸ்ருகையின் லக்ஷணத்தைக் கேட்ப்பாயாக. இவள் சிவப்பு நிறமும் விசாலமான நேத்திரமுமுடையவளாவாள். கையில் தாமரைமலரை வைத்திருப்பவளாவாள். சிறுத்த வயிற்றை யுடையவளாவாள். (சிவப்பு நிறம்)

௩௮. அத ஸாமவேதபத்நீகுஹூஸ்வரூபம்.

சந்த்ரார்த்தவதநா குஹூர் த்விபுஜா ஸம்ப்ரதிஷ்டிதா ।
ஸவ்யே சுகம் ததா த்யக்ஷே தாந்யமஞ்ஜரிகாம் ததா ॥
ததாநா ஸா குஹூர்தேவீ — —
(ச்வேதவர்ணா:)

38. ஸாமவேத பத்நியான குஹூவின் லக்ஷணம்.

ஸாமவேத புருஷனின் மனைவியான குஹூதேவி யானவள், பூர்ண சந்திரனைப் போன்ற முகத்தையுடைய வளும், வெளுப்பு நிறமுடையவளும், இரண்டு கைகளுடைய வளும், வலது கையில் கிளியையும் இடது கையில் நெற் கதிர்க்கொத்தையும் தரிப்பவளாவாள். (வெளுப்பு நிறம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௩௯. அத² அத²ர்வணவேத³பத்நீஸமித்ஸ்வரூபம்.

— — ஸமித்³ரூக்ஷணஸம்வ்ருதே |
ஸூகராஸ்யா சகோராக்ஷீ சம்பகாபா⁴
ஸிதாம்ஶுகா ||

ஹஸ்தைஶ்சதுர்பி⁴ர்த⁴த்தே ஸ்ருக்ஸ்ருவௌ
கலஶம் பத்³மம் ||

(கநகவர்ணா)

39 அதர்வணவேத பத்நி ஸமித் ஸ்வரூபம்.

இனி அதர்வணவேதத்தின் மனைவியான ஸமித் என்பவளின் ஸ்வரூபத்தைக் கூறுகிறேன். இவள் பன்றி முகமுடையவளும், சகோர (போத்து) பக்ஷியின் கண் போன்ற கண்ணையுடையவளும், சம்பகமலரைப்போன்ற சரீரகாந்தியையுடையவளும், வெளுப்பு நிறமான ரவிக்கையை அணிந்திருப்பவளும், 4 கைகளிலும் ஸ்ருக், ஸ்ருவம், பத்மம், குடம் இவைகளை தரிப்பவளுமாவாள். (தங்க நிறம்)

௪௰. அத² அத²ர்வவேதா³தி³வாணீநாம் ஶாஸ்த்ராதி³
தே³வதாநாம் ஸ்வரூபாணி.

(ஹேமாத்³ரௌ தா³நகாண்டே³)

ஐந்த்³ரவ்யாகரணம் ஶாஸ்த்ரம் ஸாங்க்²யம் தை³வம் விது³ர்
பு³தா⁴: |
காவ்யம் ச யஜுர்வேதே³ நாட்யஶாஸ்த்ரம் ததா² விது³: ||
ஸாமவேதே³ ஶாஸ்த்ரேண ஸ்ம்ருதா ஜ்ஞா: பு³த⁴ர்ஷய: |
அத²ர்வவேதே³ விஜாநீயாத் தே³வதாநாம் ஸ்வரூபிணீ ||

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப்ரஹ்மதைவம் விஜாநீயாத் ஸுவர்ணாபஸ்ய [illegible]
ஸ்வர்ணாப்தஹா ।

(ருக்வேதாபிமானீ ஸோம: நவக்ரஹசந்த்ரவத் । இதி ॥ யஜுர்வேதாபிமானீ ருத்ர: ஸூர்ய ப்ரத்யதிதேவதாவத் । இதி ॥ ஸாமவேதாபிமானீ இந்த்ர: ப்ருஹஸ்பத்யதிதேவதாவத் । இதி ॥ அதர்வணவேதாபிமானீ ப்ரஹ்மா ப்ருஹஸ்பதிப்ரத்யதிதேவதாவத் । இதி ॥

40. நான்கு வேதங்களின் அபிமாநிகளுடையவும் அவர்களின் கோத்திரங்களுடையவும் அதிதேவதைகளுடையவும் ஸ்வருபங்கள்.

(ஹேமாத்ரியில் தாநகண்டத்தில்)

ருக்வேதத்திற்கு ஆத்ரேயகோத்திரம். சந்திரன் அதிதேவதை என்று புத்திமான்கள் கூறுகிறார்கள்.

யஜுர் வேதத்திற்கு காசியப கோத்திரம். ருத்திரன் அதிதேவதை என்று கூறுகின்றனர்.

ஸாம வேதத்திற்கு பாரதுவாஜ கோத்திரம். இந்திரன் அதிதேவதையாவான்.

அதர்வ வேதத்திற்கு வைதாந கோத்திரம். பிரஹ்மா அதிதேவதை என்று அறிந்துகொள்ளவேண்டும். இவர்களின் ஸ்வருபங்களைக் கேட்பாயாக.

[ருக்வேதத்திற்கு அபிமாநி தேவதையான ஸோமன், நவக்கிரஹ சந்திரனைப்போன்ற ஸ்வருபமுடையவனும், 5-வது ஙிதி.

யஜுர்வேதாபிமாநியான ருத்திரன், ஸூரியனுடைய பிரத்தியதிதேவதையைப் போன்ற ஸ்வருபமுடையவராவார். 5-வது ஙிதி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸாமவேதாபிமானியான இந்திரன், பிருஹஸ்பதியின் அதிதேவதையைப் போன்ற ஸ்வரூபமுடையவனுவான். 5-வது ஸ்தி.

அதர்வண வேதத்தின் அதிதேவதையான பிரஹ்மாவானவர், பிருஹஸ்பதியின் பிரத்தியதிதேவதையைப் போன்ற ஸ்வரூபமுடையவராவார். 4-வது ஸ்தி.

௪௧. அத ஆயுர்வேத ஸ்வரூபம்.

(ந்ருஸிம்ஹப்ரஸாதே)

ஆயுர்வேதோ ஹரித்ராபோ வாநராஸ்யோ

விசாலத்ருக் ।

அக்ஷமாலாம்ருதம் கலசாத்யம் பிப்ராணோ ஹ்யாரோக்யதோ

ஹ்யயம் ॥ ௧ ॥

(பீதவர்ண:)

41. ஆயுர்வேத ஸ்வரூபம்.

(ந்ருஸிம்ஹ பிரஸாதத்தில்)

ஆயுர்வேத புருஷன் மஞ்சள் நிறமும், குரங்கு முகமும், விசாலமான கண்ணுமுடையவனும், ஜபமாலை, அமுத கலசம் இவைகளை தரித்திருப்பவனும், மிகுந்த ஆரோக்கியத்தையளிப்பவனுமாம். (மஞ்சள் நிறம்)

௪௨. அத ஆயுர்வேதாதிதேவதா ப்ரத்யதிதேவதா த்யானம்.

(ஸாமவேதே)

அஸிதாஸிதயோர்மத்யே ஸ்தாஸ்தாமுபவேசயேதித்யாதிபி: ।

உததிஷ்டந்மஹாராஜ வர்ஷாணாம் வரஸமூஹத: ॥ ௧ ॥

தீவதுபீவாஸிதோ த்வம்ஸ: கம்பேஸ்ரீ வோர்ணே

ஸ்ருஷ்டா ॥ ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑌸𑍍𑌤𑌰𑍁𑌣𑌃 𑌸𑍍𑌰𑌗𑍍𑌵𑍀 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 ॥

𑌪𑍀𑌤𑌵𑌾𑌸𑌾 𑌮𑌹𑍋𑌰𑌸𑍍𑌕𑌃 𑌸𑍁𑌮𑍃𑌷𑍍𑌟𑌮𑌣𑌿𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌃 ।
𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌃 𑌸𑍁𑌭𑌗𑌃 𑌸𑌿𑌂𑌹𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌃 ॥ ௩ ॥

𑌅𑌮𑍃𑌤𑌾𑌪𑍂𑌰𑍍𑌣𑌕𑌲𑌶𑌂 𑌬𑌿𑌭𑍍𑌰𑌦𑍍𑌵𑌲𑌯𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 ।
𑌸𑌵𑍈𑌭𑌗𑌵𑌤𑌃𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌂𑌶𑌾𑌂𑌶𑌸𑌂𑌭𑌵𑌃 ॥ ௪ ॥

𑌧𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑌿𑌰𑌿𑌤𑌿 𑌖𑍍𑌯𑌾𑌤 𑌆𑌯𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌦𑍃𑌗𑌿𑌜𑍍𑌯𑌭𑌾 ॥

(𑌭𑌾𑌗𑌵𑌤𑍇)

42. ஆயுர்வேதாபிமானி தந்வந்தரி த்யாநம்.

(பாகவதத்தில்)

तत्तेषां वर्णाः पाद्मे, कारणागमे च—
धूम्रो रक्तस्तथा पीतः श्यामः श्वेतोऽसितो
ऽरुणः ।
वर्णाश्च क्रमात्सप्तानां वायुप्रभेदिनः ॥

119. ஸப்த மருத்துக்களின் பெயர்கள்

(சைவாகமத்தில்)

இந்த 7 வாயுக்களும், ஆவஹன் 1, விவஹன் 2 உத்வஹன் 3, ஸம்வஹன் 4, நிவஹன் 5, அநுவஹன் 6, வியவஹன் 7 என்ற பெயர்களுடையவைகளாம். இந்த 7 வாயுக்களில் ஒவ்வொன்றும் 7, 7 பேதமுடையவைகளாம். (எனவே வாயுக்கள் 7×7=49 விதமானவைகளாம்.)

இவைகளின் நிறங்கள் பாத்ம புராணத்திலும் காரணாகமத்திலும் கூறப்பட்டிருக்கின்றன :—

புகை நிறம் 1, சிவப்பு நிறம் 2, மஞ்சள் நிறம் 3, நீலநிறம் 4, வெளுப்பு நிறம் 5, கருப்பு நிறம் 6, சிவப்பு நிறம் 7, இவைகள் முறையே 7 வித வாயுக்களின் நிறங்களாம்.

१२०. अथ सप्तसमुद्राणां नामानि।

(कारणागमे)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப்ராண: ௧, அபாந: ௨, வ்யாந: ௩, உதாந: ௪, ஸமாந: ௫, நாக: ௬, க்ருகர: ௭, கூர்ம: ௮, தேவதத்த: ௯, தநஞ்ஜய: ௰, ப்ரவஹ: ௧௧, விவஹ: ௧௨, ஸம்பு: ௧௩, ஸம்வஹ: ௧௪, பரிவஹ: ௧௫, உத்வஹ: ௧௬, ஆவஹ: ௧௭, ஸங்கு: ௧௮, கால: ௧௯, ப்ராவஹ: ௨௰, ஸாஸ: ௨௧ அநில: ௨௨, அநல: ௨௩, ப்ரதிப: ௨௪, குமுத: ௨௫, காந்த: ௨௬, ஸிபி: ௨௭, ஸ்வேத: ௨௮, ரக்த: ௨௯, க்ருஷ்ண: ௩௰, ஜித: ௩௧, அஜித: ௩௨, ஜம்ஸாத்யோத: ௩௩, க்ரது: ௩௪, ஸித்த: ௩௫, ஸுசி: ௩௬, பிங்க: ௩௭, ஸௌம்ய: ௩௮, காம்ய: ௩௯, மாருத: ௪௰, ஹநு: ௪௧, கம்பந: ௪௨, மண்டூக: ௪௩, பீம: ௪௪, கபி: ௪௫, ஸம்வர்த்தக: ௪௬, ஜட: ௪௭, அதிஜட: ௪௮, ஸந்தத: ௪௯. (இதி).

120. 49 வாயுக்களின் பெயர்கள்.

(காரணாகமத்தில்)

பிராணன் 1, அபாநன் 2, வியாநன் 3, உதாநன் 4, ஸமாநன் 5, நாகன் 6, கிருகரன் 7, கூர்மன் 8, தேவதத்தன் 9, தநஞ்ஜயன் 10, பிரவஹன் 11, விவஹன் 12, சம்பு 13, ஸம்வஹன் 14, பரிவஹன் 15, உத்வஹன் 16, ஆவஹன் 17, சங்கு 18, காலன் 19. பிராவஹன் 20, சாஸன் 21, அநிலன் 22, அநலன் 23 பிரதிபன் 24, குமுதன் 25, காந்தன் 26, சிபி 27, சுவேதன் 28, ரக்தன் 29, கிருஷ்ணன் 30, ஜிதன் 31, அஜிதன் 32, ஜஞ்சாதுயோதன் 33, க்ரது 34, ஸித்தன் 35, பிங்கன் 36, சுசி 37, ஸௌமியன் 38, காமியன் 39, மாருதன் 40, ஹநு 41, கம்பநன் 42, மண்டூகன் 43, பீமன் 44, கபி 45, ஸம்வர்த்தகன் 46, ஜடன் 47, அதிஜடன் 48, ஸந்ததன் 49 இவைகள் 49 வாயுக்களின் பெயர்களாம்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அத ஏதேஷாம் ஸ்வரூபாணி.

(ஶைவே)

ப்ராதர: ஸஹஸ்ராக்ஷஸ்ய மருத:
ஸூர்யவர்சஸ: ।
கிரீடஹாரகேயூரகடகாதிவிபூஷிதா: ॥

கட்கசர்மதரா நித்யம் ஶக்ரஸ்யானுசராஸ்ததா ।
ஏதேஷாம் வர்ணரூபாணி ப்ரதானானாம்
மருதாம் யதா ॥ ௨ ॥

இவர்களின் ஸ்வரூபங்கள்

(மயூகத்தில்)

இந்திரனுடைய பிராதாக்களான மருத்துக்கள் ஸூரியனைப் போன்ற ஒளியுடையவர்களும், கிரீடம், ஹாரம், கேயூரம், கடகம் முதலியவைகளாலே அலங்கரிக்கப்பட்டவர்களும், கத்தி, கேடயங்களை தரிப்பவர்களும், எப்பொழுதும், இந்திரனுக்குத் துணையாக இருப்பவர்களுமாவார்கள். இவர்களின் வர்ணங்களும் ரூபங்களும் முக்கியமான மருத்துக்களுக்குக் கூறப்பட்டதேயாம்.

௧௨௧. அத ப்ரதானானாம் விஶ்வேஷாம் தேவானாம் ஸ்வரூபம்.

(ஸட்ஹாஸ்லீயே)

விஶ்வே தேவாஸ்து ஸர்வேऽபி தக்ஷிணே வர்ண
வாரணா: ।
கர்தவ்யா வாமேனைவ து ஶராஸனயுதாஸ்திதா: ॥

ஏதேஷாம் நாமானி —

க்ரதுர்தக்ஷோ வஸுஸ்ஸத்ய: காலகாமௌ
துரிலோசனௌ ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஶாந்தோ பாலஸ்வரூபஶ்ச ஶ்வேதோ விஷ்ணுர்மயா ஸ்ம்ருத: ॥
(ஶ்வேதவர்ண:)

121. பத்து விச்வேதேவர்களின் ஸ்வரூபம்.

(பட்டபாஸ்கரீயத்தில்)

விச்வேதேவர்களெல்லோரையும் வலதுகையில் அம்பும், இடதுகையில் வில்லும் தரிப்பவர்களாகவும், வெளுப்பு நிறமானவர்களாகவும் கல்பிக்கப்படவேண்டும். இவர்களுடைய பெயர்கள் :—

க்ரது 1, தக்ஷர் 2 வஸு 3, ஸத்தியன் 4. காலன் 5, காமன் 6, துரி 7, லோசநன் 8, புரூரவன் 9 ஆர்திரவன் 10 என்ற 10 பெயர்களும் விசுவேதேவர்களின் பெயர்களாகக் கூறப்பட்டிருக்கின்றன. (வெளுப்பு நிறம்)

அத ஸப்தஸமுத்ரஸ்வரூபாணி.

(நரஸிம்ஹபுராணே)

௧௨௨. தத்ர லவணஸமுத்ரஸ்வரூபம்.

லவணோத: ப்ரக்ருத்யா: ஶ்யாமோ ரத்னபூஷண: ।
த்விபுஜ: ஶங்கரத்னாநாம் பாத்ரம் ச பிப்ரத்தஸ்த்ரயு: ॥
ஶோபிதோ ஸ்ரீபதிர்னா ச பாண்டுவாஸஸா: ஸுவாஸஸ: ।
(பாண்டுவர்ண:)

ஸப்த ஸமுத்திர ஸ்வரூபங்கள்.

(ந்ருஸிம்ஹப்ராணத்தில்)

122. அவைகளுள் லவண ஸமுத்திர ஸ்வரூபம்.

லவண ஸமுத்திரதேவதையானது, 2 கைகளுடையதும், ரத்நாபரணங்களை அணிந்திருப்பதும், வலதுகையில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஜபமாலையையும் இடதுகையில் பற்பல ரத்நங்களால் நிரம்பிய பாத்திரத்தையும் தரித்திருப்பதும், உத்தரீயம் உபவீதங்களை தரிப்பதும், வெண்சிவப்பு நிறமாக இருப்பதும், ஸிம்ஹாஸநத்திலிருப்பதுமாகக் கல்பிக்கப்பட வேண்டும். (வெண் சிவப்பு நிறம்)

௧௨௩ அத² இக்ஷுஸமுத்³ரத்⁴யாநம்.

ஸமுத்³ரமிக்ஷுகாண்ட³(ஸாரம்) ச கோ³மூத்ர
ஸத்³ருஶச்ச²விம் ।
க⁴ண்டாம் த³ண்ட³ம் ச பி³ப்⁴ராணம் தே³வம் த்⁴யாயேத் விபா⁴வஸோ ॥
(கோ³மூத்ரவர்ண:)

123. இக்ஷு ஸமுத்திர ஸ்வரூபம்.

கோமூத்திரத்தின் நிறமாக இருப்பதும், மணியையும் தண்டத்தையும் தரித்துக்கொண்டிருப்பதுமான இக்ஷு ஸாகர தேவதையை (ஸமுத்திரம்—ஸமுத்திராபிமானி தேவதை. இக்ஷுஸாரம்—கரும்புச்சாறு) மனதில் த்யாநம் செய்கின்றேன். (கோமூத்திர நிறம்)

௧௨௪. அத² ஸுராஸமுத்³ரத்⁴யாநம்.

ஸுரோத³ம் கண்டகாரப⁴ம் கோ³மேத³ஸத்³ருஶச்ச²விம் ।
முஸலம் குண்டி³காம் சைவ பி³ப்⁴ராணம் த்⁴யாயேத்
விபா⁴வஸோ: ॥
(கோ³மேத³வர்ண:)

124. ஸுரா ஸமுத்திர ஸ்வரூபம்.

கண்டகாருவிலிருப்பதும், கோமேதக ரத்நத்தைப் போன்ற நிறமுடையதும், முத்கரத்தையும் (முத்கரம் இரும்பு உலக்கை) கிண்டியையும் தரித்துக்கொண்டு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இருப்பதுமான ஸுரா ஸமுத்திரத்தை மனதில் தியானம் செய்கின்றேன். (கோமேதக நிறம்)

[கண்டம்—யானையின் கபோலம். காரு—பூமி எனவே கண்டகாரு என்பதற்கு யானையின் கபோலத்தைப்போன்ற வடிவமுள்ள பூமி என்றும் பொருள் கொள்ளலாம்]

௧௨௫. அத ஸர்பிஸ்ஸமுத்ரஸ்வரூபம்.

க்ருதோத: கபிலோ ஜ்ஞேய: க்ஷீரஸ்தோ ஜடாதர: |
கஶேருபூரிதம் பாத்ரம் கடம் பிப்ரச்ச வைடூர்யக: ||

(கபிலவர்ண:)

125. ஸர்பிஸ் ஸமுத்திர ஸ்வரூபம்.

நெய் ஸமுத்திரமானது, கபில நிறமானதும், கபிலம்—(மஞ்சள் சிவப்பு) குளீரத்தில் (நண்டின்மீது) இருப்பதும், கசேரு பூரிதமான (நெய் நிறைந்த) பாத்திரத்தையும் கடத்தையும் தரித்துக்கொண்டிருப்பதும், வைடூரிய ரதத்தையுடையதுமாகும். (மஞ்சள் சிவப்பு நிறம்)

௧௨௬. அத ததிஸமுத்ரஸ்வரூபம்

ததிமண்டோத ஶுப்ரோ த்வே ப்ராணதோ(அ)யம் வாரிதாத்மந: |
தண்டம் ஶக்திம் ச பிப்ராண: ஸிதவர்ணோ ஜடாயுத: ||

(ஶுப்ரவர்ண:)

126. ததி சமுத்திர ஸ்வரூபம்.

ஆடைத் தயிர்போன்ற ஜலமுடைய இந்த ததி ஸமுத்திரமானது, வெளுப்பு நிறமானதும், மேகங்களுக்கு பிராண தாயகமுமாகும். 2 கைகளையுடையதாம். தண்டத்தையும் சக்தியையும் தரித்துக்கொண்டிருப்பதாம். ஜடையுடன் கூடியதாம். (வெளுப்பு நிறம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கஉஎ. அத க்ஷீரஸமுத்ரஸ்வரூபம்.

க்ஷீரோத: ஶ்வேதவர்ண: ஸ்யாத் த்விஹஸ்தோ ரத்நகுண்டல: ।
மகரஸ்தோம்புஜம் தக்ஷே வாமே கலஶதாரக: ॥
(ஶ்வேதவர்ண:)

127. க்ஷீர ஸமுத்திர ஸ்வரூபம்.

க்ஷீர ஸமுத்திரமானது, வெளுப்பு நிறமானதும் 2 கைகளையுடையதும், ரத்ந குண்டலத்தை தரித்துக் கொண்டிருப்பதும், மகரத்தின் மீது வீற்றிருப்பதும், வலது கையில் தாமரை மலரையும் இடதுகையில் கலசத்தையும் தரித்துக்கொண்டிருப்பதுமாம். (வெளுப்பு நிறம்)

கஉஅ. அத ஶுத்தோதகஸமுத்ரஸ்வரூபம்.

ஶுத்தோதோ மௌக்திகாபாஸ: த்விஹஸ்தோ ரக்தகுண்டல: ।
மகரஸ்தோம்புஜம் தக்ஷே வாமே கலஶதாரக: ॥
(மௌக்திகவர்ண:)

128. சுத்தோதக ஸமுத்திர ஸ்வரூபம்.

சுத்தோதக ஸமுத்திரமானது, முத்தைப்போன்ற நிறமுடையதும், 2 கைகளுடையதும், சிவப்பு குண்டலங்களையுடையதும், மகர வாஹநத்திலிருப்பதும், வலதுகையில் தாமரை மலரையும் இடதுகையில் கலசத்தையும் தரித்துக் கொண்டிருப்பதுமாம். (முத்தின் நிறம்)

கஉகூ. அத அஷ்டநதீஸ்வரூபாணி.

(ரேவாநதீ)

தக்ஷிணே து கரே கும்பம் வாமே வரணவாரகம் ।
த்யாதா த்விஹஸ்தா: ஸர்வஜ்ஞா: நத்யோ மகரவாஹநா: ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

129. அஷ்டநதீ ஸ்வரூபங்கள்.

(சைவாகமத்தில்)

இரண்டு கைகளுடையவைகளும், வலதுகையில் கும்பத்தையும், இடதுகையில் வருணபாசத்தையும் தரிப்பவைகளும், மகர வாஹநத்திலிருப்பவைகளுமான (அஷ்ட) நதிகள் பூஜிக்கத்தக்கவைகளாம்.

௧௩௦. तत्रादौ गङ्गानदीस्वरूपम्.

त्रिविक्रमपदोद्भूतां भगीरथवशानुगाम् ।
भागीरथीं नमस्यामि गङ्गां त्रिपथगां नदीम् ॥

(शुभ्रवर्णा)

130. அவைகளுள் முதலில் கங்காநதீ ஸ்வரூபம்.

திரிவிக்கிரமமூர்த்தியின் பாதத்திலுண்டானவளும், பகீரதனின் வழியை யநுஸரித்துச் சென்றவளும், பாகீரதீ என்று பெயருடையவளும், 3 வழிகளில் செல்லுகின்றவளுமான கங்காநதியை வணங்குகின்றேன். (வெளுப்பு நிறம்)

प्रकारान्तरम् —

([illegible] वासुदेवकल्पे)

सितमकरनिषण्णां शुभ्रवर्णां त्रिनेत्रां
करधृतकलशोद्यत्सोत्पलाभीत्यभीष्टाम् ।
विधिहरिहररूपां सेन्दुकोटीरजुष्टां
कलितसितदुकूलां जाह्नवीं तां नमामि ॥

(श्वेतवर्णा)

மற்றொருவிதம்—தர்மாப்திஸாரத்தில்

(பகபாபஹரா கல்பத்தில்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வெளுப்பு மகரத்தின்மீது வீற்றிருப்பவளும், வெளுப்பு நிறமாக இருப்பவளும், 3 கண்களுடையவளும், கைகளில் கலசம் நீலோத்பலம் இவைகளை தரித்திருப்பவளும், விரும்பியதற்கு அதிகமாக அளிப்பவளும், பிரம்ஹ, விஷ்ணு ருத்திர, ஸ்வரூபமாக இருப்பவளும், சந்திரனுடன் கூடிய கிரீடத்துடன் பிரகாசிப்பவளும், வெண்பட்டாடையை யணிந்திருப்பவளுமான அந்த கங்காதேவியை வணங்குகின்றேன். (வெளுப்பு நிறம்)

ப்ரகாராந்தரம் —

(காஶீகண்டே பூர்வார்த்தே ஸப்தவிம்ஶாத்யாயே)

சதுர்புஜாம் த்ரிநேத்ராம் ச நதீநதநிஷேவிதாம் ।
லாவண்யாம்ருதநிஷ்யந்தஸம்ஸ்ப்ருஷ்டாங்கயஷ்டிகாம் ॥

பூர்ணகும்பஸிதாம்போஜவரதாபயஸத்கராம் ।
ஏவம் த்யாயேச் ச ஸர்வஸ்வம் ச ஸம்ப்ராப்யாந்த
ஸத்வஹாம் ॥ ௨ ॥

சாருசௌரீந்த்ரஜூடாநாம் ச ஶ்வேதச்சத்ரசாமரஶோபிதாம் ।
ஸுதாப்லாவிதபூப்ருஷ்டாம் திவ்யகந்தாநுலேபநாம் ॥

த்ரைலோக்யவந்திதபதாம் தேவர்ஷிபிரபிஷ்டுதாம் ।
(ஶ்வேதவர்ண:)

மற்றுமோர்விதம்—(காசீகண்டம் பூர்வார்த்தத்தில்
27வது அத்யாயத்தில்)

4 கைகளுடையவளும், 3 கண்களுடையவளும், நதிகளினாலும் நதங்களினாலும் இடைவிடாமல் ஸேவிக்கப் பட்டவளாயும், அழகாகிய அமிர்தப் பிரவாஹத்துடன் கலந்த சரீரத்தையுடையவளும், பூர்ணகும்பம், வெண் தாமரைமலர், வரதம், அபயம் இவைகளை கைகளில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தரிப்பவளும், மிகவும் ஸௌம்யமான ஸ்வரூபமுடைய வளும், பதினாயிரம் சந்திரனுக்கு ஸமமான சோபையை யுடையவளும், சாமரங்களினாலே வீசப்பட்டவளும், வெண்மையான குடையுடன் விளங்குகின்றவளும், பூமியின் மேல் தலத்தை அமுதத்தினாலே நனைக்கின்றவளும், திவ்யமான கந்தத்தைப் பூசிக்கொண்டிருப்பவளும், மூன்று உலகங்களினாலேயும் பூஜிக்கப்பட்ட பாதங்களை யுடையவளும், தேவர்களினாலேயும் மஹர்ஷிகளினாலேயும் துதிக்கப்பட்டவளுமான கங்காதேவியை தியானம் செய்வாயாக. (வெளுப்பு நிறம்.)

௧௩௧. அத யமுநாநதீஸ்வரூபம்.

காலிந்தீம் ப்ரபவாம் நளினீ நீலாம் பலாஹகாச்ரிதாம் ।
க்ருஷ்ணபாதரஜ:பூதாம் யமுனாம் மநஸி பாவயேத் ॥

(க்ருஷ்ணவர்ணா)

131. யமுநா நதீ ஸ்வரூபம்.

நீல நிறமாக இநப்பவளும், பலராமனுடைய கலப் பையின் ஸம்பந்தத்தையுடையவளும், கிருஷ்ணனுடைய பாததூளிகளினாலே பரிசுத்தமானவளும், கலிந்தமென்னும் மலையிலுண்டானவளுமான யமுனையை, மனதில் தியானம் செய்யவேண்டும். (கருப்பு நிறம்)

௧௩௨. அத கோதாவரீநதீஸ்வரூபம்.

கோதாம் மஹாநதீம் வந்தே பாடலாம் ருஷிஸேவிதாம் ।
பாவநீம் ஸர்வலோகஸ்ய ஸர்வபாபஸ்ய நாசிகாம் ॥

(பாடலவர்ணா)

132. கோதாவரீ நதீ ஸ்வரூபம்.

பாடலவர்ணமாக இருப்பவளும், (பாடலம் — வெண்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சிவப்பு) மஹர்ஷிகளினாலே ஸேவிக்கப்பட்டவளும், ஸகல லோகங்களையும் பரிசுத்தமாகச் செய்பவளும், ஸ்வர்கத்தின் வாயிலுக்கு (வாயிலின் பூட்டைத் திறப்பதற்கு) சாவியாக இருப்பவளுமான கோதாவரீ என்னும் மஹாநதியை வணங்குகின்றேன். (பாடல வர்ணம்)

௧௩௩. 𑌅𑌥 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌨𑌦𑍀𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍.

𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑍇𑌣𑍀 𑌨𑌦𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑍇
𑌸𑍁𑌲𑌕𑍍𑌷𑌣𑍇 ।
𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌂𑌗𑌰𑌜𑌸𑌾 𑌹𑍃𑌤𑌕𑌲𑍍𑌮𑌷𑍇 𑌤𑍇 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ॥
(𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌾)

133. கிருஷ்ணாநதீ ஸ்வரூபம்.

கருப்பு நிறமாக இருப்பவளும், நல்ல லக்ஷணத்துடன் இருப்பவளும், கிருஷ்ண சரீர தூளியின் ஸம்பந்தத்தினாலே தோஷங்களை நீக்குகின்றவளுமான ஹே கிருஷ்ணாநதி தேவி உன்னை வணங்குகின்றேன். (கருப்பு நிறம்)

௧௩௪. 𑌅𑌥 𑌰𑍇𑌵𑌾𑌨𑌦𑍀𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍.

𑌵𑌿𑌨𑍍𑌧𑍍𑌯𑌪𑌰𑍍𑌵𑌤𑌸𑌂𑌭𑍂𑌤𑌾𑌂 𑌰𑍇𑌵𑌾𑌂 𑌰𑍈𑌵𑌤
𑌸𑍇𑌵𑌿𑌤𑌾𑌂 ।
𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌜𑌨𑌨𑍀𑌂 𑌲𑍋𑌕𑍇 𑌨𑌮𑌾𑌮𑌿 𑌕𑌨𑌕𑌪𑍍𑌰𑌭𑌾𑌂 ॥
(𑌕𑌨𑌕𑌵𑌰𑍍𑌣𑌾)

134. ரேவா நதீ ஸ்வரூபம்.

விந்தியமலையிலுண்டானதும், ரைவத பர்வதத்தினாலே ஸேவிக்கப்பட்டதும், (ரைவதக மலையின் அடிவாரத்தில் செல்லுகின்றதும்) உலகத்தில் கல்யாணங்களை உண்டு பண்ணுகின்றதும், தங்க நிறமாக இருப்பதுமான ரேவா நதியை வணங்குகின்றேன். (கநக வர்ணம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௧௩௫. அத தாபீநதீஸ்வரூபம்.

தாபீம் தபஸ்வினீம் ஸேவ்யாம் ரக்தாம் பாபௌகதாபினீம் ।
அந்தஸ்தாபப்ரஶமனீம் ப்ரணமாமி மஹாநதீம் ॥

(ரக்தவர்ணா)

135. தாபீநதீ ஸ்வரூபம்.

தபஸ்வினியும், ஸேவிக்கத்தக்கதும், சிவப்பு நிறமானதும், பாபத் தொகுதியை தபிக்கச் செய்வதும், மனதிற்குள்ளிருக்கின்ற தாபத்தை சமனம் செய்வதுமான தாபீ என்னும் மஹாநதியை வணங்குகின்றேன். (சிவப்பு நிறம்)

௧௩௬. அத வேணீஸ்வரூபம்.

ஸம்ஸாரதாபஸந்தோஹஶாந்திக்ருச்சீதலோதகாம் ।
வேணீம் ஶ்ரீஸம்ருத்த்யர்த்தமுபாஸே பாடலச்சவிம் ॥

(ரக்தவர்ணா)

136. வேணீ நதீ ஸ்வரூபம்.

ஸம்ஸார தாபத்தொகுதியை சமனம் செய்கின்ற குளிர்ச்சியான ஜலத்தையுடையதும், பாடல நிறமாக இருப்பதுமான வேணீ நதியை, ஸ்ரீஸம்ருத்தியின் பொருட்டு உபாஸிக்கின்றேன். (சிவப்பு நிறம்)

௧௩௭. அத ஸரஸ்வதீநதீஸ்வரூபம்.

ப்ரவேணீம் ஸந்நிபாம் ஶுக்லாபாம் தக்ஷவாஹினீம் ।
நமாமி ஜஹ்னுதநயாஸஹிதாம் ஸர்வஶுத்தயே ॥

(ஶுக்லவர்ணா)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

137. ஸரஸ்வதீ நதீ ஸ்வரூபம்.

ஜலச் சுழல்களையுடையதும், முத்து நிறமானதும், கூடமாக பிரவஹிப்பதும், மங்களத்தையும் ஆநந்தத்தையும் கொடுப்பதுமான பிரவேணீ (ஸரஸ்வதீ) நதியை, பஹுவிதமாக ஸந்தோஷத்துடன் வணங்குகின்றேன். (முத்து நிறம்)

௧௩௮. अथ पर्जन्यस्वरूपम्.

(शैवागमे)

पर्जन्यनामा विज्ञेयो गजवक्त्रत्रयान्वितः ।
यो धत्ते सर्वजीवानां वरं जीवं च शोषणम् ॥
कोटारं च शङ्खं च चिन्तारत्नं महाशुचिम् ।
पाशं चक्रं किसलयं टिण्डिकां दशभिः करैः ॥

(श्वेतवर्णः)

138. பர்ஜநிய ஸ்வரூபம்.

(சைவாகமத்தில்)

பர்ஜந்யன் என்ற பெயருடைய மேகமானது, 3 யானை முகங்களையுடையதாகும். அது ஸகல ஜீவராசிகளின் ஜீவிதத்தை தரிப்பதாகும். ஜீவநம் 1, சோஷணம் 2, கோடரி 3, சங்கம் 4, சிந்தாமணி ரத்நம் 5, மஹாசுசி (மஹத்தான அக்கினி) 6, பாசம் 7, சக்கரம் 8, தளிர் 9, கிண்டி 10, ஆகிய 10 ஆயுதங்களையும் 10 கைகளில் தரித்துக் கொண்டிருப்பதாகும். (வெளுப்பு நிறம்.)

௧௩௯. अथ अश्विनीदेवतयोः स्वरूपम्.

(शैवागमे)

उज्ज्वलौ च सोमवर्णौ तौ सर्वालङ्कारभूषितौ ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸம்பூர்ணகோத்ராக்ஷௌ ச வீதஶ்மஶ்ருஸுவர்ணகௌ ॥

நாஸத்யதஸ்ரநாமாநாவஶ்விநௌ பிஷஜௌ ஸ்ம்ருதௌ ।

(ஶைவாகமே)

139. அசுவிநீ தேவர்களின் ஸ்வரூபம்.

(சைவாகமத்தில்)

நாஸத்தியன் தஸ்ரன் என்ற பெயருடைய இருவரும் அசுவிநீ தேவர்களாவார்கள். இவர்கள் யஞ்ஞோபவீதம் தரித்திருப்பவர்களும், சிகையும் மகுடமும் தரித்திருப்பவர்களும், மலர்ந்த செந்தாமரைபோன்ற கண்களையுடையவர்களும், மஞ்சளான மாலை, மஞ்சளான ஆடை, மஞ்சளான சரீரகாந்தி இவைகளையுடையவர்களும், வைத்தியர்களுமாவார்கள். (வெளுப்பு நிறம்)

[illegible] —

([illegible])

அஶ்விநௌ நராக்ருதீ பக்ஷௌ ஸர்வலக்ஷணஸம்யுதே ।
வரதாபயஹஸ்தௌ [illegible] ॥ க ॥

ஸவ்யே நராக்ருதீ [illegible] ।
[illegible] ॥ உ ॥

அஶ்வவக்த்ரௌ [illegible] ।
[illegible] ॥ ௩ ॥

நவதாலேந கர்தவ்யாவஶ்விநௌ பிஷஜௌ ஸ்ம்ருதௌ ।

மற்றொருவித ஸ்வரூபம்.

(வைத்ய சாஸ்திரத்தில் ஆயுர்வேத தந்திரத்தில்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸகல லக்ஷணங்களுடன் கூடிய அசுவினீ தேவர்களின் ஸ்வரூபத்தைக் கூறுகிறேன். இவர்களின் பாதம் முதல் கழுத்துவரையில் குதிரையின் வடிவமாகக் கல்பிக்க வேண்டும். இவர்கள், மனிதமுகம், 2 கண்கள், 2 காதுகள், மகுடம் தரித்த சிரஸ், பருத்த கழுத்து, 4 கைகள், குதிரையின் பாதம்போன்ற 2 பாதங்கள், இவைகளை யுடையவர்களாவார்கள். வலதுபக்கம் கைகளில் அபயம், ஓஷதிகளையும், இடதுபக்கம் கைகளில் கரண்டான், அமிர்த கலசம், இவைகளையும் வைத்துக்கொண்டிருப்பவர் களாவார்கள். தேவவைத்தியர்களான இந்த அசுவினீ தேவர்களை, நவ தாலத்தினலே கல்பிக்கவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. (வெளுப்பு நிறம்)

௧௪௰. அத காமதேநுஸ்வரூபம்.

(ந்ருஸிம்ஹப்ரஸாதே)

ஸர்வஹிமேந்துஸமா ஸுரபீ ஸ்த்ரீரூபா ஸர்வ
லக்ஷணா ।
பாஸஸ்ருஷ்டிம் ததா கும்பம் பிப்ராணா ஸம்ஸ்தித
வத்ஸகா ॥
(ஸுரபிலக்ஷணம்)

140. காமதேநு ஸ்வரூபம்.

(ந்ருஸிம்ஹப்ராஸாதத்தில்)

காமதேனுவானது, பசுவின் முகமும், வெளுப்பு நிறமும், ஸ்திரீரூபமுமுடையதாகும். ஸகல ஆபரணங் களையுமணிந்திருப்பதாகும். புல் பிடியையும் கிண்டியையும் தரித்திருப்பதாம். ஜீவராசிகளுக்கு சரீரபுஷ்டியை அளிப்பதாம். (வெளுப்பு நிறம்)

ப்ரகாராந்தரம்—

(உத்தரகாமிகே ருத்ரபேதே காமதேநுஸ்வரூபம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஷடுந்நதாம் ஸுபார்ஶ்வோரும் த்ரிப்ருதும்
பஞ்சஸம்வ்ருதாம் ।
மண்டூகநேத்ராம் ஸ்வாகாராம் பீநோதஸமநிந்திதாம் ॥
ஸுவாலதிம் ஶங்குகர்ணாம் சாருஶ்ருங்காம்
மநோரமாம் ।
ப்ருத்வாயதஶிரோக்ரீவாம் விஸ்மிதாஸ்யாபிவீக்ஷிதாம் ॥

(மஹாபாரதே)

மற்ருெரு விதம் :—

(மஹாபாரதம் ஆதிபர்வம் 176வது அத்யாயத்தில்)

காமதேனுவானது, 6 இடங்களில் உயர்ந்ததும், அழகான விலாப்பக்கங்களும் அழகான துடைகளுமுடையதும், 3 இடங்களில் பருத்திருப்பதும், 5 இடங்களில் மறைந்து இருப்பதும், மடாத்தவளைபோன்ற கண்களையுடையதும், அழகான மூக்கையுடையதும், குற்றமற்றதும், அழகான வாலுடையதும், மூளை போன்ற (உயரத்தூக்கிய) காதுகளையுடையதும், அழகான கொம்புகளையுடையதும், மனதைக் கவரக்கூடிய அழகுவாய்ந்ததும், நீண்ட தலை, கழுத்து இவைகளையுடையதும், சிரித்தமுகமும் அழகான பார்வையுமுடையதுமாகும். (வெளுப்பு நிறம்)

௪௪௪. அத ஆதர்ஶாயோக்யாநாம் ஸ்வரூபம்.

(ஶ்ரீவாமநே)

வஜ்ரம் மௌக்திகம் ஶங்கஶ்ச வஸ்த்ரம் தாம்ரமயம் காம்ஸ்யம் ।
மஹா இந்த்ரநீலம் ச வஸ்த்ரம் சேதி ஶுபாவஹம் ॥ ௧ ॥
28 ஸித்தார்த்தாஶ்ச விசேஷாஶ்ச ஸர்வதோஹரிணப்ரக்ஷிதா: ।
க்ருதாஞ்ஜலிபுடோபேதா: கந்யகாஶ்சாலங்க்ருதா: ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

𑌤𑌤𑍍𑌤𑌚𑌕𑍍𑌷𑍁𑌵𑍍𑌯𑍂𑌹𑍇𑌨 𑌕𑌵𑌚𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌿𑌦𑍍𑌧𑌾𑌃 𑌶𑍀𑌘𑍍𑌰𑌜𑍀𑌵𑌯𑍁𑌤𑌵𑌰𑍍𑌣𑌕𑍈 ॥ ௧ ॥

𑌪𑌾𑌵𑌕𑌂 𑌪𑌨𑍍𑌨𑌗𑌂 𑌚 𑌧𑍂𑌮𑍍𑌰𑌾𑌭𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌨𑍀𑌲𑌾𑌭𑌂 ।
𑌪𑌾𑌶𑌾𑌯𑍁𑌧𑌂 𑌚 𑌖𑌡𑍍𑌗𑌂 𑌚 𑌵𑌜𑍍𑌰𑌾𑌗𑍍𑌨𑌿𑌨𑌾𑌂 𑌚 𑌵𑌰𑍍𑌣𑌕𑍈 ॥

𑌤𑍍𑌰𑌿𑌯𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌗𑌦𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌾𑌶𑌪𑌦𑍍𑌮
𑌨𑌪𑌾𑌂𑌕𑌜𑍇 ।

𑌶𑍇𑌷𑌾𑌃 𑌪𑌾𑌂𑌶𑍍𑌵𑍇𑌨 𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌃 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌰
𑌯𑍁𑌕𑍍𑌤𑌯𑌃 ॥ ௫ ॥

𑌦𑍍𑌵𑌿𑌂𑌶𑌦𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌧𑍍𑌯𑍇 𑌤𑍁 —

𑌶𑌾𑌰𑌃 𑌪𑍍𑌰𑌾𑌸𑍍 𑌪𑌾𑌶𑌾𑌂𑌕𑍁𑌶𑌾 𑌦𑌿𑌵𑍍𑌯𑌃 𑌖𑌡𑍍𑌗𑌾𑌂𑌶𑍈
𑌦𑌿𑌵𑍍𑌯𑌗𑍋𑌚𑌨𑌃 ।
𑌯𑌨𑍍𑌤𑍁𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀 𑌖𑌡𑍍𑌗𑌪𑌦𑍍𑌮𑌾𑌭𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌿 𑌭𑍂𑌷𑌿𑌤𑌚𑌾𑌪𑌭𑍃𑌤𑍍 ॥

𑌸𑌾𑌪𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌿 𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌤𑍍 𑌪𑌰𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌉𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌿 𑌸𑍍𑌵𑌾𑌯𑌮𑍍𑌯
𑌲𑌾𑌂𑌛𑌨𑌂 ॥ ௨ ॥

𑌹𑍇𑌜𑌲 𑌚𑌲 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌕𑌤𑍍𑌵𑌲 𑌸𑍍𑌵𑌾𑌰𑍂𑌪𑌤𑌧𑌾𑌯𑌾𑌯𑌲 ॥

141. 12 ஆயுதங்களின் ஸ்வரூபம்.

(சைவாகமத்தில்)

வஜ்ஜிரம் 1, சக்தி 2, தண்டம் 3, கத்தி 4, பாசம் 5, அங்குசம் 6, கதை 7, திரிசூலம் 8, சக்கரம் 9, பத்மம் 10, இவைகள் தச ஆயுதங்களாம். இந்த ஆயுதங்கள், 2 கைகளும், 2 கண்களுமுடையவைகளாம். ஸகல ஆபரணங்களையும் தரித்திருப்பவைகளாம். அஞ்ஜலிபந்தனம் செய்து கொண்டிருப்பவைகளாம். கரண்ட மகுடத்தைத் தரித்திருப்பவைகளாம். அந்தந்த உருவத்திற்கேற்ற முகங்களை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யுடையவைகளாம். நாநாவிதவர்ணம் 1, மின்னல் நிறம் 2, நீலநிறம் 3, நீருண்ட மேகநிறம் 4, அக்நி வர்ணம் 5, பத்ம ராகவர்ணம் 6. பனி நிறம் 7, இந்திரநீல வர்ணம் 8, சரத் காலமேகவர்ணம் 9, சிவப்பு நிறம் 10, ஆகிய நிறங்கள் முறையே வஜ்ஜிரம் முதலிய ஆயுதங்களின் வர்ணங்களாம்.

சக்தி, கதை இரண்டு ஆயுதங்களும் ஸ்திரீ உருவ முடையவைகளாம். பாசம், பத்மம், இரண்டும் அலி உருவமுடையவைகளாம். மற்ற அஸ்திரமூர்த்திகள் புருஷ வடிவமுடையவைகளாம்.

ந்ருஸிம்ஹப்ராஸாதத்தில்—

அம்பானது, புருஷஸ்வரூபமும் சிவப்புநிறமும் அழகான கண்களுமுடையதாகும். தநுஸ்ஸானது, ஸ்திரீ ஸ்வரூபமும் செந்தாமரை மலர்போன்ற நிறமும் தலையில் வில்லைப்போன்ற அலங்காரமுமுடையதாம்.

ஹே பரமேசுவரி! இவ்விதமாக அஸ்திரங்களின் ஸ்வரூபங்களை அறிந்துகொள்ளவேண்டும். கீழே கூறப்பட்ட ஆயுதங்களின் சிரஸ்ஸில் அந்த அந்த ஆயுதத்தை அடையாளமாகக் கல்பிக்கவேண்டும். 2 கைகளும் தோளில் அந்த அந்த ஆயுதங்களையும் கல்பிக்கவேண்டும்.

அத ஶக்தித்ரயஸ்வரூபாணி —

(காரணாகமே)

௧௪௨. தத்ராதௌ ப்ரஹ்மஶக்திஸ்வரூபம்.

ப்ரஹ்மஶக்தி: ப்ரஹ்மவாப்யா தேவீ சதுர்

வர்ணாநநா |

ஸ்த்ரீரூபிணீ பாடலாபா ஶ்வேதாஶ்வரவாஹநா ||

க்ருஷ்ணாஜிநதரா வக்ஷ:ஶக்திவஸ்த்ராங்கரூபாத்ய |

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஓஜஸ்ஷ வாஜெ ஸம்வவ்ம்டாவெடாஸமமஷாஜூஸமா ‖ உ‖

ஓஸாஹிஸி-ஹ்ரதீ ஹஸெஜஸ: ஸத்ரூ-விஷாவஸ்காரிணீ ।

களவஸ-ஹவஷூ-ஸஸம்வீதா வ-ஒஜிதா செஷஷா

நரணாம் ‖ ங ‖

(வாடிருவணஷ)

சக்தித்ரய ஸ்வரூபங்கள்

(காரணுகமத்தில்)

142. அவைகளுள் பிரபு சக்தி ஸ்வரூபம்.

பிரபு சக்திக்கு பிரபாவ சக்தி என்று பெயர். இது க்ஷத்ரிய குணத்தை அநுஸரித்திருப்பதாகும். ஸ்திரீ ஸ்வரூபமும், பாடலவர்ணமும், வெண்குதிரை வாஹநமுமுடையதாகும். கரண்டமகுடம் தரித்திருப்பதாகும். வலதுபக்கம் கைகளில் சக்கரம் 1, சக்தி 2, கத்தி 3, வரதம் 4, அங்குசம் 5 இவைகளையும், இடது கைகளில் சங்கம் 6, மணி 7, கேடயம் 8, அபயம் 9, கதை 10 இவைகளையும் தரித்திருப்பதாகும். ஆகவே 10 கைகளிலும் 10 ஆயுதங்களை தரித்திருப்பவளும் சத்துருக்களை அழிப்பவளும், குஸும்பா வஸ்திரத்தையணிந்திருப்பவளும், தன்னை பூஜிப்பவர்கள் விருப்புவதையளிப்பவளுமாவாள். (பாடல வர்ணம்)

கசஙு. ஊய ஓஜஸ்த்ருஸக்தீஸூஸ-ஒவடீ.

ஓஜஸ்த்ருஸக்தி: ஷுணாஷூ-வீ கூஂகூ-ஊஹா கிரீடிநீ ।

வஜ்ஜவாவள(ஸாஜெ) ஹ-ஸ-ஷீஂ வ ஸ-ஒஜம் ஸக்திம்

வரம் ஹஜடீ ‖ க ‖

ஞுவாவவாண(வாவள)ஷஂஙாஷிவ-தீவாஸா

ஸயாஂக்-ஸாஜு ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதூக்ஷுஶாஹஸ்ரமெஜயந்த்தே தக்ஷே வாமே

வ்யுத்க்ரமஶ: க்ரமஶ: ॥ ௨ ॥

மத்தேபவாஹநா ஹீரகவசா மணிமேகலா ।

(ரக்தவர்ணா)

143. மந்திரசக்தி ஸ்வரூபம்.

மந்திரசக்தி தேவியானவள், ஸுவர்ணம்போன்ற முகமும், குங்குமத்தைப்போன்ற சரீர காந்தியும், கிரீடமுமுடையவளாவாள். 14 கைகளையுடையவளாவாள். வலது பக்கம் இடது பக்கம் கைகளில் தனித்தனியே கத்தி 1, வில் (அம்பு) 2, புசுண்டி 3, சூலம் 4, சக்தி 5, வரதம் 6, கலப்பை 7 இவைகளையும், வலயம் 8, அம்பு (வில்) 9, தண்டம் 10, சிறு கத்தி 11, பாசம் 12, அபயம் 13, அங்குசம் 14 இவைகளையும் வஹிப்பவளாவாள். மணிமயமான மேகலையை அணிந்திருப்பவளும், வஜ்ரகவசத்தை தரிப்பவளும், மத்தகஜவாஹநத்தின் மீதிருப்பவளுமாவாள். (சிவப்பு நிறம்)

௧௪௪. அத உத்ஸாஹஶக்திஸ்வரூபம்.

ஶக்திருத்ஸாஹரூபா து வித்ருமாபவபுர் மஹா ।

ஜாம்பூநதோருசித்ரகடகா ரத்நஹாரவாஹநா ॥ ௧ ॥

ஷட்விம்ஶத்புஜஸம்யுக்தா சாபபாணாஸிஹஸ்தகா ।

ததாநா க்ரமஶஸ்த்ரவஸநா மகுடோஜ்ஜ்வலா ॥ ௨ ॥

உபாஸகேஷ்வநுக்ரஹம் ஶத்ருஹந்த்ரீ தேவீ ஸதா

ஸாதிஷ்டிதா ॥

(ரக்தவர்ணா)

144. உத்ஸாஹசக்தி ஸ்வரூபம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உத்ஸாஹ சக்தியானவள் சிவந்த முகமுடையவளும், க்ஷேமத்தையளிப்பவளும், ஸுவர்ணம் போன்ற சரீர சோபையையுடையவளும், ஆடும் மயில் வாஹனத்தையுடையவளுமாவாள். 6 கைகளில் முறையே, சக்தி 1, வில் 2, வரதம் 3, பாசம் 4, அம்பு 5, அபயம் 6, இவைகளைத் தரிப்பவளும், சித்திர வஸ்திரத்தை அணிந்திருப்பவளும், கிரீடத்தை அணிந்து பிரகாசிப்பவளுமாவாள். சிரித்த முகத்துடன் கூடிய இந்த தேவியானவள், ஸாமாதி உபாயங்களினாலே பகைவர்களை வெற்றிகொள்ளுகின்றவளாவாள். (சிவப்பு நிறம்)

𑌅𑌥 𑌉𑌪𑌾𑌯𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌦𑍇𑌵𑌤𑌾𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍.

(𑌕𑌾𑌰𑌣𑌾𑌗𑌮𑍇)

௧௪௫. 𑌤𑌤𑍍𑌰𑌾𑌦𑍌 𑌸𑌾𑌮𑍋𑌪𑌾𑌯𑌦𑍇𑌵𑌤𑌾𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍.

𑌗𑌜𑌾𑌰𑍂𑌢𑌾 𑌸𑍍𑌮𑌿𑌤𑌮𑍁𑌖𑍀 𑌕𑌨𑌕𑌾𑌭𑌾 𑌸𑌿𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌾 ।
𑌷𑌡𑍍𑌭𑌿𑌰𑍍𑌭𑍁𑌜𑍈𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌶𑌙𑍍𑌖𑌵𑌰𑌾𑌭𑌯𑌧𑌨𑍁𑌶𑍍𑌶𑌰𑌾𑌨𑍍 ॥ ௧ ॥
𑌦𑌧𑌤𑍀 𑌸𑌾𑌵𑌿𑌤𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌶𑌯𑍇𑌚𑍍𑌛𑌤𑍍𑌰𑍂𑌸𑌂𑌚𑌯𑌮𑍍 ॥

(𑌕𑌨𑌕𑌵𑌰𑍍𑌣𑌾)

4 உபாயங்களின் தேவதா ஸ்வரூபம்.

(காரணாகமத்தில்)

145. அவைகளுள் முதலாவது ஸாமோபாய தேவதா ஸ்வரூபம்.

ஸாமோபாய தேவதையானவள், யானை வாஹனமும், சிரித்த முகமும், ஸுவர்ண நிறமும், வெண்மையான ஆடையுமுடையவளாவாள். 6 கைகளில், சக்கரம் 1, சங்கம் 2, வரதம் 3, அபயம் 4, வில் 5, அம்பு 6 இவைகளை தரிப்பவளாவாள், இவளை தினந்தோறும் பூசித்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வந்தால், சத்துரு மண்டலத்தை வசப்படுத்துவாள். (தங்க நிறம்).

கசரு. அத தாநோபாயஸ்வரூபம்.

தாநோபாயாபிதோ தேவஃ ஶிபிகாவரவாஹநஃ |
ஸந்த்யாருணோஷ்டபாஹுர்வாமேஷு சக்ரம் பத்ம-
நிதிம் வரம் ॥ க ॥

தநுர்தக்ஷிணதோ ஶங்கம் ச தக்ஷே குந்தஶராபயாந் |
தயாநஃ பீதவஸநஃ கிரீடாங்கதஶோபிதஃ ॥ உ ॥

பூஜிதஸ்ய ஶுபம் தத்யாத் வஶயேச்சத்ருமண்டலம் |
(ரக்தவர்ணஃ)

146. தாநோபாய ஸ்வரூபம்.

தாநோபாய தேவதையானது, பல்லக்கு வாஹந முடையதாம். ஸந்தியாகாலத்தைப்போல சிவப்பு நிறமுடையதாம். 8 கைகளில் இடது பக்கத்திலுள்ள கைகளில் சக்கரம், பத்மநிதி, வரதம், தநுஸ், இவைகளையும், வலது கைகளில், சங்கம், குந்தாயுதம், அம்பு, அபயம் இவைகளையும் தரிப்பதாம். மஞ்சள் ஆடையை அணிந்து கிரீடம் அங்கதங்களை தரித்து சோபிப்பதாம். இந்த தேவதையை பூஜித்தால் நன்மைகளையளிக்கும். சத்துரு மண்டலத்தை வசப்படுத்தும். (சிவப்பு நிறம்)

கசஎ. அத ஹேதோபாயஸ்வரூபம்.

ஹேதோபாயாபிதோ தேவஃ தார்க்ஷ்யவரவாஹநஃ |
ஶ்வேதவர்ணஃ கராப்ஜாக்ஷஃ க்ருததம்ஷ்ட்ரஶ்ச த்விஹஸ்தகஃ ॥

சக்ரஶங்கௌ ததாநஃ வாமவாஸ்து தக்ஷிணே ச வாமகே |

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

ஶங்கம் தண்டம் ஶரம் சாப(ஶூல)ஹஸ்தா விபுஷ்ணீது
சமே ॥ உ ॥

கரீடே கவசோ ஜ்வல: ॥

(மேகவர்ண:)

147. பேதோபாய ஸ்வரூபம்

பேதோபாயமென்னும் தேவனனவன், கரடிவாஹநமும் மேகநிறமும், பயங்கரமான முகமும், கொடூரமான தெத்திப் பற்களுமுடையவனுவான். 10 கைகளில் வலது கைகளில் சக்கரம் 1, சூலம் 2, வில் 3, பாசம் 4, வரதம் 5, இவை களையும், இடது கைகளில் சங்கம் 6, தண்டம் 7, அம்பு 8, கட்டில் அல்லது படுக்கை (கத்தி) 9, அபயம் 10 இவைகளை யும் தரித்திருப்பவனுவான். பகைவர்களை வசப்படுத்து வான் அல்லது துன்புறுத்துவான். கிரீடம் கவசம் இவை களையணிந்து பிரகாசிப்பான். (மேக வர்ணம்)

கச அ. அத தண்டோபாயஸ்வரூபம்.

தண்டோபாயோ ரக்தவர்ண: ஸிம்ஹாஸ்ய: ஸவவாஹந: ।
சதுர்புஜோ தம்ஷ்ட்ராகராலவக்த்ரோ பயாநக: ॥ க ॥

கட்காங்குஶௌ ஶரம் சக்ரம் தக்ஷிணேஷு கரேஷு ச ।
தத்தே வாமேஷு ஹஸ்தேஷு ஶூலம் பாஶம் ச சாபகம் ॥

பத்மம் ச தர்ஜநீம் சைவ ரக்தமாலாம்பரோ ஜ்வல: ।

(ரக்தவர்ண:)

148. தண்டோபாய ஸ்வரூபம்.

தண்டோபாயத்திற்குத் தேவதையான புருஷன், சிவப்பு நிறமும், ஸிம்ஹமுகமும், சவ வாஹநமு

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முடையவனுவான். 16 கைகளில், சக்கரம் 1, சூலம் 2, கதை 3, தண்டம் 4, கத்தி 5, மணி 6 வரதம் 7, வில் 8, சவுக்கு 9, அங்குசம் 10, அம்பு 11, அக்ஷி 12, கேடயம் 13, பாசம் 14, அபயம் 15, வரதம் 16 இவைகளைத் தரித்திருப்பவனுவான். நீலமும் வெளுப்பும் கலந்த ஆடையை அணிந்திருப்பவனுவான். இந்த புருஷனை பூஜித்துவந்தால் சண்டையில் ஆற்றலுடைய, இந்த புருஷன், சண்டையில் சத்துருக்களை அழித்துவிடுவான். (சிவப்புநிறம்)

𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌮𑌨𑍂𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑌰𑍍𑌣𑌨𑌮𑍍 —

(𑌶𑍈𑌵𑌾𑌗𑌮𑍇, 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌶𑍇𑌖𑌰𑍇 𑌚)

௧௪௯ 𑌤𑌤𑍍𑌰𑌾𑌦𑍌 𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌭𑍁𑌵𑌮𑌨𑍁𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌶𑍁𑌭𑍍𑌰𑌃 𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌭𑍁𑌵𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍁𑌤𑍍𑌰𑍋 𑌮𑌨𑍁𑌰𑌿𑌤𑌿
𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ।
𑌸𑌤𑌾𑌰𑌵𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌹𑌾𑌯𑌨𑌾 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌶𑍂𑌦𑍍𑌰𑌵𑍍𑌰𑌤𑌃 ॥

𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑍍𑌰𑌤𑍋𑌤𑍍𑌤𑌾𑌨𑌪𑌾𑌦𑍌 𑌤𑌸𑍍𑌯 (𑌪𑍁𑌤𑍍𑌰𑍌)
𑌕𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑌥𑌾 ।
𑌆𑌕𑍂𑌤𑌿𑌰𑍍𑌦𑍇𑌵𑌹𑍂𑌤𑌿𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌿𑌃
𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌵𑌾𑌨𑍍 ॥ ௨ ॥

𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌰𑌧𑌰𑍍𑌮𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑌾𑌶𑍀 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂
𑌜𑌗𑌤𑌾𑌂 𑌪𑌤𑌿𑌃 ।
𑌯𑌤𑍍𑌰 𑌯𑌜𑍍𑌞𑌾𑌶𑍍𑌚 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 𑌪𑌾𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃
𑌸𑌰𑍍𑌵𑌹𑌾𑌃 ॥ ௩ ॥

(𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

14 மநுக்களுடைய ஸ்வரூபங்கள்.

(சைவாகமத்திலும் ஸித்தாந்த சேகரத்திலும்)

149. அவர்களில் முதலில் ஸ்வாயம்புவமநு த்யாநம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முதலாவது மநுவானவர், பிரஹ்மாவின் புதல்வரான ஸ்வாயம்புவர் என்பவராவார். அவருடைய மனைவி, சதரூபை என்பவளாவாள், அவர் க்ஷத்திரிய தர்மத்தை அநுஸரித்தவராவார். அவருக்கு, பிரியவிரதன், உத்தான பாதன் என்று 2 புதல்வர்கள். அவருக்கு, ஆகூதி, தேவஹூதி, பிரஸூதி என்று 3 கன்னிகைகள். அவர் வெளுப்பு நிறமானவர். அவர் க்ஷத்திரிய தர்மத்திற்கு யோக்கியமான அஸ்திரத்தை தரித்தவரும், உலகத்திற்கு அரசனாகவும் இருந்தவராவார். அவருடைய ராஜ்யபார காலத்தில், 3 விதமான தர்மங்களும், 4 வர்ணங்களையும் ஆச்ரயித்தும், சுபகரங்களாகவும் இருந்துவந்தன. (வெளுப்பு நிறம்) (1)

௧௫௦. அத ஸ்வாரோசிஷமநுத்யாநம்.

ஸ்வாரோசிஷோ த்விதீயஸ்து மநுர்வஹ்நேஸ்து ஸம்பவ: ।
த்யுமத்ஸுஷேணரோசிஷ்மத்ப்ரமுகாஸ்தஸ்ய சாத்மஜா: ॥
ஊர்ஜா து தஸ்ய பார்யாஸீத் ப்ராஹ்மம்
தர்மமநுவ்ரத: ।
தப்தகார்தஸ்வராபாஸ: ஸர்வேஷாம் ஜகதாம் பதி: ॥
(ஹேமாத்ரி:)

150. ஸ்வாரோசிஷ்மநு த்யாநம்.

ஸ்வாரோசிஷன் என்பவர் 2வது மநுவாவார். இவர், அக்நிதேவரின் புதல்வராவார். த்யுமத்ஸுஷேணன், ரோசிஷ்மான், முதலியவர்கள் இவருடைய புதல்வர்களாவார்கள். ஊர்ஜா என்பவள், இவருடைய மனைவியாவாள். இவர் பிராம்ஹண தர்மத்தைத் தழுவியிருந்தவராவார். உருக்கிய தங்கத்தைப்போன்ற நிறமுடையவராவார். ஸகல ஜகத்திற்கும் அதிபதியாக இருந்தவராவார். (தங்க நிறம்) (2)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௧௫௧. அத உத்தமமநுத்யாநம்.

த்ருதீய உத்தமோ நாம ப்ரியவ்ரதஸுதோ மநு: |
பார்யோஷா ஸ்ருஞ்ஜயஜயஹோத்ராத்யாஸ்தஸ்ய
சாத்மஜா: ॥ ௧ ॥

ரக்தவர்ணோ(அ)ஸ்த்ரதாரீ ச க்ஷாத்ரம் தர்மமநுவ்ரத: |
சதுர்ணாமேகஸப்தத்யா யுகாநாம் பதிரீஶ்வர: ॥ ௨ ॥

(ரக்தவர்ண:)

151. உத்தமமநு த்யாநம்

பிரியவ்ரதனுடைய புதல்வனை உத்தமன் என்பவர் 3வது மநுவாவார். உஷா என்பவள், இவருடைய மனைவி யாவாள். ஸ்ருஞ்ஜயன், ஜயன், ஹோதா முதலியவர்கள் அவருடைய புதல்வர்களாவார்கள். இவருடைய நிறம் சிவப்பு. இவர், க்ஷத்திரிய தர்மத்தைத் தழுவியிருந்தவரும் ஆயுதங்களை தரித்தவருமாவார். இவர் 71 சதுர்யுகங்களுக்கு அரசனக இருந்தவராவார். (சிவப்பு நிறம்) (3)

௧௫௨. அத தாமஸமநுத்யாநம்

சதுர்த்த உத்தமப்ராதா மநுர் நாம்நா ச தாமஸ: |
க்யாதி: பத்நீ கேதுஶ்ருங்க ஜத்வாத்யாஸ்தஸ்ய ஸுதா மதா: ॥

ப்ரியவ்ரதஸுதஶ்சைஷ க்ஷாத்ரம் தர்மமநுவ்ரத: |
ஹரிதவர்ணோ(அ)ஸ்த்ரதாரீ ச ஸர்வேஷாம் ஜகதாம்
பதி: ॥ ௨ ॥

(ஹரிதவர்ண:)

152. தாமஸமநு த்யாநம்.

உத்தமன் என்ற மநுவின் ஸஹோதரனை தாமஸன் என்பவர், 4வது மநுவாவார். கியாதி என்பவள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இவருடைய மனைவியாவாள். கேதுமந்தன் முதலியவர்கள் அவருடைய புதல்வர்களாவார்கள். இவர் பிரியவ்ரத மஹாராஜாவின் புதல்வராவார். க்ஷத்திரிய தர்மத்தைத் தழுவியிருந்தவராவார். பச்சை நிறமானவர். அஸ்திரங்களை தரித்திருந்தவராவார். ஸகல உலகங்களுக்கும் அரசனாக இருந்தவராவார். (ஹரித்வர்ணம்-பச்சை நிறம்) (4)

௧௫௩. அத ரைவதமநு த்யாநம்.

பஞ்சமோ ரைவதோ நாம ப்ரியவ்ரதாத்மஜஃ
ஸ்ம்ருதஃ ।
பத்நீ விந்த்யாவலீ புத்ரா தத்தகார்ஜுநபூர்வகாஃ ॥
க்ஷத்ரியவ்ரதவாந் வர்ணம் ஶ்யாமம் ஸமாஶ்ரிதஃ ।
ஸதா ஶஸ்த்ராஸ்த்ரதாரீ ஸர்வேஷாம் ஜகதாம் ப்ரபுஃ ॥
(ஶ்யாமவர்ணஃ)

153. ரைவதமநு த்யாநம்.

5வது மநு ரைவதன் என்பவராவார். இவர் உத்தமன், தாமஸன் என்னும் 2 மநுக்களின் இளைய ஸஹோதரனாவார். விந்தியாவலீ என்பவள் இவருடைய மனைவியாவாள். தத்தகன், அர்ஜுநன் முதலியவர்கள் இவருடைய புதல்வராவார்கள். இவர், க்ஷத்திரியதர்மத்தை அவலம்பித்திருந்த பிரியவிரத மஹாராஜனின் புதல்வனாவார். பச்சை நிறமாக இருப்பவர். எப்பொழுதும், கத்தி முதலிய ஆயுதங்களை தரிப்பவர். ஸகல உலகங்களுக்கும் அரசனாக இருந்தவராவார். (பச்சை நிறம்) (5)

௧௫௪. அத சாக்ஷுஷமநு த்யாநம்.

ஷஷ்டஸ்து சக்ஷுஷஃ புத்ரஃ சாக்ஷுஷோ நாம
விஶ்ருதஃ ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆதித்யபௌத்ரஸ்தத்பத்நீ காந்திஸ்தஸ்யாத்மஜாஞ் ஶ்ருணு ॥

ததா புருஸுத்யும்நப்ரமுகாஸ்ஸுதா ரக்தவர்ணவாந் ।

ப்ரஹ்மண்யதத்பரோ தேவ: ஸர்வேஷாம் ஜகதாம்

ப்ரபு: ॥௨॥

(ரக்தவர்ண:)

154 சாக்ஷுஷமநு த்யாநம்.

சாக்ஷுஷன் என்பவர், 6வது மநுவாவார். இவர் பரமேசுவரனுடைய சக்ஷுஸ்ஸிலிருந்து (கண்ணிலிருந்து) உண்டானவராதலால் இவருக்கு சாக்ஷுஷனென்று பெயர். இவர் ஆதித்தனின் பௌத்திரனுவார். காந்தி என்பவள் இவருடைய மனைவியாவாள். இவருடைய புதல்வர்களைக் கேட்பாயாக. புரு, ஸுத்யும்நன் முதலானவர்கள் இவருடைய புதல்வர்களாவார்கள். இவர், சிவப்பு நிறமானவர். பிராம்ஹண தர்மத்தை அநுஷ்டித்து வந்தவராவார். ஸகல ஜகத்திற்கும் அதிபதியாக இருந்தவராவார். (சிவப்பு நிறம்) (6)

௧௫௫. அத² வைவஸ்வதமநு த்⁴யாநம்.

வைவஸ்வதோ மநுர்நாம புத்ரஸ்ஸூர்யஸ்ய ஸத்தம: ।

இக்ஷ்வாகுப்ரமுகா: புத்ரா: பத்நீ ஶ்ரத்தேதி கீர்திதா ॥

க்ஷாத்ரம் ப்ராஹ்மம் ஶ்ரிதோ யஜ்ஞம் ஸூர்யதிகதுல்ய

ஹவ: பதி: ।

ஸௌவர்ணவர்ண: பத்மாக்ஷ: ஜகதாம் பதிரீரித: ॥

(ஸ்வர்ணவர்ண:)

155. வைவஸ்வதமநு த்யாநம்.

வைவஸ்வதன் என்பவர், 7வது மநுவாவார். இவர்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸூர்யனுடைய புதல்வனாவார். இக்ஷ்வாகு முதலியவர்கள், இவருடைய புதல்வர்களாவார்கள். ரிஷ்டி என்பவள், இவருடைய மனைவியாவாள். இவர் க்ஷத்திரிய தர்மம், பிராஹ்மண தர்மம், இரண்டையும் அநுஷ்டித்தவராவார். ஸ்மிருதியை (தர்ம சாஸ்திரத்தை) இயற்றியவராவார். பூமண்டலம் முழுவதும் ஆண்டுவந்தவராவார். இவர், தங்க நிறமானவர். தாமரைமலர்போன்ற கண்களையுடையவராவார். ஸகல ஜகத்திற்கும் அரசனாக இருந்தவராவார். (தங்க நிறம்) (7)

௧௫௬. அத ஸூர்யஸாவர்ணிமநுத்யாநம்.

அஷ்டமஸ்ஸூர்யபுத்ரஸ்து ஸாவர்ணிர்மநுவித்தம: |
நிர்மோஹவிரா(ர)ஜஸ்காத்யா: புத்ரா: பத்நீ து
தேவிகா ||௧||

க்ஷத்ரியோ லோகவிக்யாத: வர்ணம் ஶ்யாமம்
ஸமாஶ்ரித: |
சதுர்யுகைகவிம்ஶத்யா யுகாநாம் ப்ரஶாஸித: ||
(ஶ்யாமவர்ண:)

156. ஸூர்ய ஸாவர்ணி மநு த்யாநம்.

ஸூர்யனுடைய புதல்வனான ஸாவர்ணி என்பவர், இனி வரப்போகின்ற 8வது மநுவாவார். நிர்மோஹன், விரா(ர)ஜஸ்கன் முதலியவர்கள் இவருடைய புதல்வர்களாவார்கள். தேவிகா என்பவள், இவருடைய மனைவியாவாள். இவர் உலகத்தில் மிகுந்த புகழ்பெற்றவராவார். பச்சை நிறமானவர். இவர் 21 சதுர்யுகங்களுக்கு உலகத்திற்கு அரசனாவார். (பச்சை நிறம்) (8)

௧௫௭. அத தக்ஷஸாவர்ணிமநுத்யாநம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நவமோ த³க்ஷஸாவர்ணிர்மநுர்வருணஸம்ப⁴வ꞉ |
பத்நீ பரா த்⁴ருஷ்டகேதுமுகா²ஸ்தஸ்ய ஸுதா꞉
ஸ்ம்ருதா꞉ || ௧ ||

க்ஷத்ரியோ லோகவிக்²யாத꞉ வர்ணேந ஶ்யாமம்
ஸமாஶ்ரித꞉ |
சதுர்யுகாந்யேகவிம்ஶத்யா யாவத்³ராஜ்யம் ப்ரஶாஸித꞉ ||

(ஶ்யாமவர்ண꞉)

157. தக்ஷஸாவர்ணிமநு த்யாநம்.

வருணனுடைய புதல்வனான தக்ஷஸாவர்ணி என்பவர், 9வது மநுவாவார். பரா என்பவள், இவருடைய மனைவி யாவாள். திருஷ்டகேது முதலானவர்கள் அவருடைய புதல்வராவார்கள். இவர், உலகத்தில் புகழ்பெற்ற க்ஷத்திரியனுவார். பச்சை நிறமானவர், இவர் 21 சதுர்யுக காலம் உலகத்திற்கு அரசனுவார். (பச்சை நிறம்) (9)

௧௫௮. அத² ப்³ரஹ்மஸாவர்ணிமநுத்⁴யாநம்.

த³ஶமோ ப்³ரஹ்மஸாவர்ணிருபஶ்லோகஸுதோ மத꞉ |
தத்ஸுதா ஹவிஷேணாத்³யா꞉ தத்பத்நீ ப்³ருஹதீ ததா² ||

ப்³ராஹ்மணோ லோகவிக்²யாத꞉ வர்ணேந ஶ்வேதம்
ஸமாஶ்ரித꞉ |
ஸர்வேஷாம் ஜக³தாம் ஹர்தா ஸர்வவேதா³ர்த²
மநவோ யயா || ௨ ||

(ஶ்வேதவர்ண꞉)

158. பிரம்ஹஸாவர்ணி மநு த்யாநம்.

உபஶ்லோகர் என்ற முனிவரின் புதல்வரான பிரம்ஹ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸாவர்ணி என்பவர், 10வது மநுவாவார். பூரிஷேணன் முதலானவர்கள் அவருடைய புதல்வராவார்கள். பிருஹதீ என்பவள் அவருடைய மனைவியாவாள். இவர், உலக பிரஸித்திபெற்ற பிராம்ஹணனாவார், இவர், வெளுப்பு நிறமானவர். முன்பு கூறப்பட்ட மற்ற மநுக்களைப்போல இவரும் ஸகல ஜகத்துக்களுக்கும் அரசனாவார். (வெளுப்பு நிறம்) (10)

௧௫௯ அத தர்மஸாவர்ணிமநுத்யாநம்.

மநுர்வை தர்மஸாவர்ணிரேகாதஶ ஜதீரித: ।
தர்மபுத்ரஸ்து தேவஸ்ய ஸத்யதர்மாதயோ ஸுதா: ॥
தீக்ஷா பத்நீ ரக்தவர்ண: க்ஷாத்ரம் தர்மமநுவ்ரத: ।
சதுர்யுகைகவிம்ஶத்யா ராஜாநாம் ப்ரபுரீரித: ॥

(ரக்தவர்ண:)

159. தர்மஸாவர்ணி மநு த்யாநம்.

தர்மதேவரின் புதல்வனான தர்மஸாவர்ணி என்பவர், 11வது மநுவாவார். ஸத்தியதர்மன் முதலியவர்கள் அவருடைய புதல்வர்களாவார்கள். தீக்ஷை என்பவள் மனைவியாவாள். இவர், சிவப்பு நிறமானவர். க்ஷத்திரிய தர்மத்தைத் தழுவியவராவார். இவர், 21 சதுர்யுக காலத்திற்கு உலகங்களுக்கு அரசனாக இருப்பவராவார். (சிவப்பு நிறம்) (11)

௧௬௦. அத ருத்ரஸாவர்ணிமநுத்யாநம்

ஹரிதோ ருத்ரஸாவர்ணி: ஶம்போர் த்வாதஶஸங்க்யயா ।
தேவாநுதேவாத்யாஸ்தநூஜா: பத்நீ ஸுவாயஶா
ஸூர்யவிஸ்ருதா: ॥௧॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வஸாஸ்ரிதஃ க்ஷத்ரியகும் ஸாவர்ணஃ ஹரிதாவவாது ।
ஸம்ஸஹ்ரம்பாஸநஷ்ரவாஸிச் ஸவெருஷாம் ஜமதாம்
ஹரஸ்: ॥ ௨ ॥
(ஸாவர்ணஃ)

160. ருத்திரஸாவர்ணிமநு த்யாநம்.

ருத்திரனின் புதல்வனுன ருத்திரஸாவர்ணி என்பவர் 12வது மநுவாக இருக்கப்போகின்ருர். தேவன் அநுதேவன் முதலானவர்கள் அவருடைய புதல்வர்களாவார்கள். ஆரியை என்பவள் மனைவியாவாள் என்று கூறுகின்றனர். இவர் க்ஷத்திரிய தர்மத்தை கைக்கொண்டவர். பச்சை நிறமானவர். புகழ்பெற்றவர். கடுமையாக உத்திரவு இடுபவராவார். ஸகல ஜகத்திற்கும் அரசனுவார். (பச்சை நிறம்)

கசுக. அத வெதஸாவர்ணிமநு த்யாநம்.

உநுஷ்யோதமொ ஹாவ்: வெதஸாவர்ணிராதவாது ।
சூவீவெதமிரவா்து: ஸ்ராஹ்மம் யநுமநுவாதஃ ॥
சித்ரலெநாஸ்ய: வாத்ராஃ த்ரயீ வத்நீ ஸாவஜதா ।
வதாணர்ஜெககவலதா யாமாநாம் வதீஸ்வரஃ ॥
(வெதவர்ணஃ)

161. வேதஸாவர்ணிமநு த்யாநம்.

வேதசிரஸ்ஸு என்பவரின் புதல்வனுன வேதஸாவர்ணி என்பவர் 13வது மநுவாக இருக்கப்போகின்றவராவார். இவர் தன்னடக்கமுடையவராவார். இவர் பிராம்ஹண
29 தர்மத்தைக் கைக்கொண்டவராவார். சித்திரஸேனன் முதலியவர்கள் இவரின் புதல்வர்களாவார்கள். த்ரயீ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என்பவள் இவருடைய மனமுவந்த மனைவியாவாள். இவர் 71 சதுர்யுககாலம் உலகத்திற்கு அரசனாவார். (வெளுப்பு நிறம்)

௧௬௨. அத இந்த்ரஸாவர்ணிமநு த்யாநம்.

மநுஸ்த்விந்த்ரஸாவர்ணிஶ்சதுர்தஶ ஈரித꞉ ।
இந்த்ரபுத்ரஸ்ஸுதாஸ்தஸ்ய உருகம்பீரகாதய꞉ ॥ ௧ ॥
நீலவர்ணோ தநுர்தாரீ க்ஷாத்ரம் தர்மமநுவ்ரத꞉ ।
மதிஶ்ச பத்நீ மதிஸ்தஸ்ய ஸர்வேஷாம் ஜகதாம்
ப்ரபு꞉ ॥ ௨ ॥
(நீலவர்ண꞉)

162. இந்திரஸாவர்ணிமநு த்யாநம்.

இந்திரனுடைய புதல்வனான இந்திரஸாவர்ணி என்பவர் 14வது மநுவாவார். உரு, கம்பீரகன் முதலிய வர்கள் இவருடைய புதல்வர்களாவார்கள். இவர் நீல நிறமானவராவார். வில்லேந்தியவராவார். க்ஷத்திரிய தர்மத்தைக் கைக்கொண்டவராவார். மதி என்பவள் இவருடைய மனைவியாவாள். இவர் ஸகல ஜகத்திற்கும் அரசனாவார். (நீலவர்ணம்)

அத நவசிரஞ்ஜீவிநாம் ஶ்லோகாநி —

([illegible])

௧௬௩. தத்ராதௌ அஶ்வத்தாம த்யாநம்.

ப்ரஹ்மவர்சஸ்வீ த்ரோணஜ்ஞோ ராஜச்சத்ரஶ்ச நாம்பர꞉ ॥
அஶ்வத்தாமா சிரஞ்ஜீவீ த்யேயஶ்ச த்விஜோத்தமை꞉ ॥

(ஶ்வேதவர்ண꞉)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

9 சிரஞ்ஜீவிகளின் ஸ்வரூபங்கள்.

(சைவாகமத்தில். நிறம் பாத்மத்தில்)

163. அவர்களுள் அசுவத்தாமாவின் த்யாநம்.

அசுவத்தாமாவானவர் பிராம்ஹணனுடைய புத்திரனுவார். (வலிமையுடன்) பிரகாசிக்கின்ற புஜங்களையுடையவராவார். மான்தோலை ஆடையாக அணிந்து விளங்குகின்றவராவார். சிரஞ்ஜீவியான இவர் எனக்கு நீண்ட ஆயுளையளிப்பாராக. (வெளுப்பு நிறம்)

கசுச. அத பலி த்யாநம்.

பலி: பாதாளநிலய: தநுர்பாணதரோ ந்ருப: ।
விஷ்ணுபாதாங்கிதஶிரா: சிரஞ்ஜீவீ ப்ரஸீதது ॥

(க்ருஷ்ணவர்ண:)

164. பலி த்யாநம்

மஹாபலியானவர் பாதாள லோகத்தில் வஸிப்பவராவார். வில்லும் அம்பும் தரித்திருப்பவரும் அரசனுமாவார். விஷ்ணு பாதத்தினுலே அடையாளம் செய்யப்பட்ட சிரத்தையுடையவராவார். சிரஞ்ஜீவியான இவர் அருள்புரிவாராக. (கருப்பு நிறம்)

கசுரு. அத வ்யாஸ த்யாநம்.

வ்யாஸஸ்ஸமஸ்தஶாஸ்த்ராணாம் வக்தா முநிவரேடித: ।
சிரஞ்ஜீவீ தீர்கமாயுர்ததாது ஜடிலோ மம ॥

(க்ருஷ்ணவர்ண:)

165. வியாஸ த்யாநம்.

வியாஸரானவர் ஸகல தர்மங்களையும் கூறியவராவார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முனிவர்களினாலே வணங்கப்பட்டவராவார். சடைகள் உடையவராவார். சிரஞ்ஜீவியான இவர் எனக்கு நீண்ட ஆயுளையளிப்பாராக. (கருப்பு நிறம்)

௧௬௫. 𑌅𑌥 𑌹𑌨𑍂𑌮𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌹𑌨𑍂𑌮𑌾𑌨𑍍 𑌰𑌾𑌮𑌪𑌾𑌦𑌾𑌬𑍍𑌜𑌷𑌟𑍍𑌪𑌦𑍋 𑌵𑌰𑍍𑌣𑌿𑌵𑌰𑌃 𑌶𑍁𑌚𑌿𑌃 ।
𑌸𑌂𑌜𑍀𑌵𑌨𑌾𑌵𑌹𑌰𑍍𑌤𑌾 𑌮𑍇 𑌦𑍀𑌰𑍍𑌘𑌮𑌾𑌯𑍁𑌰𑍍𑌦𑌦𑌾𑌤𑍍𑌵𑌿𑌹 ॥
(𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌵𑌰𑍍𑌣𑌃)

166. ஹநுமான் த்யாநம்

ஹநுமானனவர் ராமபாதபத்மங்களில் மனதை ஈடுபடுத்தியவராவார். சிறந்த பிரம்ஹசாரியாவார். மாசற்றவராவார். ஸஞ்ஜீவநீ பர்வதத்தை எடுத்துவந்தவராவார். இவர் எனக்கு நீண்ட ஆயுளையளிப்பாராக. (ஸ்படிக நிறம்)

௧௬௭. 𑌅𑌥 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑍋 𑌧𑌰𑍍𑌮𑌪𑌰𑌃 𑌰𑌾𑌮𑌾𑌰𑍍𑌚𑌨𑌪𑌰𑌾𑌯𑌣𑌃 ।
𑌦𑌦𑌾𑌤𑍁 𑌚𑌿𑌰𑌜𑍀𑌵𑌿𑌤𑍍𑌵𑌂 𑌚𑌿𑌰𑌂𑌜𑍀𑌵𑍀 𑌜𑌿𑌤𑍇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 ॥
(𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌃)

167. விபீஷண த்யாநம்

தர்மத்தைக்கைக்கொண்டவனும், ராமனை பூஜிப்பதில் ஈடுபட்டவனும், இந்திரியங்களைக் கட்டுப்படுத்தியவனும், சிரஞ்ஜீவியுமான விபீஷணன் நீண்ட ஆயுளையளிப்பாராக. (கருப்பு நிறம்)

௧௬௮. 𑌅𑌥 𑌧𑍍𑌰𑍁𑌵𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍.

𑌧𑍍𑌰𑍁𑌵𑌃 𑌧𑍍𑌰𑍁𑌵𑌾𑌵𑌯𑍋𑌰𑌾𑌶𑌿𑌃 𑌤𑌪𑌸𑍍𑌵𑍀 𑌵𑍀𑌰𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌪𑌾𑌦𑌕𑌃 ।
𑌵𑌿𑌤𑌨𑍋𑌤𑍁 𑌹𑍍𑌰𑌸𑌨𑌾𑌥𑌾 𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌮𑌨𑍋𑌰𑌥𑌾𑌨𑍍 ॥
(𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

168 கிருப த்யாநம்.

கருணைக்கடலாக இருப்பவரும், தவம் செய்பவரும், மரவுரியை ஆடையாக அணிந்திருப்பவரும், தூயமனதை யுடையவருமான கிருபரானவர் ஆயுள் உள்ளவரையில் நோயற்ற வாழ்வையளிப்பாராக. (வெளுப்பு நிறம்)

௧௬௯. அத² பரஶுராம த்⁴யாநம்.

பரஶ்வுஜ்ஜ்வலஹஸ்தாப்³ஜ: ஜடாமண்ட³லமண்டி³த: |
ஶுத்³தா⁴த்மா சிரஜீவித்வம் ப்⁴ருகு³ஸூநுர்த³தா³து மே: ||

(ஸ்வர்ணவர்ண:)

169. பரசுராம த்யாநம்

மழுவேந்தி துலங்குகின்ற கையையுடையவரும், ஜடா மண்டலத்துடன் விளங்குகின்றவரும், தூயமனதையுடைய வருமான பிருகு முனிவரின் புதல்வனுன பரசுராமன் நீண்ட ஆயுளையளிப்பாராக. (தங்க நிறம்)

௧௭௦. அத² ப்ரஹ்லாத³ த்⁴யாநம்.

விஷ்ணுப⁴க்தம் மஹாப்ராஜ்ஞம் த்³விபு⁴ஜம் ராக்ஷஸோத்தமம் |
த்⁴யாயாம்யஹம் மஹாஸௌம்யம் ப்ரஹ்லாத³ம் சிரஜீவிநம் ||

(ஸ்வர்ணவர்ண:)

170. பிரஹ்லாத த்யாநம்

விஷ்ணுவிடம் பக்தியுள்ளவனும், சிறந்த அறிவாளியும், 2 கைகளுடையவனும், சிறந்த அரக்கனும், மிகவும் ஸௌமியமானவனும், சிரஞ்ஜீவியுமான பிரஹ்லாதனை த்யாநம் செய்கின்றேன். (தங்க நிறம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௧௭௧ அத மார்கண்டேய த்யாநம்

ஶ்ரீகண்டம் ஸாத்த்விகம் ஶிவபூஜாபராயணம் |
வேதஶாஸ்த்ரார்த்த தத்த்வஜ்ஞம் மார்கண்டேயமஹம் பஜே ||

(ஶைவாகமே)

171 மார்க்கண்டேய த்யாநம்

ஸர்வைசுவரிய ஸம்பன்னரும், மனதைக்கட்டுப் படுத்தியவரும், சிவபூஜையில் ஈடுபட்டவரும், வேதம், சாஸ்திரங்களின் உண்மைகளையறிந்தவருமான மார்க்கண்டேய முனிவரை, நான் வணங்குகின்றேன். (வெளுப்பு நிறம்)

அதைதேஷாம் சிரஞ்ஜீவிநாம் வர்ணா:

(பாத்மே)

அஶ்வத்தாமா ஶ்வேதவர்ண: க்ருஷ்ணவர்ணோ மஹாபலி: |
வ்யாஸ: க்ருஷ்ணோ ஹநூமாந் ஸ்படிகாப: ப்ரகீர்த்தித: ||
விபீஷண: க்ருஷ்ணவர்ண: க்ருபஶ்ஶ்வேத: ப்ரகீர்த்தித: |
ஜாமதக்ந்யஶ்ஶ்யாமவர்ணோ மார்கண்டேயஸ்ஸித: ஸ்ம்ருத: ||
ப்ரஹ்லாதஸ்து ஶ்யாமவர்ணோ வர்ணா ஏஷாம்
ப்ரகீர்த்திதா: |

இந்த சிரஞ்ஜீவிகளின் நிறங்கள்
(பாத்மத்தில்)

அசுவத்தாமா வெளுப்பு நிறமாவார். மஹாபலி கருப்பு நிறமாவார். வியாஸர் கருப்பு நிறமாவார். ஹநுமான் ஸ்படிக நிறமாவார். விபீஷணன் கருப்பு நிறமாவார். கிருபர் வெளுப்பு நிறமாவார். ஜமதக்னி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முனிவரின் புதல்வரான பரசுராமன் ஸுவர்ண வர்ணமாவார். மார்க்கண்டேயர் வெளுப்பு நிறமாவார். ப்ரஹ்லாதன் தங்க நிறமாவார். இவ்விதமாக இவர்களின் நிறங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

௧௭௨. அத மரீச்யாதிதஶமஹர்ஷீணாம் ஸ்வரூபாணி.

(ந்ருஸிம்ஹப்ராஸாதே)

மரீசிரத்ர்யங்கிரஸௌ புலஸ்த்ய: புலஹ: க்ரது: ।
ஸ்வேதாஶ்ச வஸிஷ்டஶ்ச ப்ருகுர்நாரத ஏவ ச ॥

ஜடிலா: ஶ்மஶ்ருலா: ஶாந்தா: க்ருஶா யஜ்ஞோபவீதின: ।
ஸகமண்டல்வக்ஷமாலா: காஷாயா: ஶாந்தயோ த்விபுஜா ஸ்ம்ருதா: ॥

நாரதோ தேவகந்தர்வ: ஸாக்ஷஸூத்ர: கமண்டலு: ।
ஸவ்யே ச வீணயா வாமஹஸ்தே தேவாந்திகேஷ்யயா ॥ ௧ ॥

ஶாந்தயஸ்ஸர்வ ஏகசித்தா: ஸ்மர்தவ்யா வாயிநோ ।

(ஶில்பதவனாத்)

172. மரீசி முதலிய 10 முனிவர்களின் ஸ்வரூபங்கள்.

(ந்ருஸிம்ஹப்ராஸாதத்தில்)

மரீசி 1, அத்திரி 2, அங்கிரஸ் 3, புலஸ்தியர் 4, புலஹர் 5, க்ரது 6, ஸ்வேதர் 7, வஸிஷ்டர் 8, பிருகு 9, நாரதர் 10 ஆகிய 10 முனிவர்களையும், சடைமுடி தரித்தவர்களாகவும், மீசை தாடியுள்ளவர்களாகவும், சாந்தமான ஸ்வரூபமுடையவர்களாகவும், இளைத்த சரீரமுடையவர்களாகவும் தர்மத்தில் பற்றுள்ளவர்களாகவும், யோகதண்டம், கமண்டலங்களை தரித்திருப்பவர்களாகவும், 2 கைகள் உடையவர்களாகவும்; கல்பிக்கவேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நாரதர், தேவஜாதி கந்தர்வனுவார். இவர், யோக தண்டமும் கமண்டலமும் தரித்திருப்பவராவார். இடது பக்கம் புஜமூலத்தில் (கழுக்கட்டில்) தோழியைப்போல் வீணையை அணைத்துக்கொண்டிருப்பவராவார்.

இந்த முனிவர்கள் எல்லோரையும் வெளுப்பு நிறமுடையவர்களாகக் கல்பிக்கவேண்டும். (வெளுப்பு நிறம்)

அத² ப்⁴ருகு³க³ணாங்கி³ரோக³ணௌ —

(ந்ருஸிம்ஹபுராணே)

௧௭௩. தத்ராதௌ³ ப்⁴ருகு³க³ண:

ப்⁴ருகு³ர்வாமதே³வஸ்²ச்யவனோ பா⁴ர்க³வோ தா²ஸ்ததா² ।
பா⁴ர்க³வோ பா⁴வனஸ்²சைவ ஸாஞ்ஜீவ்ய: ஸாஞ்ஜனஸ்ததா² ॥

க்ரது: ஸர்வஸ்வஸஸ்²சைவ தயா ச வியஸ்ருதஸ்ததா² ।
ப்ரவாஸஸ்²சாவ்யயஸ்²சைவ த³க்ஷோ த்³வாத³ஸ²கஸ்ததா² ॥ ௨ ॥

பா⁴ர்க³வா நாம நிர்தி³ஷ்டா: தே³வா த்³வாத³ஸ²யாஜ்ஞிகா: ॥

(ஶ்வேதவர்ணா:)

பிருகுகணமும் அங்கிரோகணமும்.

(ந்ருஸிம்ஹபுராணத்தில்)

173. அவற்றுள் முதலாவது பிருகுகணம்.

பிருகு 1, வாமதேவர் 2, பிருவணர் 3, பாவனர் 4, ஸாஜீயர் 5, ஸாஜனர் 6, க்ரது 7, ஸர்வஸ்வஸ 8, வியஸ்ருதர் 9, ப்ரவாஸர் 10, அவ்வியயர் 11, தக்ஷர் 12, ஆகிய 12 முனிவர்களும் பிருகுகணத்தைச்சார்ந்தவர்களாவார்கள். இவர்களுக்கு பிருகுக்கள் என்று பெயர். இவர்கள் தேவர்களும் யஜ்ஞும் (வேள்வி) செய்பவர்களுமாவார்கள். இவர்களை வெளுப்பு நிறமாகக் கல்பிக்கவேண்டும். (வெளுப்பு நிறம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

௧௭௪. அத அங்கிரோகண:

ஜீவவர்ணேந ஸத்ருஶா: த்யேயா அங்கிரஸஸ்ததா ।
ஆத்மா ஆயுர்மநோ தக்ஷ: பாதப்ராபஸ்ததைவ ச ॥
ஹவிஷ்யஶ்ச கவிஷ்டஶ்ச க்ரதுஸ்ஸத்யஶ்ச தேவல: ।
(பீதவர்ணா:)

174. அங்கிரோகணம்

அங்கிரோகணத்திலுள்ள முனிவர்களை பிருஹஸ்பதியைப்போன்ற வடிவமுடையவர்களாக கல்பிக்க வேண்டும். இவர்கள் ஆத்மா 1, ஆயுஸ் 2, மனம் 3, தக்ஷன் 4, பாதப்பிராபன் 5, ஹவிஷியன் 6, கவிஷ்டன் 7, க்ரது 8, ஸத்தியன் 9, தேவலன் 10 என்பவர்களாவார்கள். (மஞ்சள் நிறம்)

அத ஶாஸ்த்ராதிஷ்டாத்ருதேவதாநாம் நாமாநி.

(ந்ருஸிம்ஹப்ராஸாதே)

ஶிக்ஷா ப்ரஜாபதிர்ஜ்ஞேய: கல்போ ப்ரஹ்மா ப்ரகீர்த்தித: ।
ஸாரஸ்வதம் வ்யாகரணம் நிருக்தம் வருண: ப்ரபு: ॥
ச²ந்தோऽதிஷ்டாநதேவோऽக்நி: ஜ்யோதிஷம் பகவாந் ஹரி: ।
மீமாம்ஸா பகவாந் ஸோம: ந்யாயஶாஸ்த்ரம் ஸமீரண: ॥
யஜுஶ்ச யஜுஶாஸ்த்ராணாம் ப்ரமாணஸ்ய ததா ஶிவ: ।
இதிஹாஸ: ப்ரஜாத்யக்ஷ: யஜுர்வேதஸ்ய தக்ஷக: ॥
ருக்வேதஸ்ய ஸதா ஸாக்ஷாத் தேவோ யஜ்ஞபதி: ப்ரபு: ।
ஸாமவேதே மஹாதேவ: ந்ருத்தஶாஸ்த்ரம் சதுர்முக: ॥ ௧ ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸம்கர்ஷண: பாஞ்சராத்ரம் ருத்ர: பாசுபதம்
ததா |
பாதஞ்ஜலேநந்தஸ்து ஸாம்க்யம் ச கபிலோ முநி: ॥ ௫ ॥
அர்த்தசாஸ்த்ராணி ஸர்வாணி பகவாந்யக்ஷ:
ப்ருஹஸ்பதி: |
காமசாஸ்த்ராணி ஸர்வாணி காமதேவோ ஜகத்குரு: ॥
அந்யாநி யாநி சாஸ்த்ராணி யஸ்க்ருதாநி ப்ரவக்ஷதே |
ஸ ஸர்வ தேவதா தஸ்ய சாஸ்த்ரம் காவ்யம் ச
வேதவத் ॥ ௭ ॥

சாஸ்திரங்களின் அபிமாநி தேவதைகளின் பெயர்கள்.

(ந்ருஸிம்ஹ ப்ராசாதத்தில்)

சிக்ஷைக்கு பிரஜாபதியும், கல்பத்திற்கு பிரஹ்மாவும், வியாகரணத்திற்கு ஸரஸ்வதீ தேவியும், நிருக்தத்திற்கு வருணனும், சந்தஸ்ஸுக்கு அதிதியும் அக்கினியும், ஜ்யோதிஷத்திற்கு பகவான் விஷ்ணுவும், மீமாம்ஸைக்கு பகவான் ஸோமனும், நியாயசாஸ்திரத்திற்கு வாயு பகவானும், தர்மசாஸ்திரங்களுக்கு தர்மதேவதையும், புராணங்களுக்கு மநுவும், இதிஹாஸங்களுக்கு பிரஜாபதியும், தநுர்வேதத்திற்கு இந்திரனும், ஆயுர்வேதத்திற்கு தந்வந்தரி பகவானும், பலவேதத்திற்கு மஹாதேவனும், நிருக்த சாஸ்திரத்திற்கு மஹேசுவரனும், பாஞ்சராத்திரத்திற்கு ஸங்கர்ஷணனும், பாசுபதத்திற்கு ருத்திரனும், பாதஞ்சலத்திற்கு (யோகத்திற்கு) அநந்தனும், ஸாங்கியத்திற்கு கபில முனிவரும், அர்த்த சாஸ்திரங்களுக்கு லோக குருவான காமதேவனும், மற்ற சாஸ்திரங்களுக்கு அந்த அந்த சாஸ்திரங்களை இயற்றியவர்களும் அபிமாநி தேவதைகளாவார்கள். சாஸ்திரமும் காவியமும் வேதத்தைப் போன்றதேயாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களரு. அத² யக்ஷஸ்வரூபம்.

யக்ஷாஸ்ஸர்வே கு³ணாத்⁴யக்ஷா: ஸத்³ருʼஶா:
யக்ஷாஸ்ஸரா: ।
வேதாளா யே ரேவதாரா: ஶோணாஸ்ஸ்ர ஸதாஸ்யயே ॥

175. யக்ஷ ஸ்வரூபம்.

யக்ஷர்கள் யாவரும் குணங்களுக்கு அதிதேவதை களாவார்கள். இவர்கள் கத்தியையும் கேடயத்தையும் தரித்திருப்பவர்கள். சுபங்களையளிப்பவர்கள். ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்ற தைவத்தன்மையுடைய இவர்களை ஸுகத்தையடைவதற்காக வணங்குகின்றேன்.

களகூ. அத² விஶ்வகர்மஸ்வரூபம்.

(ஹேமாத்³ரௌ தா³நக²ண்டே³)

விஶ்வகர்மா து கர்தவ்ய: ஶ்மஶ்ருகேஶோ மஹாபாஹு: ।
ஸர்வம்ஸ்வாணிஷிஹஸ்த: தேஜோவதிர்யோ
ஶஹாது ।

(கூரகவர்ண:)

இதி ஶ்ரீமத்³ பூஜாகாண்டவ: வாராவார கனோநிதி ஸம்வ அஸுரார்
விலியஸிதாகாங்கித ஶ்ரீஸமதேவ ஶ்ரீஸர்வகுஸாயீஸ்வர ஶ்ரீஸத்
க்ருஷ்ணராஜமஹாராஜவிரசிதே ஶ்ரீதத்வநிதௌ
அதுர்ஸுவாதி தத்வநிரூபணம் நாம
அஷ்டம: ஶ்ரீப்ரஹ்மதத்வநிதி:
ஸம்பூர்ண: ।

176. விச்வகர்ம ஸ்வரூபம்

(ஹேமாத்திரியில் தாநகாண்டத்தில்)

விசுவகர்மாவானவர் தாடி மீசைகளுடையவரும், [illegible] பிடித்துக்கொண்டிருப்பவரும், [illegible]

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கையில் வைத்துக்கொண்டிருப்பவரும், 2 கைகளுடையவரும், தேஜோமயமான ஸ்வரூபத்தையுடைய மஹானுமாவார். இவரை இவ்வித லக்ஷணங்களுடன் கல்பிக்க வேண்டும். (தங்க நிறம்)

ஸ்ரீமத் யதுகுல வாரிதிசந்திரரும், சங்கம், சக்கரம் முதலிய
பிருதுகளையுடையவரும், மைஸூர் ஸம்ஸ்தான மஹா
ராஜாவுமான ஸ்ரீமான் கிருஷ்ணராஜ மஹாராஜா
அவர்களாலியற்றப்பட்ட ஸ்ரீ தத்வநிதியில்
நான்காவது ப்ரஹ்மதத்துவநிதி முற்றும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சரஸ்வதி மகால் நூலக அச்சகம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi